திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் ஒரு கண் போனால் இவ்வளவு, ஒரு கால் போனால் இவ்வளவு, இடுப்புக்குக் கீழே போனால் இவ்வளவு என்றெல்லாம் படித்தார்கள். அரசு எப்படி இந்த ரேட்டை பிக்ஸ் பண்ணுகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் 'Fatal Accid nt Act' என்று ஒரு ஆக்ட் இருக்கிறது. 'Accident claims Journal' என்ற ஒன்று ஆண்டு தோறும் வந்து கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பிக்ஸ் பண்ணினால் காலுக்கு 25,000 ரூபாய்க்கு மேல் வரும். கண்ணுக்கு வேறு. காரணம் 'Permenent disability' என்றால் கொஞ்சம் அதிகம். சாவை விட கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பார்கள். காரணம், வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியிருக்கின்ற நிலையில் அப்படிக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கும். ஆகவே அரசு எந்த அடிப்படையில் பிக்ஸ் பண்ணுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னொன்று. முதலமைச்சரவர்கள் கரடி விடுவது என்று சொன்னார்கள். நான் கேட்டிருக்கிறேன். ஆனால் உண்மையான பொருள் தெரியாது. அந்தப் பொருளை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர் அவர்களே, கரடி விடுகிற கலை திரு பி. எச். பாண்டியன் அவர்களுக்குப் பழக்கமான கலை. (சிரிப்பு)

திரு. ப. சுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே ஏலகிரி மலையிலே யானைகளால் தாக்கப்பட்டு இரண்டு சவரத் தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள். இன்னும் அதற்கு உண்டான மானியம் கிடைக்கவில்லை. உடனடியாக அது கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கரடிகள், குதிரைகள், யானைகள் ஆகியவற்றையெல்லாம் அதிகமாக இந்த அவையிலே கொண்டு வராதீர்

கள். ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதனால் இறந்தவர்களுக்கு நிதி உதவி செய்யும் இந்த அரசு என்று தெளிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு திருப்பித் திருப்பியும் கேட்டுக்கொண்டு இருப்பது அவை நேரத்தை விணாக்குவதாக நான் கருதினால் மன்னிப்புக்கு உரியவனாக ஆவேன் என்று நம்புகிறேன்.

நிலவரி தள்ளுபடி

*2474 திரு. வெ. இராசு; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சியால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவரி தள்ளுபடி செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1398 பசலி ஆண்டுக்கு நிலவரி முதலியவற்றை தள்ளுபடி செய்தும், அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி மற்றும் அரசு கடன்கள் வசூலிப்பதை அடுத்த பசலி ஆண்டுக்கு தள்ளி வைத்தும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. வெ. இராசு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்பது மிகவும் பின் தங்கிய மாவட்டமும், வறட்சி மாவட்டமும் ஆகும். தென் மாவட்டங்களில் அதிகமாக, பரவலாக மழை பெய்திருந்தாலும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நடப்பு பசலியிலே இந்த ஜனவரியிலேயிருந்து வசூல் ஆரம்பித்து விட்ட காரணத்தால் அங்குள்ள மக்கள் நில வரிகளைக் கட்டுவதற்கும், அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மீண்டும் ஏதாவது தொழில்கள் தொடங்குவதற்கும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன வகையிலே ஏதாவது வறட்சிப் பணிகளை ஆரம்பித்தும், நிலவரிகளைத் தள்ளுபடி செய்தும், மற்றும் நீண்ட காலக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்தும் அரசு உதவி செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவரவர்களே, வடகிழக்குப் பருவமழை இயல்பாகப் பெய்வதைக் காட்டிலும் 43 சதவிகிதம் குறைச்சலாகப் பெய்துள்ளது. அதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் 11. அதிலே புதுக்கோட் கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, குளத்

1990 சனவரி 23]

கள். ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதனால் இறந்தவர்களுக்கு நிதி உதவி செய்யும் இந்த அரசு என்று தெளிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு திருப்பித் திருப்பியும் கேட்டுக்கொண்டு இருப்பது அவை நேரத்தை விணாக்குவதாக நான் கருதினால் மன்னிப்புக்கு உரியவனாக ஆவேன் என்று நம்புகிறேன்.

நிலவரி தள்ளுபடி

*2474 திரு. வெ. இராசு; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சியால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவரி தள்ளுபடி செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 1398 பசலி ஆண்டுக்கு நிலவரி முதலியவற்றை தள்ளுபடி செய்தும், அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி மற்றும் அரசு கடன்கள் வசூலிப்பதை அடுத்த பசலி ஆண்டுக்கு தள்ளி வைத்தும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. வெ. இராசு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்பது மிகவும் பின் தங்கிய மாவட்டமும், வறட்சி மாவட்டமும் ஆகும். தென் மாவட்டங்களில் அதிகமாக, பரவலாக மழை பெய்திருந்தாலும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நடப்பு பசலியிலே இந்த ஜனவரியிலேயிருந்து வசூல் ஆரம்பித்து விட்ட காரணத்தால் அங்குள்ள மக்கள் நில வரிகளைக் கட்டுவதற்கும், அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மீண்டும் ஏதாவது தொழில்கள் தொடங்குவதற்கும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன வகையிலே ஏதாவது வறட்சிப் பணிகளை ஆரம்பித்தும், நிலவரிகளைத் தள்ளுபடி செய்தும், மற்றும் நீண்ட காலக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்தும் அரசு உதவி செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவரவர்களே, வடகிழக்குப் பருவமழை இயல்பாகப் பெய்வதைக் காட்டிலும் 43 சதவிகிதம் குறைச்சலாகப் பெய்துள்ளது. அதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் 11. அதிலே புதுக்கோட் கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, குளத்

தூர், திருமயம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 7 வட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி முதலியன தள்ளுபடி செய்தும், அரசுக்குச் செலுத்தவேண்டிய நில வரி பாக்கி மற்றும் அரசுக் கடன்களை வசூலிப்பதை அடுத்த ஆண்டுக்குத் தள்ளி வைத்தும், அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. கேட்ட கேள்விக்குப் பதில் பொதுவாக வழக்கத்திற்கு மாறுபட்ட இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் வறட்சி அல்லது பஞ்ச காலங்களில் பயிருக்கு இழப்பு ஏற்படும் பொழுது அரசு அந்த நிலங்களுக்கான நில வரி மற்றும் ஏனைய வரிகளான உள்ளூர் வரி மேல் வரி முதலியவற்றை வசூலிப்பதைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது அல்லது தள்ளுபடி செய்கிறது. அவ்வாறான நேர்வுகளில் அரசுக்குச் செலுத்த வேண்டிய நில வரி பாக்கி மற்றும் அரசுக் கடன்களை வசூலிப்பதை அடுத்த விளைச்சல் ஆண்டுக்குத் தள்ளி வைக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையை ஏற்று ரூ. 60.17 இலட்சத்திற்கு நிலவரி மற்றும் உள்ளூர் வரி, உள்ளூர் கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் வரி, கூடுதல் தீர்வை ஆகியவற்றை பசலி ஆண்டு 1398க்கு அரசு தள்ளுபடி செய்திருக்கிறது.

9-35 மணி

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் 11 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். அதிலே திண்டுக்கல் மாவட்டம் இணைக்கப்பட்டிருக்கிறதா? காயிதே மில்லத் மாவட்டத்தில் பல பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் மழை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். காய்ப்பு கொடுத்த தென்னை மரங்கள் எல்லாம் கூட பட்டுப் போயிருக்கின்றன. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தகவல் கிடைக்கவில்லை. மாறாக இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, பசும்பொன் தேவர் திருமகனார், சிதம்பரனார் மாவட்டம், மதுரை, காமராசர், புதுக்கோட்டை திருநெல்வேலி கட்டபொம்மன், தஞ்சாவூர், தென்னாற்காடு செங்கை அண்ணா ஆகிய 11 மாவட்டங்களைப் பற்றிய விவரங்கள் கிடைக்கப்பட்டிருக்கின்றன. காயிதே மில்லத் மாவட்டத்தைப் பற்றி விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை

1990 சனவரி 23]

களை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : தலைவர் அவர் களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வறட்சி யால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களுக்கு வரிச்சலுகை வழங்கு வதாகச் சொன்னார்கள். அண்மையில் பெய்த பெருமழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக முதுகுளத்தூர், கமுதி வட்டங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற் குள்ளாகி இருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில், வரி தள்ளுபடி செய்வதற்கும், தக்காவிக் கடன்களை ரத்து செய்வதற்கும், புதிய தாக ஜீவனாம்ச கடன்கள் போன்றவைகளை வழங்குவதற்கும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். பாதிக்கப் பட்ட அந்த மாவட்டங்களுக்கு விரைந்து கலெக்டர் அவர்களும் அவரை ஒட்டிய அதிகாரிகளும் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். செய்தார்கள் என்ற உண்மையை நான் இங்கே எடுத்துவைக்க கடமைப்பட்டிருக் கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற 11 மாவட்டங்களில் கோவை மாவட்டம் இடம் பெறவில்லை, பல்லடம், திருப்பூர், அவினாசி போன்ற பல தாலுக்காக்களில் தற்போது கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அந்த மாவட்டமும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அதற்குரிய நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர் களே, பட்டியலில் சேர்ப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. தாராளமாகச் சேர்க்கலாம்.

திரு. கே. ஆர் இராமசாமி : தலைவர் அவர்களே, இராம நாதபுரம் மாவட்டமும், தேவர் திருமகனார் மாவட்டமும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இப்போது வரி வசூலிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

[1990 சனவரி 23

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. மாறாக வசூலிக்கக் கூடாது என்று கடுமையாக உத்திரவிடப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட தாலுக்காக்களுக்கும் மாவட்டங்களுக்கும் நிவாரணம் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் அதைப்போல வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளைக் காப்பாற்ற இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வர அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். (சிரிப்பு).

பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி

*திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்போது பேருந்து வசதி இல்லாத ஆயிரத்துக்கு (1000) மேற்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு.கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாலை வசதி, பயணிகளின் எண்ணிக்கை, ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கிராமங்களிலுள்ள மக்கட் தொகையை கருத்தில் கொள்ளாமல் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

9.40 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1000 மக்களும் அதற்குக் கீழும் வசிக்கக் கூடிய பகுதிகளுக்கு, கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்றுள்ள இந்தக் கேள்விக்கு சாலை வசதியும் மக்கள் தொகையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு பேருந்து வசதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே கூறி இருக்கிறார்

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. மாறாக வசூலிக்கக் கூடாது என்று கடுமையாக உத்திரவிடப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட தாலுக்காக்களுக்கும் மாவட்டங்களுக்கும் நிவாரணம் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் அதைப்போல வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளைக் காப்பாற்ற இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வர அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். (சிரிப்பு).

பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி

*திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்போது பேருந்து வசதி இல்லாத ஆயிரத்துக்கு (1000) மேற்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு.கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாலை வசதி, பயணிகளின் எண்ணிக்கை, ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கிராமங்களிலுள்ள மக்கட் தொகையை கருத்தில் கொள்ளாமல் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

9.40 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1000 மக்களும் அதற்குக் கீழும் வசிக்கக் கூடிய பகுதிகளுக்கு, கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்றுள்ள இந்தக் கேள்விக்கு சாலை வசதியும் மக்கள் தொகையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு பேருந்து வசதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே கூறி இருக்கிறார்

1990 சனவரி 23]

கள். நான் கேட்பது ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள், அதற்கு மேலும் சில இடங்களில் வசிக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் பொன்னாபுரம், கோம்புப்பட்டி, வத்தக வண்டவலசு போன்ற ஊர்களில் எல்லாம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அங்கேயிருந்து பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள், ஆஸ்பத்திரிக்குச் செல்லக் கூடியவர்கள் அனைவரும் மிகவும் சிரமம் அடைகிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாவாகக் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல்; காலம் காலமாக அவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஊர்களுக்குப் பேருந்து வசதி உடனடியாக செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலே குறிப்பிட்டேன். சாலை வசதி, பயணிகளுடைய எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கிராம மக்களுடைய எண்ணிக்கையை கருத்தில் எடுத்துக் கொள்ளாமல், பொது மக்களுடைய நலன் கருதி வசதிகள் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டேன். அந்த அடிப்படையில் ஏற்கனவே அரசினுடைய கொள்கைப்படி, 1500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு முதல் கட்டமாக போக்குவரத்து வசதிகள் செய்யப்பட வேண்டும் என்ற இலட்சியத்தில் சென்ற ஆண்டு 30—11—1988 வரை 15 போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்து 12,382 பேருந்துகள் ஓடிக் கொண்டு இருந்தன. இந்த ஓர் ஆண்டுக் காலத்தில் 30—11—1989 வரை கிட்டத்தட்ட 13,241 பேருந்துகள் அதாவது ஓராண்டுக் காலத்தில் 837 பேருந்துகள் கூடுதலாக விடப்பட்டு இருக்கின்றன. 30—11—1989 ஆம் தேதிய நிலவரப்படி அன்றாடம் சராசரியாக பேருந்துகளை உபயோகிக்கக்கூடிய மக்கள் தொகை ஒரு நாளைக்கு $1\frac{1}{4}$ கோடி பேர்களாகும். கிட்டத்தட்ட 50 இலட்சம் கிலோ மீட்டர் பேருந்துகள் ஓடிக் கொண்டு இருக்கின்றன. இருந்தாலும் கூட 1500 மக்கள் தொகையும் அதற்கு மேற்கொண்ட கிராமங்கள் என்று பார்க்கும் போது இன்னும் சுமார் 500 கிராமங்களுக்கு நாம் இத்தகைய வசதிகளைச் செய்ததற்குப் பிறகு, அடுத்த கட்டமாக ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட கிராமங்களையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல்; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பயணிகள் எண்ணிக்கையைக் கருத்தில் எடுத்துக் கொண்டு என்று சொல்கிறார்கள். நான் கேட்கக் கூடிய அந்த ஊர்களுக்கு பஸ்களே போவது கிடையாது. அப்படி இருக்கும் போது

பயணிகள் கணக்கை எப்படி எடுப்பது என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்தக் கிராமங்களுக்கு நீங்கள் பஸ் விடுவது என்பது சராசரி கணக்கைப் பார்க்காமல், அவர்களுடைய வசதியை, கஷ்டத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, போக்குவரத்துக் கழகங்கள் லாப நஷ்டத்தை மட்டுமே கணக்கில் கொள்ளாமல், பொது மக்களுடைய வசதியைக் கருத்தில் கொண்டு தான் தற்போது பேருந்துகள் இயக்கிக் கொண்டு வருகின்றன. சுமார் 60 சதவீதம் வழித்தடங்கள் நஷ்டத்திலே இயங்கக் கூடிய வழித்தடங்களாக இருந்தாலும், பொது மக்களுடைய வசதியைக் கருதி, அவை தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. அதே கொள்கை தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கிராமப்புறங்களிலே இடையிடையே விளைநிலங்கள் வருகின்ற காரணத்தால் குடியிருக்கின்ற மக்கள் சிறிது தூரம் தள்ளித் தள்ளி இருக்கிறார்கள். எனவே இந்த 30 கிலோ மீட்டர் டவுன் பஸ் என்று இருப்பதை 40 கிலோ மீட்டர் வரை கொஞ்சம் உயர்த்திக் கொடுத்து விட்டால், அதே பஸ்கள் எல்லாக் கிராமங்களுக்கும் சென்று போகின்ற ஒரு வசதி ஏற்பட்டு விடும். ஏன் என்றால், 2 கிலோ மீட்டர் 3 கிலோ மீட்டரிலே கூட உள்ள எங்கள் ஊர்களுக்கு பஸ்கள் வரமாட்டேன் என்கிறது என்று சொல்லி, கிராமங்களிலே உள்ளவர்கள், எங்களிடம் பெரிய புகாரைச் சொல்கிறார்கள். தயவு செய்து அமைச்சர் அவர்கள் 30 கிலோ மீட்டராக இருப்பதை 40 ஆக நீட்டித்துக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே, ஏற்கனவே 25 கிலோ மீட்டராக இருந்த தூரத்தை 30 கிலோ மீட்டராக மாற்றியதற்குக் காரணம் இது போல 26 கி. மீ. $27\frac{1}{4}$ கி. மீ. இருக்கிறது, ஆகவே இதை 30 கி. மீட்டராக நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு, தற்போது நடைமுறையில் இருக்கிறது. இனி 30 கி. மீட்டராக இருப்பது 35-க்கோ அல்லது 40-க்குப் போனால், அதற்குமேலே $1\frac{1}{4}$ கி.மீட்டர் 2 கி. மீ. வரை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வரத்தான் செய்யும். இதை அதிகப்படுத்துவதிலே ஒன்றும் அரசுக்கு மறுப்பு இல்லை. ஆனால் டவுன் பஸ்கள் மற்றும் மஃபசல் பஸ்கள் என்று பார்க்கும் போது, கட்டண வித்தியாசங்களிலே பேருந்துகளுக்கான போக்குவரத்துக் கழகங்கள் மேலும் கஷ்டத்தை சந்திக்கக் கூடிய சூழ்நிலைதான் ஏற்படும். இருந்

1990 சனவரி 23]

தாலும் பொதுமக்களுடைய நலன் கருதி இந்தக் கருத்தை எந்த அளவிற்குச் செயல்படுத்த முடியும் என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

9-45 மணி

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே போதிய அளவில் பேருந்துகள் இல்லாத காரணத்தினால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் கேட்கின்றபோது பேருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள். இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, கழகம் பேருந்துகளைப் பெறும் வரை தனியாருக்கு டெம்பரரி பர்மிட் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே, தற்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கெங்கு பேருந்துகள் வேண்டுமென்று கோரிக்கைகள் வைத்திருக்கின்றார்களோ, அந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. தொடர்ந்து அத்தகைய கோரிக்கைகள் பல துறைகளிலிருந்து வருகின்ற காரணத்தால் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலேயும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு எந்தெந்த கிராமங்களுக்குத் தேவை என்பதை அறிந்து சாலை வசதிகள் உள்ள அத்தனை கிராமங்களுக்கும் விரைந்து இந்த பஸ் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு போக்குவரத்துக் கழகம் வாரியாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனைக் கூட்டம் ஒன்றை அரசின் சார்பில் நடத்தயிருக்கிறோம். அப்போது உறுப்பினர்களுடைய தேவைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே பேருந்தை 4, 5 வழித்தடங்களிலே நாள் தோறும் விடுகின்ற காரணத்தினால் ஒரு கிராமத்திற்கு ஒரு வழித் தடத்திலே செலுத்துகின்ற நேரத்திலே, காலை 5 மணிக்கே இரண்டு முறையும், இரவு நேரங்களிலே 7 மணிக்குப் பிறகு இரண்டு முறையும் செலுத்துகின்ற காரணத்தினால், அந்த கிராமத்திலே இருக்கின்ற மக்கள் பயனடைய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, ஒரே பேருந்தை 4 வழித் தடங்களிலே விடுவதைத் தவிர்த்து, மக்களுடைய குறைகளைத் தீர்க்கின்ற வகையிலே, அவர்கள் அந்தந்த கிராமங்களிலே இருந்து நகரத்திற்கோ அல்லது வேறு எந்த இடத்திற்கோ சென்று பணிகளை ஆற்றுகின்ற வகையிலே ஒரே தடத்திலே விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1990 சனவரி 23

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை அரசு 'Multi pronged Route' என்று அதற்குப் பெயரிட்டிருக்கிறார்கள். சில சிறிய கிராமங்களைப் பேருந்துகளால் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் தான் ஒரே பேருந்தை நேரங்களை மாற்றி பல கிராமங்களை இணைத்து 2, 3 வழித் தடங்களில் விடக் கூடிய ஒரு நிலைமையை நாம் வைத்திருக்கிறோம். ஒரே தடத்திலே அந்தப் பேருந்து ஓடுமேயானால், அதற்குத் தேவையான பயணிகளும் இருக்க மாட்டார்கள். ஏராளமான நஷ்டத்தையும் நாம் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வழித் தடங்களிலும் அரசுப் பேருந்துகள் ஓடுகின்ற காரணத்தினால் ஏனைய மாவட்டங்களைப் போல் தனியார் பேருந்துகள் ஓடுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகையினால் பல வழித் தடங்களில் சாலைகள் செம்மையாக இருந்தும் போக்குவரத்து வசதி வேண்டி பேருந்துகள் விடுவதற்கு அதிகாரிகளை அணுகியபோது அவர்கள் விடுவதற்கு மறுக்கிறார்கள். காரணம் கேட்டால் போதிய அளவில் பேருந்துகள் இல்லை என்று சொல்லி, அதனை விட்டு விடுகிறார்கள். அதற்கு உடனடியாக ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போன்று நிச்சயமாக இந்தக் குறைகள் எல்லாம் எதிர் காலத்திலே கேட்டு அறியப்பட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே சத்தியமங்கலம், தெங்குமரகடா போன்ற இடங்களுக்கு இரவு நேரங்களிலே வண்டிகளிலே பயணம் செய்கின்ற மக்கள் அந்த வழியிலே இருக்கின்ற சிற்சில கிராமங்களுக்குச் சென்று வந்தால் பயனாக இருக்கும். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மேட்டுப்பாளையம்—தெங்குமரகடா செல்கின்ற வழியில் குன்னூரார், கல்லம்பாளையத்தைச் சேர்ந்த ஒருவர் யானையால் இரவு நேரத்தில் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட பல சம்பவங்கள் என்னுடைய தொகுதியிலே இரவு நேரங்களில் நடைபெறுகின்றன. அதைப் போக்க அந்த வழித் தடங்களில் இரவு நேரங்களிலே, சாலை வசதிகள் இருக்கின்ற ஊர்களுக்கு, பேருந்துகள் சென்று வர ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி 23]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இந்தக் குறைகளைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிவிப்பார்களேயானால், நடவடிக்கைகள் மேற்கொள்ள வசதியாக இருக்கும்.

9-50 மணி.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கார்ப்பொரேஷன் பேருந்துகளில் பத்திரிகையாளர்களுக்கு இனாமாக பாஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் தந்தை பெரியார் கார்ப்பரேஷனில் பத்திரிலகயாளர்களுக்கு ஃப்ரீ பாஸ் கொடுக்க மறுத்து, கொடுக்கக் கூடாது என்ற நிலை இருக்கிறதே, அதைக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன் தினம்தான் இது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஏற்கெனவே பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்ட பஸ் பாஸ்களை இந்த ஆண்டு புதுப்பித்துத் தருவதற்கு அதிகாரிகள் மறுக்கிறார்கள் என்ற தகவல் நேற்று முன் தினம் காலை என்னிடத்திலே தெரிவிக்கப்பட்டதற்குப் பிறகு உடனடியாக மீண்டும் புதுப்பித்து வழங்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்திரவு இடப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துக் கழகங்களில் ஏற்படுகிற குறைபாடுகளை ஆராயவும், மக்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளுக்கும் முன்பு அட்வைசரி பாடி என்ற வகையில் ஒரு குழு இருந்தது. ஆலோசனைக் குழு என்று மக்கள் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்ட குழு இருந்த காரணத்தால், மாவட்டங்களில் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பிரிவுகளில் அது சிறப்பாக பணி ஆற்றியது. அந்த முறையில் இந்த அரசு மக்கள் ஆலோசனைக் குழு என்ற ஒரு குழுவை ஏற்படுத்துவதற்கு ஏதாவது செயற் குறிப்பு வைத்திருக்கிறதா ? அப்படி என்றால், அதை நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

[1990 சனவரி 23

கூடுதல் மின்சார ரயில் வண்டிகள்.

*1436 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தாம்பரத்திலிருந்து கடற்கரைக்குக் கூடுதலாக மின்சார ரயில் வண்டிகள் விட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரத்திற்குக் கூடுதலாக மின்சார இரயில் வண்டிகள் விட வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டுகளாக இந்தப் பகுதியில் ரயில் சர்வீஸ்களில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. புறநகர்ப் பகுதிகளில் குடியிருப்புகள் பெருகிவிட்ட காரணத்தினாலே, பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து, நெரிசல் அதிகமாகி இருக்கிறது. அதில் பயணம் செய்யும் பெண்கள், குழந்தைகள் நிலைமைகள் சொல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே, இந்தப் பாதைகளில் ஓடுகிற வண்டிகளில், வண்டித் தொடர்களின் நீளத்தை அதிகரிக்கவும், அந்தப் பகுதிகளுக்குக் கூடுதலான மின் வண்டி அலகுகள், ஈ.எம்.யு.க்கள் ஒதுக்கீடு செய்யவும், பெண்கள், குழந்தைகளுக்கு நெரிசல் நேரங்களில் கூடுதலான பெட்டிகள் ஒதுக்கப்படவும் ரெயில்வே துறையை வலியுறுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீட்டர் கேஜ் பிரிவு 1931 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அதற்குப் பிறகு எந்தவிதமான வளர்ச்சியும் இல்லாமல் அதே நிலைமையில் இருந்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்தை மையமாக வைத்து ஏற்கெனவே 1986-வது ஆண்டு தமிழக அரசின் சார்பிலே இந்தக் கருத்துக்களை எல்லாம் வலியுறுத்தி மத்திய அரசு இரயில்வே துறைக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது, ஆனால் இன்றைய வரைக்கும் அதற்குப் பதில் வரவில்லை. மீண்டும் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தி இந்த மீட்டர் கேஜ் பாதையை பிராட்கேஜ்ஜாக மாற்றுவதற்கும் கூடுதலாக ரயில் பெட்டிகள் விடப்பட்டு நெருக்கடியைச் சமாளிப்பதற்கு

1990 சனவரி 23]

வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு நிச்சயமாக வலியுறுத்தி கேட்டுக் கொள்ளும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் கடற்கரை இரயில் பாதைக்குக் குறுக்கே அமைந்திருக்கக் கூடிய சாலை சந்திப்புகளில், லெவல் கிராஸிங்கில் போக்குவரத்தை அனுமதிக்க வேண்டியுள்ளதால் கூடுதல் ரயில் வண்டி விட முடியவில்லை என்று இரயில்வே நிர்வாகம் சொல் கிறது. இதற்கு இந்தச் சந்திப்புகளிலே சுரங்கப் பாதை அல்லது மேம்பாலம் கட்டுவது மிக மிக அவசியம். தாம்பரத்திற்கும் கிண்டிக்கும் இடையே மேம்பாலங்கள் கட்டப்பட இந்த அரசு ரயில்வே துறையை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நிச்சயம் வலியுறுத்தும்.

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழு.

*336 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழுவில் அந்தந்தத் தொகுதி பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளில் உள்ள தனியார் தோட்டங்களிலும் மற்றும் தனியார் காடுகளிலும் மரங்களை வெட்ட அனுமதி அளிக்கும் மாவட்ட குழு, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைப் பகுதி (மரங்கள் பாதுகாப்புச்) சட்டம் 1955 ஆகியவற்றின் பிரிவு 2 (ஏ)-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள காரணத்தால், இக் குழுவில் தொகுதி சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்களைச் சேர்க்க வழிவகை இல்லை.

9–55 மணி.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் வனத்துறை அதிகாரியும் இன்னும் சில அதிகாரிகள் மட்டுமே இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே, மக்களால்

1990 சனவரி 23]

வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு நிச்சயமாக வலியுறுத்தி கேட்டுக் கொள்ளும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் கடற்கரை இரயில் பாதைக்குக் குறுக்கே அமைந்திருக்கக் கூடிய சாலை சந்திப்புகளில், லெவல் கிராஸிங்கில் போக்குவரத்தை அனுமதிக்க வேண்டியுள்ளதால் கூடுதல் ரயில் வண்டி விட முடியவில்லை என்று இரயில்வே நிர்வாகம் சொல்கிறது. இதற்கு இந்தச் சந்திப்புகளிலே சுரங்கப் பாதை அல்லது மேம்பாலம் கட்டுவது மிக மிக அவசியம். தாம்பரத்திற்கும் கிண்டிக்கும் இடையே மேம்பாலங்கள் கட்டப்பட இந்த அரசு ரயில்வே துறையை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நிச்சயம் வலியுறுத்தும்.

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழு.

*336 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழுவில் அந்தந்தத் தொகுதி பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளில் உள்ள தனியார் தோட்டங்களிலும் மற்றும் தனியார் காடுகளிலும் மரங்களை வெட்ட அனுமதி அளிக்கும் மாவட்ட குழு, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைப் பகுதி (மரங்கள் பாதுகாப்புச்) சட்டம் 1955 ஆகியவற்றின் பிரிவு 2 (ஏ)-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள காரணத்தால், இக் குழுவில் தொகுதி சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க வழிவகை இல்லை.

9—55 மணி.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் வனத்துறை அதிகாரியும் இன்னும் சில அதிகாரிகள் மட்டுமே இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே, மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் நலமாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சட்டத்தை திருத்தினால்தான் அதைச் செய்ய முடியும். ஆகவே இப்போதைக்கு நான் இதுபற்றி எதுவும் சொல்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவர் அவர்களே, இது போன்ற மரங்கள் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்ற குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். அந்தக் குழு மட்டும் பரிசீலனை செய்து கட்டிங் பெர்மிட்டுகள் கொடுக்கின்றபோது சில தவறுகள் நடந்து விடுகின்றன. அந்தக் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்ற போது காய்ந்து விழக் கூடிய மரங்களை மட்டும் வெட்ட வேண்டும் என்று அந்தக் குழு உத்தரவிடும்போது இடையிலே சிலர் கட்டிங் பெர்மிட் எடுக்கின்றவர்கள் தவறான வழியில் பச்சை மரங்களை வெட்டுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் அந்தப் பணி சிறப்பாக நடக்கும் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதுபற்றி சட்ட திருத்தம் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இதில் சாதகமும் இருக்கிறது, பாதகமும் இருக்கிறது. ஆகவே இப்போதைக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றுதல்

*2640 **திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் நலமாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சட்டத்தை திருத்தினால்தான் அதைச் செய்ய முடியும். ஆகவே இப்போதைக்கு நான் இதுபற்றி எதுவும் சொல்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவர் அவர்களே, இது போன்ற மரங்கள் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்ற குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். அந்தக் குழு மட்டும் பரிசீலனை செய்து கட்டிங் பெர்மிட்டுகள் கொடுக்கின்றபோது சில தவறுகள் நடந்து விடுகின்றன. அந்தக் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்ற போது காய்ந்து விழக் கூடிய மரங்களை மட்டும் வெட்ட வேண்டும் என்று அந்தக் குழு உத்தரவிடும்போது இடையிலே சிலர் கட்டிங் பெர்மிட் எடுக்கின்றவர்கள் தவறான வழியில் பச்சை மரங்களை வெட்டுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் அந்தப் பணி சிறப்பாக நடக்கும் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதுபற்றி சட்ட திருத்தம் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இதில் சாதகமும் இருக்கிறது, பாதகமும் இருக்கிறது. ஆகவே இப்போதைக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றுதல்

*2640 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1990 சனவரி 23]

(ஆ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான அருவி இல்லம் விடுதியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றம் செய்ய நகராட்சிகளின் கையேடு விதி 12(3)-ன்படி நகரியக் குழுவின் அனுமதியும், அரசின் அனுமதியும் பெற்றிட கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சுற்றுலாத் துறைக்கு திருக்குற்றாலத்திலே ஒரு உணவகம் இருக்கிறது. அது சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகிறது. சுற்றுலாத் துறைக்குத் தங்கும் அறைகள் இருந்தால் அது மேலும் சிறப்பாக இயங்கும் என்று உணவகத்திலே பணி புரிகின்றவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, மிக விரைவாக திருக்குற்றாலத்திலே சுற்றுலா துறைக்குச் சொந்தமாக தங்கும் அறைகளை ஏற்படுத்திட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, இந்த அருவி இல்லம் சுற்றுலாத்துறை கொடுத்த மானியத்தைக் கொண்டு, நகரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டது. ஆகவே 75 படுக்கை அறைகள் கொண்ட இந்த விடுதியைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றிட எண்ணியபோது இரண்டு சிக்கல்கள் அங்கே ஏற்பட்டன. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான் அந்த இடம் நகரியத்திற்குச் சொந்தமான இடம் அல்ல, திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இடம் என்று அந்த ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள் வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்ட நீதி மன்றத்திலே அது வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அடுத்தது நகரியம் இந்த விடுதியைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றித்தர வேண்டுமானால் அந்த நகரியத்திலே தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அந்த நகரியம் இப்பொழுது முழுமையாக இல்லை. ஆகவே அதிலும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விடுதியைத் தவிர இன்னும் ஒரு ''ஹோட்டல் தமிழ்நாடு'' கட்டுவதற்காக இன்னொரு இடத்தையும் நாங்கள் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியோடு வினா நேரம் சிறிது நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : பேரவைத் தலைவர் அவர்களே, தகராறு உள்ள நகரியத்திற்குச் சொந்தமான அந்த இடத்தைக் கையகப்படுத்துவது என்றால் அது காலதாமதம் ஏற்பட ஒரு காரணமாக இருக்கிறது. ஆகவே, அதே திருக்குற்றாலத்தில்

வேறு பல இடங்கள் இருக்கின்றன. அவற்றை இந்த சுற்றுலாத் துறை கையகப்படுத்தி, தங்கும் அறைகள் ஏற்படுத்துகின்ற எண்ணம் உண்டா? ஏனென்றால், இன்றையதினம் திருக்குற்றாலம் இலட்சக்கணக்கான மக்கள் வந்து போகின்ற ஒரு முக்கியமான—நடுத்தர மக்கள் ஆதரிக்கின்ற—சுகவாசஸ்தலமாக இருக்கின்றது. தங்கும் அறைகள் அவ்வளவு வசதியாக இல்லாத காரணத்தால் வருகின்றவர்கள் எல்லாம் சுற்றுலா துறைக்கு உரிய அறைகள் அங்கே இருக்கின்றனவா என்றுதான் கேட்கிறார்கள். ஆகவே, மக்கள் ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்ற, சுற்றுலாத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற தங்கும் அறைகளை மிக விரைவிலே ஏற்படுத்திட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் கீழ் இயங்குகின்ற ஹோட்டல்களுக்கு இருக்கின்ற மரியாதையை, வரவேற்பை நான் இங்கே கேட்டு உள்ளபடியே மகிழ்ச்சி அடைகின்றேன். போன ஆண்டு குற்றாலத்திற்கு நம்முடைய ஆளுநர் அவர்கள் சென்றபோதும் இதே கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து மிகத் தீவிரமாக அங்கே நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 561 மற்றும் 3715 ஆகியவை சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு மின்துறை அமைச்சர் சேர்த்தே பதில் சொல்லலாம்.

கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகள்.

*வினா எண். 561 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா –

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்தைக் கைவிட்டு விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கூடங்குளத்தில் ஒரு அணு மின் நிலையம் அமைக்கும்திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு குறைந்தபட்சம் வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் தேவைப்படுவதாக பம்பாய் அணுசக்தித் துறை கேட்டுள்ளது. அரசின் தீவிர பரிசீலனைக்குப் பின் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு அமைப்பின்கீழ் உள்ள பேச்சிப்பாறை அணையிலிருந்து தொடர்ந்து வினாடிக்கு

வேறு பல இடங்கள் இருக்கின்றன. அவற்றை இந்த சுற்றுலாத் துறை கையகப்படுத்தி, தங்கும் அறைகள் ஏற்படுத்துகின்ற எண்ணம் உண்டா? ஏனென்றால், இன்றையதினம் திருக்குற்றாலம் இலட்சக்கணக்கான மக்கள் வந்து போகின்ற ஒரு முக்கியமான—நடுத்தர மக்கள் ஆதரிக்கின்ற—சுகவாசஸ்தலமாக இருக்கின்றது. தங்கும் அறைகள் அவ்வளவு வசதியாக இல்லாத காரணத்தால் வருகின்றவர்கள் எல்லாம் சுற்றுலா துறைக்கு உரிய அறைகள் அங்கே இருக்கின்றனவா என்றுதான் கேட்கிறார்கள். ஆகவே, மக்கள் ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்ற, சுற்றுலாத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற தங்கும் அறைகளை மிக விரைவிலே ஏற்படுத்திட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் கீழ் இயங்குகின்ற ஹோட்டல்களுக்கு இருக்கின்ற மரியாதையை, வரவேற்பை நான் இங்கே கேட்டு உள்ளபடியே மகிழ்ச்சி அடைகின்றேன். போன ஆண்டு குற்றாலத்திற்கு நம்முடைய ஆளுநர் அவர்கள் சென்றபோதும் இதே கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து மிகத் தீவிரமாக அங்கே நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 561 மற்றும் 3715 ஆகியவை சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு மின்துறை அமைச்சர் சேர்த்தே பதில் சொல்லலாம்.

கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகள்.

*வினா எண். 561 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்தைக் கைவிட்டு விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கூடங்குளத்தில் ஒரு அணு மின் நிலையம் அமைக்கும்திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு குறைந்தபட்சம் வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் தேவைப்படுவதாக பம்பாய் அணுசக்தித் துறை கேட்டுள்ளது. அரசின் தீவிர பரிசீலனைக்குப் பின் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு அமைப்பின்கீழ் உள்ள பேச்சிப்பாறை அணையிலிருந்து தொடர்ந்து வினாடிக்கு

1990 சனவரி 23]

10 கன அடி வீதம் நல்ல தண்ணீர் வழங்க பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. கோதையாறு அமைப்பின் கீழ் உள்ள மேல் கோதையார் பேச்சிப்பாறை அணை, சித்தாறு அணைகள் 1 மற்றும் 2 இவற்றிற்குத் தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின் கீழ்' நவீனப்படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் இவற்றிலிருந்து குறைந்த அளவு தண்ணீரை அணு மின் நிலையத் திற்குத் தருவதால் பாசன வசதிகள் எந்தவிதத்திலும் பாதிக்காது.

*வினா எண் 3715 திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூடங்குளம் அணுமின் நிலையப் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதில் தமிழக அரசின் பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, (அ) கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகளில் மண் ஆய்வுப் பணிகள் பூர்த்தி அடைந்து விட்டன. இதற்கான அறிக்கை மத்திய அரசின் அணு சக்திக் கழகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. மேற்கொண்டு அணு மின் நிலையம் அமைப்பதற் கான வேலைகளை அணு சக்திக் கழகமே மேற்கொண்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு அரசு இந்த அணு மின் நிலையம் அமைக்க தேவையான புள்ளிவிவரங்களை சம்பந்தப்பட்ட மத்திய மாநில துறைகளிலிருந்து பெற்றுத் தருவதிலும் நிலத் தன்மை ஆய்வு போன்ற பணிகளை மேற்கொண்டும் மின் நிலையம் மற்றும் நகரியம் அமைத்திடத் தேவையான நிலத்தைக் கையகப் படுத்தும் உரிமை மாற்றும் பணியிலும், இத்திட்டத்திற்குத் தேவையான நீரை வழங்கிடவும் இயன்ற உதவிகளைப் புரிந்து வருகின்றது.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றில் மழைக் காலத்தில் வரும் தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. எனவே, பழையாற்றில் தாமரைக்குளம் ஊர் அருகே, பிள்ளை பெற்ற அணை என்ற சிறிய அணையை மிகப் பெரிய அணையாகக் கட்டினால் கூடங்குளத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு மிக வசதியாக இருக்கும். எனவே, அதை மாற்றும் திட்டம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இது கூடங்குளத்திலே அமையவிருக்கின்ற அணு மின் நிலையத்திற்குத் தண்ணீர் வழங்குவது பற்றிய கேள்வி.

எனவே, அதற்கான விடையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு நிலங்களைத் தருகின்ற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடைய பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 1,500 ஹெக்டேருக்கு மேல் நிலம் தேவைப்படுகிறது. அது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டு இருக்கிறது. மாநில அரசாங்கம் அந்தப் பணிகளிலே ஈடுபட்டு இருக்கிறது. அப்படியே மாநில அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து மத்திய அரசுக்கு ஒப்படைத்தாலும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் மத்திய அரசாங்கத்தினர் தான். மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிலம் கொடுப்பவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தும்.

10-05 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணுமின் நிலையப் பகுதியிலே கட்டுகின்ற அலுவலகங்கள், கோடவுன் போன்ற கட்டுமானப் பணிகள் அனைத்தும் தொகுதியிலுள்ள பகுதிகளிலே கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுமின் நிலையம் அமைந்திட விஜயாபதி என்ற கிராமத்திலே 1,037 ஹெக்டேர் நிலமும், செட்டிகுளம் என்ற கிராமத்திலே 516 ஹெக்டேர் நிலமும் ஆர்ஜிதம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தனியாக இருந்தாலும் இந்த இரண்டு கிராமத்திற்குள்ளேதான் நடைபெறும்.

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம்.

* *1025* **திரு. கே. பிச்சாண்டி :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

எனவே, அதற்கான விடையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு நிலங்களைத் தருகின்ற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடைய பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதுதான் ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 1,500 ஹெக்டேருக்கு மேல் நிலம் தேவைப்படுகிறது. அது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டு இருக்கிறது. மாநில அரசாங்கம் அந்தப் பணிகளிலே ஈடுபட்டு இருக்கிறது. அப்படியே மாநில அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து மத்திய அரசுக்கு ஒப்படைத்தாலும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் மத்திய அரசாங்கத்தினர் தான். மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிலம் கொடுப்பவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தும்.

10–05 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணுமின் நிலையப் பகுதியிலே கட்டுகின்ற அலுவலகங்கள், கோடவுன் போன்ற கட்டுமானப் பணிகள் அனைத்தும் தொகுதியிலுள்ள பகுதிகளிலே கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுமின் நிலையம் அமைந்திட விஜயாபதி என்ற கிராமத்திலே 1,037 ஹெக்டேர் நிலமும், செட்டிகுளம் என்ற கிராமத்திலே 516 ஹெக்டேர் நிலமும் ஆர்ஜிதம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தனியாக இருந்தாலும் இந்த இரண்டு கிராமத்திற்குள்ளேதான் நடைபெறும்.

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம்.

* 1025 **திரு. கே. பிச்சாண்டி :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலையில் அதிக அளவு சக்தியுள்ள மின் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

[1990 சனவரி 23]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் திட்டத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும்கூட இதுவரை நிலம் கையகப்படுத்தப் படாமல் இருக்கிறது. வருவாய்த் துறை அதிகாரிகளுடைய மெத்தனத்தால் இத்திட்டம் மிகவும் தாமதப்படுத்தப்படுகிறது. இதை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் ஏற்கெனவே 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட 110/11 கே.வி. மின் நிலையம் இயங்கி வருகிறது. அதனுடைய உச்ச தேவை 1994-95-ல் 230/110 கே.வி.-யாக உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டு 1994-95-ல் இந்த உயர் அழுத்த மின் தானியங்கிகளைப் பொருத்த அரசு முடிவு செய்து இருக்கிறது. இதற்காக ஏற்கெனவே அரசாங்கம் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. வடாற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், சமுத்திரம் கிராமத்தில் சர்வே எண் 135-ல் 10 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் வேண்டுமென்று கையகப் படுத்துவதற்கான செயற்குறிப்பு வேலூர் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு 15-3-1989-ல் அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடன் மேலும் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தற்போது மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற காரணத்தாலும், திருவண்ணாமலைப் பகுதியிலே அடிக்கடி மின் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக விவசாயிகளுடைய மோட்டார்கள் பழுதுபடுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றித்தர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே நெய்வேலியின் அனல் மின் நிலையத்திலிருந்தும், சிங்காரப்பேட்டையிலிருந்தும் உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தை 230/110 கே.வி. உயர் மின் அழுத்தமுள்ள மின் தானியங்கி துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1990 சனவரி 23

சேந்தமங்கலம் பகுதியில் குளுக்கோஸ் தொழிற்சாலை.

*5501 திரு. கே. சின்னசாமி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேந்தமங்கலம் பகுதியில் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி ஆவதால் குளுகோஸ் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம் பகுதியில் குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலைஅமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியில் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு வளருகிறது. ஆகவே அரசு குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவினால் அதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். அங்கிருக்கும் ஏழை யெளிய மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, அங்கே குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கு மாவு சமீபத்தில் விலை உயர்ந்து இருப்பதன் காரணமாக அதிலிருந்து தயார் செய்யப்படுகின்ற குளுகோசின் விலையைக் காட்டிலும் மற்ற மூலப் பொருளிலிருந்து தயார் செய்யப்படுகின்ற குளுகோஸின் விலை குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து தயார் செய்யப்பட்ட குளுகோஸ் சந்தையில் விற்பனை ஆகவில்லை. எனவே இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் பின்தங்கிய தொகுதியாக, மலை வாழ் மக்கள் வாழ்கின்ற தொகுதியாக இருப்பதால் அரசு மறு பரிசீலனை செய்து வரும் ஆண்டிலாவது இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 962 மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

1990 சனவரி 23]

வினாக்கள் 3125, 3248, 3776, 3794, 4192 ஆகியவை ஒரே பொருள் தொடர்புடையனவாக இருப்பதால் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஒரேயடியில் அவற்றுக்கான விடைகளை அளித்து விடலாம்.

கால்நடை மருத்துவமனைகள்

*3125 திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் கால் நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த வட்டத்தில் அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*3248 திரு. ஆ. பாலையா ;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

குளச்சல் நகர[மன்ற பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்மிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளச்சல் நகர் மன்றப்பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியமில்லை.

*3776 திரு. மு. முகம்மது சித்திக் ;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பூம்புகார் தொகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் தொகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

[1990 சனவரி 23

*3794—திரு. எல். மூக்கையா;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள லட்சுமிபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் 1989–90ல் லட்சுமிபுரம் உட்பட 10 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

*4192 திரு. கா. அண்ணாதுரை :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் நாட்டுச்சாலை கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

10–10 மணி

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனை கட்டுகிற எண்ணம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவமனை கட்டுவது குறித்து பரிசீலனையில் இருக்கிறதா

1990 சனவரி 23]

என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். எந்த இடத்தில், எங்கு அமைக்க விரும்புகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குத் தக்கப் பதில் அளிக்க இயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களே கேள்வி எழுப்பியிருக்கிறார். கேள்விக்கான பதிலை ஆற அமர எழுதிக் கொடுக்கலாம்.

திரு. ஆ. பாலையா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகரமன்றப் பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்க சாத்தியம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குளச்சல் நகரசபையைப் பொறுத்தவரையில் ஏராளமான கால்நடைகளை 5—6 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் வரை கொண்டு சென்று மருத்துவம் செய்யும் நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சரின் பதிலை மாற்றி. குளச்சலில் கால்நடை மருத்துவமனையை அமைக்க சாத்திய கூறுகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை உடனடியாகத் தொடங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகரசபை எல்லைக்குள் கால்நடை மருத்துவமனை அமைக்கத் தேவை யான கருத்துருவை அரசுக்குச் சமர்ப்பிக்க நடைமுறை விதி களுக்கேற்ப அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிற வகையில், உரிய தீர்மானங்களுடன் மூல அறிக்கை குளச்சல் நகராட்சி ஆணையரிடமிருந்து கோரப்பட்டதற்கு, அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்படாத நிலையில் அரசு நிலம் வாங்கி அல்லது ஆர்ஜிதம் செய்து கால்நடை மருந்தகம் அமைக்கும் படி கோரி குளச்சல் நகராட்சி மன்றம் தீர்மானம் நிறை வேற்றியுள்ளதால், இப்போது பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். முகம்மது சித்திக்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய கால்நடை மருத்துவமனை ஏற் படுத்துவதற்கு அரசு என்னென்ன தகுதிகளை எதிர்பார்க் கிறது? எந்த அடிப்படையில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் இது குறித்து விளக்கி இருக்கிறேன். இருப்பினும் தற்சமயம் அந்த நிபந்தனைகளை இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன். ஒரு இடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்

1990 சனவரி 23]

என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். எந்த இடத்தில், எங்கு அமைக்க விரும்புகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குத் தக்கப் பதில் அளிக்க இயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களே கேள்வி எழுப்பியிருக்கிறார். கேள்விக்கான பதிலை ஆற அமர எழுதிக் கொடுக்கலாம்.

திரு. ஆ. பாலையா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகரமன்றப் பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்க சாத்தியம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குளச்சல் நகரசபையைப் பொறுத்தவரையில் ஏராளமான கால்நடைகளை 5—6 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் வரை கொண்டு சென்று மருத்துவம் செய்யும் நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சரின் பதிலை மாற்றி. குளச்சலில் கால்நடை மருத்துவமனையை அமைக்க சாத்திய கூறுகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை உடனடியாகத் தொடங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகரசபை எல்லைக்குள் கால்நடை மருத்துவமனை அமைக்கத் தேவை யான கருத்துருவை அரசுக்குச் சமர்ப்பிக்க நடைமுறை விதி களுக்கேற்ப அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிற வகையில், உரிய தீர்மானங்களுடன் மூல அறிக்கை குளச்சல் நகராட்சி ஆணையரிடமிருந்து கோரப்பட்டதற்கு, அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்படாத நிலையில் அரசு நிலம் வாங்கி அல்லது ஆர்ஜிதம் செய்து கால்நடை மருந்தகம் அமைக்கும் படி கோரி குளச்சல் நகராட்சி மன்றம் தீர்மானம் நிறை வேற்றியுள்ளதால், இப்போது பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். முகம்மது சித்திக்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய கால்நடை மருத்துவமனை ஏற் படுத்துவதற்கு அரசு என்னென்ன தகுதிகளை எதிர்பார்க் கிறது? எந்த அடிப்படையில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் இது குறித்து விளக்கி இருக்கிறேன். இருப்பினும் தற்சமயம் அந்த நிபந்தனைகளை இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன். ஒரு இடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்

றால் தேவையின் அடிப்படையில், அங்கே இருக்கிற கால் நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப அந்த இடத்தில் கால்நடை மருந்தகம் அமைவதற்காக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றமும், ஊராட்சி ஒன்றியமும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டும். அதோடு அரசாங்கத்தின் மூலமாக ஒரு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. அதை நிறைவேற்றுகிற வகையில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்ப வேண்டும். அதாவது ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஒப்புதல் தீர்மானம்; ஒரு ஏக்கருக்கு குறையாமல் இடம் வழங்குகின்ற தீர்மானம் : நிரந்தரமான கட்டிடம் அமைகிற வரையில் வாடகை இல்லாமல் அந்த ஊரில் ஒரு கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும், அந்த வகையில் கட்டிடம் கட்டுவதற்கு ஆகின்ற செலவில், அது முதல் கால் நடை மருந்தகமாக இருந்தால் 25 விழுக்காடும், இரண்டாவது கால்நடை மருந்தகமாக இருந்தால் 50 விழுக்காடும், மூன்றாவது கால்நடை மருந்தகமாக இருந்தால் 75 விழுக்காடும், நான்காவது கால்நடை மருந்தகமாக இருந்தால் 100 விழுக்காடும் அந்த ஊராட்சி ஒன்றியமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு தீர்மானம் : இப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பி வைத்தால் அதற்குப் பிறகு அரசாங்கத்தின் நிதி நிலைக்கேற்ப, தேவைக்கேற்ப அங்கே இருக்கிற கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப அது பரிசீலனை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-15 மணி

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் லட்சுமிபுரம் ஊராட்சிப் பகுதி மக்கள் கால்நடை வளர்ப்பதையே முக்கிய தொழிலாகக்கொண்டு வாழ்கின்ற மக்கள். அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில் இன்றைய தினம் இந்த அரசு அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு அனுமதி வழங்கியமைக்காக லட்சுமிபுரம் ஊராட்சிப் பகுதியில் இருக்கக் கூடிய அனைத்து மக்களும் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினராகிய நான் லட்சுமிபுரம் ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு அனுமதி அளித்த நமது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் தரப்படுகின்ற பதிலையொட்டி ஆளும் கட்சியிலிருந்தும் சரி, எதிர்க்கட்சியிலிருந்தும் சரி

1990 சனவரி 23]

கடந்த சில நாட்களாக நன்றி கூறுகிற ஒரு கடமையைச் செய்து வருகிறார்கள். அது கேள்வி நேரத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. நன்றியை ஏற்றுக்கொள்கிறோம் என்றாலும் அந்த முறை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. நன்றியைத் தனியாகவோ அல்லது கடிதம் மூல மாகவோ அல்லது வேறு ஒரு சந்தர்ப்பத்திலோ பேசும் போது குறிப்பிடுவதுதான் சாலச் சிறப்புடையதாக இருக்கும். கேள்வி நேரத்தில் கேள்வி கேட்பதுபோல் எழுந்து நன்றி தெரி வித்துக் கொள்வது ஒரு கேள்வியாக ஆகிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. அண்ணாதுரை ; பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட இந்த நாட்டுச்சாலை என்கிற கிராமம் பட்டுக்கோட்டையிலே இருந்து 6 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள ஒரு கிராமம். அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏறத்தாழ 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப் பதாகக் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இந்த ஊரில் இந்தக் கால்நடை மருந்தகம் அமைப்பதற்குத் தேவையான இடத்தை இப்போதே இலவசமாக வழங்கி இருக்கிறார்கள். தேவையான கட்டிடம் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசிலனை செய்து இந்த ஊரில் மருந்தகம் அமைக்க முன் வருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசின் 'கோஸ்டல் டெவலப்மென்ட் ஏரியா' என்ற திட்டத்தின் கீழ் கிராம கேந்திர திட்டத்தின் அடிப்படையில் இந்த ஊரில் மருந்தகம் அமைப்பதற்குப் பரிந்துரை செய்யப்பட்டு சென்னையில் இருக்கக்கூடிய இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுச்சாலை என்ற கிராமம் பட்டுக்கோட்டை — மதுக்கூர் சாலையில் பட்டுக்கோட்டையிலிருந்து 6-வது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அங்கிருந்து மதுக்கூர் 5-வது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் அதிராம்பட்டினம், தம்பிக் கோட்டை, மேலக்காடு ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குள் பட்டுக்கோட்டை கால்நடை மருத்துவ மனை செயல்பட்டு வருகிறது. எனவே நாட்டுச்சாலைக்கு அருகாமையில் பட்டுக்கோட்டையில் 6-வது கிலோ மீட்டரில் கால்நடை மருத்துவமனையும், 5-வது கிலோ மீட்டரில் உள்ள மதுக்கூரிலே ஒரு கால்நடை மருந்தகமும், அருகா

மையில் காசாங்காடு கிராமத்திலே 4-வது கிலோ மீட்டரில் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. இவையன்றி பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கத்தினுடைய நிதி நிலைக்கேற்ப தேவையை அடிப்படையாகக் கொண்டுதான் கால்நடை மருந்தகம் அமைக்க இயலுமே தவிர எங்கெல்லாம் நாம் விரும்புகிறோமோ அங்கெல்லாம் அவற்றை அமைக்கிற சூழ்நிலை ஏற்பட்டால் உண்மையான தேவையை நாம் பூர்த்தி செய்ய இயலாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே வரும் காலங்களில் இது போன்ற நாட்டுச்சாலை கிராமத்தில் கால்நடை மருந்தகம் உண்மையிலேயே தேவை ஏற்படுமானால் அந்த நேரத்தில் அது குறித்து பரிசீலனை செய்வோம் என்ற பதிலை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

10-20 மணி

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

அவையில் செயல்படும் ஒரு கட்சி குறித்து.

திரு. செ. நூர்முகமது; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற தமிழ்நாடு ஜனதா கட்சிக்கும் ஜனதா. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே 'Point of order' வராது.

திரு. செ. நூர்முகமது; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசலாம்.

மையில் காசாங்காடு கிராமத்திலே 4-வது கிலோ மீட்டரில் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. இவையன்றி பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கத்தினுடைய நிதி நிலைக்கேற்ப தேவையை அடிப்படையாகக் கொண்டுதான் கால்நடை மருந்தகம் அமைக்க இயலுமே தவிர எங்கெல்லாம் நாம் விரும்புகிறோமோ அங்கெல்லாம் அவற்றை அமைக்கிற சூழ்நிலை ஏற்பட்டால் உண்மையான தேவையை நாம் பூர்த்தி செய்ய இயலாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே வரும் காலங்களில் இது போன்ற நாட்டுச்சாலை கிராமத்தில் கால்நடை மருந்தகம் உண்மையிலேயே தேவை ஏற்படுமானால் அந்த நேரத்தில் அது குறித்து பரிசீலனை செய்வோம் என்ற பதிலை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

10-20 மணி

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

அவையில் செயல்படும் ஒரு கட்சி குறித்து.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற தமிழ்நாடு ஜனதா கட்சிக்கும் ஜனதா. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே 'Point of order' வராது.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசலாம்.

3. தகவல் கோரல்

(அ) 22–1–1990 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பில் ஒரு சொற்றொடரை நீக்க வேண்டியது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்று அவை நிறைவுறும்போது உணர்ச்சியின் அளவு சற்று அதிகமாகப் போய்விட்டது. நண்பர் திரு. சிங்காரம் அவர்கள் தேனீபோல ஓடியோடி சேகரித்த தகவல்களை எல்லாம் சொல்ல வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணத்தினாலே இங்கே அவரும் உணர்ச்சி வசப்பட்டு இருந்த நிலையிலே உங்களிடம் கொஞ்சம் அதிக நேரம் கேட்டுப் போராடினார். அவர்கள் அதே நிலையிலே வெகு நேரம் கேட்டுக்கொண்டு இருந்த காரணத்தினாலே, மாண்புமிகு திரு. சிங்காரம் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டீர்கள். அது அவர்களுடைய பெருமைக்குப் பங்கம் விளைவிப்பதாக இருக்கிறது என்று அவரும் நாங்களும் கருதுகிறோம். எனவே தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டால் எல்லோருக்கும் திருப்தியாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு முன்னால் நீங்கள் ஒரு உறுதியை அளிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அந்த உறுதியை நான் கேட்க வேண்டும்.

பொதுவாகவே இந்த அவையில் விவாதம் சுவையாக நடத்துவதற்காகப் பல குறுக்கீடுகளை நானும் அனுமதிக்கிறேன். நானும் அதிலே பங்கு பெறுகிறேன். இதுவரைக்கும் எந்த உறுப்பினருடைய கண்ணியத்திற்கும் குறைவான எந்தச் சொற்களையும் பயன்படுத்தியதாக நான் அறியவில்லை. எனினும் சில நேரங்களில் வரம்பு மீறிய சில செயல்களின் வாயிலாக, பேரவைத் தலைவரோ, வேறு எவருமோ, கண்ணியத்திற்குக் குறைவான சொற்களைப் பயன்படுத்தினால் கண்டிப்பாக அவை, அவைக் குறிப்புகளில் இருந்து நீக்கப்படுவதில் எந்தப் பின்னோட்டமும் கிடையாது. உறுதியாகவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவேன். ஆனால் அதற்கு முன்னால் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சிங்காரம், இன்னும் பொதுவாக எடுத்துக்கொண்டாலும் கூட, மேசையைத் தட்டுவது, தொடர்ந்து சத்தம் போட்டுக்கொண்டு இருப்பது இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறபோது முறைப்படிப் பார்த்தால் பேரவைத் தலைவர் அவருடைய சொல்லை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு முன்னால் அப்படிச் சொல்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவது என்றால் அவையிலே

யிருந்தே அவரை நீக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. எனவே இப்போதும் நீங்கள் திரு. சிங்காரம் அவர்களுடைய செயலை நியாயப்படுத்துகிறீர்களா என்பதை முதலில் தெரிவித்துவிட்டால் பிறகு நான் அடுத்த நொடியில் இந்தச் சொற்றொடரைக் கண்டிப்பாக அவைக் குறிப்பிலிருந்து நீக்குவேன். இன்றைக்கு நீங்கள் சொல்கின்ற இந்தப் பகுதி எல்லோருக்கும் பொருந்தும் என்பதற்காகச் சொல்கிறேன்.

காரணம் இன்று 23 பேச்சாளர்கள் பெயர் கொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு ஒரு மணிக்கு அவை முடியப் போகிறது. மீண்டும் 4 மணிக்குக் கூடப் போகிறது. முன் வரிசையில் உள்ள தலைவர்கள் பேசப் போகிறார்கள். நாளைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அதற்குப் பிறகு முதல்வர் அவர்களுடைய பதில் உரையும் இருக்கிறது. இந்த வரிசையில் அமைத்துக் கொண்டால்தான் எல்லோருக்கும் இந்த அவையில் பேசுவதற்குக் வாய்ப்புக் கிடைக்கும். ஒவ்வொரு நாளும் சில பெயர்கள் குறிக்கப்பட்டு, பின்னால் தள்ளப்பட்டு அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் நழுவிக் கொண்டே போகிற அளவிற்கு இருக்கிறது. நேற்று 147 மணித் துளிகளை 8 பேர்கள் மட்டுமே பகிர்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்த நிலை தொடருமானால், இன்றைக்குப் பெயர் கொடுத்திருக்கின்ற 23 பேர்களில் 8 பேர்களைத் தவிர கண்டிப்பாக மற்றவர்களுக்கு வாய்ப்பு இருக்காது. இது போன்ற சூழ்நிலைகளில் தொடர்ந்து, இங்கே மணி அடிப்பது என்பது ஏதோ ஒரு பொழுதுபோக்காக அடிப்பது என்பதல்ல. 8 மணித்துளிகளுக்கு பிறகு ஒரு முறை ஒரு மணியடித்தால் முடிக்க வேண்டும் என்ற உணர்ச்சியை அது தோற்றுவிக்கவேண்டும். அதற்குப் பிறகு 10-வது மணித் துளி இருக்கும்போது முடித்து விடுகிறோம் என்று சொல்லி முடிப்பதற்கான வாக்கியங்களைத் தொடர வேண்டும். அதை எப்படி முடிக்க வேண்டும் என்பது நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்களுக்குத் தெரியும். அப்படி முயற்சியே செய்யாமல் மேலும் 2 நிமிடம், மேலும் 2 நிமிடம் என்றால், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கூட எழுதினார்கள், 'even after giving 2 or 3 extensions' என்று. இவ்வளவு நீட்டிப்புக் கொடுத்த பிறகும் நான் உட்கார மாட்டேன் என்று உறுப்பினர் சொல்வதும், மேசையைத் தட்டுவதும், சத்தம் போடுவதும் எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதை அருள்கூர்ந்து நம் குமரி அனந்தன் அவர்கள் தான் சொல்ல வேண்டும். இது தொடர்ந்து நீடிக்கலாமா அல்லது எல்லா உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாக இனிமேல் அப்படி நடக்காது என்று தெரிவிக்கும் வகையிலே அனைவரின் சார்பிலும் நீங்கள் உறுதி அளிப்பீர்களானால் அடுத்த நொடியில் நான் என்னுடைய செய்தியைச் சொல்லி விடுவேன்.

1990 சனவரி 23]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற சம்பவங்கள் என்று சொல்வது அந்த நேரம் சரியாக அமையாத காரணத்தாலே ஏற்பட்ட நிலை, நீங்கள் ஒரு மணியிலிருந்து பசிக்க ஆரம்பிக்கிறது என்று ஆரம் பித்ததாலே பசிக்காத எனக்குக் கூட பசிக்க ஆரம்பித்து விட்டது. அதிலும் அடிக்கடி மீன்

10-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் பயன் படுத்தவில்லை. அவரே சொன்னார், நம்முடைய அமைச்சர் நன்றாக சாப்பிடுவார் என்று சொன்னார். நான்தான் சாப் பாட்டை ஏன் இந்த நேரத்திலே நினைவூட்டுகிறீர்கள் என்று சொன்னேன். மீண்டும் அவைக் குறிப்பை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அந்தச் சூழ்நிலையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு குறுக்கீடு. நான் இதே அவையில் 7 மணி 20 மணித் துளிகள் தொடர்ந்து இருந் திருக்கிறேன். எனவே, நான் பசி பற்றிக் கவலைப்பட வில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப் பினருக்கு தாங்கள் வாய்ப்பு அளித்தீர்கள் என்பதை நிச்சய மாக யாரும் மறுக்க முடியாது. அந்த வாய்ப்பை அவர் சற்று அதிகமாகப் பயன்படுத்தி பேசி விட்டார். காரணம் அப் போது குறுக்கீடுகள் அதிகமாக ஏற்பட்டு விட்டன. எப்போதும் வாடிக்கையாக அப்படி நடந்துகொள்ளாதவர் என்கிற பெயரை எடுத்தவர் அந்த உறுப்பினர். ஆகவே, நேற்று இங்கே நடந்த முறை தவிர்க்க வேண்டிய ஒன்று. எனவே, அதை மறந்து அவைத் தலைவரே பேசிய வார்த்தையாக இருந்தாலும் அதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி நல்ல தொரு சூழ்நிலை ஏற்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருடைய இந்த அன்பான வேண்டுகோளையும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் வைத்த அந்த கோரிக்கையையும் முழுவதுமாக ஏற்று அவைத் தலைவர் நேற்று பயன்படுத்திய ஒரு சொல்லை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதோடு இனிமேல் எல்லா உறுப்பினர் களும் மிகுந்த கண்ணியத்தோடு இந்த அவைக்கும் பேரவைத்

தலைவருடைய மணிக்கும் உரிய வாய்ப்புகளையும், மதிப்பையும் கொடுத்து நடந்துகொண்டு தொடர்ந்து கண்ணியத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து திரு. பி. எச். பாண்டியன்.

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தில் காலியாகவுள்ள நீதிபதிகள் பதவிகளை நிரப்புவது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக இருக்கக்கூடிய நீதிபதிகள் பதவிகளை நிரப்புவதற்குத் தமிழக அரசிடமிருந்து மத்திய அரசாங்கத்திற்குப் பெயர்களை அனுப்பிவிட்டார்களா? அப்படி அனுப்பிவிட்டார்களானால் யார், யார் பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டாமா? இன்றைக்கு வந்திருக்கிற அரசு freedom of information அதாவது மக்களுக்கு எல்லாம் தெரிய வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதுபோன்ற நியமனங்களை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர் சங்கத்திற்கும் தெரியாமல் பெயர்களை அனுப்பினால், அவர்கள் பதவி ஏற்ற பிறகு அவர்களைப் பற்றி யாரும் பேசவும் முடியாது, வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவும் முடியாது. அந்தக் காரணத்தால் தான் இதனை நான் சொல்கிறேன். மேலும் இந்தப் புதிய முறையை இன்றையதினம் பல மேலை நாடுகளில் பின்பற்றுகிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அமெரிக்கத் திருநாட்டில் இவ்வாறு நியமிப்பதற்கு முன் வழக்கறிஞர் சங்கங்களைக் கேட்கிறார்கள். அதுபோல யார் யாரை நீதிபதிகளாக நியமிக்க வேண்டுமென்று அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பாஸ் செய்த பிறகு தான் நியமனம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட ராஜமன்னார் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மாநில அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று கூறியிருக்கிறது. ஆகவே, யார் யாருடைய பெயரை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க முடியாவிட்டாலும் கூட எத்தனை பேர்களுடைய பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதையாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் யார், யாருடைய பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்

தலைவருடைய மணிக்கும் உரிய வாய்ப்புகளையும், மதிப்பையும் கொடுத்து நடந்துகொண்டு தொடர்ந்து கண்ணியத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து திரு. பி. எச். பாண்டியன்.

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தில் காலியாகவுள்ள நீதிபதிகள் பதவிகளை நிரப்புவது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக இருக்கக்கூடிய நீதிபதிகள் பதவிகளை நிரப்புவதற்குத் தமிழக அரசிடமிருந்து மத்திய அரசாங்கத்திற்குப் பெயர்களை அனுப்பிவிட்டார்களா? அப்படி அனுப்பிவிட்டார்களானால் யார், யார் பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டாமா? இன்றைக்கு வந்திருக்கிற அரசு freedom of information அதாவது மக்களுக்கு எல்லாம் தெரிய வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதுபோன்ற நியமனங்களை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர் சங்கத்திற்கும் தெரியாமல் பெயர்களை அனுப்பினால், அவர்கள் பதவி ஏற்ற பிறகு அவர்களைப் பற்றி யாரும் பேசவும் முடியாது, வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவும் முடியாது. அந்தக் காரணத்தால் தான் இதனை நான் சொல்கிறேன். மேலும் இந்தப் புதிய முறையை இன்றையதினம் பல மேலை நாடுகளில் பின்பற்றுகிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அமெரிக்கத் திருநாட்டில் இவ்வாறு நியமிப்பதற்கு முன் வழக்கறிஞர் சங்கங்களைக் கேட்கிறார்கள். அதுபோல யார் யாரை நீதிபதிகளாக நியமிக்க வேண்டுமென்று அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பாஸ் செய்த பிறகு தான் நியமனம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட ராஜமன்னார் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மாநில அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று கூறியிருக்கிறது. ஆகவே, யார் யாருடைய பெயரை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க முடியாவிட்டாலும் கூட எத்தனை பேர்களுடைய பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதையாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் யார், யாருடைய பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்

1990 சனவரி 23] [டாக்டர் மு. கருணாநிதி]

பதைச் சொல்ல இயலாது. உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டு முன் உதாரணங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இந்த அவையிலே தலைவராக மாத்திரமல்லாமல் முன்பு இருந்த அரசுக்கு நல்ல ஆலோசகராகவும் இருந்திருக்கிறார்கள். அப்போது இந்த ஆலோசனைகள் எல்லாம் சொல்லப்பட்டனவா? அவை ஏற்றுக் கொள்ளப்பட்டனவா என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. ஒருவேளை அவர் சொல்லியிருக்கக் கூடும். இருந்தாலும் மாநில அரசே இன்னின்ன பெயர்கள் என்று நிர்ணயித்து அறிவிக்கும் முடிவை மேற்கொள்ள இயலாது. ஏனென்றால் இது டெல்லி வரை சென்று, அதற்குப் பிறகுதான், அதனை ஏற்றுக்கொண்ட பிறகுதான் அந்தப் பெயர்களை அறிவிப்பது என்கிற நிலை இதுவரையிலே நடைமுறையில் இருந்து வருகிறது. நம்முடைய உயர் நீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகளுடைய Sanctioned strength 25. இப்போது இருப்பவர்கள் 19 பேர். நாளையதினம் ஒருவர் ஒய்வு பெறுகிறார். அந்த இடத்தையும் சேர்த்தால் செய்யப்பட வேண்டிய நியமனங்கள் 7 என்று ஆகிறது. நாம் புதிதாகக் கேட்டு அதற்காக ஆணை எதிர் பார்க்கப்படுவது 7 பேருக்கு, நாம் முதலில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே 4 பேருக்கும் பிறகு 8 பேருக்கும் புரப்போசல் அனுப்பி, இதுவரையிலே அதற்கான அங்கீகாரம் நமக்கு வந்து சேரவில்லை. மறுபடியும் ஆட்சி மாறிய பிறகு மீண்டும் அதற்குள்ள முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மறுபடியும் அந்தப்பெயர்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு நாம் அந்த 8 பேர்களுக்குப் பதிலாக 6 பேர்களுடைய பெயர்களை அனுப்பி இருக்கின்றோம். முதலில் அனுப்பப்பட்டு நீண்ட நெடுங்காலமாக இன்னும் அங்கீகாரம் பெறாமல் இருப்பது 4; மறு பரிசீலனைக்குப் பிறகு அனுப்பப்பட்டு இருப்பது 6; ஆக மொத்தம் 10 பெயர்கள் நம்முடைய சார்பில் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் அதற்கான அங்கீகாரம் வந்தபாடில்லை.

10-30 மணி

(இ) பால் கொள்முதலில் வெட்டு செய்துள்ளதால் பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குட்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் சங்க அங்கத்தினர்களிடமிருந்து 10 முதல் 15 சதவீதம் பாலைக் குறைத்து வாங்க வேண்டுமென்று ஒன்றியம் கட்டளையிட்டு, வாய்மொழியாகச் சங்கச் செயலாளருக்கு உத்திரவு வழங்கி, பால் வாங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் பாலை

சத்யமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பதைச் சொல்ல இயலாது. உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டு முன் உதாரணங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இந்த அவையிலே தலைவராக மாத்திரமல்லாமல் முன்பு இருந்த அரசுக்கு நல்ல ஆலோசகராகவும் இருந்திருக்கிறார்கள். அப்போது இந்த ஆலோசனைகள் எல்லாம் சொல்லப்பட்டனவா? அவை ஏற்றுக் கொள்ளப்பட்டனவா என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. ஒருவேளை அவர் சொல்லியிருக்கக் கூடும். இருந்தாலும் மாநில அரசே இன்னின்ன பெயர்கள் என்று நிர்ணயித்து அறிவிக்கும் முடிவை மேற்கொள்ள இயலாது. ஏனென்றால் இது டெல்லி வரை சென்று, அதற்குப் பிறகுதான், அதனை ஏற்றுக்கொண்ட பிறகுதான் அந்தப் பெயர்களை அறிவிப்பது என்கிற நிலை இதுவரையிலே நடைமுறையில் இருந்து வருகிறது. நம்முடைய உயர் நீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகளுடைய Sanctioned strength 25. இப்போது இருப்பவர்கள் 19 பேர். நாளையதினம் ஒருவர் ஓய்வு பெறுகிறார். அந்த இடத்தையும் சேர்த்தால் செய்யப்பட வேண்டிய நியமனங்கள் 7 என்று ஆகிறது. நாம் புதிதாகக் கேட்டு அதற்காக ஆணை எதிர் பார்க்கப்படுவது 7 பேருக்கு, நாம் முதலில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே 4 பேருக்கும் பிறகு 8 பேருக்கும் புரப்போசல் அனுப்பி, இதுவரையிலே அதற்கான அங்கீகாரம் நமக்கு வந்து சேரவில்லை. மறுபடியும் ஆட்சி மாறிய பிறகு மீண்டும் அதற்குள்ள முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மறுபடியும் அந்தப்பெயர்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு நாம் அந்த 8 பேர்களுக்குப் பதிலாக 6 பேர்களுடைய பெயர்களை அனுப்பி இருக்கின்றோம். முதலில் அனுப்பப்பட்டு நீண்ட நெடுங்காலமாக இன்னும் அங்கீகாரம் பெறாமல் இருப்பது 4; மறு பரிசீலனைக்குப் பிறகு அனுப்பப்பட்டு இருப்பது 6; ஆக மொத்தம் 10 பெயர்கள் நம்முடைய சார்பில் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் அதற்கான அங்கீகாரம் வந்தபாடில்லை.

10-30 மணி

(இ) பால் கொள்முதலில் வெட்டு செய்துள்ளதால் பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குட்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் சங்க அங்கத்தினர்களிடமிருந்து 10 முதல் 15 சதவீதம் பாலைக் குறைத்து வாங்க வேண்டுமென்று ஒன்றியம் கட்டளையிட்டு, வாய்மொழியாகச் சங்கச் செயலாளருக்கு உத்திரவு வழங்கி, பால் வாங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் பாலை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1990 சனவரி 23

உற்பத்தி செய்யும் விவசாயிகள் அந்தப் பாலை எங்கே கொண்டு செல்வது என்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் நிலைமையை நாம் பார்க்கிறோம்.

அதேநேரத்தில் பெரியார் மாவட்டத்தில் குறிப்பாக 3 லட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் இருந்தாலும் கூட ஒரு லட்சத்து 45 ஆயிரம் லிட்டர் பால் தான் அங்கே வருகிறது என்ற நிலையிலும் கூட, வேறு மாவட்டத்திலிருந்து 50 ஆயிரம் லிட்டர் பாலை வாங்கி அந்த மாவட்டத்தில் இருக்கிற 1 லட்சத்து 45 ஆயிரம் லிட்டர் பாலைக் கூட வாங்காது இருக்கிற ஒரு அவல நிலை அந்த மாவட்டத்தில் இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதே நேரத்தில் பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் வங்கிகளிலே வாங்கிய கடனைக் கூட திருப்பிச் செலுத்த முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது என்பதையும் 10 நாட்களுக்கு ஒரு முறை பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பட்டுவாடாப் பணம் கொடுக்கப்படாமல் 3 மாத காலமாக அந்தச் சங்கங்களுக்கு வழங்காத காரணத்தால் சங்கத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்குப் பணம் கொடுக்க முடியாத இக்கட்டான சூழ்நிலை நிலவிக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த அரசுக்கு உணர்வூட்டுகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற பாலுக்குத்தான் ஒரு நிர்ணய விலை இருக்கிறதே தவிர அவர்கள் உற்பத்தி செய்கின்ற வேறு எந்தப் பொருள்களுக்கும் நிர்ணய விலை இல்லை என்பதையும் இந்த அரசுக்கு உணர்வூட்டி, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, பாலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளினுடைய பால் அத்தனையையும் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதோடு பாலுக்குப் பணம் பட்டுவாடா செய்வதை 10 நாட்களுக்கு ஒரு முறை என்று முதலில் தந்தது போல்—3 மாத காலாமக பணம் தராமல் இருப்பதைத் தவிர்த்து உடனடியாக அவர்களுக்குப்பணம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு விரைவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் சங்கங்களில் உற்பத்தி ஆகும் பால் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் குறைவாகக் கொள்முதல் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு உண்மையல்ல. ஒவ்வொரு ஆண்டும் கிராம அளவில் பால் வளப் பணிகள் மூலமாக பால் உற்பத்தி மிகக் கணிசமான அளவு பெருகி வருகிறது. 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பால் உற்பத்தியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க பால் கொள்முதல் விலையை உயர்த்திய காரணத்தாலும், வள

1990 சனவரி 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மிக்க மாட்டுத் தீவனம் அளித்ததாலும் சீரிய முறையில் கால் நடைப் பராமரிப்பு மற்றும் இனவிருத்தி செய்யப்பட்டதாலும் பால் உற்பத்தி வேகமாக அதிகரித்து வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 10,00,000 லிட்டர் பால் ஒரு நாளைக்குக் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. 1987ஆம் ஆண்டு 9,15,292 லிட்டர் பால் கொள்முதல் செய்யப் பட்டு இருக்கிறது. 1988ஆம் ஆண்டு 11,19,580 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. நான் முதலில் சொன்ன காரணத்தால் பால் அதிகமாக உற்பத்தி ஆகி 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 14,13,095 லிட்டர் பால் கொள்முதல் செய்து இருக்கிறார்கள். இருந்தாலும் இன்னும் இதைவிட 2,00,000 லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி ஆவதாகச் சொல் கிறார்கள். அதைக் கொள்முதல் செய்வதற்கு நமக்கு போதுமான வசதி இருந்தாலும் கூட அதைப் பதப் படுத்துவதற்கு வேண்டிய வாய்ப்புகள் இல்லை. நம்மிடத் தில் இருக்கக்கூடிய எல்லா ஒன்றியங்களிலேயும் ஒரு நாளைக்கு 12,00,000 லிட்டர் பாலைத்தான் பதப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றாலும்கூட இந்த முறையீடு வந்த காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி எந்தவிதமான புகாரும் வரக்கூடாது என்ற அடிப் படையிலே 2,00,000 லிட்டர் பால் ஒரு நாளைக்கு அதிகமாக வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஏதோ நம்முடைய மாநிலத்தில் மட்டும் அல்ல, நமக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளாவில், கர்நாடகாவில், மகாராஷ் டிரா, குஜராத் போன்ற மாநிலங்களிலும்கூட இதே பிரச்சினை இந்த ஆண்டு உருவாகி இருக்கிறது.

10-35 மணி

ஆனால், மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களிலேயும் கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களிலேயும் இதைத்தவிர்ப் பதற்காக ஒவ்வொரு மாதமும் 10 நாள் ''பால் கொள்முதல் விடு முறை'' அளிக்கும்படி அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இதே கருத்தை நம்முடைய ஒன்றியமும் அரசுக்கு பரிந்துரை செய்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி, மாதத்திற்கு 10 நாட்கள் ''பால் கொள்முதல் விடு முறை'' விட்டால் பால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள். எனவே, அப்படிப்பட்ட விடுமுறை தமிழகத்திற்கு விட வேண்டாம் என்று அவர்கள் சொன்னதன் பேரிலே விடுமுறை அளிக்காது இயன்றவரை உற்பத்தியாகும் பாலை நாம் கொள் முதல் செய்து கொண்டிருக்கிறோம்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1990 சனவரி 23

அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உற்பத்தியாகும் பாலுக்குப் பணம் கொடுப்பது பற்றியும் ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே நம்முடைய பால் உற்பத்தி ஒன்றியம் இப்படிப்பட்ட பிரச்சினை தமிழகமெங்கும் இருக்கிறது என்பதை அறிந்து, உடனடியாக, ரூ. 15 கோடி கடன் வாங்கி, மதுரை ஒன்றியத்திற்கு ரூ. 130 லட்சம்: திருச்சி ஒன்றியத்திற்கு ரூ. 15 இலட்சம், அண்ணா ஒன்றியத்திற்கு ரூ. 240 இலட்சம் என்று இப்படி மொத்தமாக தர்மபுரி, மதுரை, ஈரோடு சேலம் போன்ற ஒன்றியங்களுக்கு 11.60 கோடி ரூபாயை முன்பணமாகக் கொடுத்து பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பணத்தைப் பட்டுவாடா செய்யுங்கள் என்றும் அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. எனவே இந்த அரசாங்கத்தை பொறுத்தவரையில் உற்பத்தியாகிற அவ்வளவு பாலையும் கொள்முதல் செய்யக்கூடாது என்பதல்ல. இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப பாலைக் கொள்முதல் செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைகூட இன்னும் ஒரு மாதம் அல்லது 2 மாதங்கள்தான் இருக்கும். மார்ச் மாதம் நாமே கேட்டால்கூட பால் உற்பத்தியாளர்கள் நமக்குத் தேவையான பாலைக் கொடுக்க முன்வரமாட்டார்கள். இருந்தாலுங்கூட மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மனதில் கொண்டு, எல்லா இடங்களிலும் பாலைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த புள்ளி விவரங்களிலிருந்து ஆண்டுதோறும் தமிழகத்தில் பால் உற்பத்தி அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பது தெரிகிறது. ஆகவே பால் உற்பத்தி பெருகி வருகிற நேரத்தில் பாலைப் பதனிடக்கூடிய நிலையங்களை ஆங்காங்கே உருவாக்கி ஆங்காங்கே பாலைச் சேகரித்து பால் உற்பத்தியாளர்களிடமிருந்து அவ்வளவு பாலையும் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம் அல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவருடைய வேண்டுகோள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பாலிலிருந்து வெண்ணை மற்றுமுள்ள பொருள்களைத் தயாரிப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலும் நமக்கு 3000 டன் பால் பவுடர்தான் வைத்துக் கொள்ளலாம் என்றிருந்த நிலமைக்கு மாறாக 5,000 டன் பால் பவுடர் வைத்துக் கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். எனவே எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக்

கொண்டிருக்கிறது. இன்னும் திருநெல்வேலியில் அதிகமான பாலைப் பதப்படுத்தக்கூடிய பக்குவப்படுத்தக்கூடிய ஒரு தொழிற் சாலையைத் தொடங்க இந்த அரசு முயற்சி செய்கிறது. எனவே எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

(ஈ) ''இந்து'' இதழ் நிருபரை சிலர் தாக்கியுள்ளது, சில இடங்களில் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பெற்றுள்ளது, சிறுபான்மை சமுதாயத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியது ஆகியவை குறித்து.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, அண்மையிலே இந்த மாத முதல் வாரத்திலே, திருவையாற்றிலிருந்து தஞ்சாவூருக்கு வருகின்ற வழியில் இந்து பத்திரிகையின் ரிப்போர்ட்டர் நம்மைப்பற்றிய சமாச்சாரத் தையும் எழுதி அனுப்புபவர்கள், அப்படிப்பட்ட ரிப்போர்ட்டர் ஒருவர் தன் ஸ்கூட்டரில் வரும்போது சில சமூக விரோதிகளோ அல்லது யாரோ, அவர்களைச் சர்க்கார் யார் என்று கவனித் ததோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை, அந்த ரிப்போர்ட் டரைக் கீழே தள்ளி 4, 5 பேராகச் சேர்ந்து இழுத்துப் போட்டு அடி அடி என்று அடித்து அதோடு மட்டுமல்ல—அவர் அணிந் திருந்த பூணூலையும் அறுத்து, இம்சித்து பலவிதமான தொந்தர வுக்கு அவரை ஆளாக்கினார்கள் என்று சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கிறது என்று எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந் திருக்கிறது.

நம் நாட்டிலே 1950ஆம் வருஷம் ஜனவரி 26ஆம் தேதி எல்லா சுதந்திரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேச்சு உரிமை, எழுத்துரிமை, ஓட்டுரிமை எல்லாம் அன்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அடிக்கிற உரிமை கொடுக்கப்படவில்லை. அரசியல் சட்டத் தில் இம்மாதிரி அடித்து துன்புறுத்துகிற உரிமை கொடுக்கவில்லை. அதனால்தான் அது மாதிரி உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, அந்த மாதிரி ஏதாவது சம்பவம் நடந்தால் அதிலிருந்து பாது காப்பதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு. அரசாங்கம் குண்டர் களுக்கும், பணக்காரர்களுக்கும் அல்ல. எங்களைப் போன்றிருக் கின்ற மைனாரிட்டிகள், ஏழைகள் இதுமாதிரி இருக்கின்ற வர்க்கங்களுக்குத்தான் சர்க்காரேயொழிய மற்றபடி இதுபோன்ற சமூக விரோதிகளுக்கும், மற்றவர்களுக்கும் அல்ல. எனவே இது குறித்து சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலிலே நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

10-40 மணி

அதுபோல நீடாமங்கலத்திலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. கான்பரென்ஸ் ஒன்று நடந்தது திருச்சிராப்பள்ளியிலே. நாட்டிலே எத்தனையோ வகுப்புகள் இருக்கின்றன. இந்த நாட்டைச் செக்யூலர் ஸ்டேட் என்று சொல்கிறோமே தவிர, நாட்டிலே இன்னும் இது அடங்கவில்லை. இதற்குச் சர்க்கார் நடவடிக்

கொண்டிருக்கிறது. இன்னும் திருநெல்வேலியில் அதிகமான பாலைப் பதப்படுத்தக்கூடிய பக்குவப்படுத்தக்கூடிய ஒரு தொழிற் சாலையைத் தொடங்க இந்த அரசு முயற்சி செய்கிறது. எனவே எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

(ஈ) ''இந்து'' இதழ் நிருபரை சிலர் தாக்கியுள்ளது, சில இடங்களில் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பெற்றுள்ளது, சிறுபான்மை சமுதாயத்தினருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியது ஆகியவை குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, அண்மையிலே இந்த மாத முதல் வாரத்திலே, திருவையாற்றிலிருந்து தஞ்சாவூருக்கு வருகின்ற வழியில் இந்து பத்திரிகையின் ரிப்போர்ட்டர் நம்மைப்பற்றிய சமாச்சாரத்தையும் எழுதி அனுப்புபவர்கள், அப்படிப்பட்ட ரிப்போர்ட்டர் ஒருவர் தன் ஸ்கூட்டரில் வரும்போது சில சமூக விரோதிகளோ அல்லது யாரோ, அவர்களைச் சர்க்கார் யார் என்று கவனித்ததோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை, அந்த ரிப்போர்ட்டரைக் கீழே தள்ளி 4, 5 பேராகச் சேர்ந்து இழுத்துப் போட்டு அடி அடி என்று அடித்து அதோடு மட்டுமல்ல—அவர் அணிந்திருந்த பூணூலையும் அறுத்து, இம்சித்து பலவிதமான தொந்தரவுக்கு அவரை ஆளாக்கினார்கள் என்று சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கிறது என்று எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது.

நம் நாட்டிலே 1950ஆம் வருஷம் ஜனவரி 26ஆம் தேதி எல்லா சுதந்திரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேச்சு உரிமை, எழுத்துரிமை, ஓட்டுரிமை எல்லாம் அன்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அடிக்கிற உரிமை கொடுக்கப்படவில்லை. அரசியல் சட்டத்தில் இம்மாதிரி அடித்து துன்புறுத்துகிற உரிமை கொடுக்கவில்லை. அதனால்தான் அது மாதிரி உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, அந்த மாதிரி ஏதாவது சம்பவம் நடந்தால் அதிலிருந்து பாதுகாப்பதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு. அரசாங்கம் குண்டர்களுக்கும், பணக்காரர்களுக்கும் அல்ல. எங்களைப் போன்றிருக்கின்ற மைனாரிட்டிகள், ஏழைகள் இதுமாதிரி இருக்கின்றவர்க்கங்களுக்குத்தான் சர்க்காரேயொழிய மற்றபடி இதுபோன்ற சமூக விரோதிகளுக்கும், மற்றவர்களுக்கும் அல்ல. எனவே இது குறித்து சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலிலே நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

10-40 மணி

அதுபோல நீடாமங்கலத்திலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. கான்பரென்ஸ் ஒன்று நடந்தது திருச்சிராப்பள்ளியிலே. நாட்டிலே எத்தனையோ வகுப்புகள் இருக்கின்றன. இந்த நாட்டை செக்யூலர் ஸ்டேட் என்று சொல்கிறோமே தவிர, நாட்டிலே இன்னும் இது அடங்கவில்லை. இதற்குச் சர்க்கார் நடவடிக்

கை எடுத்துக்கொள்ள வேண்டும். செக்யூலர் ஸ்டேட், செக்யூலர் ஸ்டேட் என்று சொல்கிறோம். டெல்லியிலேயிருந்து கன்னியா குமரி வரைக்கும் செக்யூலர் ஸ்டேட் என்ற வார்த்தைதான் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐயா அவர்கள் நேரத்தின் அருமை கருதி கொஞ்சம் சுருக்கமாக....

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: கிடைத்திருக்கின்ற வாய்ப்பை நான் எடுத்துக் கொள்ள வேண்டிருக்கிறது. ஆனால் மத்தியிலேயும் சரி, மாநிலத்திலேயும் சரி, இன்னும் அந்த செக்யூலர் எந்த அளவிலே போய்ச் சேருமோ தெரியவில்லை. மதப் பிரச்சனை, ஜாதிப் பிரச்சனை போன்ற இதுமாதிரி பிரச்சனை நீண்டு கொண்டே போய்க்கொண்டிருப்பதனாலே இது எந்த அளவிலே, எதிலே போய் நிற்கும் என்று தெரியவில்லை.

திருச்சியிலே இரண்டு கான்பரென்ஸ்கள் நடந்திருக்கின்றன. கொஞ்சம் தள்ளிக் கூடக் கொடுத்திருக்கலாம். ஒருவருடைய ஒரு கான்பரென்ஸ் நடந்தால் அதற்குப் பிறகு மற்றவர்கள் கேட்க வேண்டிய பொறுப்பு, உரிமை இருக்கிறது. எல்லோருக்கும் பேச் சுரிமை, எழுத்துரிமை இருக்கிறது. அந்த உரிமையிலே கேட்கிறார் கள். அதற்கு எங்கு நடக்கலாம், எங்கு நடக்கக்கூடாது என்று பார்த்துக் கொடுத்திருக்கலாம், கொஞ்சம் சட்டம்—ஒழுங்கைப் பராமரிக்க வேண்டும் அல்லவா? இங்கே நடந்தால் சண்டை நடக்கும் போல இருக்கிறது, இங்கே இருந்தால், பெரிய சம்பவம், ஏதாவது நடக்கக் கூடாத சம்பவம் ஏதாவது நடக்கும் போலிருக்கிறது என்று தடுத்துக் கொடுத்திருக்கலாம். இரண்டு கான்பரென்ஸ் களும் ஒருங்கே நடக்கும்பொழுது மனக்கிலேசம் ஏற்படுகிறது. அவரவர்கள் பேச்சுரிமை இருப்பதாலே பேசுகிறார்கள். பேசும் பொழுது ஏதாவது தொந்திரவு ஏற்படக்கூடிய அளவிலே மனித வர்க்கம்தானே - ஏற்படக் கூடிய அளவிலே, திருச்சியிலே இரண்டு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. புத்தூர் அக்கிரகாரத்திலே புகுந்து ஒரு சம்பவம். அதேபோன்று பாண்ட மங்கலம் அக்கிரகாரம். இரண்டொரு சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

இனிமேலாவது இதுமாதிரி நடக்கக்கூடாது, நம்முடைய தமிழ்நாட்டிலே இதுமாதிரி நடக்கக் கூடாது. வேறு எங்கேயோ என்னென்னவெல்லாமோ நடக்கின்றன மதக் கலவரம் நடக் கிறது. ஜாதிக் கலவரம் நடக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே இதுவரையில் நடக்கவில்லை. ஆனால் ஒன்றிரண்டு நடக்கும்.

அதுமாதிரி இந்தச் சம்பவத்தையும், நம்முடைய முதலமைச்ச ரைப் போல நடுநிலையாக இருக்கின்ற ஒரு அமைச்சர், அதாவது ரொம்ப விவேகம். வேகம் வேறே, விவேகம் வேறே. அவரிடம் வேகமே கிடையாது. விவேகம் ரொம்ப ஜாஸ்தி நம்முடைய முதலமைச்சரிடத்திலே. அந்த விவேகத்தைப் பயன்படுத்தி, எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுக்கும்படியாக நான் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

1990 சனவரி 23]

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, ஜனவரி மாதம் 4—ஆம் தேதி இந்து நிருபர் திரு. கணபதி அவர் களைத் தாக்கியதாகவும், அவருடைய 'Sacred Thread'-ஐப் பறித்ததாகவும் ஒரு ரிப்போர்ட்டைப் பிராமண சமுதாயத்தி னுடைய தலைவர்கள் என்னிடம் முறையிட்டதால் சொல்கிறேன். புத்தூர் அக்கிரகாரம் என்ற அந்தப் பகுதியிலே டி. கே. தோழர் கள் அவர்களைத் தாக்கியதாகவும், பல்வேறு இடங்களிலே பத்திரி கையிலே வராத அளவிற்குப் பேசியவர்கள் பற்றி ரிப்போர்ட் ஆகாமல், பத்திரிகையிலே வராத அளவிற்குப் பல்வேறு இடங் களிலே அந்தச் சமுதாயம் நசுக்கப்படுவதாக அந்தச் சமுதாயத் திலேயிருந்து மிக வருத்தமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் குப் பின்னாலேதான் மிகக் கொடுமையாக நடந்து கொண்டிருக் கிறது, நசுக்கப்படுகிறது என்றும், குறிப்பாக திராவிடக் கழகத் திலே இருக்கின்ற தோழர்களெல்லாம் தாக்குகிறார்கள் என்றும் மிகக் கடுமையாகச் சொன்னார்கள். நாங்கள், இதற்கு முன் னால் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பத்திரிகை அறிவிப்பு கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இதுவரையில் அதற்கு எந்த மறுப்பும் நம்முடைய கலைஞர் அவர்களுடைய வாயிலாக வரவில்லை. ஆகவேதான் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம், எடுக்க முடியாத காரணத்தினால் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செய்தியைச் சொல்லுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, ஆகையினாலே இத்தகைய அத்துமீறல் சம்பவங்களை இந்த அரசு கண்டிக்க வேண்டும். இந்த அரசு தமக்கு வேண்டியவர் என்றும், வேண்டாதவர்கள் என்றும் பார்க்கக் கூடாது. இந்த அரசு, ஒரு மைனாரிட்டி சமுதாயத்தை நசுக்குவதைப் பார்த்துக் கொண் டிருந்தால் நிச்சயமாக சமுதாயத்தை அழித்துவிடுவார்கள். அந்த அளவிற்கு மிக மோசமாகப் போனதாக வருத்தப்படுகிறார்கள், தயவு செய்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உட னடியாக அதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்யுமாறு இந்த அவை மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பிராமணப் பெருமக்களுடைய பூணூல்களை அறுத்து, அவர் களுடைய மனதையும், நல்ல நெஞ்சுடைய அனைவர்களுடைய மனதையும் புண்படுத்துகின்ற காரணத்தினாலே, இதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று விரும்பினேன். திருச்சியிலே அவர்கள் ஊர்வலம் நடைபெற்ற பொழுது நான் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை என்றா லும், அந்த ஊர்வலத்தைப் பார்த்தேன். அந்த ஊர்வலத்திலே தற்போது சொல்லப்படுகின்ற எந்த வாசகமும் திராவிடர் கழகத் தைப்பற்றி, அல்லது திராவிடர் கழகத் தலைவரினுடைய குடும்

[திரு. குமரி அனந்தன்] [1990 சனவரி 23

பத்தைப் பற்றிச் சொல்லப்படவில்லை. அதோடு, அந்தப் பூணூலை அறுபபது என்பது ஒரு புரட்சிகரமான திட்டமா என்ன? ஒரு தெய்வ நம்பிக்கை உடையவர்கள், ஆழ்வார்களாக இருந்தால் பத்து பேரிலே எட்டு பேர் பூணூல் அணியாத திருமேனி உடைய வர்கள். இரண்டு பேர் மட்டுமே பூணூல் அணிந்தவர்கள். அதிலே நம்மாழ்வார் என்று சொல்லுகின்ற ஆழ்வாரிலே மிகச் சிறந்தவர். பூணூல் அணியாதவராக இருந்தாலும், அவரை நாதமுனிகள் என்று சொல்லுகின்ற பூணூல் அணிந்தவர் வணங்கினார்.

10-45 மணி

பூணூல் அணியாத ஒருவரைப் பூணூல் அணிந்தவர் வணங்கி னார். திராவிட சாகரமே அவர்தான் என்று பெரியாழ்வார் சொன்னார். வேதசாகரம் என்று சொன்னார். நான் இதைக் குறிப்பிடுவதற்கு காரணம் பூணூலை எல்லா மக்களும் அணி கிறார்கள். ஒரு இனத்தவர் மட்டும் அணிவதில்லை. செட்டியார், பொற்கொல்லர், தச்சர் போன்ற எல்லா மக்களும் அணி கிறார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களை, ஒரு குறிப்பிட்ட சாதியார் என்று சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவினரை இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று சொல்வது சரியாக அமையாது. திரு. கணபதி யினுடைய பூணூலை அறுத்தது மட்டுமல்ல, திருச்சிக்குச் சென்றது மட்டுமல்ல, மன்னார்குடிக்குச் சென்றது மட்டு மல்ல, இன்னமும் சொல்லப்போனால் நீங்கள், அவர்கள் எல் லாம் இங்கேயிருந்து வெளியேற வேண்டுமென்று பேசுவது கூட தவறானதுதான் என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்பு கிறேன். பாரதிதாசன் சொல்கிற

''முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில்
இத்தமிழ் நாடு தன் அருந்தவப்பயனாய்
இராமானுஜனை ஈன்றதன்றோ''

என்கிற அருமையான வரிகள் உங்களுக்குத் தெரியாதது அல்ல. எனவே, அவரவர்களுடைய மத நம்பிக்கைக்கு ஏற்ப போட் டுக் கொண்டிருக்கிற சின்னத்தை அழிப்பது என்பது சமய சார்பற்ற நாட்டிலே இருக்கிற எல்லோருடைய மனதையும் புண்படுத்துகிற ஒன்றாகும்.

அடுத்து இன்னொன்றைச் சொல்வதற்கு அனுமதிப்பீர் களானால் சொல்கிறேன். அந்த ஊர்வலத்தில் என்னென்ன முழக்கங்கள் எழுப்பப்பட்டன என்று சொல்கிற முழு பதிவு செய்யப்பட்ட நாடாவையும் நான் முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கயிருக்கிறேன். ஏனென்றால் பட்டிமன்றம் என்ற பெய ரில் இந்த நாட்டிலே இருக்கிற புராணங்களை எல்லாம் எவ் வளவு இழிவுபடுத்திப் பேச முடியுமோ அவ்வளவு தூரத்திற்குப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதிலேயிருக்கிற தத்துவக் களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் தமது நோக்

மாகயிருக்க வேண்டுமே தவிர, அவற்றிற்கு ஏதேதோ புதுப்புது பொருள்களைச் சொல்லி, காது கொடுத்து கேட்க முடியாத அளவிற்கு எல்லாம் பட்டிமன்றங்களை நடத்துவதை அரசு இனிமேல் அனுமதிக்கக்கூடாது என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

எவ்வளவோ தமிழுக்கு தொண்டு செய்தவர்கள் பிராமணர்களில் இருந்திருக்கிறார்கள். ஏன், நமது கனக சுப்புரத்தினமே தன்னுடைய தோழராகவும், ஆசானாகவும் ஏற்றுக் கொண்ட பாரதியும் அப்படித்தான். கனம் முதலமைச்சர் அவர்கள் அண்மையில் சொல்லியிருப்பதைப் போல, வாஞ்சிநாதன் என்று சொல்கிற அந்த மாபெரும் வீரன்-ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்று இந்த நாட்டிற்காக தன்னைத் தானே அழித்துக் கொண்டவர் ஒரு பிராமணர்தான். இப்படி எல்லா இனத்திலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இனத்தை மட்டும் நாம் பழித்துச் சொல்வதும், அவர்களைத் துன்புறுத்துவதும் நல்லதல்ல என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அரசு இதிலே தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்பு என்ற தலைப்பிலே நானும் அரசின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்பதற்காக ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் தஞ்சையில் நடைபெற்ற, இந்து பத்திரிகை நிருபருக்கு ஏற்பட்ட சம்பவம் என்ற அளவிற்கு நின்று இருக்குமானால் நாம் அதைக் கூட பேசாமல் தவிர்த்து இருக்கலாம். நேற்று முன்தினம் கும்பகோணம் தொகுதியில் இருக்கிற நாச்சியார்கோவிலில் இரவு 12-00 மணிக்கு மேல் சிலபேர் வீட்டு கதவுகளைத் தட்டி, அங்கேயிருக்கிற பிராமணர்கள் வெளியே வருகிற நேரத்தில், தன்னந்தனியாய் அவர்கள் வந்து என்ன என்று கேட்டதும், அவர்களின் பூணூல்களை அறுத்து உள்ளார்கள் என்ற சம்பவம் ஏற்பட்டு, நேற்று இரவு முழுவதும் ஏறத்தாழ 5, 6 முறைகள் தொலைபேசியில் இப்படி ஒரு பதட்ட நிலை இருக்கிறது என்ன செய்யலாம் என்று கேட்டுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூட சொன்னதாகச் சொன்னார்கள். அது தொடர்ந்து தஞ்சையில் நடைபெறுகிறது. திருச்சியில் நடைபெறுகிறது. நாச்சியார்கோவிலில் நடைபெறுகிறது என்ற நிலை நீடிக்குமானால், ஒரு வகுப்பை எதிர்த்து நடைபெறுகிற முயற்சியென்ற அளவிற்கு, வகுப்புக் கலவரம் என்ற அளவிற்கு வந்து விடுமோ என்ற அச்சம் நிச்சயமாக இருக்கிறது.

நான் என்னைப் பொறுத்தவரைவில் தந்தை பெரியாருடைய பகுத்தறிவுக் கொள்கைகளை அப்படியே பின்பற்ற வேண்டுமென்று இன்றைக்கும் இருக்கிறவன். இன்னமும்

உங்களுக்குச் சொல்வதாக இருந்தால், என்னுடைய சமுதாயத்தில் பூணூல் போடுகிற வழக்கம் இருந்து, நாங்களும் பிராமணர்கள் என்று சொல்கிற அளவிற்கு அதிலே பெருமை என்றும் சொல்லிக் கொண்டிருக்கிற காலத்திலே, பூணூல் கல்யாணம் ஆனதற்குப் பின்னால் தந்தை பெரியாருடைய பகுதித்தறிவு கொள்கைகளை ஏற்ற காரணத்தால் நானே என்னுடைய பூணூலை அறுத்துக் கொண்டவன். நான் சொல்வதெல்லாம் இன்னொருவர் பூணூலை அறுக்க வேண்டும் என்ற கொள்கையைத் தந்தை பெரியார் அவர்கள் என்றைக்கும் சொன்னதே இல்லை. அவர்களுடைய பூணூலை அவர்களே எடுத்துவிடுவது என்கிற அளவிற்கு, அவர்களைத் திருத்துகிற அளவிற்கு, மனதை பக்குவப்படுத்துகிற அளவிற்குத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை விரும்பி, அந்த வழியிலே தான் பார்ப்பணீயத்தை ஒழிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நம்மையெல்லாம் ஒரு தனி மனிதனை ஒழிக்கிற நிலையிலிருந்து கொஞ்சம் மாற்றி, அந்தக் கொள்கையை மட்டும் நாம் எதிர்க்கிறோம் என்ற அளவிற்கு இருந்தது. அந்தப் பகுத்தறிவு நெறி வளர்கிற வகையில் நாமும் இன்றைக்கு அந்தச் சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அரசினுடைய துணையோடு இது நடைபெறுகிறது என்ற நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக திராவிடர் கழகத்தினுடைய பெயரைச் சொல்லி எல்லா இடத்திலும் பத்திரிகையில் வந்துகொண்டிருக்கின்றன.

10-50 மணி

ஆனால் திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்கள் அதை நடத்திக் கொண்டிருக்கிற நேரங்களில் எந்தக் கொள்கையாக இருந்தாலும் அவர்கள் சொல்லிவிட்டுச் செய்யவேண்டும், சொல்லாமல் செய்யக்கூடாது, போலீசுக்குத் தெரிவித்துவிட்டுச் செய்யவேண்டும், என்ற அளவிற்கு, போராட்டங்களிலே கூட அவர்கள் மிகுந்த கட்டுப்பாடோடு அவற்றை நடத்தியவர் தந்தை பெரியார் அவர்கள். எனவே அந்த இயக்கத்தினுடைய பெயர் கூட இங்கே பாழாகிவிடுமோ என்ற பயம் இருக்கிறது. எனவே இந்த அரசு இதிலே தீவிரமாக நடவடிக்கை எடுத்து இந்த நிலைமைகளைத் தவிர்த்து, தமிழ்நாட்டில் தந்தை பெரியாருடைய பகுத்தறிவு நெறிகளைப் பரப்புகிற வகையில், அண்ணாவினுடைய வழியில் அதைச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று மட்டும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. **வீரையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பலரும் குறிப்பிட்டதைப் போல, தஞ்சையிலே இந்து நிருபர் திரு. கணபதி அவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

1990 சனவரி 23] [திரு. கோ. வீரையன்]

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைக்காரர்களைச் சந்திப்பதற்காக கூட்டப்பட்டு இருந்த கூட்டத்திற்கு அவர்கள் வந்து கொண்டிருந்தபோது, வழியிலே மறித்து தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படித் தாக்கப்பட்ட காட்சியோடு அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வந்து அந்தக் காட்சியைக் காட்டியிருக்கிறார்கள். இதுபோன்று நடைபெறுகிற அந்த நிகழ்ச்சிகள் தொடர்கின்றன, இவற்றைக் கட்டுப்படுத்து வதற்கு, தடுப்பதற்கு இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படா மல் இருப்பதற்கு அரசு உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்பு கிறேன்.

இன்னொன்று, இப்படி ஜாதி வெறிகளை அல்லது இன உணர்வுகளை தூண்டக்கூடிய கூட்டங்கள், மாநாடுகள், அல்லது பேச்சுக்கள் இவற்றைத் தடுப்பதற்கும் கூட எதிர்காலத்தில் அரசு முயற்சி எடுக்கவேண்டும். அப்படிச் சில அமைப்புகள் நடத்துவதை, அல்லது அமைப்புகள் வைத்திருப்பதை நாம் சட்ட ரீதியாகத் தடுக்க முடியாது என்று சொன்னாலும், இங்கே மத சார்பற்ற கட்சிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய கட்சிகளோடு தொடர்பு கொண்டு, அந்தக் கட்சிகளுடைய கூட்டத்தைக் கூட்டி, இந்தக் கட்சித் தலைவர்கள் இப்படிப்பட்ட மாநாடுகளிலே பங்கு பெறுவதன் மூலமாக அந்த ஜாதி அல்லது மத ஸ்தாபனங்களுக்குப் பெரும் செல்வாக்கு ஏற்படுகிறது. இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு இந்த அரசியல் கட்சித் தலைவர்கள் அந்த மாநாடுகளில் பங்கு கொள்வதைத் தடுப்பதற்கு அந்த அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ள வைப் பதற்கு ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் மூலமாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏன் என்றால், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்குச் செல்வாக்கு பெற்ற சில தலைவர்கள் போகிறார்கள். அதனால் பொதுமக் களிடையே அந்த அமைப்புகளுக்குச் செல்வாக்கு ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு, பிரதானமானது, மதச்சார்பற்ற கட்சி கள் என்று சொன்னால் மட்டும் போதாது, மதச் சார்பற்ற கட்சிகள் என்பதை நடைமுறையில் காட்டுவதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. பல்வேறு சம்பிரதாயங்களை, அனுஷ்டானங்களை, மார்க்கங்களைக் கடைப்பிடிக்கிற மக்களைக் கொண்ட சமுதாயம் நம்முடைய சமுதாயம். எனவே அவரவர்கள், அவரவர்களுடைய மார்க்கங்களைக் கடைப்பிடித்து, அனுஷ்டானங்களைப் பேணி வாழ உரிமை பெற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர்

அவர்கள் இங்கே சொன்ன அந்தக் கருத்து எனக்கும் ஏற்புடையதுதான். அவர்கள் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே சிறுபான்மை சமுதாயத்தை யாரும் அவர்கள் பெரும் பான்மையாக இருந்தாலும், சிறுபான்மையாக இருந்தாலும், அவர்களுடைய அனுஷ்டானங்களையும், அவர்களுடைய எண்ணங்களையும் மதக் கோட்பாடுகளையும் புண்படுத்தும் வகையில் நடந்துகொள்ளக் கூடாது என்று அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே நாங்களும் சிறுபான்மையினர்தான். இந்து முன்னணி என்று சொல்பவர்கள் பேசுவது மட்டுமல்ல, மேடைகளிலே மிகத் தரக்குறைவாக, நாங்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்றும், அதுவும் நாங்கள் பெரிதும் மதிக்கின்ற எங்களுடைய நபிகள் பெருமகனாரையும் மிகவும் கேவலமாக, நாங்கள் எல்லாம் கேட்டு சகித்துக்கொள்ள முடியாத அளவிற்கு மிகப் பயங்கரமாக தாக்குவதோடு மட்டுமல்லாமல், ''துலுக்கப் பயல்களே இந்தியாவை விட்டு வெளியேறுங்கள்'' என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிகத் தரக்குறைவான அளவிற்கு நாடு முழுவதும் பேசப்பட்டு வருகிறது. பேசப்பட்டு வருவது மட்டுமல்ல, பிரசுரங்களும் வெளியிடப்படுகின்றன. எனவே நாங்கள் தாக்கப்படுவது வாயால் மட்டுமல்ல, ஆயுதங்களாலும் தாக்கப்படுகிறோம். அது பூணூலை அறுப்பதாக இருந்தாலும், துலுக்கப் பயல்கள் என்று சொல்வதாக இருந்தாலும், ஒட்டு மொத்தமாக இந்த முஸ்லீம்கள் எல்லாம் இந்த நாட்டுக்குத் துரோகிகள் என்று மேடைதோறும் பேசுவதாக இருந்தாலும் நாங்கள் எல்லாம் இங்கேயிருந்து ஓட வேண்டும் என்று பேசுவதாக இருந்தாலும், சமுதாய சாத்வீகத்திற்கும், வாழ்வதற்கும், சௌஜன்ய சூழ்நிலைக்கும், அதே நேரத்தில், சகோதரத்துவத்திற்கும் அது வழி வகுக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. தீட்சிதர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை நானும் ஆதரித்து யாராக இருந்தாலும், அதனுடைய விளைவுகள் நன்றாக இருக்காது என்று அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இங்கே சொன்ன மையக் கருத்து, அவரவர்களுடைய உரிமைகளை அவரவர்கள் கடைப்பிடிக்கிறோம். நான் தொப்பி போடுகிறேன். அதனால் எனக்கு வியர்வை வருகிறது. நான் தொப்பி போட்டுக் கொள்வதினால் திரு. தீட்சிதர் அவர்களுடைய தலையில் வியர்வை வந்தால் நான் தொப்பியை எடுத்து வீசுவதற்குத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு) எனவே அவரவர்களுடைய அனுஷ்டானங்களை அவரவர்கள் பேணுகிறார்கள். எனவே அந்த முறையில் நான் குறிப்பிட்ட ஒரு

1990 சனவரி 23] *[திரு. எம். அப்துல் லத்தீப்]*

கட்சியையோ, குறிப்பிட்ட நபர்களையோ சொல்ல விரும்ப வில்லை. அவரவர்களுக்கு என்று சில கொள்கைகள் உண்டு. அந்தக் கொள்கைகளை மேடைகளிலே பேசுவதாக இருந்தால் யாருடைய மனதும் புண்படாத அளவிற்குப் பேச உரிமை உண்டு. ஆனால் அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரின் பூணூலை அறுப்பது அல்லது இந்த நாட்டை வீட்டு ஓடிவிடு என்று எல்லாம் பேசுவது என்ற நிலைமையில், அவர்கள் என்னுடைய கருத்தையும் ஏற்றுக் கொள்வார்கள் என நான் நினைக்கிறேன். அது மட்டுமல்லாமல் இஸ்லாமிய சமுதாயம் சிறுபான்மை சமு தாயம், கிருத்துவ சமுதாயம் சிறுபான்மை சமுதாயம், இவர் களை எல்லாம் ஒட்டு மொத்தமாக இந்த நாட்டினுடைய துரோகிகள் என்று பேசப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இதற் கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதையொட்டி பதில் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10–55 மணி

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இந்து முன்னணி நண்பர்கள் ''துலுக்கப் பயல்களே'' என்று சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். மிகுந்த மன வருத் தப்படுகிறோம். ஆனால் இந்த நாட்டினுடைய துணைப் பிரதமர் தேவிலால் அவர்கள் கிருத்துவ மக்களை இந்த நாட்டை வீட்டு வெளியே போகவேண்டுமென்று சொல்கிறார் களே, அதையும் நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறீர்களா? அதையும் சேர்த்து கண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக வகுப்பு ஜாதீய துவேஷங்களை அதிகப் படியாக வளர்க்கக் கூடிய, பெருக்கக் கூடிய அளவில், அத னால் மிகப் பெரிய ஜாதீய மோதல்கள் ஏற்படக் கூடிய சம்ப வங்கள் எல்லாம் நடந்து வருகின்றன. அதற்கு உண்டான அடிப் படையான காரணங்களை நாம் கண்டு அறிவதோடு மட்டுமல் லாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் கூறியது மாதிரி இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்படாமல் தடுப்பதற்குக் கூடுமான வரையில் அரசியல் கட்சி களைச் சேர்ந்தவர்கள் ஜாதீய மாநாடுகளில், இப்படி வகுப்புத் துவேஷத்தை மூட்டக் கூடிய மாநாடுகளில் கலந்து கொள்ளக் கூடாது என்ற நிலைமையையாவது அரசியல் கட்சிகள் எடுப்பது தான் சரியாக இருக்கும். இதன் காரணமாகத்தான் பல்வேறு இடங்களிலே மக்களிடத்திலே, சமுதாயத்திலே பல்வேறு மோதல்கள், சர்ச்சைகள் ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படு கிறது. ஆகவே இதையெல்லாம் போக்குகின்ற முறையிலே

அரசியல் கட்சிகள் தீவீரமாக முயற்சிகள் எடுத்து, மாண்புமிகு உறுப்பினரை திரு. வீரையன் அவர்கள் கூறியது மாதிரி இந்தத் தலைவர்களையெல்லாம் கூட்டி வைத்தாவது பேசி, அதற்குச் சரியான வகையிலே ஒரு தீர்வு எடுப்பதற்கு இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் என்னுடைய கருத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, திரு. பீட்டர் ஆல்போன்ஸ அவர்கள் பாரதத் துணைப் பிரதமர் தேவிலாலைப் பற்றி இங்கே பேசினார். அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மறந்து விடக் கூடிய விஷயம் அல்ல. இப்படி எங்களுடைய கட்சியின் கொள்கையானது சிக்கலுள்ள விஷயம். அது எங்கள் கட்சியின் விஷயம். எங்களுக்கு மதம், ஜாதி தேவையில்லை. மனிதனாக இருந்தால் போதும். எல்லோரும் ஒன்றுதான். அப்படி எங்களுடைய கொள்கையிலே இன்றைக்கும் நாங்கள் அனுஷ்டித்து வருகிறோம். இதில் எங்களுக்கு வித்தியாசமே கிடையாது. அப்படிச் சொல்லியிருக்க மாட்டார். அப்படிச் சொல்லியிருந்தால் அதற்குச் சரியான விளக்கம் தர வேண்டும்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரும், மற்றும் மார்க்சிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் தலைவர்களும், சில உறுப்பினர்களும் இங்கு எழுப்பிய பிரச்சினை மிக முக்கியமான ஒன்றாகும். சில நண்பர்களுடைய பூணூல் அறுக்கப்பட்ட நிகழ்ச்சி ஒரு நாளோடு முடியாமல் ஒரு தொடர் நிகழ்ச்சியாக நேற்றையதினம் கூட நாச்சியார்கோவிலில் நடைபெறுகின்ற அளவிற்கு வளர்ந்திருப்பதை எண்ணும்போதும் இந்த அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருவதில் எதிர்க்கட்சியிலே உள்ள அனைவருக்கும் கடமையும், பொறுப்பும் உண்டு என்பதை நான் மிக நன்றாக உணர்கின்றேன். ஆனால் அதற்கு ஒரு நோக்கம் கற்பிக்கக்கூடாது என்பது என்னுடைய பணிவன்பான வேண்டுகோள்

11-00 மணி

நம்முடைய நண்பர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசும் போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் இப்படி நடைபெறுகிறது என்று சொன்னார். ஒரு காலத்திலே தந்தை பெரியார் அவர்கள் பிள்ளையார் சிலைகளை ஊருக்கு ஊர் உடைத்தார். அப்போது இராஜாஜியினுடைய காங்கிரஸ் ஆட்சி, தமிழகத்திலே நடைபெற்றது என்பதை ஒரு வேளை

திரு. சுந்தரதாஸ் அவர்கள் அப்போது சின்னப் பிள்ளையாக இருந்து இருப்பார், மறந்திருக்கக் கூடும். அல்லது தெரியாமல் இருந்திருக்கக் கூடும்.

இராஜாஜியினுடைய ஆட்சியிலே, காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சியிலே பிள்ளையார் சிலைகள், ஒரு நாச்சியார் கோவிலில் அல்ல, தஞ்சாவூரிலே அல்ல, தமிழகத்தில் எல்லா ஊர்களிலும் உடைக்கப்பட்டன. அதைப்பற்றி இராஜாஜி அப்போது என்ன கருதினார் என்பதை தெரிந்து கொள்ள அந்தப் பழைய கோப்புகளை எல்லாம் நான் எடுத்துப் பார்த்தேன். 'நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அதிகாரிகள் எழுதியதற்கு இராஜாஜி ஒரே வரியிலே அந்தக் கோப்பிலே 'Ignore it' என்று எழுதியிருந்தார்.

அதைப் போல இராஜாஜியை நான் முன் உதாரணமாகக் காட்டி 'ignore it' என்று சொல்வேன் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். ஏனென்றால் இது அலட்சியப் படுத்தக் கூடிய ஒன்றல்ல. அதற்கு எது காரணமாக அமைந்தது என்பதை நம்முடைய ஜனதா தள கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. தீட்சிதர் அவர்கள் பேசும் பொழுது தெரிந்தோ, தெரியாமலோ இங்கே எடுத்துச் சொன்னார்கள், திருச்சியிலே நடைபெற்ற இரண்டு மாநாடுகளைப் பற்றி. முதலிலே ஒரு மாநாடு நடைபெற்றது. பிராமணர்களுடைய மாநாடு. அந்த மாநாட்டிற்கு வருமாறு திரு. தீட்சிதர் அவர்கள், பிராமண சங்கத் தலைவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு என் வீட்டிற்கு வந்து என்னைக் கூட அழைத்தார். நான் அவரிடத்திலே சொன்னேன், நான் வருவதற்கு இல்லை என்று. ஏனென்று கேட்டார்கள். ஒரு முறை கும்பகோணத்திலே மூப்பனார் போன்றவர்கள் எல்லாம் முன் நின்று நான் சார்ந்துள்ள வகுப்பின் சார்பாக ஒரு மாநாடு கூட்டினார்கள். அதற்கு என்னை அழைத்தார்கள். ஜாதி சார்புடைய மாநாடுகளுக்கு நான் வரமாட்டேன் என்று அப்போதே கூறியிருக்கிறேன், எனவே இந்த மாநாட்டிற்கு நான் வர இயலாது என்று கண்டிப்பாக திரு. தீட்சிதரிடத்திலே தெரிவித்து விட்டேன். அவர்கள் கூடச் சொன்னார்கள். அ.தி.மு.க.விலிருந்து திரு. வீரப்பன் போன்றவர்கள் எல்லாம் வருகிறார்கள். கிருபானந்த வாரியாருக்குப் பாராட்டு விழா இருக்கிறது. அந்தச் சாக்கிலாவது நீங்கள் கலந்து கொள்ளலாமே என்று சொன்னார்கள். ஏதாவது ஒரு சாக்கு வைத்து பிராமணர்களுடைய மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டிய அளவுக்கு அவசியம் ஏதும் எனக்கு இல்லை, எனவே நான் வருவதற்கு இல்லை என்று சொன்னேன். ஏனென்றால் நேரிடையாக பேசும்போது, அவர்கள் வந்து கேட்கும்போது நான் சொன்ன விளக்கங்கள்

இவை. இதைத்தான் நம்முடைய திரு. வீரையன் அவர்கள் பேசும்போதும், திரு. அழகர்சாமி அவர்கள் பேசும் போதும் குறிப்பிட்டார்கள். ஜாதியின் பெயரால் நடைபெறுகிற மாநாடுகளுக்கு அரசியல் தலைவர்கள் போகலாமா என்பதை ஒரு சர்வ கட்சி கூட்டம் நடத்தி, அதிலே கலந்து பேசி, முடிவு எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசு அப்படி ஒரு முயற்சி செய்ய வேண்டுமென்று அனைவரும் விரும்பினால் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

ஆனால், பிராமணர்களுடைய மாநாட்டில், நாம் பலஆண்டுக் காலமாக போராடிப் பெற்ற ஒரு உரிமையை, இட ஒதுக்கீடு உரிமையைக் கை விட வேண்டுமென்ற கருத்து, தீர்மானம் வடிவம் பெற்றது. அந்தக் கருத்தை ஏற்று, அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான திரு. வீரப்பன் அவர்கள் கூட அங்கே பேசியது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. பத்திரிகைகளில் எல்லாம் கூட வெளி வந்தது. என்னைக் கேட்ட போதுகூட அவர் அப்படிப் பேசியிருக்க மாட்டார். என்ன பேசினார் என்பது தெரியாது, பத்திரிகையிலே வந்திருக்கிறது. நான் அவசரப்பட்டு அதற்கு விளக்கம் அளிக்க விரும்பவில்லை என்று சொன்னேன். ஆனால், எந்த மறுப்பும் அதற்குப் பிறகு வராததனால் ஒரு வேளை பேசி இருப்பார் என்று நினைக்கிறேன். ஆனால், அ.தி.மு.க. சார்பில் அதிலுள்ள மற்ற தலைவர்கள் நண்பர் திரு. வீரப்பன் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்து தங்களுக்கு ஏற்புடையது அல்ல என்று வெளியிட்ட அறிக்கை எனக்கு ஆறுதலைத் தந்தது. எனவே, தமிழ்நாட்டிலே தந்தை பெரியார் அவர்கள் காலம் தொட்டு, இன்னும் சொல்லப் போனால் முத்தையா முதலியார் காலத்திலேயிருந்து, நீதிக் கட்சி காலத்திலேயிருந்து போராடிப் பெற்ற உரிமை, அடக்கப் பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தலை எடுக்கவே முடியாது என்று தள்ளப்பட்ட மக்கள், எங்கோ சகதியிலே சேற்றிலே வீசி எறியப்பட்ட மக்கள், அவர்கள் மீண்டும் கை தூக்கி விடப்பட்டு, காலூன்றி கரைக்கு வந்து, கல்வியில், வேலை வாய்ப்பில் இடங்களைப் பெற வேண்டும் என்கிற முயற்சிக்கு அன்றைக்குப் போடப்பட்ட தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பெருந் தலைவர் காமராசர் அவர்கள் எல்லாம் பாடு பட்டு, மிகக் கடினமான போராட்டங்களில் ஈடுபட்டு, நான் அன்றைக்குச் சொன்னதைப்போல இந்தியாவிலே முதன் முதலாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டதே பண்டித நேரு அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லி Socially, educationally என்ற அடிப்படையிலேதான் அந்த இட ஒதுக்கீடு தேவை என்று சொல்லப்பட்டு, அத்தகைய போராட்டத்திற்குப் பிறகு கிடைக்கப் பெற்றது. இடையிலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே கூட, அதிலே ஒரு சிறு திருத்தம்

1990 சனவரி 23] [டாக்டர் மு. கருணாநிதி]

செய்தபோது, அதைக் கூட நாம் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதைத் திரும்பப்பெற்று, இட ஒதுக்கீட்டு முறையைச் செம்மைப்படுத்தினார் என்பது அனைவருக்கும் தெரியும்.

(11–05)

அப்படிப்பட்ட இட ஒதுக்கீட்டு முறையினால் வீழ்ந்துவிட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், அடக்கப்பட்ட மக்கள் மீண்டும் விழிப்புணர்வு பெற்று கல்வித் துறையிலும், வேலைவாய்ப்புத் துறையிலும் அடியெடுத்து வைத்து நடைவண்டிப் பருவத்தில் இருக்கின்ற நேரத்தில் அந்த இட ஒதுக்கீடே கூடாது என்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது அவர்களுடைய உரிமை. இட ஒதுக்கீடு தேவை என்று சொல்வது ஒரு சாரார் உரிமை. தேவையில்லை என்று சொல்வது அவர்களுடைய உரிமை. இதை யொட்டி நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் இட ஒதுக்கீடு தேவை என்பது வலியுறுத்தப்பட்டது. இரண்டு ஊர்வலங்கள் நடைபெற்றன. இலக்கியச் செல்வர் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரிஅனந்தன் அவர்கள் ஊர்வலத்திலே அப்படிப்பட்ட முழக்கங்களே எழுப்பப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், விடுதலை ஆசிரியரும் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளருமான திரு. வீரமணி அவர்கள் விடுதலைப் பத்திரிகையிலே ஒரு நீண்ட கட்டுரையில் ''என்னுடைய துணைவியாரைப் பற்றி பிராமணர்கள் நடத்திய ஊர்வலத்திலே மிக ஆபாசமாக முழக்கங்கள் எழுப்பப்பட்டன'' என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படி எழுப்பப்பட்டதை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது. அதற்காக இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் பூணூல் அறுப்பது போன்ற மனம் புண்படக்கூடிய சம்பவங்களையும் நாம் ஏற்றுக்கொள்ள இயலாது.

இதைப்பற்றி ஒரு அறிக்கை கூட நான் வெளியிடவில்லை என்று இங்கே சொல்லப்பட்டது. நான் உள்ளபடியே வருத்தப் படுகிறேன். இதைப்பற்றிய என்னுடைய கருத்தை நிருபர்கள் கூட்டத்திலே, இந்த நிகழ்ச்சி நடைபெற்ற அடுத்த இரண்டு நாளைக்கெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். வன்முறைக் கோஷங்களானாலும், வன்முறைச் செயல்களானாலும் இரண்டும் ஏற்கத்தக்கவை அல்ல. சில நேரங்களில் வன்முறை முழக்கங்களால் வன்முறைச் செயல்கள் தூண்டிவிடப்படுகின்றன. எனவே, இரண்டும் ஒன்று போலத்தான். இரண்டையும் இந்த அரசு ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, சில மேடைகளில் சிறுபான்மை மக்களைப் பற்றி, குறிப்பாக இஸ்லாமியப் பெருமக்களைப் பற்றி பேசப்படுகின்ற சொற்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 சனவரி 23

எவையெவை என்று போலீசாருடைய ஒற்றர்கள் மூலமாகத் தரப் படுகின்ற குறிப்புகளின் மூலமாக நானும் படித்துப் பார்க்கிறேன். அதுமாத்திரமல்ல. பொதுவாகவே பொதுக் கூட்டங்களிலே கட் சிகளின் சார்பிலே நடைபெறுகின்ற கூட்டங்களிலேகூட மிக மோசமான வார்த்தைகள் எடுத்தாளப்படுகின்றன. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண் டிருந்த போது அப்படிப்பட்ட வார்த்தைகள் அடங்கிய பேச்சுக் குறிப்புகள் அவருக்கு வருமேயானால் அவற்றை சம்பந்தப்பட்ட கட்சியினுடைய தலைவர்களுக்கு அவர்கள் அதைப் பார்க்கட்டும் என்று அனுப்பிவைப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், அத னால் எந்தப் பயனும் ஏற்படாத காரணத்தினால் அந்த முறை யைக்கூட இந்த அரசு தொடராமல் கைவிட்டுவிட்டது. தேவை யானால் அவற்றைக்கூட நான் அனுப்பிவைப்பதற்கான முயற்சி களை மேற்கொள்ளலாம் என்று மீண்டும் யோசித்துக்கொண் டிருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் முதலில் 27-12-1989 29-12-1989, 3-1-1990 ஆகிய இந்த 3 நாட்களில் முறையே தஞ்சாவூரில், நீடாமங்கலத்தில், மன்னார்குடியில் இந்த நிகழ்ச்சி கள் நடைபெற்றிருக்கின்றன. இதை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தஞ்சாவூரில் உடனடியாக 4 பேர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக் கிறது. அதைப்போலவே மன்னார்குடி, நீடாமங்கலம் ஆகிய இடங்களிலும் 6 பேர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு போடப்பட்டு இருக்கிறது. இன்று காலையிலே எனக்கு வந்த காவல் துறையினுடைய குறிப்பில் எழுதப்பட்டிருப்பது. Balaji and a few other members of the D.K. allegedly cut the sacred threads of Lakshminarayanan and four other Brahmins at Natchiyarkoil, Thanjavur-West on 21-1-1990. Police have regi. stered two cases and arrested Balaji and two others. என்பதாகும்- அங்கு நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையிலும் சரி, நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் அல் லது இந்த அரசைப் பொறுத்தவரையிலும், தந்தை பெரியா ருடைய கொள்கைகள், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய குறிக்கோள்கள் இவற்றை நிறைவேற்ற வேண்டும், இவற்றை மக்களுடைய உள்ளத்திலே பதிய வைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் உடையவன் என்றாலும்கூட, யாருடைய மனதையும் புண்படுத்தி இந்தக் கொள்கைகளைப் பதிய வைக்க வேண்டும் என்ற நிலையை நான் ஏற்றுக்கொண்டவன் அல்ல. பண்படுத்தித் தான் சில கொள்கைகளைப் பதிய வைக்க வேண்டுமே தவிர,

1990 சனவரி 23] [டாக்டர் மு. கருணாநிதி]

பண்படுத்தப்பட்ட நிலத்திலேதான் பயிர் செழிப்பாக வளருமே தவிர, புண்படுத்திய உள்ளத்திலே எந்தக் கொள்கையும் நிலைத்து நிற்காது. வன்முறைக்காக, பலாத்காரத்திற்காக அதைத் தற்காலிகமாக ஏற்றுக்கொண்டாலும் அது தழைத்து வளராது என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள்.

(11–10)

இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போதுகூட, இது திட்டமிட்டு ஒரு கட்சி இப்படிப்பட்ட போராட்ட முறையை வகுத்துக் கொடுத்து நடைபெற்ற நிகழ்ச்சி அல்ல. அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளராக இருக்கிற திரு. வீரமணி அவர்களேகூட இதை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்று நான் நம்புகின்றேன். அவரும்கூட இது குறித்து ஒரு அறிக்கை வெளியிட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். ஏனென்றால் இங்கே தமிழகத்திலே நிலவுகின்ற அமைதியைக் கெடுக்க யார் தினையளவு முயற்சியிலே ஈடுபட்டாலும் அது பெரும் தீங்காக தமிழகத்திற்கு வந்து சேரும் என்பதை நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நிலை தொடர்ந்து நீடிக்காமல் உடனடியாக நடவடிக்கைகளை ஆங்காங்கு காவல் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்று காவல் துறைக்கு ஆணையிடப்பட்டிருக்கின்றது, இது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் எப்படி இன்று தமிழகத்திலே தலைகாட்டிக் கொண்டிருக்கிற ஜாதியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது குறித்து விரைவிலே உரிய நேரத்தில் அனைவருக்கும் வசதிப்படுகின்ற ஒரு நாளில் நாம் கூடிப் பேசலாம் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களையோ, அல்லது வன்முறை கோஷங்களையோ இந்த அரசு அனுமதிக்காது, அதிலே உறுதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன், வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இதிலே விவாதத்தை விரும்பவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்றாக விளக்கம் அளித்திருக்கிறார்கள். அவர்கள் விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ஒரே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லும்போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இணைப் பொதுச் செயலாளர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களைக் குறிப்பிட்டுக் கூறினார்கள். நான் அவரிடத்திலேயே பேசினேன். அவர்கள் நம்முடைய கருத்துக்கு விரோதமாக இல்லை. மாநாட்டிலே, கலந்துகொண்டு பேசியதெல்லாம், எம். ஜி. ஆருடைய காலத்திலே என்ன நடைபெற்றது என்பதை விளக்கினாரே தவிர, இந்தக் கருத்துக்கு அவர் விரோதமாக இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

சென்னை நகரில் வெறி நாய்கள் தொல்லைகளைத் தடுக்க நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ்.எஸ். ராமசுப்பு, குமரி அனந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரில் பல இடங்களில் வெறி நாய்கள் அதிகரித்து, பொதுமக்களுக்குத் தொல்லை விளைவித்து வருவதைத் தடுக்க வேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

எல்லா தெருநாய்களும் வெறிநாய்கள்தான் என்று சொல்வதற்கு இல்லை. வெறிநாய் என்று தீர்மானமாகச் சொல்வதற்கு இறந்த நாயின் மூளையைப் பரிசோதித்து அது வெறிநாய்தான் என்று கண்டுபிடிக்க முடியும். வெறிநாய்க் கடியினால் உண்டாகும் நோயைத் (Rabies) தடுப்பதற்கு தெருநாய்களைப் பிடித்து அழிப்பது ஒரு முறையாகும் அல்லது எல்லா நாய்களுக்கும் தடுப்பூசி போடுவது மற்றொரு முறையாகும். நாய் கடித்ததற்காக தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு சென்னை அரசுப் பொது மருத்துவ மனையில் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வப்போது தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன. கடிபட்ட எல்லா நபர்களுக்கும் போதுமான மருத்துவ வசதி செய்து தரப் படுகிறது. சென்னை மாநகராட்சி நாய் பிடிப்பதை தீவிரப் படுத்துவதற்காக இரண்டு சேசிஸ் 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரூ. 3.5 இலட்சத்தில் பெறப்பட்டு நாய் பிடிப்பதற்கு தகுந்தாற்போல் வடிவமைக்கப்பட்டு 20—1—1990 அன்று நலத்துறையினால் ஒரு வண்டி பெறப்பட்டது. மற்றொன்று இம்மாத இறுதிக்குள் வடிவமைக்கப்பட்டு அனுப்பப்படும் என்று தெரியவருகிறது. சமீபத்தில் வெறிநாய் கடித்து சிலர் காயமடைந்தனர் என்று செய்தித்தாள் மூலமாக தெரியவந்தது. மறுநாள் காலை நாய்வண்டியை அனுப்பி அந்தப் பகுதியைச் சுற்றிலும் 38 நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

1990 சனவரி 23] *[திரு. கோ. சி. மணி]*

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் வெறிநாய் கடித்து காயப்படுத்துவதையும் நாய்கள் தெருவில் சுற்றி அலைவதையும் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டு வருகின்றன.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் அதுவும் முக்கியமாக தென் சென்னைப் பகுதிகளில் திருவல்லிக்கேணி, ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர் போன்ற பகுதிகளில் எல்லாம் இப்போது ஒரு சில மாதங்களாக வெறிநாய்களுடைய தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் பல பள்ளி மாணவர்கள், அலுவலகத்திற்குச் செல் பவர்கள் அந்த நாயினால் கடிக்கப்பட்டு ராயப்பேட்டை ஆஸ் பத்திரியில் நூற்றுக்கணக்கான பேர் சேர்க்கப்பட்டுள்ளதாக பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. சென்னை மாநகரில் கொஞ்ச நாட்களாக நாய்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் மட்டும் கேட்க வேண்டும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: தொல்லை அதிகரித்து இருப் பதைத் தடுப்பதற்கு நகராட்சி எந்தவிதமான நடவடிக்கையும் சில நாட்களாக எடுக்காமல், அந்த நாய்களைப் பிடிப்பதற்கும் எடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகின்றது. இதனாலே அந்த நாய்களுடைய தொல்லையினால் 'ராபீஸ்' என்ற நோய் வருகின்றது. அது கொடுமையான நோய், அது உயிரைக் கொல்லக்கூடிய நோய், அது பிறரைப் பாதிக்கக்கூடிய நோயாக இருப்பதால், இதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நாய்களைப் பிடிக்கவேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள்? 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இல் கூட

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வெறி நாய்களை என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்? *(சிரிப்பு)*

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: அந்த நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கின்றது என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெருவில் நடமாடுகிற நாய் எல்லாம் வெறிநாய் என்று சொல்லமுடியாது. காரணம் அது வெறிநாய் என்று குறிப்பிடுவதற்கு அதைச் சாகடித்து அதன் மூளையை எடுத்துப் பரிசோதித்த பிறகுதான் வெறிநாயா, நல்ல நாயா என்று தெரியும் என்று அறிவிக்கிறார்கள். ஆனால் ஒன்றை

[திரு. கோ. சி. மணி] [1990 சனவரி 23

முக்கியமாக நாம் கருதவேண்டும். நகர்ப்புறமானாலும் கிராமப்புறங்களானாலும் கூட, நாய்களினுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்.

11–15 மணி.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவும் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததின் அடிப்படையிலேயும், இந்தப் பிரச்சினைகள், நாய்க்கடி ஏற்பட்டது என்பது உண்மை. ஆனால் மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு நாளைக்கு 60 முதல் 70 நாய்கள் தெருக்களில் பிடிக்கப்பட்டு கொல்லப்படுகின்றன. சென்ற ஆண்டு மட்டும், 1989 டிசம்பர் முடிய, 14,868 நாய்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 2 வாகனங்கள் நாய் பிடிப்பதற்காக உலவ விடப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு வாகனம் தயாரிக்கப்பட்டு இந்த மாதமோ அல்லது அடுத்த மாதமோ, அந்த வாகனமும் இந்தப் பணியில் ஈடுபடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய கருத்தும், மாநகராட்சிகள், நகராட்சிகளுடைய கருத்தும் நடமாடுகின்ற நாய்களைக் கட்டுப்படுத்தவும், வெறிநாய்களாக இருந்தால் உடனடியாகக் கொல்லவும், நாய்களுக்கு உரிமம் வழங்குவதற்குக் கூட நல்ல பரிசோதனைக்குப் பிறகுதான் உரிமம் வழங்கப்படவேண்டுமென்ற ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்று முதல் பதினேழு வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய பதினாறு முதல் பத்தொன்பது வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

[திரு. கோ. சி. மணி] [1990 சனவரி 23

முக்கியமாக நாம் கருதவேண்டும். நகர்ப்புறமானாலும் கிராமப்புறங்களானாலும் கூட, நாய்களினுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்.

11–15 மணி.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவும் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததின் அடிப்படையிலேயும், இந்தப் பிரச்சினைகள், நாய்க்கடி ஏற்பட்டது என்பது உண்மை. ஆனால் மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு நாளைக்கு 60 முதல் 70 நாய்கள் தெருக்களில் பிடிக்கப்பட்டு கொல்லப்படுகின்றன. சென்ற ஆண்டு மட்டும், 1989 டிசம்பர் முடிய, 14,868 நாய்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 2 வாகனங்கள் நாய் பிடிப்பதற்காக உலவ விடப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு வாகனம் தயாரிக்கப்பட்டு இந்த மாதமோ அல்லது அடுத்த மாதமோ, அந்த வாகனமும் இந்தப் பணியில் ஈடுபடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய கருத்தும், மாநகராட்சிகள், நகராட்சிகளுடைய கருத்தும் நடமாடுகின்ற நாய்களைக் கட்டுப்படுத்தவும், வெறிநாய்களாக இருந்தால் உடனடியாகக் கொல்லவும், நாய்களுக்கு உரிமம் வழங்குவதற்குக் கூட நல்ல பரிசோதனைக்குப் பிறகுதான் உரிமம் வழங்கப்படவேண்டுமென்ற ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்று முதல் பதினேழு வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய பதினாறு முதல் பத்தொன்பது வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முக்கியமாக நாம் கருதவேண்டும். நகர்ப்புறமானாலும் கிராமப்புறங்களானாலும் கூட, நாய்களினுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்.

11—15 மணி.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவும் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததின் அடிப்படையிலேயும், இந்தப் பிரச்சினைகள், நாய்க்கடி ஏற்பட்டது என்பது உண்மை. ஆனால் மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு நாளைக்கு 60 முதல் 70 நாய்கள் தெருக்களில் பிடிக்கப்பட்டு கொல்லப்படுகின்றன. சென்ற ஆண்டு மட்டும், 1989 டிசம்பர் முடிய, 14,868 நாய்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 2 வாகனங்கள் நாய் பிடிப்பதற்காக உலவ விடப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு வாகனம் தயாரிக்கப்பட்டு இந்த மாதமோ அல்லது அடுத்த மாதமோ, அந்த வாகனமும் இந்தப் பணியில் ஈடுபடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய கருத்தும், மாநகராட்சிகள், நகராட்சிகளுடைய கருத்தும் நடமாடுகின்ற நாய்களைக் கட்டுப்படுத்தவும், வெறிநாய்களாக இருந்தால் உடனடியாகக் கொல்லவும், நாய்களுக்கு உரிமம் வழங்குவதற்குக் கூட நல்ல பரிசோதனைக்குப் பிறகுதான் உரிமம் வழங்கப்படவேண்டுமென்ற ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989—90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்று முதல் பதினேழு வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1989—90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய பதினாறு முதல் பத்தொன்பது வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)

வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1989-90 அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989—90 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

11-20மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே,1989-90-ஆம்ஆண்டிற்கான முதல்துணை மதிப்பீடு களை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கை களை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 5,82.87 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 2,15,86 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகை யான ரூபாய் 3,67.01 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும அடங்கும். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கி யுள்ள முக்கியமான திட்டப் பணிகள் குறித்து சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

6. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)

வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1989-90 அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1989–90 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

11-20மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90-ஆம்ஆண்டிற்கான முதல்துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 5,82.87 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 2,15,86 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 3,67.01 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள் குறித்து சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

2. வறட்சி நிவாரணப் பணிகளுக்கென அரசு மொத்தமாக ரூபாய் 48.96 கோடியை அனுமதித்துப் பணிகளைச் செய்து முடித்துள்ளது. அதற்கான தொகை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. அரசு அலுவலர்களின் நீண்ட காலக் கோரிக்கையினை ஏற்று, மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான தொடக்கச் செல விற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 120 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக, மானியக் கோரிக்கை எண். 43—பல்வகையின் கீழ் அடையாள நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இச் செலவிற்காக அந்தந்த மானியங்களில் தேவைப்படும் அளவிற்குக் கூடுதல் மானியத் தொகை இறுதித் துணை மதிப்பீடுகளில் கோரப்படும். மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ், 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளில் இருந்து உயர்த்தப்பட்ட ஓய்வூதியங்களை வழங்குவதற்காக ரூபாய் 70 கோடி கோரப்பட்டுள்ளது. மேலும், பொங்கல் விழாவினை ஒட்டி, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் பரிசைத் தவிர, ஓய்வு ஊதியம் பெறும் அனைவருக்கும் தலா ரூபாய் 100 சிறப்புப் பொங்கல் பரிசாக வழங்கியுள்ளோம். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூபாய் 2.07 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. திருச்சி மாவட்டத்தில் குமுளூர் கிராமத்தில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரியைத் துவக்க ரூபாய் 1.39 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து உடனடிச் செலவுகளுக்காக ரூபாய் 30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக, குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 35 என கொள்முதல் செய்யும்பொழுது வழங்கப்படுகிறது. கடந்த சம்பா பட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்தத் தொகையை வழங்கியுள்ளது. இதற்கென அரசு இந்தக் கழகத்திற்கு நிலுவையிலுள்ள தொகையான ரூபாய் 10 கோடியை வழங்கியுள்ளது. இந்தத் தொகை மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டு உள்ளது.

5. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தில், உணவுடன், மாதம் இரு முறை முட்டை வழங்கப்படும் என்று கடந்த கூட்டத் தொடரில் அறிவித்து இருந்தேன். இதற்காக ரூபாய் 6.93 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. நடப்பு

ஆண்டில் இதற்காகத் தேவைப்படும் ரூபாய் 9.9 கோடி மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. கிராமப்புறங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பற்றாக்குறையின்றி மருந்துகள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகளுக்கான செலவு ரூபாய் 20,000 என்று இருப்பதை ரூபாய் 30,000 என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும். இதற்காக இந்த ஆண்டிற்குத் தேவையான கூடுதல் தொகையான ரூபாய் 1.09 கோடி மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ், இலவச காலணி வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 3.17 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கூடுதலாக 95 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை துவக்குவதற்காக ரூபாய் 51.65 இலட்சம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான தொகை மானியக் கோரிக்கை எண். 17 கல்வி என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. சென்னை அரசு பொது மருத்துவ மனையில் நவீன இயந்திரங்களுடன் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்காகத் தேவைப்படும் ரூபாய் 88.46 இலட்சம் மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. வடஆற்காடு மாவட்டம் பிரிக்கப்பட்டு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மற்றும் வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் என இரு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய மாவட்டத்தில் பல்வேறு பணிகளுக்கும், புதிய அலுவலகங்கள் ஏற்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் தேவையான நிதி ஒதுக்கீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

10. காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டத்தில் அனைத்துக் கூட்டுறவு அமைப்புகளின் நீண்ட கால வளர்ச்சிக்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டம் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 8.63 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டில் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி, மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு, மானியக் கோரிக்கை எண். 58—பல்வகை மூலதனச் செலவு மற்றும் மானியக் கோரிக்கை எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் ஆகிய தலைப்புகளின்கீழ் கோரப்பட்டுள்ளது.

11. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றைப் பற்றி நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங்களைக் காணலாம். 1989-90-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

8. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை (1989-90) வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலைஅறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் குறித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க, 24—1—1990 புதன்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் கொடுக்கவேண்டும்.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்— (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் இப்போது இருக்கின்ற நேரப்படி எஞ்சியிருக்கின்ற நேரம் 96 மணித்துளிகள் மட்டுமே. எனவே, கிட்டத்தட்ட 8 அல்லது 9 பேர் வரைக்கும் பேச வாய்ப்புத் தரப்படும். சரியாக 10 மணித்துளிகளுக்குள் அவரவர்களுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். குறுக்கீடுகளைக் குறைக்க வேண்டும். வாய்ப்பிருந்தால் நிறுத்த வேண்டும். குறுக்கீடுகள் கூடிப்போனால், கடைசியில் இருப்பவர்கள் பேச முடியாத நிலைமை கண்டிப்பாக ஏற்படும். அவை 1 மணிக்குச் சரியாக முடியும் என்பதை நினைவூட்டி திரு. சோ. பால்ராஜ் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

11-25 மணி

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய தமிழகத்தின் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதன் முதலில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாத வருமானம் ரூபாய்

11. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றைப் பற்றி நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங்களைக் காணலாம். 1989-90-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

8. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை (1989-90) வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலைஅறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் குறித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க, 24—1—1990 புதன்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் கொடுக்கவேண்டும்.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்— (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் இப்போது இருக்கின்ற நேரப்படி எஞ்சியிருக்கின்ற நேரம் 96 மணித்துளிகள் மட்டுமே. எனவே, கிட்டத்தட்ட 8 அல்லது 9 பேர் வரைக்கும் பேச வாய்ப்புத் தரப்படும். சரியாக 10 மணித்துளிகளுக்குள் அவரவர்களுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். குறுக்கீடுகளைக் குறைக்க வேண்டும். வாய்ப்பிருந்தால் நிறுத்த வேண்டும். குறுக்கீடுகள் கூடிப்போனால், கடைசியில் இருப்பவர்கள் பேச முடியாத நிலைமை கண்டிப்பாக ஏற்படும். அவை 1 மணிக்குச் சரியாக முடியும் என்பதை நினைவூட்டி திரு. சோ. பால்ராஜ் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

11-25 மணி

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய தமிழகத்தின் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதன் முதலில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாத வருமானம் ரூபாய்

11. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றைப் பற்றி நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங்களைக் காணலாம். 1989-90-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

8. அறிவிப்பு.

முதல் துணை நிதிநிலை அறிக்கை (1989-90) வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலைஅறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் குறித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க, 24—1—1990 புதன்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் கொடுக்கவேண்டும்.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் இப்போது இருக்கின்ற நேரப்படி எஞ்சியிருக்கின்ற நேரம் 96 மணித் துளிகள் மட்டுமே. எனவே, கிட்டத்தட்ட 8 அல்லது 9 பேர் வரைக்கும் பேச வாய்ப்புத் தரப்படும். சரியாக 10 மணித்துளிகளுக்குள் அவரவர்களுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். குறுக்கீடுகளைக் குறைக்க வேண்டும். வாய்ப்பிருந்தால் நிறுத்த வேண்டும். குறுக்கீடுகள் கூடிப்போனால், கடைசியில் இருப்பவர்கள் பேச முடியாத நிலைமை கண்டிப்பாக ஏற்படும். அவை 1 மணிக்குச் சரியாக முடியும் என்பதை நினைவூட்டி திரு. சோ. பால்ராஜ் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

11-25 மணி

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய தமிழகத்தின் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதன் முதலில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாத வருமானம் ரூபாய்

1990 சனவரி 23] [திரு. சோ. பால்ராஜ்]

ஆயிரம் வரையிலுள்ள அனைத்துக் குடும்பத்தினருக்கும் ஆண்டுக்கு மூன்று தடவை 5 கிலோ இலவச அரிசி வழங்கப்பட இருப்பதை அனைத்துத் தரப்பினரும் வரவேற்கிறார்கள்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய கடன் உதவிகளைச் செய்து தொழில் மயமாக்கும் அறிவிப்பைச் செய்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். இதன் மூலம் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

திறக்க முடியாத சூழ்நிலையில் இருந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு வேண்டிய அனைத்துப் பணிகளையும் முன்னின்று செய்த தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், முன்னாள் தொழிலாளர் நல அமைச்சரான இப்போதைய உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்களுக்கும், இன்றைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நேரு அவர்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நன்றியையும் தொழிலாளர்களின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் மூடிய ஆலைகளைத் திறக்கின்ற முயற்சியில் இரண்டாம் கட்டமாக ஆலைகளை அரசே ஏற்று நடத்துகின்ற வகையில் 6 ஆலைகளை ஏற்று நடத்த அரசு முன்வந்துள்ளது. அவற்றுள் மதுரையில் இருக்கின்ற மகாலட்சுமி ஆலை ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி ஆலைகளைத் திறக்கிற முயற்சியில் அரசு வரைவாக முடிவுகளை எடுக்கவேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். சென்னைக்கு அடுத்து இரண்டாவது பெரிய நகரமாக இருக்கின்ற மதுரையில் கட்டியுள்ள மேம்பாலம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஆகிவிட்டது. இன்றைய நிலையில் போக்குவரத்து நெரிசல் மிக மோசமான சூழ்நிலையில் இருப்பதால், அதற்குப் பக்கத்தில் மேம்பாலம் ஒன்றைக்கட்டி ஏற்கெனவே உள்ள கல் பாலத்தையும் சரி செய்து பாதசாரிகளுக்கும், போக்குவரத்துக்கும் உதவக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல மதுரையில் மழைக்காலங்களில் மழை நீர் வடிவதற்குப் போதிய வடிகால் வசதி இல்லாத காரணத்தால் பெரியார் பேருந்து நிலையமானாலும் சரி, இரயில்வே ஜங்ஷன் மற்றும் நகரில் உள்ள தாழ்வான பகுதிகளிலும் குறிப்பாக ஆர். வி. மில் பக்கத்தில் உள்ள இரும்பு கர்டர் பாலம் இருக்கின்ற பகுதியிலும் சரி, வெள்ளக்காடாக ஆகிவிடுகிறது. மதுரையில் ஓடுகின்ற கிருதமால் நதி, அனுப்பானடி கால்வாய் போன்றவற்றைச் சரி செய்து ஆழப்படுத்தித் தூர்வார வேண்டுமென்ற திட்டம் அரசிடம் இருப்பதாகக் கூட நான் அறிகிறேன். அவ்

[திரு. சோ. பால்ராஜ்] [1990 சனவரி 23

வாறு மேற்கொள்ளவிருக்கும் அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தினால் அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ததாக அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் கிருதமால் திட்டமானாலும் சரி, மற்ற திட்ட மானாலும் சரி, அந்தந்தப் பகுதிகளிலிருக்கின்ற மக்களுக்கு மாற்று இடம் தந்துவிட்டு நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இரண்டு நாட்களுக்கு முன்னாள் மாண்புமிகு அண்ணன் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் கூடப் பேசினார்கள். மதுரை நகரில் போக்குவரத்து பெரிய பிரச்சினையாகி மனிதனுக்கு மனிதனே கூட மோதுகிற அளவுக்கு அங்கே மக்கள் தொகை வளர்ந்து வருவதன் காரண மாக வாகனங்கள் சிரமமின்றி செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால் அங்கே ஒரு சுரங்கப் பாதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டேன். அது கூட அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். குறிப்பாக பெரியார் பேருந்து நிலையம், அதாவது பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் யானைக்கால் பகுதியில், டவுன் ஹால் ரோடு பகுதியில் உள்ள இரயில்வே ஸ்டேஷனை ஒட்டி இருக்கிற பகுதியில், கோரிப்பாளையம் தேவர் சிலைக்குப் பக்கத்திலும் கீழ்வெளிப் பகுதியில் உள்ள செயிண்ட் மேரிஸ் பள்ளி அருகேயும் சுரங்கப் பாதைகளை விரைவாக நீங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று மதுரை மக்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் வறட்சிக் காலங்களில் தண்ணீர்ப் பஞ்சம் தலை விரித்து ஆடுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அவ் வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலைக்கேற்ப சில நடவடிக்கைகளை எடுத்து அன்றைய நிலைமைகளைச் சமாளித்தது இந்த அரசு என்பதை நாம் அறிவோம். ஆனால் கல்லாற்றிலிருந்து தண் ணீரை நிரந்தரமாகக் கொண்டுவருவதற்கான ஒரு திட்டம் இருக் கிறது. அது பரிசீலனையில் இருக்கின்றது என்று நாம் அனை வரும் அறிவோம். ஆனால் அதை உடனடியாக விரைவுபடுத்தி மதுரை நகரில் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கிட முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11-30 மணி

மதுரை நகரத்தில் பல்வேறு பகுதிகளிலே பாதாளச் சாக்கடை இன்றைக்கு இல்லாத நிலை இருக்கிறது. வளர்ந்து வருகின்ற நிலையில் மதுரையில் குறிப்பாக, எம். கே. புரம் ஆனாலும் சரி, சுப்பிரமணியபுரம் ஆனாலும் சரி, ஜெய்ஹிந்த் புரம் சேர்ந்த பகுதிகளில் கூட 15 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைத் தீட்டி இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டு

மென்று அரசு ஆணையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதையும் உடனடியாக செய்து பாதாளச் சாக்கடையை அமைத்து மக்களுக்கு உதவி செய்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் மற்றும் அரசுப் பள்ளிகளில் கூரை வேய்ந்தவைகள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் காரணத்தினால் இரண்டு தினங்களுக்கு முன்பு கூட ஒரு அரசுப் பள்ளியிலே தீப்பிடித்து எரிந்திருக்கிறது. நல்லவேளையாக அன்று ஞாயிற்றுக்கிழமை. எனவே எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட அரசுப் பள்ளிகளில் இருக்கின்ற கூரை ஓலைகளை எடுத்துவிட்டு தீப் பிடிக்காத கட்டடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, அங்கே பள்ளிகளில் தீப் பிடித்த நேரத்தில் வாட்ச்மேன் ஒரே ஒருவர் மட்டும் பணியில் இருந்ததாக கூறப்படுகிறது. சில இடங்களில் பள்ளிகளில் காவலாளியே இல்லை என்று தெரியப்படுத்தினார்கள். அதையெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரத்தின் இதயம் போன்ற பகுதியாக இருக்கின்ற டவுன் ஹால் ரோடு ஓட்டல் பகுதியில், அங்கே தெப்பக்குளம் இருக்கிறது. அது பெருமாள் கோயிலுக்குச் சொந்தமானது. அந்த தெப்பக்குளத்தில் இன்றைக்கு தண்ணீரே கிடையாது. விழா எதுவும் நடைபெறுவதும் கிடையாது. அந்தப் பகுதியில் ஒரு நல்ல அங்காடியை மையமாக வைத்து கட்டினால் அங்கே வருவாய் வரும் என்பதைத் தெரிவிக்கிறேன். இந்தத் திட்டத்திற்கான நடைமுறைகளை பரிசீலித்து அந்தக் கோயில் நிர்வாகிகளோடு பேசி அங்காடி மையம் அமைக்கின்ற திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை நகரத்தில் பெரியார் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிறுத்தி வைப்பதற்கு இடவசதி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கு மேல் புறத்தில் கிருத்தவர்களுக்குச் சொந்தமான ஒரு கல்லறை இருக்கிறது. அந்தக் கல்லறையை யாரும் உபயோகிப்பது கிடையாது. அரசு அவர்களோடு பேசி பெரியார் பேருந்து நிலையத்தோடு சேர்த்துக் கொண்டால், அங்கே இருக்கின்ற பஸ்கள் நிறுத்துவதற்கு இப்போது இருக்கின்ற இடையூறுகள் இதன் மூலமாகத் தீர்க்கப்படும் என்று தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

அதேபோல, அந்த பெரியார் பேருந்து நிலையத்திற்கு எதிர்த்தாற் போல் காம்ப்ளெக்ஸ் ஒன்று கட்டப்பட்டு இருக்கிறது. கட்டப்படுவதற்கு முன்னாலே அங்கே சொல்லப்பட்டது எல்லாம், அந்த இடத்தையும் பெரியார் பஸ் ஸ்டாண்ட் போல அதை ஆக்கி உடனடியாக நல்ல முறையில் செய்வதாக சொன்னார்கள். இதைச் சொல்லிவிட்ட காரணத்தினால் நான் முந்தைய

[திரு. சோ. பால்ராஜ்] [1990 சனவரி 23

அரசை குற்றம் சாட்டுவதாக நினைக்க வேண்டாம். முந்தைய அரசில் என்ன செய்தார்கள் என்றால் கட்டிவிட்ட கடைகளை மட்டும் வாடகைக்கு விட்டுவிட்டார்கள். அங்கே பஸ்கள் போகிறது. பஸ் போகின்றபோது பள்ளமும் மேடுமாக இருக்கின்றது. அந்தக் கடைகளில், காம்ப்ளெக்சில் இருக்கின்ற கடைக்காரர்கள் கூட சிறுநீர் கழிப்பதற்கு போதுமான இடவசதி இல்லாமல் இருக்கிறார்கள். அந்த இடம் மிகவும் மோசமாக இருப்பதை நானே நேரிலே பார்த்தேன். பள்ளம் மேடாக இருக்கும் அந்த பகுதியை சரி செய்து கொடுத்து பஸ் போக்குவரத்துக்கு ஏற்ற தொரு இடமாக ஆக்கிட வேண்டும்என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று என்று நினைக்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் நிருபர் களுக்கு பஸ் பாஸ் வழங்குவது பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். (மணியடிக்கப் பெற்றது) தற்போது பத்திரிகையாளர்கள் செல் வதற்கு மாவட்டத்திற்குள் மட்டும் பஸ் பாஸ் வழங்குவதாகக் கூறப்பட்டது. பத்திரிக்கையாளர்களுக்கு மாநிலம் பூராவும் செல்வதற்கு பாஸ் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையை ஒட்டி மாடக்குளம் கண்மாய் இருக்கிறது. இப் போது மழை பெய்ததை நீங்கள் எல்லாம் பேப்பரில் பார்த்து இருப்பீர்கள். மதுரையில் வெள்ளம் வந்திருப்பதாகச் சொன் னார்கள். பார்த்திருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட மழை யில் கூட அந்த மாடக்குளம் கண்மாயில் தண்ணீர் இல்லை. ஏன் வரவில்லை என்றால் கண்மாய்க்கு தண்ணீர் வருகிற வழி களை அடைத்துவிட்டார்கள். அதன் காரணமாக 100 ஏக்கர் நிலத்திற்கு மேல் அந்தப் பகுதியிலே இருக்கின்ற நிலம் பாதிக்கப்பட்டு, அங்கே இருக்கின்ற மக்கள் அவஸ்தைக்குள்ளாகி இருக்கின்றார்கள். அதை சரி செய்துதரவேண்டும். அங்கே ஆக்கிரமிப்பு இருந்தால் அவைகள் அகற்றப்படவேண்டும். அங்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு வேறு மாற்று இடத்தைக் கொடுத்துவிட்டு கண்மாய்க்கு தண்ணீர் வரும் வழியை சரி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும்கூட ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாடக்குளம் நிறைந்துவிட்டால் மதுரை அழிந்துவிடும் என்று இருந்தது. அது ஒரு காலத்தில் அந்த பீதி இருந்தது. அந்தக் கரையையும் உயர்த்தி சரி செய்து விவசாயப் பெருமக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே நான் சொன்னதைப்போல பாதாளச் சாக்கடை ஆனாலும் சரி, சுரங்கப்பாதை ஆனாலும் சரி, அங்கே இருக்கின்ற நிலைகளை எல்லாம் உணர்ந்து மதுரை மக்களுக்கு தேவைப்படும் திட்டங்களையும், பணிகளையும், உடனடியாகச்

1990 சனவரி 23] [திரு. சோ. பால்ராஜ்]

செய்தாகவேண்டும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. நான் மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடம் சென்று கேட்கிறபோது சொல்கிறார்கள் திட்டம் இருக்கிறது. பாதாள சாக்கடையா ? 15 கோடி தேவைப்படுகிறது. சுரங்கப்பாதையா? நிதியிருந்தால் ஏற்பாடு செய்கிறோம் என்கிறார்கள்.

கிருதமால் நதித் திட்டம் ரூ. 5 கோடி. அதற்கு உடனடியாக ஒரு கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், சொல்வதைவிட இன்றைக்கு வளர்ந்துவரும் மதுரைக்கு வளர்ச்சிப் பணிகளை செய்வதுதான் முக்கியமாகும். கெட்டும் பட்டணம் சேர் என்று சொல்வதுபோல், அந்த பக்கத்திலே இருக்கின்ற, அது தேனி ஆனாலும் சரி, திண்டுக்கல் ஆனாலும் சரி, கம்பம் ஆனாலும் சரி, சுற்றுப்புறத்தில் இருக்கின்ற அத்தனை பேர்களும் மதுரைக்குத்தான் வருகிறார்கள். மழை வருகின்றபோது, அத்தனை திட்டங்களையும் எடுத்துச் சொல்கின்றார்கள். ஆகவே மேற்கூறிய கோரிக்கைகளை நிறைவு செய்யும் முகத்தான் விரைவாக செயல்படவேண்டுமென்று கேட்டு, கொடுத்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

11–35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உரிய நேரத்தில் உறுப்பினர் முடித்தமைக்கு நன்றி.

திரு. கே. அர்ஜுனன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது விவாதிக்கக்கூடிய வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒட்டுமொத்தமாக மக்கள் இந்த ஆட்சியை நிராகரித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இதனை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். மக்கள் நிறைவேற்றியிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் தான் இப்போது நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள். இம்முடிவுக்குப் பிறகு இந்த அரசு பதவி விலக வேண்டுமென்று நாங்கள் சொன்னால் பதவி விலகப் போவதில்லை. ஆனால் முன்பு, 1980 ஆம் ஆண்டில் தி.மு.க. செயற்குழுக் கூட்டத்திலே, அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை, புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலுள்ள ஆட்சி மக்கள் சக்தியின் ஆதரவை இழந்துவிட்ட காரணத்தால் பதவிவிலக வேண்டுமென்று கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 38 தொகுதிகளிலுள்ள கிட்டத்தட்ட 220 சட்டமன்றத் தொகுதிகளில் திராவிட முன்னேற்றக்

கழகமும் அதன் கூட்டணியும் வெறும் 8 தொகுதிகளில்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக —காங்கிரஸ் கூட்டணியை விட அதிகமாக வாக்குகள் பெற்றிருக்கிறார்கள். ஆக, அப்போது சட்டமன்ற தேர்தல் நடைபெற்றிருந்தால் எட்டு சட்டமன்ற உறுப்பினர்கள்தான் இந்த அவைக்கு தி. மு. க. கூட்டணி சார்பில் வந்திருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் பல தொகுதிகளில் அவர்கள் வாங்கிய ஓட்டுகளைப் பார்க்கும்போது டெபாசிட் இழக்கும் நிலையே ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது தாரமங்கலம், ஓமலூர் போன்ற சட்டமன்ற தொகுதிகளில் டெப்பாசிட்டை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். தற்போது இந்த ஆட்சி புரட்சித் தலைவியையும், அ. தி. மு. க. வையும் அழித்துவிட துடிக்கிறது. முன்பும் இந்த அரசு ஜனநாயக விரோத அரசாக செயல்பட்ட காரணத்தால்தான் மக்கள் பாடம் புகட்டியிருக்கிறார்கள். இன்றைக்குக்கூட அ. தி. மு. க. வினுடைய மாநில அண்ணா தொழிற் சங்கங்களில் பொறுப்பாளர்களாக இருப்பவர்கள் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு பகுதிகளில் மாறுதல் செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போதுகூட அவர்கள் ஊர்வலமாக அமைச்சரைச் சந்திப்பதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பழிவாங்கும் படலம் தொடரக் கூடாது. இனிமேலாவது ஆரோக்கியமான அரசாக செயல்பட வேண்டுமென்று உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தீர்ப்புக்கு தலைவணங்குவோம் என்று நீங்கள் அடக்கமாக சொல்லக்கூடிய ஒரு வார்த்தை உங்களிடமிருந்து இன்னும் வரவில்லை. அ. தி. மு. க. வை வசை பாடுகிறீர்கள். புரட்சித் தலைவியை கொச்சைப்படுத்துகிறீர்கள். டெல்லிக்குச் சென்று தவம் இருந்து அமைச்சர் பதவி பெற்றிருக்கிறீர்கள். தேசிய முன்னணிக்கு வாழ்த்துப் பாடுகிறீர்கள். டெல்லிக்கு காவடி தூக்கியதாக எங்களைக் கிண்டலாகப் பேசிய நீங்கள் இன்றைக்கு தேசிய கூட்டணிக்கு பல்லக்கு தூக்குகிறீர்கள். அது மாத்திரமல்ல, உங்களுடைய இந்தி எதிர்ப்பு வீரம் இனிமேல்தான் தெரிய போகிறது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்கும், அ. தி. மு. க. வுக்கும் இருக்கக்கூடிய உறவு முறை வேறு. ஆனால் தி. மு. க. வுக்கும் தேசிய முன்னணிக்கும் இருக்கக்கூடிய உறவு வேறானது. ஏனென்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய முன்னணியில் ஏற்கெனவே அங்கம் வகிக்கிறது. எனவே, இதில் எந்தவிதமான முரண்பாடும் இருப்பதற்கு நியாயம் இல்லை.

திரு. கே. அர்ஜுனன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் இலவச அரிசியைத் தவிர வேறு உப்பு சப்பு இல்லை. மேலும் இப்போதைய திட்டத்தின்

படி அரசாங்கத்திற்கு செலவு குறைந்திருக்கிறது என்று பத்திரிகைகளில் குறிப்பு வந்திருக்கிறது. இலவச அரிசி திட்டத்தின்கீழ் தற்போது 30 லட்சம் பேர்களுக்கு குடும்பக் கார்டுகள் வழங்க வேண்டி வரும். இலவசமாக அரிசி போடுவதாகச் சொல்கிறீர்கள், ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு மாதம் 20 கிலோ அரிசி அனைவருக்கும் வழங்கிவந்திருக்கிறார்கள். நீங்கள் அதை எப்போது வழங்கப் போகிறீர்கள் ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே, திட்டமிட்டு, அ. தி. மு. க.-வைச் சார்ந்தவர்கள், தொடர்ந்து ஓராண்டுக் காலமாக ஒரு தவறான பிரச்சாரத்தை செய்து வருகிறார்கள். ஏதோ, அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் மாதந் தோறும் குடும்பக் கார்டுகளுக்கு 20 கிலோ அரிசி கொடுத்ததாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே அது சம்பந்தமான கோப்புகளைக் கொண்டு வந்து இந்த அவையிலே காட்டி ஆதாரத்தோடு சொல்லி யிருக்கிறேன். எந்தக் கால கட்டத்திலும் எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்தில் எந்தக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதந்தோறும் 20 கிலோ அரிசி கொடுக்கவில்லை. அதிகபட்சமாக 12 கிலோ கொடுத்திருக்கிறார்கள். மேலும் 1985-ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டதால் 6 கிலோ அரிசிதான் ஒவ்வொரு குடும்பக் கார்டு களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, கொடுக்காத ஒன்றை, கொடுத்ததாகச் சொல்லி, நாட்டு மக்கள் மத்தியில் தவறான பிரச்சாரத்தைச் செய்ய இந்த அவையை உறுப்பினர் பயன்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

11–40 மணி

திரு. கே. அர்ஜுனன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுவதற்கு நான் பதில் சொல்லிக் கொண்டு, ஒரே விஷயத்தை நீண்ட நேரம் விவாதித்துக் கொண்டு என்னுடைய நேரத்தை வீணாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. முதலில் அவர் ஆதாரத்தைக் காண்பிக்கட்டும். என்னிடைய ' சப்ஜெக்ட்டை ' முதலிலே நான் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கடந்த ஆண்டே மானியத்தின் போது பேசுகின்ற நேரத்தில் கோப்புகளைக் கொண்டு வந்து, ஆதாரங்களைக் காட்டி இருக்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர், தமிழ் நாட்டிலே எம். ஜி. ஆர். ஆட்சியிலே மாதா மாதம் 20 கிலோ அரிசி கொடுத்ததற்கான ஆதாரம் ஏதாவது இருந்தால் இங்கே கொடுத்துவிட்டுப் பேசட்டும்.

திரு. எஸ். ஆர். இராதா ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ஆதாரம் வேண்டும் என்று

[திரு. எஸ். ஆர். இராதா] [1990 சனவரி 23

கேட்கிறபோது மக்கள் 20 கிலோ அரிசி வாங்கிய கார்டைக் கொண்டு வந்து காண்பித்தால் ஒத்துக்கொள்வாரா அல்லது எந்த அடிப்படையில். . . .

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்தக் குடும்பத்தாரராவது 20 கிலோ அரிசி எம். ஜி. ஆர். ஆட்சியில் வாங்கினோம் என்பதற்கான கார்டையும், அதற்கான பில்லையும் கொண்டு வந்து காட்டினால் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் 20 கிலோ அரிசி வழங்கியதற்கான உத்திரவு பிறப்பித்து இருந்தால், அந்த உத்திரவைக் காட்டினாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயார்.

திரு. கே. அர்ஜுனன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில் விவசாயத்தைப் பற்றி ஒன்றுமே இல்லை. விவசாயப் பயிர்களுக்கு அடிக்கும் பூச்சி மருந்துகூட செயலிழந்து ஒரு பூச்சி கூட சாகிற நிலைமையில் இல்லை. விவசாயிகளினுடைய நிலைமையை வருடக் கணக்கில் பார்க்கிறபோது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுதான் முதல் முறையாக மருந்து அடித்தால் பூச்சி சாகிறது என்று ஆயிரக் கணக்கான விவசாயிகள் என்னிடத்தில் தகவல் தெரிவித்து இருக்கிறார்கள்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பாயின்ட் ஆஃப் ஆர்டர். .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Point of order or clarification or information?

பேராசிரியர் க. பொன்னுசாமி : Point of order. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Yes.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அண்மையிலே ஒன்றியக் கூட்டங்களிலே விவசாயிகள் வந்து, தாங்கள் வாங்கிச் சென்ற மருந்துகளால் பூச்சிகள் சாவது இல்லை என்றும், அவற்றைத் தூக்கி எறிந்து விட்டதாகவும் சொல்லித் தகராறு செய்த ஒன்றியங்கள் எல்லாம் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே வையம்பட்டி ஒன்றியத்திலே இந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1990 சனவரி 23]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பெரும் தலைவர் பொறுப்பை வைத்து இருக்கின்ற, நகராட்சி மன்றத் தலைவர் பொறுப்பை வைத்து இருந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரைக்கும் அந்தத் தகவலை எனக்கு நேரடியாகவும் சொல்லவில்லை ; எழுத்து மூலமும் சொல்லவில்லை ; துறைக்கும் தகவல் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தை குற்றச் சாட்டாக எடுத்துக் கொள்ளக்கூடாது ; இருக்கிற பிரச்சினையைச் சொல்கிறேன். ஆத்தூர் பகுதியிலே பருத்தி பெரிய விவசாயமாக நடந்து கொண்டிருக்கிறது. அங்கே பூச்சி மருந்து 'எபெக்டிவ்' ஆக இல்லாத காரணத்தால் உள்ளபடியே அங்கு கூலிக்கு ஆட்களை அனுப்பி ஒரு புழுவைப் பிடித்துக் கொடுத்தால் 10 பைசா என்ற வீதத்திலே ஒரு நாளைக்கு 100, 200 புழுக்களைப் பிடித்து 10 ரூபாய், 20 ரூபாய் என்று கூலி பெறுகின்ற வகையிலே அங்கே நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற காரணத்தால் தயவுசெய்து உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன், இந்த விவசாயிகளைக் கடைசியில் ஒட்டு மொத்தமாகப் பார்க்கிறபோது லாபம் வராத சூழ்நிலையில் அந்தப் பூச்சி மருந்தைச் சாப்பிட்டுத்தான் சாவான் என்று சொன்னால், அதிலே கூட உயிர் போகவில்லை என்ற அளவுக்கு நிலைமை போய்க் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை 'சீரியசாக' எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பூச்சியைக் கொல்வதற்காகத் தான் மருந்தைத் தயாரிக்கிறார்களே தவிர, மனிதர்களைக் கொல்வதற்காக மருந்து தயாரிக்கச் சொல்லி யாரும் ஆணை பிறப்பிக்கவில்லை, ஒன்று, இரண்டாவது, பரிசோதனைக்கு உட்பட்டுத்தான் இதுவரை இந்த ஆண்டு நாம் மருந்தை வாங்கும் போதே பரிசீலித்துத் தான் வாங்க வேண்டுமென்று சொல்லி, இலாகாவினர் மருந்தைக் கொள்முதல் செய்கிறார்கள். அப்படியும் ஏதாவது தவறு இருந்தால் நாங்கள் அந்த மருந்தை நீக்கிவிடுகிறோம் ; நடவடிக்கை எடுக்கிறோம். பல நூற்றுக் கணக்கான வழக்குகள் திரும்ப அனுப்பப்பெற்று அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை இந்த ஆண்டு எடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கே. அர்ஜுனன் : துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர், பேர்டு செல் கம்பெனி நீண்ட நாட்களாக மூடிக் கிடக்கிறது. அதைத் திறந்துவிடுவதாக தேர்தல் நேரத்திலே தி. மு. க. வினுடைய மேடைப் பேச்சுகளிலே—தேர்தல் அறிக்கையிலே கூட என்று கருதுகிறேன்—குறிப்பிட்டு இருந்தார்கள். அதற்கு மைய அரசு இன்னும் அனுமதி அளிக்கவில்லை என்ற ஒரு

[திரு. கே. அர்ஜுனன்] [1990 சனவரி 23

காரணத்தைக் காட்டி இன்னும் தொடர்ந்து மூடப்பட்டே இருக்கிறது. அதை விரைவில் திறக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஓமலூர் தாலுக்காவை பின்தங்கிய தாலுக்காவாக அறிவித்து நிறைய தொழிற்சாலைகள் துவங்குவதற்கு வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஸ் தேசியமயமாக்கப்படும் என்பது தி. மு. க. வினுடைய கொள்கை. அந்தக் கொள்கைக்கு உச்ச நீதிமன்றம் மற்றும் ஏனைய எல்லா நீதிமன்றங்களும் ஒப்புதல் அளித்தும் கூட அந்தக் கொள்கையை ஏன் நீங்கள் இன்னும் நிறைவேற்றவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நாட்டிலே சட்டம் ஒழுங்கு ஒட்டுமொத்தமாகக் கெட்டுவிட்டதை நாம் அனைவரும் ஒப்புக்கொண்டு ஆகவேண்டும். தற்போது போலீஸ் டைரக்டர் ஜெனரல் அல்லது போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமனத்தை சாதி அடிப்படையில் கொடுத்து இருப்பதாகப் பத்திரிக்கைகளிலே குறிப்பாக முரசொலியிலே கூட வந்து இருக்கிற செய்தியை நாம் பார்க்கிறோம். ஜாதி அடிப்படையிலே என்று சொல்லி ஜாதி உணர்வை வளர்ப்பது தவறான முன்னுதாரணமாகும். எனவே அவருடைய திறமையின் அடிப்படையில் கொடுத்திருப்பதாக நீங்கள் சொல்வீர்களானால். . . .

11-45 மணி

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தந்துக் கொண்டிருக்கிறார்கள். ஜாதி அடிப்படையிலே பதவி உயர்வு கொடுத்ததாக முரசொலி பத்திரிகையிலே எங்கேயும் வரவில்லை. கல்கி பத்திரிகையில் முதலமைச்சரிடத்திலே பேட்டி கண்டபோது ஏற்கெனவே இருந்த டி. ஜி. பி. அவர்களை மாற்றி நீங்கள் புதிய டி.ஜி. பி-யை நியமித்திருக்கிறீர்கள். அதற்கு ஏதாவது காரணம் உண்டா என்று கேட்ட போது—அவர் ஏற்கெனவே டி. ஜி. பி.யாக பணியாற்றி விட்டார்—தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இவருக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர ஜாதி அடிப்படையிலேதான் டி.ஜி.பி-க்கள் நியமிக்கப்படுவார்கள் என்று சொல்லப்படவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரையிலே கீழ்த் தட்டில் இருப்பவர்களைக் கைதூக்கிவிட வேண்டும் என்பதுதான் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இளம்வழுதி : துணைத் தலைவர் அவர்களே, தாழ்த் தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் காவல் துறையின் உயர் அதிகாரி பொறுப்புக்கு வரக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் வர வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு எதிர்க்கட்சித் தலைவருடைய கடிதத்தைக் கைப்பற்றி சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கிற வகையில்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விவா தத்தில் அதை நீங்கள் பேசக்கூடாது. உறுப்பினர் அவர்களுக்குச் சொல்கிறேன், உங்களுடைய பேச்சினுடைய தொடர்பாகக் கேள்வி கேட்டிருக்கிறார். அதைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, எப்போதோ நடந்த தகவலைப் பற்றி மீண்டும் மீண்டும் இங்கே பேசக்கூடாது.

திரு. கே. அர்ஜுனன் : எனவே திறமையான அதிகாரிகள் இதனால் சோர்வடைந்துவிடுவார்கள் என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன். ஆகவே திறமைமிக்க அதிகாரிகள் யாராக இருந் தாலும் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து ஊக்குவிப்பது தான் சட்டம் ஒழுங்கு சீர்படுத்துவதற்கு வழி வகுக்குமே தவிர மற்றபடி ஜாதி அடிப்படையில் யாருக்கும் பதவி உயர்வு கொடுக்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது டி.ஜி. பி-யாக பதவி உயர்வு தரப்பட்டிருப்பவரும், ஐ. ஜியாக பதவி உயர்வு தரப்பட்ட வரும் யார் என்று இப்போது உரையாற்றிக் கொண்டிருக்கிற உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும், நான் அவர்களு டைய சமூகத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை. அவர் ஜாதி அடிப்படையில் கொடுத்ததாகச் சொல்கிறார். அவர் களுக்குத் திறமை இல்லை என்பது அவருடைய வாதமா ? திறமை இல்லை என்பதற்கு அவர் தருகிற சான்று என்ன ?

திரு. கே. அர்ஜுனன் : எங்களைப் பொறுத்தவரையில் அவருக்குத் திறமை இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச் சினை. பத்திரிகையிலேயே வந்திருக்கிற செய்தி இது. ஜாதி அடிப்படையிலே என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிற காரணத் தாலேதான் நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எங்கே அப்படி வந் திருக்கிறது. நான் சொன்னதாக எந்தப் பத்திரிகையிலே வந் திருக்கிறது.

திரு. கே. அர்ஜுனன் : இப்போதுதான் நம்முடைய அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று அவரோ குறிப்பிட்டுச் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஒரு செய்தியை வெளியிடுகிறீர்கள். அதற்கு நீங்கள்தான் ஆதாரம் காட்டக் கடமைப்பட்டிருக்கிறீர்களே அல்லாமல் அமைச்சருடைய கருத்தை எடுத்துச் சொல்லக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உறுப்பினர் முன் கூட்டியே என்ன பேசப் போகிறோம் என்று தீர்மானித்துக் கொண்டு பேச வர வேண்டும். அப்படிப் பேசுகிறபோது அதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்ட வேண்டும். ஆதாரங்களைக் காட்டுவது என்பதே கூட இந்த அவையினுடைய மரபின்படி சபாநாயகரிடத்திலே முதலிலே அவற்றைக் கொடுத்து இதை நான் பேசப் போகிறேன் என்று அவரிடம் சொல்லிவிட்டுத்தான் இங்கே காட்ட வேண்டும் என்ற மரபுகள் எல்லாம் ஏற்கெனவே கடந்த காலத்திலிருந்து வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மீறி, ஏதோ பத்திரிகையில் வந்திருக்கிறது, முதலமைச்சர் இப்படிச் சொல்லியிக்கிறார், ஜாதி அடிப்படையில் போட்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார் என்றெல்லாம் கூறுவது தவறு.

திரு. கே. அர்ஜுனன் : துணைத் தலைவர் அவர்களே, மேலும் காவல் துறை என்பது எதிர்க் கட்சியை அச்சுறுத்துவதற்கும் ஒழிப்பதற்கும்தான் பயன்படுத்தப்படுகிறது. புரட்சிச் செல்வி எங்களுடைய பொதுச் செயலாளர் அவர்கள் சொந்த வேலையாக ஐதராபாத் செல்லுகிறபோது சி. ஐ. டி அதிகாரிகள் 2 காரிலே அவரைப் பின் தொடர்ந்திருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் செல்வராஜ் என்பவருடைய தலைமையில் TDO 3448 TDL 149 என்ற கார்களிலே அவரைப் பின் தொடர்ந்திருக்கிறார்கள். அவருடைய தோட்டத்திற்குப் போகிறபோது அவரைச் சுற்றிச் சுற்றி வந்திருக்கிறார்கள். அவர் தங்கிய இடத்திலே இவர்கள் தமிழில் பேசிய காரணத்தால் அங்கே இருப்பவர்கள் கூட புரட்சித் தலைவியோடு வந்தவர்கள் என்று இவர்களைக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக எஸ்.டி.டி. யை க்கூட பயன்படுத்தி புரட்சித் தலைவி அவர்களுடைய பில்-ஐக்கூட உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி நிலைமை இருக்கிறது. ****

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; ** ** **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

11–50 மணி

திரு. கே. அர்ஜுனன் : ** ** **
மேலும், தற்போது கம்பல்சரி வெயிட்டிங்..

திரு. என். பழனிவேல் ; Point of clarification தலைவரவர்களே, மாண்புமிகு நம்முடைய உறுப்பினரவர்கள் இந்தச் சட்டமன்றத்தினுடைய உறுப்பினரான ஜெயலலிதா அவர்களைப் பற்றி, யாரோ போலீசார் பின் தொடர்ந்தார்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறார். அவர் இந்த அவையினுடைய உறுப்பினர். அவர் இங்கு வந்து அவரைப் பின் தொடர்ந்தவர்களைப் பற்றிப் புகார் சொன்னாரா ? அதன் மீது நடவடிக்கை எடுக்கும்படி முதலமைச்சருக்கோ, மற்றவர்களுக்கோ கடிதம் ஏதாவது கொடுத்திருக்கிறாரா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அர்ஜுனன், தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : தற்போது காவல் துறையினுடைய போக்கை நான் சொல்ல விரும்புகிறேன். இதைக் குற்றச்சாட்டாக தயவு செய்து முதல்வரவர்கள் எடுத்துக் கொண்டு பதில் சொல்லக் கூடாது.

கம்பல்சரி வெயிட்டிங் என்ற வகையில் பெரிய போலீஸ் அதிகாரிகள் இன்றைக்கு ஐ. ஜி அலுவலகத்திலே மாதக் கணக்கிலே வைத்துக் கொண்டிருந்து சம்பளத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதிலே கிட்டத்தட்ட 20, 25 வேக்கன்சிகள் இருக்கின்றன என்று சொன்னால், அங்கே 15 அதிகாரிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளத்தை, மாதக் கணக்கிலே வீணாக, தண்டச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள. பத்து நிமிடங்கள்தான் ஒவ்வொருவருக்கும் அனுமதிக்கப்படுகிறது. எற்கெனவே 15 நிமிடங்கள் எடுத்துக் கொண்டு விட்டீர்கள். எனவே, ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் ; தயவு செய்து கொஞ்சம் டயம் கொடுங்கள். அவர்களைப் பழி வாங்குகின்ற சூழ்நிலையிலே இப்படி கம்பல்சரியாக வெயிட்டிங் லிஸ்டிலே வைக்கப்பட்டிருக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட, அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய அந்த இழப்பை அந்த ஹோம் செக்ரட்டரி அல்லது அந்த டி. ஜி. பி-யினுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருப்பதற்கு, ஊர் முழுவதும் சாராயம் விற்கப்படுகிறது. இப்பொழுது போலீஸ் அதிகாரிகளுக்கு, எங்கே பார்த்தாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் அல்லது கிளைச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்களுக்கு எந்தெந்த இடத்திலே யார் யார் சாராயம் விற்பதற்கு என்று பைசல் பண்ணுவதற்கே அவர்களுக்கு நேரம் போதாத சூழ்நிலை உருவாகிக் கொண்டு இருப்பதால் தயவு செய்து மதுவை மீண்டும் திறந்து விடுவதற்கு இது முன்னோடியா என்று அறிய நான் விரும்புகிறேன்.

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே....

திரு. கே. அர்ஜுனன் : முதல்வரே சொல்லி விட்டார், உட்காருங்கள். இலஞ்ச ஒழிப்புத் துறையில் மாட்டிக் கொண்டிருக்கின்ற அதிகாரிகளுக்குக் கீ போஸ்டிங்ஸ் கொடுக்கக் கூடாது என்று குறிப்பு எழுதப்பட்டிருந்தாலும் கூட, தற்போது நிறைய இடங்களிலே தொடர்ந்து அப்படிப்பட்ட இலஞ்ச ஒழிப்புத் துறையிலே மாட்டிக் கொண்டவர்கள் தற்போது பல்வேறு சட்ட ரீதியான வகையிலே மீண்டு வந்தவர்களுக்கு கீ போஸ்டிங்ஸ் கொடுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

நான் சென்ற ஆண்டு குறிப்பிட்டேன். 25—3—1989-ஆம் தேதியன்று நடைபெற்ற சம்பவத்தை யொட்டி என்னுடைய வீடும், காரும் தாக்கப்பட்ட பொழுது இந்த அவையிலே குறிப்பிட்டேன். மாண்புமிகு முதல்வரவர்கள் அந்த நேரத்திலே நான் அவர்கள் அந்தத் தவறு செய்தவர்களின் காரைக் குறிப்பிட்ட பொழுது அதைத் தவறாக எடுத்துக் கொண்டார்கள். அந்தக் கார், தனி ஒரு அரசியல்வாதிக்குச் சொந்தமானது அல்ல, தனியாருக்குச் சொந்தமானது அந்தக் காரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வந்தார்கள். அதை நான் சொன்ன நோக்கம், அதில் வந்தவர்கள் யார் யார் என்று விசாரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் இன்றைக்கு என்ன நிலைமை? தொடர்ந்து என்னை அச்சுறுத்தக் கூடிய நிலைமை. என்னுடைய 15 வயது பெண் பள்ளிக் கூடத்திற்குச் செல்லும் பொழுது கூட மிரட்டல், உருட்டல், கிண்டல், கேலி, இப்படி நிலைமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பள்ளிக்கே போக மறுக்கின்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது.

1990 சனவரி 23] *[திரு. கே. அர்ஜுனன்]*

பூலாம்பட்டி காவல் நிலையத்தில் ஒருவரைக் காவலர்கள் கல்லால் விட்டு அடித்து அவர் தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டார் என்று அப்பொழுது நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். முதல்வர் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார். ஆனால் எந்த விதமான நடவடிக்கையும் இது வரைக்கும் எடுக்கப்படவில்லை. போஸ்ட் மார்ட்டம் சர்ட்டிபிகேட்டிலே தலையிலே கல் அடிபட்டிருக்கிறது என்று சர்டிபிகேட் கொடுக்கப்பட்டிருப்பதைத் தயவு செய்து முதல்வரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒட்டு மொத்தமாக சேலம் மாவட்டத்திலே சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டிருக்கிறது. பல தியேட்டர்களிலே ப்ளூ பிலிம் ஓடுகிறது. இதை மாவட்டக் கண்காணிப்பாளரிடத்திலே கூறுகிறபொழுது நான்கு வழக்குகள் தொடர்ந்துள்ளதாகச் சொன்னார். இதற்கு முன்பு எந்தக் காலத்திலே அதிகாரிகள் நிலையிலேயும் ப்ளூ பிலிம் ஓடியதாகவோ, வழக்கு தொடரப்பட்டதாகவோ இல்லை. சேலம் நகரத்திலே இப்பொழுது நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சினிமாவுக்குப் போகக் கூடிய அசிங்கத்தை விரும்பவில்லை என்று குறிப்பிட்டேன். அதுவும் அந்த டவுன் போலீஸ் சூப்பரின்டென்டெண்டைப் பொறுத்தவரையில் அவர் ஒரு வழக்கில் மாஜிஸ்ட்ரேட்டே அவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். Shevvapet Cr. No. 758/89 against Selvaraj and others.

அதிலே, மாஜிஸ்ட்ரேட் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்று சொன்னால், கைது செய்யப்பட்டது 23—8—1989 மாலை ஐந்தரை மணி. அவரை—கேம்ப்ளர்ஸ் எப்படிப்பட்டவர், சமூக விரோதிகளாகத்தான் இருக்க முடியும். அவர்களை விடுதலை செய்வதற்கு இந்த டெபுடி சூப்பரின்டென்டே மாஜிஸ்ட்ரேட்டினிடத்திலே அப்ரோச் செய்து அவரை விடுதலை செய்திருக்கிறார். என்ன அவருக்கு அவ்வளவு பெரிய அக்கறை என்று கேட்க விரும்புகிறேன்.

11-55 மணி

At the request of the Deputy Superintendent of Police and Counsel for the accused, 14 accused produced by the Police and remanded to custody till 28-8-1989 are enlarged on bail on executing own bond for Rs. 1,000 each.

மாஜிஸ்ட்ரேட்டே டெபுட்டி சூப்பிரன்டெண்ட் வந்து 'ரிக்குவஸ்ட் பண்ணிய காரணத்தால் 'ரிலீஸ்' பண்ணியிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ப்ளூ பிலிம் ஓடுகிறது, சீட்டாட்டம்

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சாராயம் தலை விரித்து ஆடுகிறது, பள்ளிக் கூடங்களுக்குப் பெண்கள் போக முடியவில்லை. சட்டம் ஒழுங்கை எப்படிப் பராமரிப்பது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, மாஜிஸ்ட்ரேட் குறிப்பைப் பற்றி சொன்னதால் விளக்கம் சொல்ல நான் விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு வழக்கு கோர்ட்டிற்குச் செல்லும்போது, குற்றவாளிகளை கோர்ட்டில் ஆஜராக்கும்போது......

திரு. கே. அர்ஜுனன் : தலைவர் அவர்களே, வழக்கு முடிந்து விட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : வழக்கு முடிந்திருக்கலாம். நீங்கள் மாஜிஸ்ட்ரேட் மீது குற்றம் சொல்லவில்லை. டெபுட்டி சூப்பிரன்டெண்ட் மீது குற்றம் சொல்வதால் விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அர்ஜுனன் அவர்கள் போலீஸ் இலாக்காவில் பணிபுரிந்தவர் என்பதால் அவருக்கு நன்றாகத் தெரியும். ஒரு வழக்கு வழக்கு மன்றத்திற்குச் செல்லும் போது குற்றவாளிகளையும் கொண்டு போகிறார்கள். அவர்களை ஜாமீன் எடுப்பதற்காக வழக்கறிஞர்கள் மனு தாக்கல் செய்கிறார்கள். அப்பொழுது மாஜிஸ்ட்ரேட் போலீஸ் தரப்பை கேட்கிறார்கள். போலீஸ் தரப்பில் ஆட்சேபணை சொல்லலாம். அப்படிச் சொன்னால் அதன்மீது முடிவு செய்வார்கள். சில நேரங்களில் வழக்கு நிலைமைகளைப் பொறுத்து, ஆட்சேபணை இல்லையென்று சொல்லக் கூடும். எனவே, அப்படித்தான் நடந்து இருக்குமே தவிர, சூப்பிரன்டெண்ட் விட்டுவிடு என்று சொல்லியிருக்க மாட்டார்.

திரு. கே. அர்ஜுனன் : துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து சட்ட அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புவது, அன்றையதினம் மாலை 5.30 மணிக்கே ரிமாண்ட்செய்து மாஜிஸ்ட்ரேட்டிடத்தில் (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன். அவரிடத்தில் நேரடியாக டெபுட்டி சூப்பிரெண்டெண்ட் போய் அவரை வற்புறுத்தி ஜாமீனில் எடுத்திருக்கிறார் என்று அதிலே எழுதியிருப்பதால் உங்களிடம் சொன்னேன். தவறாக இருந்தால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட அமைச்சர் அவர்கள் கூறுவது சரிதான் ‘நோ அப்ஜெக்ஷன்’ என்று காவல் துறையில் சொன்ன பிறகு தான் ஜாமீனில் விடுவதற்கு அந்தக் குறிப்பை நீதிபதி எழுதியிருப்பார். நீங்கள் அதுபற்றி மீண்டும் பேசக் கூடாது.

1990 சனவரி 23]

திரு. கே. அர்ஜுனன் : ஜட்ஜ்மெண்ட்டிலே.
'At the request of the Deputy Suprintendent of Police' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அந்த ஆர்டர் காப்பியை கொடுத்தால் நான் விளக்கம் சொல்கிறேன்.

(உறுப்பினர் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களிடம் தாள் ஒன்றைக் கொடுத்தார்.)

திரு. கே. அர்ஜுனன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது கிரானைட் தொழிற்சாலையில் டெண்டர் விடப்படு கிறது. நான் தயவு செய்து கேட்க விரும்புகிறேன். நல்ல குவாரீஸ் எல்லாம் டெண்டர் விடப் படுவதில்லை. வெறும் வேஸ்ட் குவாரீஸ் தான் இப்போது டெண்டர் விடப்படுகின்றன. 100-க்கு 1 சதவீகிதம் தான் டெண்டர் விடுவதாக அறிவிக்கப் படுகின்றன. 99 சதவிகிதம் குவாரீஸ் என்ன ஆகின்றன என்று நான் கேட்க விரும்புகிறேன். தற்போது குவாரி உரிமையாளர் கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். ஜெம் கிரானைட்டின் தலைவர் வீரமணி தலைமையில் முதலமைச்சர் அவர்களை கேட்டிருக்கிறார்கள். எனவே, இதில் உங்கள் திட்டவட்டமான கொள்கை எதுவென்றே தெரியவில்லை. எனவே, அதை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

நம்முடைய அருமை நண்பர் திரு.ரகுமான்கான் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்த போது அடிக்கடிசொல் வார்கள். இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கில் தன்னிடம் ஆதாரம் இருக்கிறது என்று சொல்வார்கள். இப்போது ஆட்சி உங்களிடத்தில் இருக்கிறது. இப்போது அந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு இது உரிய காலம். எனவே அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை நீங்கள் செய்ய மாட்டீர்கள். காரணம் அந்த ஆதாரத்தில் மாட்டிக் கொள்ளக்கூடிய அக்கியூஸ்ட்கள் உங்கள் தரப்பிலே இருக்கிற காரணத்தால், நீங்கள் நடவடிக்கை எடுக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

சேலத்தில் இருக்கிற பெரிய போலீஸ் அதிகாரியைப் பற்றி குறிப்பிடுகிறபோது சொன்னேன். அவர்கள் ஒரு முக்கிய புள்ளியுடைய, நபருடைய பாக்கெட்டிலே, பாக்கெட் என்ன காலியாகி இருக்கிறது என்று சொல்லி பணத்தைப் போட்டிருக் கிறார். அதை அங்கேயிருக்கிற தி.மு.க.வினரே ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி அங்கே போலீஸ் அதிகாரிகளும்,

சமூக விரோதிகளும் ஒன்று சேர்ந்து காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாமக்கல் டெபுட்டி சூப்பிரெண்டண்ட் டித்தில் புதுக்கோட்டை கமிஷனர் ஒரு பிராது கொடுத்திருக் கிறார். அதில் கூட வழக்கு தொடர முடியாத ஒரு நிலைமை இருக்கிறது என்று சொன்னால் இன்றைக்கு சட்டம் ஒழுங்கை எப்படி பராமரிக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, முன்பு நடைபெற்ற உப்பிலியாபுரம் தேர்தலின் போது திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்த திரு. அர்ஜுனன் அவர்கள் மீது அதிகாரியை அடித்ததாக ஒரு வழக்கு போடப்பட்டதே அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், அதுபற்றி திரு. அர்ஜுனன் என்ன சொல்கிறார்?

திரு. கே. அர்ஜுனன் : அடித்ததாக வழக்கு போடப்பட வில்லை. அப்போது என்ஜினியர் ஒருவர் என் மீதும், அருமை நண்பர் திரு. செல்வராஜ் மீதும் ஒரு பிராது கொடுத்தார். அந்த வழக்கிலே குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. நான் கோர்ட் டிலே போய் வாதாடி, விடுதலை பெற்றுக் கொண்டு வந்திருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

12-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகி விட்டது. விரைவில் முடித்துக் கொள்ளுங்கள் 20 நிமி டங்களுக்கு மேலாகி விட்டது அல்லது எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து விடுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : சேலத்தில் வி.பி.எஸ். என்று ஒரு தியேட்டர் இருக்கிறது. அந்தத் தியேட்டரில் தொடர்ந்து புளூ பிலிம் ஓடிக்கொண்டு இருக்கிறது. அந்தத் தியேட்டர் தற் போது....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; துணைத் தலைவர் அவர்களே, எங்கே அந்தப் படம் ஓடுகிறது என்பதற்கான விளம்பரத்தைச் செய்வது போல, தியேட்டர்களுடைய பெயர் களை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து நண்பர் திரு. அர்ஜுனன் அவர்கள் ரகசியமாக அந்தத் தியேட்டரினுடைய பெயர்களையும், எந்தந்தப் படங்கள் எங்கெங்கே போடப்பட்டன என்பதையும் விவரமாக எழுதி என்னிடம் தருவார்களேயானால், காவல் துறையை விட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலும். இப்போது அந்தத் தியேட்டர்களுடைய பெயர்களை எல்லாம் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவை எல்லாம் பத்திரிகையிலே வெளிவரத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஏன் என்றால், சட்ட

1990 சனவரி 23] [டாக்டர் மு. கருணாநிதி]

மன்றத்திலே, அந்தத் தியேட்டர்காரர்களுடைய சார்பாக பேசுவதற்கு இங்கே யாரும் இருக்க முடியாது. உண்மையிலேயே ஆதாரங்கள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டு இருந்தால், தியேட்டர்களுடைய பெயரைச் சொல்லலாம். பொத்தாம்பொதுவில், இந்தந்தத் தியேட்டர்களில் இப்படிப் படங்கள் ஓடுகின்றன என்று சொல்வது சரியல்ல. எனவே தனிப்பட்ட முறையில் அந்தத் தியேட்டர்களில் நடைபெறுகிற இதுபோன்ற சமுதாய தவறுகளை உறுப்பினர் திரு. அர்ஜுனன் அவர்கள் என்னிடத்திலே தனியாக எழுதித் தருவார்களானால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

திரு. கே. அர்ஜுனன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதைப் பேசுவதற்குக் காரணம், சில விஷயங்களை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர முடியாத சூழ்நிலையில் இடையிலே வருகிறது. மேம்போக்காக நாமக்கல் டெபுட்டி சூப்பிரன்டெண்ட் இடத்திலே புதுக்கோட்டை முனுசிபாலிட்டி ஆணையாளர் ரிப்போர்ட் கொடுத்தார். அதனுடைய உள் நோக்கம் முதல்வர் அவர்களுக்குத் தெரியும். ஏன் இதைச் சொல்கிறேன் என்று

** ** ** ** **

என்னுடைய தொகுதியிலே வேடப்பட்டியிலே உள்ள சத்துணவுக் கூடத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 2 பெண்களும் வேலை செய்தார்கள். அவர்களை அடித்துத் தாக்கியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக பி.டி.ஓ. விடத்திலே ரிப்போர்ட் செய்கிறார்கள். பி.டி.ஓ. காவல் துறைக்கு ரிப்போர்ட் செய்கிறார். காவல் துறை அதற்கு உரிய நேரத்திலே வழக்கு தொடரவில்லை. அதன் காரணமாக ஆளும் கட்சியின் சார்பாக அவர்களை நிர்பந்திக்கிறார்கள். அப்படி நிர்பந்தித்ததின் காரணமாக ஆணையாளர் அந்த 3 பேர்களையும் வேலையிலிருந்து நீக்குகிறார். அவரே காவல் துறைக்கு நடவடிக்கை எடுக்க ரெபர் செய்வது, பிறகு அவரே காரணம் இல்லாமல் வேலையைவிட்டு நீக்கியிருக்கிற நிலைமை. இப்படி எந்தெந்த இடத்திலே தலையீடு செய்ய முடியுமோ, அந்த அளவிற்குத் தலையீடு இருக்கிறது. ஒட்டுமொத்தமாக சேலம் மாவட்டத்திலே மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் சட்டம்-ஒழுங்கு மிகவும் சீர்கெட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, ஐ.ஜிக்கள், டி.ஐ.ஜி.க்கள், எஸ்.பி.க்கள் எல்லாம் Compulsory Waiting-ல் இருக்கிறார்கள் வேலையில்லாமல் என்றார். தயவுசெய்து அவர்களுடைய பெயர்களைச் சொன்னால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வழியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயரைத் தருகிறீர்களா என்று கேட்கிறார்கள்.

திரு. கே. அர்ஜுனன் ; தற்போது இல்லை. இதற்கு முன்பு இருந்த டி.ஜி.பி. யினுடைய காலத்தில், இப்போது இருக்கிற ஹோம் செக்கரட்டரி . . . (குறுக்கீடு). இல்லை, தற்போது இருக்கிற ஹோம் செக்கரட்டரியும், முன்னாள் இருந்த டி.ஜி.பியும் சேர்ந்து பல பெரிய அதிகாரிகளை வெயிட்டிங்கிலே, கம்பல்சரி வெயிட் என்று சொல்லி வைத்திருந்தார்கள். அதனுடைய லிஸ்டை ஒரு நிமிடத்திலே வாங்கிக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; அதே ஹோம் செக்கரட்டரிக்கு வேலை கொடுக்காமல் கடந்த கால அரசால் அவர் பழி வாங்கப்பட்டார் என்பது திரு. அர்ஜுனன் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்.

*திரு. ஆர். அண்ணாநம்பி : துணைத் தலைவர் அவர்களே, இங்கே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசும்போது இந்த மன்றத்தினுடைய உறுப்பினர் புரட்சித் தலைவி அவர்களைப் பற்றி பேசுகிறபோது, அவர்களது பிரச்சினையை அவரே இங்கே வந்து பேசலாம் என்று குறிப்பிட்டார். அவர்கள் எங்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர், அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு எங்கள் கட்சியைச் சேர்ந்த அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உரிமையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னருடைய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் உரையில் மிகச் சிறப்பான அம்சங்கள், அரசாங்கத்தினுடைய கொள்கைகள் ; வரவேற்கப் படவேண்டிய, நலிந்த மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கிற கொள்கைகள் நிறைய இருக்கின்றன என்பதை நான் மெத்தவும் பணிவுடனும், மகிழ்ச்சியுடனும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் சட்டத்தின் 62-வது திருத்த இட ஒதுக்கீடு ஒப்புதல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் 10 ஆண்டுக்கு இட

1990 சனவரி 23] [திரு. செங்கசிவம்]

ஒதுக்கீடு நீடித்து ரிசர்வேசன் என்ற அடிப்படையிலே மேலும் சலுகை அளித்து இருப்பது மிகவும் வரவேற்கவேண்டியது. ஆகவே இதற்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் அளித்திருக்கிறது. இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் 1970-லும் சரி, சமீபத்திலே நடைபெற்ற செயற்குழுவிலும் சரி, முன் கூட்டியே தி. மு. கழக செயற்குழுவில் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய சர்க்கார் மேலும் 10 ஆண்டு நீட்டிக்கவேண்டுமென்று எல்லா விதமான கட்டத்திலேயும் எங்களுடைய தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் நலிந்த மக்களுடைய—நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கின்ற காரணத்தினாலே அப்படிப்பட்ட சட்டம் கட்சியிலும், ஆட்சியிலும் இன்றைக்கு நிறைவேறி இருப்பதைக் கண்டு நான் உண்மையிலே மெத்தவும் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

12—05 மணி

குறிப்பாக தொடர்ந்து 10 ஆண்டுக்காலம், 10 ஆண்டுக் காலம் என்று நான்கு முறை இப்படி நீட்டிப்பதைக் குறித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெரிதும் கவலை தெரிவித்து, 10 ஆண்டுக்கு ஒரு முறை இப்படி நீட்டிக்கிறார்களே, இருந்தாலும் அந்த மக்கள் பரிபூரணமாக எல்லா வகையியிலும் உயர்வை பெற்று இருக்கிறார்களா என்ற வருத்தத்தை மெத்தவும் தெரிவித்து இம்மாமன்றத்திலே பேசி இருக்கிறார்கள். இது சம்பந்தமாக நான ஜெயப் 'பிரகாஷ் நாராயண் அவர்கள் கூறிய கருத்தை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 10 ஆண்டுக்கு ஒரு முறை ரிசர்வேஷன் என்ற அடிப்படையிலே 18 சதவீதம் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வழங்கி இருக்கிறீர்கள். ஆனால் இந்த 18 சதவீதம் பொதுத் தொகுப்பிலே தாழ்த்தப்பட்ட மக்கள், மலை ஜாதி மக்கள் என்றைக்கு வெற்றி பெற்று வருகிறார்களோ, அன்றைக்குத்தான் இந்த ரிசர்வேஷன் தேவையில்லை என்று கூறினார்கள். (குறுக்கீடு)

12-10 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : * *

திரு. கே. அர்ஜுனன் : * * (கூச்சல்-குழப்பம்)

12-15 மணி

12-20 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1990 சனவரி 23

12-25 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிரச்சினைக்குள் யாரும் போகவில்லை. எதிர்காலத்தில் மன்ற உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று இந்த அவைக்குச் சொல்ல வேண்டிய கடமையிலே இருக்கிறோம். மன்ற உறுப்பினர்கள் யார் மீதும் எந்தவிதக் குற்றச்சாட்டும் சொல்வதற்கு முன்பு ஆதாரத்தைப் பேரவையினுடைய தலைவர் அவர்களிடம் சொல்லி அதற்குப்பிறகு பேசவேண்டுமேயல்லாமல் யாருடைய மனமும் புண்படுகின்ற வகையிலும், அதேபோல செய்தித்தாளில் தன்னுடைய பெயர் வரவேண்டுமென்ற எண்ணத்திற்காகவும் பேசக் கூடாது. அவைக்குறிப்பிலிருந்து நீக்கிய செய்திகள் செய்தித் தாள்களில் பிரசுரம் ஆகக்கூடாது என்றும் உத்தரவிடுகின்றேன்.

திரு. செங்கை சிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18 சதவீதம் பொதுத் தொகுதியிலே அனைவரும் ஏற்றுக்கொள்கிற அப்படிப்பட்ட வாய்ப்பு வருமானால் நிச்சயம் 10 ஆண்டுக்கு ஒரு முறை இந்த ரிசர்வேஷனை நிறுத்தி விடலாம் என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இந்த மாமன்றத்திற்கும் அல்லது தமிழகத்திற்கும், ஏன் இந்தியாவிற்கும் எடுத்துக்காட்டாக கழகத் தலைவரும், திராவிட முன்னேற்றக் கழகமும் இன்றைக்கு பொதுத் தொகுதியில், நாடாளுமன்றத்திற்கு சி. டி. தண்டபாணியையும் அதைப்போல ஆலந்தூர் தொகுதியிலே, மறைந்த ஆலந்தூர் ஆப்ரகாம் அவர்களையும் நிறுத்தி ஒரு சாதனையைப் படைத்தது, இப்படிப்பட்ட கொள்கைகளை அனைத்து தலைவர்களும் ஏற்று இந்தச் சமுதாயத்திற்கு வழி வகுப்பார்களேயானால் உண்மையிலேயே இந்த ரிசர்வேஷனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று பொருள்படும் என்று நான் இங்கே கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இட ஒதுக்கீடு, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் அளிக்கப்படுகின்ற இட ஒதுக்கீடு எந்த வகையிலே என்றால், திராவிட முன்னேற்றக் கழகம், ராஜ்ய சபையிலும், மேல் சபையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையிலே அப்படிப்பட்ட ஒதுக்கீடுகளை வழங்குகிறது. இதை நிரந்தரமாக்குகின்ற வகையில் ராஜ்ய சபையிலும் மேல் சபையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வேஷன் அளிக்கின்ற வகையிலே நம்முடைய அரசு முன் வரவேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முடை ந.

1990 சனவரி 23] [திரு. செங்கை சிவம்]

அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை குறிப்பிட்டு பேசுகிறபொழுது மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள், வேறு எந்த தலைவருக்காவது தைரியம் இருக்கிறதா? வேறு எந்த தலைவர்களுக்காவது துணிவு இருக்கிறதா? நெஞ்சிலே உரம் இருக்கிறதா, தாழ்த்தப்பட்ட ஒருவரை தன்னுடைய சம்பந்தி ஆக்கிக் கொண்டாரே, வேறு எவராவது செய்ய முடியுமா என்ற ஒரு கேள்வியை இங்கே தொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியன் அவர்கள் பேசுகிற பொழுது இலவச அரிசியும், வேட்டி, சேலையும் இந்த மக்களுக்காக வழங்குகிறீர்களே, இது நியாயந்தானா, அவர்கள் நம்மை எண்ணிப் பார்க்கிறார்களா என்ற வேதனைக் குமுறலை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் நம்முடைய மாண்புமிகு தீட்சிதர் அவர்களுக்கும் பாண்டியன் அவர்களுக்கும் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எங்களுடைய தலைவர், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முடிவிலே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியுற்ற நேரத்திலே, 1978-ல் அதற்காக ஆய்வு செய்கின்ற முறையிலே செயற்குழு கூடியது. அந்தச் செயற்குழுவிலே அனைத்து உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் அனைவரும் கலந்து உரையாடுகின்ற நேரத்திலே அன்றைய தினம், செயற்குழு உறுப்பினர்கள் தங்களுடைய மனக் குமுறலைச் சொன்னார்கள். இந்த மக்களுக்காக இவ்வளவு நன்மைகளைச் செய்கிறோமே ஆனால் இந்த மக்கள் நம்மைப் புறக்கணித்து விட்டார்களே என்ற மனக்குமுறலைச் சொல்கிற பொழுது அன்றைய தினம் எங்களுடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்த இயக்கம் தேர்தலைப் பற்றி மட்டும் நினைக்கவில்லை, அடுத்த தலைமுறையைப் பற்றி நினைக்கிற இயக்கம் என்று தலைவர் அவர்கள் சொல்லி, அதற்கு மாற்றுக் கருத்து உள்ளவர்கள் இருந்தால் இந்த இயக்கத்தை விட்டு போகலாம் என்று துணிவோடும், அழுத்தந்திருத்தமாகவும் அறிவித்த கொள்கை உடையவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இங்கே நான் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

12-30 மணி

பிற்படுத்தப்பட்ட சமுதாயம் பற்றியும், மண்டல் கமிஷன் அறிக்கை பற்றியும், இங்கே ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டு இருப்பது வரவேற்க வேண்டியது. தி.மு.க., பல்வேறு காலக் கட்டங்களில் செயற்குழுவில், பொதுக்குழுவில், நாடாளுமன்றத்தில், சட்டப் பேரவையில், பிற்பட்ட சமுதாயத்தைப்

பற்றியும், மண்டல் கமிஷன் அறிக்கை பற்றியும் பல்வேறு காலங்களில் வலியுறுத்தி வந்திருக்கிறது. அந்த அறிக்கை குறித்து நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் வலியுறுத்திய தி,மு.க. அன்றைக்கு இந்த பிற்பட்ட சமுதாயத்திற்காக ஒதுக்கப்படுகிற நிலைமை இப்போதல்ல, 1954 ஆம் ஆண்டு, சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள், காங்கிரஸ் அமைச்சரவையில் இருந்து விலகிய போது, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் படிப்பு வசதி, வேலை வாய்ப்பு ஆகியவைகளில் ஒதுக்கீடு இல்லை, போதிய ரிசர்வேஷன் இல்லை, ஆகவே நான் பதவியை ராஜிநாமா செய்கிறேன் என்று மிகத் தெளிவாக அன்றைக்குச் சொன்னார்கள். இன்றைக்கு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கிற வகையில் தேசிய முன்னணியின் ஆட்சியில் பிரதமராக இருக்கிற மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்கள் இன்றைக்கு அதை ஏற்று செயல்படுகிற வண்ணம், அதற்கு ஒரு வடிவம் அமைத்து இருப்பதை வரவேற்று, தேசிய முன்னணி ஆட்சிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்,

ஆளுநர் உரையில், மாதம் 300 ரூபாய் வருமானம் வரை உள்ளவர்களுக்கு இலவச அரிசி வழங்கியிருப்பதை மாற்றி 1,000 ரூபாயாக அந்த வரம்பை உயர்த்தித் தந்துள்ளார்கள். கடந்த கால ஆட்சியிலே கணக்கெடுப்பில் ஏற்பட்ட குளறுபடிகளால் ஒருவரே 200, 300 கார்டுகள் வைத்திருக்கின்ற நிலைமையுள்ளது. இதை மாற்றி அமைக்க உண்மையிலே ஏழைகள் பயன்பெறும் வண்ணம் சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுடைய புகைப் படம், குடும்ப அட்டையில் ஒட்டப்பட வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன், (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மன்ற உறுப்பினர் திரு. அர்ச்சுனன், அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பற்றி பேச ஆரம்பித்ததில் இருந்து, இது தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த விளக்கம் அதற்குப் பிறகு நடைபெற்ற விவாதம் முழுவதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. செங்கை சிவம் : இன்றைக்கு 1,000 ரூபாயாக உயர்த்தி அதில் ஒரு சாரார் கடந்த காலத்தில் பயன்பெற்றதை மாற்றி அமைத்து, 1,000 ரூபாய் வரை உள்ளவர்களுக்கும் இலவச வேட்டி, சேலை, இலவச அரிசி தந்து, இந்த நாட்டு மக்களுடைய நலனைப் பேணிக்காத்தது தி.மு.க ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மக்களுடைய துயரங்களைத் துடைக்கிற உன்னதத் தலைவராக விளங்குகிறார்கள். அது மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்.

1990 சனவரி 23] [திரு. செங்கை சிவம்]

இலவச அரிசியும்; இலவச வேட்டி, சேலையும் வழங்குகிறீர்களே, சர்க்காருடைய பணத்தை வீணாக்குகிறீர்களே என்று குற்றம் சாட்டினார். நான் இந்த நேரத்தில் அவரைக் கேட்கிறேன், இதைக் கண்டித்து இந்த மாமன்றத்தில் காங்கிரஸ் கட்சி தீர்மானம் கொண்டு வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ரா. சொக்கர்: Point of Order. திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் என்ன பேசினார்கள் என்பது அவைக் குறிப்பில் ஏறியிருக்கிறது அதைத் தயவு செய்து மீண்டும் படித்துப் பார்த்துவிட்டு, அவர்கள் சொன்னதைப் புரிந்து கொண்டு உறுப்பினர் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசியதற்கு மாறான கருத்தைப் புரிந்துகொண்டு உறுப்பினர் பேசுகிறார் என்று கருதுகிறேன்.

திரு. செங்கை சிவம்: இன்னொரு குறிப்பையும் இந்த மாமன்றத்தில் அவர்கள் அளித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை 75 சதவீதம் நிறைவேற்றியது. அதைப் பல்வேறு நடுநிலை நாளேடுகள் வரவேற்றன, அதைக் கிண்டலும் கேலியும் செய்கிற வகையில், 'சொல்வதைச் செய்ய மாட்டோம், செய்யாததைச் செய்ததாகச் சொல்வோம்'' என்று அவர்கள் பேசி இருக்கிறார்கள், நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் வாக்குறுதியிலே சொன்னதையும், கடந்த ஓராண்டுக் கால சாதனையையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 8-வது வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கு திருமணச் செலவுக்காக 5,000 ரூபாய் நிதியுதவி; இதன் மூலம் ஏறக்குறைய பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் பலன் அடைந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்காக, 5 கோடி ரூபாய்க்கு மேலே செலவிடப்பட்டிருக்கிறது. ஊனமுற்றோர், முதியோர், விதவைகள் ஆகியோருக்கு 35 ரூபாய் என்று அளிக்கப்பட்டு வந்ததை—50 ரூபாயாக உயர்த்தி, தகுதி உடையவர்கள் எல்லோருக்கும் வரம்பின்றி (ceiling) அந்தத் திட்டத்தின் கீழ் உதவிகளை வழங்கியதன் மூலம், இந்த அரசு ஏழைகளைக் காப்பாற்றி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

12-35 மணி

கருவுற்ற மகளிருக்கு 200 ரூபாய் வீதம் 65,597 தாய்மார்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மிகவும் போற்றுவதற்குரிய சட்டம் ஒன்று நிறைவேறியது. 1929 ஆம் ஆண்டிலே திராவிடக் கழகத்தின் மாநாட்டிலே தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. பெண்ணுரிமையைப் போற்றுகின்ற

இந்த அரசு, பெண்களுக்கும் சொத்திலே சம பங்கு அளிக்கப்பட வேண்டும் என்ற உன்னதமான சட்டத்தை, இந்த மன்றத்தில் 6–5–1989 அன்று நிறைவேற்றி, 24–5–1989 அன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. ஆனால், அன்றைய தினம் மத்தியி லிருந்த அரசு அதைக் கிடப்பிலே போட்டது. அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. தேசிய முன்னணி ஆட்சி அமைந்த பின், பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களுடைய ஆட்சி அமைந்த பின், அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

களஞ்சியமும் காலி, கஜானாவும் காலி என்ற நிலையிலே ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே கூறியதைப் போல, தமிழக அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மத்திய அரசு ஊழியர் களுக்கு இணையான ஊதியத்தை அளித்து, அவர்களுக்கு 430 கோடி ரூபாய்க்கு மேலே வழங்கி, அவர்களையும் மன நிறைவு பெறச் செய்தார்கள்.

அரசுத் துறை நிறுவனங்களிலும், உள்ளாட்சி மன்றங்களி லும், பொது நிறுவனங்களிலும் பெண்களுக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற அறிவிப்புக்குப் பின் அது தொடர்பான வேலைகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இன்றைக்கு சொன்னதைச் செய் கிற அரசாக, செய்வதையே தான் சொல்கிற அரசாக டாக்டர் கலைஞருடைய அரசு அமைந்திருக்கிறது. ஆனால், காங்கிரசார் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற திரு. ராஜீவ் காந்தி சொன்னதைச் செய்யக் கூடியவரா என்பதற்குக் கடந்த காலங் களில் உள்ள ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். ஈழத் தமிழ் மாகாணத்தைப் பெற்றுத் தந்து, ஈழ மாகாண மக்களுக்கு அதிகாரத்தையும் பெற்றுத் தந்துவிட் டேன் என்று அவர் கூறினார், அதனை டி.வி.யும், ஆல் இந்தியா ரேடியோவும் மிகவும் பிரமாதமாக ஒலி பரப்பினார்கள். ஆனால் சமீபத்திலே தமிழகத்திற்கு வந்திருந்த முதல்வர் மாண்பு மிகு வரதராஜ பெருமாள் அவர்கள், எங்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் வழங்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இதிலே இருந்து சொன்னதைச் செய்கிற சர்க்கார், செய்வதையே தான் சொல்கின்ற சர்க்கார் திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும்தான் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கியிருக்கிறது.

அது மட்டுமல்ல, அந்த உறுப்பினர் இன்னொரு குற்றச் சாட்டையும் சொன்னார். பெற்றால்தான் பிள்ளையா என் றெல்லாம் வசனம் பேசினார்கள். ஆனால் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய வசனத்தைப் பேசி, பலன் அடைந்தவர்கள் பலர் உண்டு. இன்றும் உண்டு, அன்றைக்கும் உண்டு. அப்படிப் பட்டவர்கள் முன்னாலே வசனம் பேசிக் காட்டினார் மாண்புமிகு

1990 சனவரி 23] *[திரு. செங்கை சிவம்]*

உறுப்பினர். சொக்கரை 15 நாட்கள் சிறையிலே வைத்தார்கள் என்று வேதனையோடு சொன்னார். தில்லையாடி வள்ளியம்மை, வீரபாண்டிய கட்டபொம்மன், வாஞ்சிநாதன், செக்கிழுத்த சிதம்பரனார் போன்றவர்கள் எல்லாம் பிறந்தது இந்த மண். இங்கே இப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் காங்கிரஸ் பேரியக்கத்தை வளர்த்தார்கள். எத்தனை ஆண்டுகள் சிறைக் கோட்டத்திலே இருந்தார்கள் என்பது கூடத் தெரியாத அளவுக்கு பல ஆண்டுக் காலம் அவர்கள் எல்லாம் சிறைக் கோட்டத்திலே இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வளர்த்த கட்சியிலேயிருந்து வந்தவர்கள் இன்றைக்கு எங்களைப் பார்த்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, அதிலும் எங்கள் இளைஞர் அணியின் தளபதியாக இருக்கின்ற திரு. ஸ்டாலின் அவர்களைக் கைது செய்து அன்று மாலையிலேயே விடுதலை செய்தார்கள் என்று பேசினார்கள். நான் ஒன்றை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவசரகால பிரகடனம் இந்த நாட்டிலே இருந்தபோது 500-க்கும் மேற்பட்டவர்களை, குறிப்பாக சிட்டிபாபு, பாலகிருஷ்ணன் போன்றவர்களைப் பிணமாகத் தந்த அரசுதான் காங்கிரஸ் அரசு. ஆகவே இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்களும்..

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்துவிட்ட நிகழ்ச்சி பற்றி ஏற்கெனவே பேசப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களும் பதிலுரை கொடுத்துவிட்டார்கள். இப்போது முதல்வர் அவர்களும் அவையில் இல்லை. அவர் இப்படிப் பேசினால் பதில் சொல்ல முடியாத நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டு இருக்கிறோம். இந்த நிகழ்ச்சியை நாம் மறந்துவிட்டோம். எனவே, இந்த நிகழ்ச்சியை மறுபடியும் தொட வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேண்டுமானால் பதில் சொல்ல எங்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டுப் பேசச் சொல்லுங்கள்.

12-40 மணி

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கட்சியைச்சார்ந்த உறுப்பினர் பேசும்போது அப்படி சொன்னார். அதற்கு இவர் வாய்ப்புக் கிடைக்கும் போது இவர் பதில் சொல்கிறார்கள். அடுத்து அவருடைய கட்சியைச் சேர்ந்தவர் பேசுகிறபோது, அதற்குப் பதில் சொல்வதை விட்டுவிட்டு, இப்படி ஜகா வாங்குவது சரியல்ல.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செங்கை சிவம் அவர்கள் பேசும்போது ''சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்று சொன்னார்கள். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னார்கள்,

[திரு. ஆர். சிங்காரம்] [1990 சனவரி 23

ஆனால், செய்யவில்லை என்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்ற சுமை தூக்கும் தொழிலாளர்கள் 5,000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் வருகின்ற செப்டம்பர் மாதத்திலே நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று டி.வி.யிலே, ரேடியோவிலே அறிவித்தார்கள். மே தின விழாவிலும் அறிவித்தார்கள். இதே அவையிலே முன்னாள் உணவு அமைச்சர் ஆற்காடு அவர்களும் அறிவித்தார்கள். அன்று சொன்னது என்ன ஆயிற்று? அதை செய்யவில்லையே. இதைப் பற்றி உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே ஒன்றைச் சொன்னால், அதைச் செய்யும். ஏற்கெனவே நான் உணவு அமைச்சராக இருந்தபோது, இதே அவையிலே வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு மேலாக சுமை தூக்கும் தொழிலாளர்களுடைய முழு கேள்விக் குறியாக இருப்பதைப் பார்த்து முதல்வர் அவர்களே 'நிரந்தரமாக ஆக்குவது என்று முடிவெடுத்திருக்கிறார்கள்' என்று சொன்னேன். அதற்கான கோப்புகள் எல்லா இலாக்காக்களுக்கும் அனுப்பப்பட்டு இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும் எவ்வளவுதான் வேகமாக அரசு செயல்பட விரும்பினாலும், அதிகார வர்க்கம் கொஞ்சம் காலதாமதம் செய்வது பற்றி. சில கேள்விக் குறிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு விரைவில் இந்த அரசு விடை காணும்.

திரு. செங்கை சிவம் : இன்று மத்திய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் மிசா காலக் கொடுமைகளை அனுபவித்தவர்கள். சமீபத்தில் நடந்த இரயில் நிறுத்தப் போராட்டத்தில் சிறைபிடிக்கப்பட்டு மாலையிலேயே திரு. ஸ்டாலினை விட்டுவிட்டார்கள் என்ற பொருள் பட திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பேசினார்கள். மிசா காலத்தில் அன்றைய தினம் 500-க்கு மேற்பட்டவர்கள் மிசா கைதிகளாக இருந்த நேரத்தில் எங்களுடைய தலைவர், உன்னத தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். 'இந்த இரண்டு பேர்களை எடுத்துக்கொண்டு, 500 கழகத் தோழர்களை விடுதலை செய்யுங்கள்' என்று கெஞ்சினார்கள், எழுதினார்கள். இந்த தலைவரையா பார்த்து, 'பெற்றால்தான் பிள்ளையா' என்று வசனம் பேசுகிறார்கள். அதற்காகத்தான் கேட்கிறேன். இந்த மிசா கொடுமையை இங்கே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு மின் வாரியத்துறை அமைச்சர், அருமை அண்ணன் ஆற்காடு வீராசாமி அவர்கள்கூட உட்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட சூழ்நிலை எல்லோருக்கும் தெரியும். அது மட்டுமல்ல, இந்த ஆட்சியில் எவ்வளவு அடக்குமுறைகள்

1990 சனவரி 23] [திரு. செங்கை சிவம்]

என்று அவர்கள் பேசுகிறார்கள். 15 நாட்கள் சிறையை பற்றிப் பெருமையாகப் பேசுகிறார்கள். அவர்களுக்கு நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். 30 ஆண்டுக்கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாற்றில், 10 ஆண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பில் கழகம் இருந்தது. 40 ஆண்டுகாலக் கழக வரலாற்றில் 30 ஆண்டுக்காலம் சிறைக்கோட்டம். எத்தனை பேர்கள் எத்தனை முறை சிறையில் இருந்தார்கள் என்ற கணக்குத் தெரியாது. எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பலமுறை சிறை சென்றிருக்கிறார்கள். ராஜீவ் காந்தி இந்த நாட்டு மக்களுக்காக ஒருநாள் கூட சிறைக்குப் போகவில்லை. அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்ற காங்கிரஸ், இன்றைக்கு ஒரு 15 நாட்களைப் பார்த்து பெரிதுபடுத்திப் பேசுகிறார்களே என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, கைலாசம் கமிஷன், பால் கமிஷன் இப்படி கமிஷன்களைப் போட்டு கட்சியிலே இருக்கின்ற சாதாரணத் தொண்டனுக்கும் தொந்தரவு கொடுத்தது காங்கிரஸ். தில்லையாடி வள்ளியம்மையாரும் வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற தியாகிகளைப் பெற்றது காங்கிரஸ் கட்சி. ஒரு காலத்தில் பக்கா காங்கிரசாக இருந்த கட்சி இன்று சொக்கர் போன்றவர்களால் சொக்கா காங்கிரசாக மாறி விட்டது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சொக்கர் அவர்கள் 15 தினங்களாக ஜெயிலில் இருந்தது பற்றிக் கவலைப்படவில்லை. நாங்கள் எல்லாம் காங்கிரஸ் தியாகிகள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். போராட்டம் செய்து தியாகம் செய்து நாட்டிற்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்து இன்றைக்கு இப்படியெல்லாம் உங்களை எல்லாம் பேச வைத்திருக்கின்ற இயக்கம் இந்தப் பேரியக்கம் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் திரு. சொக்கருக்கு ஒரு நிலை, அருமைத் தளபதி திரு. மு. க. ஸ்டாலினுக்கு ஒரு நிலை, மற்றவர்களுக்கு ஒரு நிலை என்று ஒரு நிலைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் போகக்கூடாது என்பதற்காகச் சுட்டிக் காட்டினேன். (மணி அடிக்கப்பெற்றது).

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், தலைவர்கள் உட்பட எத்தனை முறை சிறை போனார்கள் என்ற கணக்கே தெரியவில்லை. பால் கமிஷன் பற்றியும், கைலாசம் கமிஷன் பற்றியும் கூறுகிறேன். அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களிலிருந்து தலைவர்கள் வரை, அவர்களுடைய குடும்பங்கள்வரை அவமானப் படுத்தப்பட்டது. முரசொலி செல்வம், அவர்களுடைய குடும்பம், இப்படி பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

[திரு. செங்கை சிவம்] [1990 சனவரி 23

அப்படி உள்ளாக்கியவர்கள் இன்றைய தினம் எதிர்க்கட்சியிலே அமர்ந்துகொண்டு எங்களைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் சொக்கரை 15 நாட்கள் சிறையிலே வைத்து விட்டீர்களே என்று பேசுகிறார்கள். இன்றைக்கு நடைபெறுகின்ற ஆட்சி தராசுக் கோலாக நடைபெறுகின்ற ஆட்சி. டாக்டர் கலைஞர் அவர்கள் எதையும் தாங்கும் இதயத்தோடு இருக்கின்றார்கள். நியாயத்தோடு அமர்ந்து, தியாகத் தழும்புகளை ஏற்றுக்கொண்டு ஆட்சி நடத்துகிறார்கள். அந்த உத்தமத் தலைவரைப் பார்த்து இன்றைய தினம் 'பெற்றால்தான் பிள்ளையா' என்று திரு. பீட்டர் ஆல்போன்ஸ் வசனம் பேசுகிறார். அப்படி வசனம் பேசுகிறவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்ட கட்சி. 15 நாட்களுக்காக கெஞ்சிய கட்சி அல்ல. 40 ஆண்டுக் கால வரலாற்றில், 30 ஆண்டுகளில் பலமுறை அறப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைபட்ட தொண்டர்களைக் கொண்ட இயக்கம் தி.மு.க. என்று சொல்லி, நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

12-45 மணி)

*திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஒரு புதிய சூழ்நிலையிலே நம்முடைய ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. மத்தியிலே ஒரு பரம்பரை ஆட்சி மறைந்து ஒரு புதிய ஆட்சி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. சில பேர் சொல்வதுபோல அது மைனாரிட்டி ஆட்சி அல்ல. எங்களால் ஆட்சி அமைக்க முடியாது என்று நழுவிவிட்ட பிறகு நம்முடைய ஜனநாயக மரபுப்படி அடுத்து இருக்கின்றவர்களை அழைத்து உங்களுக்கு நாட்டு மக்களுடைய ஆதரவு இருக்கிறது, எல்லா கட்சிகளினுடைய ஆதரவும் இருக் கிறது, ஆகவே ஆட்சிப் பொறுப்புக்கு நீங்கள் வாருங்கள் என்று ஜனாதிபதி அழைத்த பிறகுதான் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார்கள். வந்தது மட்டுமல்ல. . . (காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கள் சிரித்தார்கள்) சிரிக்க வேண்டாம், ஏனென்றால் நீங்கள் சிரிப்பாய் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த மன்றத்திலும் அந்த சிரிப்பை சொல்லி, என்னை வம்புக்கு இழுக்க வேண்டாம் என்பதற்காக சொல்கிறேன். குறிப்பாக நீங்கள் கடந்த இரண் டாண்டுக் காலமாக ஆட்சி நடத்தியமுறை நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரியும். அந்த உணர்வுகள் எல்லாம் உலகம் எல்லாம் உள்ள எல்லோருக்கும் தெரியும். பாராளுமன்றத்தில் ஒரு ஜனநாயக ஆட்சி முறையை குழி தோண்டி புதைத்துவிட்டீர் கள். மக்கள் மன்றத்தில் மரபு ஒன்றும் கடைப்பிடிக்கப்படவில்லை. எல்லா உறுப்பினர்களும் ஒரு குற்றத்தை எடுத்துச் சொல்லியும் பாராளுமன்ற குழுவும் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, ஒரு கமிஷனை ஏற்படுத்தி அது சொல்லியும், அதுபோல தணிக்கைக் குழு இது பற்றி தன்னுடைய அறிக்கையை வைத்த பிறகும் கூட நீங்கள்

1990 சனவரி 23] *[திரு. கோ. பூவராகன்]*

எந்தவிதமான ஒரு கருத்தையும் எடுத்து வைக்கவில்லை. அதன் பிறகு பாராளுமன்றத்தில் இருக்கிற எல்லா எதிர்க் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து ராஜினாமா செய்தார்கள். துணிவு இருந்தால் நீங்கள் ராஜினாமா செய்துவிட்டு மக்களைச் சந்தியுங்கள், உங்கள் பேரில் களங்கம் இல்லையென்றால் மக்கள் மத்தியிலே வாருங்கள் என்று சவால் விட்ட பிறகும் கூட கடைசிவரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தீர்கள். தேர்தல் நடந்த பிறகும்கூட பாராளு மன்ற உறுப்பினர்கள் அப்படியே தான் இருந்துகொண்டிருந்தார்கள். தேர்தலும் நடந்தது. அது சம்பந்தமாக இங்கே நமது ஆளுநர் அவர்கள் நமது தமிழக அரசுக்கும், தமிழ்நாட்டு அதிகாரிகளுக்கும், தமிழக காவல் துறைக்கும் நன்றி சொல்லியிருக்க வேண்டும். ஏனென்றால் இந்தத் தேர்தலில் பொதுவாக 4, 5 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்காக மட்டும் வளர்ச்சித் திட்டங்களுக்காக 7,000 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். அப்படி செலவிட்டும் கூட தேர்தல் சமயத்தில் நடக்கக் கூடாத சம்பவங்கள் பல நடைபெற்றன. சீல் வைக்காத ஓட்டுப் பெட்டிகள், ஒரு வாக்குச் சாவடியில் மொத்தம் 900 வாக்குகள் என்றால் போட்டது 1,300 வாக்குச் சீட்டுகள். அதிலே மொத்தமாக ஒருவரே அனைத்துக்கும் முத்திரையிட்ட நிலைமை, கௌண்டர் பாயிலை கிழிக்காமல் அப்படியே சீல் குத்தி ஓட்டுப் பெட்டிக்குள் போடுகிற நிலைமை. இப்படியாகத் தான் அங்கே தேர்தல் நடந்தது. அதிலே கூட, இந்தத் தேர்தலை நடத்த, இந்தியாவை 5 ஆண்டுக் காலமாக ஆட்சி செய்த பிரதமர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்தார்கள் (குறுக்கீடுகள்) 7 கோடி அல்ல, 7 ஆயிரம் கோடி தான். (குறுக்கீடுகள்).

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு இப்படிப் பேசுகிறார்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுக்கு, ஆதாரம் இருந்தால் அதுபற்றிப் பேசுங்கள், இல்லையென்றால் அடுத்த ''Subject'' பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர் ஆதாரத்தோடு பேச வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொல்லி, நான் உத்திரவு போட முடியாது.

12.50 மணி

திரு. கோ. பூவராகன்: நான் வளர்த்த காங்கிரஸ் செத்து விட்டது. இப்பொழுது இருப்பது * * * * * (குறுக்கீடுகள்).

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : ஆன் ஏ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். நிச்சயமாக அவர் பயன்படுத்திய சொல்லை அவைக்குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு காங்கிரஸ் கிடையாது. இண்டியன் நாஷனல் காங்கிரஸ் என்பதுதான் எங்களுடைய கட்சியினுடைய பெயர் என்று சொல்லி, அந்தச் சொல்லை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : It is not unparliamentary. I cannot strike them out. Thiru Boovarahan, please continue (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லி நான் உத்திரவு போட முடியாது **என்பது unparliamentary word இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்). I cannot pass any order. You cannot dictate terms to me. Please sit down. Mr. Boovarahan, please continue. (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே காங்கிரஸ் கட்சி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் அன்றைக்கு அவர் இருந்த காங்கிரஸ் இல்லையென்ற காரணத்தால், இன்றைக்குக் காங்கிரஸ் வேறு விதத்திலே இருக்கிற காரணத்தால், கடுமையான சொல்லை இந்த அவையிலே சொல்லியிருப்பது இந்த அவையினுடைய அமைதிக்கு ஏற்றதாக இல்லையென்ற காரணத்தால், அவர் அந்தக் கருத்தை மாற்றி உரைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, நான் சொன்ன கருத்து, பாராளுமன்றத்திலே, பாராளுமன்ற உறுப்பினர்களாலே பேசப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் திரும்பப் பேசியிருக்கிறேன், இந்த காங்கிரஸ் அகில இந்திய காங்கிரசாக இருந்து, பிறகு ஆர். ஆகி, எஸ். ஆகி, பிறகு தே. ஆகி, பிறகு இ. ஆகி, இப்பொழுது அவர்கள் கேட்டார்கள், நீங்கள் எந்த காங்கிரசில் இருந்தீர்கள் என்று. நான் இருந்த காங்கிரஸ், அப்பொழுது இருந்த காங்கிரஸ் இப்பொழுது இல்லை என்று விளக்கிச் சொன்னேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவை முன்னவர் பேசுவார், உட்காருங்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, திரு. பூவராகன் அவர்கள் இப்பொழுது, தான் முன்னர் சொன்ன அந்தக் கடுமையான வார்த்தை இல்லாமல்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1990 சனவரி 23] *[பேராசிரியர் க. அன்பழகன்]*

அந்தக் காங்கிரஸ் இப்பொழுது இல்லையென்கிறார். காமராஜர் இருந்த காங்கிரஸ் கூட இன்றைக்கு இல்லையென்று சொல்லக் கூடிய வாய்ப்பு பலருக்கு உண்டு. ஆகவே, அது கருத்து. கருத்தளவிலே மாறுபாடு; செத்து விட்டது என்று சொன்னால் சாகவில்லையென்பதற்கு நாம் சாட்சி. அதுவரையில் நான் சொல்லமுடியுமே தவிர, காங்கிரஸ் இருக்கிறது; அந்த காங்கிரஸ் இல்லையென்பது அவருடைய கருத்து. ஒவ்வொரு கட்சியைப் பற்றியும் அப்படிப்பட்ட கருத்துச் சொல்வதை நாம் அடியோடு தடுக்க முடியாது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக் குறிப்பிலே யிருந்து நீக்குவதா, நீக்கக்கூடாதா என்பது நான் எடுக்க வேண்டிய முடிவு (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அது இந்திய காங்கிரசா, * * என்ற வார்த்தை இந்த இடத்தில் இடம் பெற வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தர விடுகிறேன். (குறுக்கீடுகள்) காங்கிரஸ் செத்து விட்டது என்பது எப்படி '' Unparliamentary '' ஆகும்? (குறுக்கீடுகள்) என்ன பேசுகிறீர்கள், நீங்கள்? கொஞ்சங்கூட பொறுப்பில்லாமல் பேசுகிறீர்கள். உட்காருங்கள். ரொம்ப உணர்ச்சி வசப்படாதீர்கள், உடம்பு கெட்டுவிடும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் சொன்ன காங்கிரசைப் பற்றிய அந்தப் பெயரை நம்முடைய அவையினுடைய முன்னவர் மாற்றும்படி சொல்லியிருக்கிறார். அதை துணை சபாநாயகரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் செத்து விட்டது என்று அவர் சொன்னது, அவர் இருந்த காங்கிரசைச் சொன்னார். எத்தனையோ முறை, இந்தச் சட்டசபையிலே, சட்டசபையே செத்து விட்டது என்றவர்கள் எல்லாம் கூட நாட்டிலே இருக்கிறார்கள், எனவே, ஒன்று செத்து விட்டது என்று சொல்கிற காரணத்தாலே அது செத்து விட்டதாகப் பொருள் அல்ல. இப்பொழுது இருக்கிற காங்கிரஸ் உயிரோடுதான் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

12–55 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற காங்கிரசிலே இருக்கின்றவர்கள்–அவர்கள் என்ன காங்கிரஸ் என்று சொல்லவேண்டாம். 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவங்களுக்குள் நீங்கள் எல்லாம் போக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1969ஆம் ஆண்டு இந்தக் காங்கிரசுக்கு கால் வைப்பதற்கு இடம் கொடுக்க ஒருவருமே இல்லை. இன்றைய தினமும் இந்திரா காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என்று சொல்லுகிறார்களே, இந்த இந்திரா காங்கிரஸ் பற்றி, இந்திரா காந்தி அம்மையார் பற்றி எப்படி எல்லாம் வசை பாடினார்கள் என்பது நன்றாகத் தெரியும். அன்றைய தினம் கூட, இன்றைய தினம் இருக்கிற முதலமைச்சர் தான் அப்போது உதவிக்கு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காங்கிரஸ் அன்றைய தினம் என் வீட்டில்தான் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. அதனாலே கூட அந்த வீடு, எனக்கு வரவேண்டிய அந்த வீடு வராமல் போய்விட்டது (பலத்த சிரிப்பு). உங்களுக்கு எல்லாம் எவ்வளவு தூரம் இந்தக் காங்கிரசிலே உரிமை இருக்கிறதோ அதைவிட அதிகமாக எனக்கு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். உங்களுடைய விவாதங்களை நான் முழுமையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போது அதுபற்றி நான் விமரிசிக்க விரும்பவில்லை. ஆனால் ஓர் உறுப்பினர் பேசுகின்றபோது அவர் பயன்படுத்திய அத்தனை சொற்றொடர்களும் முரணானவை போலவும் முற்றிலும் தவறானவை போலவும் சொன்னால் அந்த உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அது ஒன்று. அதே நேரத்தில் பேசுகின்ற உறுப்பினர்களும் மற்றொரு கட்சியை அல்லது மற்றொரு இயக்கத்தைத் தேவை இல்லாமல் வம்புக்கு இழுக்காமல் தங்களுடைய கருத்துக்களை ஆழமாக, ஆணித்தரமாக எடுத்து வைப்பது எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும். ஏற்கனவே நீங்கள் ஒரு கட்சியை, இங்கே ஆளுகிற கட்சியைப் பார்த்து "தீய சக்தி'' என்று பேசினீர்கள். பிறகு அதை மற்றவர்கள் பொறுத்துக்கொள்ளாமல், பலத்த எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நான் கூட அப்போது அவைக் குறிப்பில் இருக்கட்டும் என்று அனுமதித்தேன்.

அதன் பிறகு திரு. அப்துல் சமத் அவர்கள் பேசும்போது நீங்கள் பொறுத்துக்கொள்ளாமல் எழுந்து நின்றீர்கள். (குறுக்கீடு) இந்தப் பக்கத்திலிருந்து அதற்கு எதிர்ப்புக்

1990 சனவரி 23] [பேரவைத் தலைவர்]

கிளம்பியது. அதன் பிறகு, 'ஏற்கனவே தீய சக்தி என்று சொன்னது இடம் பெற்றிருக்கிறது; அதனால் இதுவும் இடம் பெறலாம்' என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே நீங்களே கூட இது போன்ற தொடர்களைத் தவிர்க்கலாம். எனவே, நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி, தேவை இல்லாதவற்றை விட்டுவிட்டு, பழைய காங்கிரசா, புதிய காங்கிரசா என்ற ஆராய்ச்சிக்குள் இறங்காமல், அழுத்தமான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்து வைத்தால் இந்த அவையின் தரமும் கண்ணியமும் கூடும். அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, நான் காலையிலேயே சொன்னேன். நீங்கள் ஒத்துழைத்தால் நிறைய பேர் பேசலாம் என்று சொன்னேன். என்ன செய்வது ? இன்னும் மூன்று மணித்துளிகள் இருக்கின்றன. திரு. பூவராகன் அவர்கள் உரையைத் தொடரலாம்.

திரு. கோ. பூவராகன் : எனக்கு அளித்த நேரத்தை எல்லாம் இடையிலே மற்றவர்கள் எடுத்துவிட்டார்கள். மூன்று மணித் துளிகளில் எவ்வளவு பேசமுடியும் என்று தெரியவில்லை. குறிப்பாக, இந்த மன்றத்திலே சிறகொடிந்த பறவை, பெரிய கட்சி, சிறிய கட்சி என்றெல்லாம் சொன்னார்கள். சிற கொடிந்த பறவையாவது பரவாயில்லை. மூக்கும் காலும் இல்லாத வாத்தாக இருக்கிறது—ஒரு கட்சி. மூக்கு இருந்தாலும், கால் இருந்தாலும் தண்ணீரில் நீந்தலாம், தரையிலே நடக்கலாம். இரண்டும் முடியாத அளவிலே இருக்கிற ஒரு கட்சியின் சார்பிலே கலந்துகொண்டு பலபேர் பேசிய காரணத்தினாலே எங்கள் கட்சியின் சார்பாக, என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் பாராளுமன்றத்தைப் பற்றியும் அங்கே இருக்கிற அவர்கள் செய்கின்ற ஆட்சியைப் பற்றியும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரையிலே நம்முடைய அரசாங்கத்தின் வாயிலாக பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். நல்ல காரியத்தை எப்போதும் பாராட்டுகின்ற மரபை அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

குறிப்பாக, இரண்டு தினங்களுக்கு முன்னாலே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலு அவர்கள் 'ஸ்டேட் அட்டானமி', 'இண்டர் ஸ்டேட் கவுன்சில்' பற்றி எல்லாம் விவாதித்தார்கள். இண்டர் ஸ்டேட் கவுன்சில் முன்பு ஏற்படுத்தவில்லை; புதிய அரசு வந்த பிறகு கட்டாயம் ஏற்படுத்தப்படும் என்று உறுதி அளித்திருக்கிறது ; அதை நான் வரவேற்கிறேன் என்று சொன்னார்கள். இண்டர் ஸ்டேட் கவுன்சில்

கட்டாயம் இருக்க வேண்டும். அதை அடிக்கடி கூட்டினால் ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இருக்கிற சர்ச்சை எழாமல் தீர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கும். முன்பு இந்த வாய்ப்பு இல்லாமல் இருந்ததால் சர்ச்சைகள் எழுந்தன. முன்பு இருந்த அரசு இந்தச் சர்ச்சைகளுக்கு தீர்வு காண வாய்ப்பு அளிக்காமல், தனித்தனியாக மாநில அரசு அதிகாரிகளையும், முதலமைச்சர்களையும் அழைத்து, இதற்கு ஒத்துக் கொள்ளக் கூடாது, அதைச் செய்யக் கூடாது என்று கீழ் வெட்டு வெட்டிக்கொண்டிருக்கிற காரியத்தை நடைமுறையில் செய்து வந்தார்கள்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் இந்த அவையினுடைய நேரம் சரியாக ஐந்து மணித் துளிகள் மட்டும் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கோ. பூவராகன்: இன்றைய தினம் வேறு விதமாக எடுத்துக்கொண்டு ஸ்டேட் அட்டானமிக்கும் இன்டர்-ஸ்டேட் கவுன்சிலுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஸ்டேட் அட்டானமி தனியாக இருக்கிறது. அதை நாம் வற்புறுத்தி வருகிறோம். நம்முடைய உரிமைகளைப் பெறுவதற்கு—மத்தியில் இருக்கின்ற அரசுக்கும் ஒவ்வொரு மாநில அரசுக்கும் என்னென்ன உரிமை வேண்டுமோ அதைப் பெறுவதற்கு—ஸ்டேட் அட்டானமி வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். இன்டர்-ஸ்டேட் கவுன்சில் என்பது தனிப்பட்ட முறையிலே ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே இருக்கிற பிரச்சினைகளைக் கூடிப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்றும், அது உருவாவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக பாராட்டும் சொல்லப்பட்டு இருக்கிறது.

அடுத்து மண்டல் கமிஷன் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. அதை இன்றைய தினம் மத்தியில் இருக்கிற அரசு, சட்டமாக ஆக்கி நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்காகவும் வரவேற்பு சொல்லப்பட்டு இருக்கின்றது. பாராளுமன்றத்தில் புதிய அரசு ஏற்பட்ட பிறகு இப்படி ஒவ்வொன்றாக மாநிலங்களினுடைய கோரிக்கைகளை நன்கு கவனித்து, அவர்களுடைய கோரிக்கைகளுக்கு மதிப்பு அளித்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் உதவி அளிக்க வேண்டும் என்பதற்காக, உதாரணத்திற்கு உணவு தானியம் வழங்குவதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். கஷ்டமான நேரத்திலே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையிலே பல சிற்றவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றைத் தவிர்க்கவும்.

1990 சனவரி 23]

திரு. கோ. பூவராகன் ; ஒவ்வொரு தடவையும் நாம் கோரிக்கை வைத்தபோது முந்தைய மத்திய அரசு கவனிக்காமல் இருந்தது. தற்போது வந்திருக்கிற புதிய மைய அரசு நமக்கு மதிப்பளித்து எல்லாக் காரியங்களிலும் முன்வந்து உதவிய தற்குப் பாராட்டு சொல்லி இருக்கிறார்கள். கட்டாயம் உதவி செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது.

இப்போது தமிழக அரசு 300 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரையிலே வருமானம் உள்ள கார்டுதாரர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு மூன்று முறை இலவச அரிசி வழங்குவதாக அறிவித்து இருக்கிறார்கள். அதைப் பற்றி சில பேர் குறை சொன்னார்கள் நான் சொல்ல விரும்புவது, இன்றைய தினம் தமிழ்நாட்டில் லாட்டரி சீட்டு மாதத்திற்கு 30 கோடி ரூபாய்க்கு மேல் விற்கிறது ; கள்ளச்சாராய விற்பனை ஆண்டு ஒன்றுக்கு 750 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. இவைகள் இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கு சாதாரண மக்கள் இன்றைய தினம் தமிழ்நாட்டிலே செல விடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் ஆண்டு ஒன்றுக்கு 3 முறை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஒரு நியாயமான குறுக்கீடு.

பேராசிரியர் க. பொன்னுசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் போது தமிழ்நாட்டிலே கள்ளச்சாராயம் எவ்வளவோ கோடிக்கு விற்பனை ஆவதாகச் சொன்னார்கள். அது உண்மையான கணக்குத்தானா என்பதை இந்த அவையில் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் ; அந்தச் சாராயமே கள்ளச் சாராயம். அந்தக் கணக்குகூட அப்படித்தான் இருக்கும் ; இன்னும் அதிகமாகக் கூட இருக்கலாம். நான் சொல்வதற்கு மேலே இருக்குமே தவிர குறைவாக இருக்காது என்பது மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் இதிலே கணக்கு வழக்கு எல்லாம் பார்க்காமல் இந்த மாதிரி தவறு நடப்பதை எவ்வாறு தவிர்ப்பது என்பதை அரசாங்கம் முன்நின்று ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நேற்றைய தினம் முதல்வர் அவர்கள் இந்த லாட்டரிச் சீட்டு விஷயத்திலே நாம் மட்டும் தனியாக ஒரு முடிவுக்கு வர முடியாது என்று சொன்னார்கள். எப்படியாவது மற்ற மாநிலங்களோடு அல்லது மத்திய அரசோடு பேசியாவது, இவ்வாறு தவறு நடப்பதை—எங்கே லாட்டரிச் சீட்டு பிரின்ட் செய்கிறார்கள், எப்படி விற்கப்படுகிறது—இன்றைய தினம் பாரதநாட்டில் தமிழ்நாட்டில் மட்டும் தான் 30 கோடி ரூபாய்க்கு லாட்டரிச் சீட்டு விற்பனை ஆகிறது—

நாம் தடுக்கவேண்டும். கள்ளச் சாராய விற்பனை வேறு இருக்கிறது. ஆக இவற்றை எல்லாம் எவ்வாறு தவிர்ப்பது என்பதிலே அரசு கவனம் காட்ட வேண்டும் என்பதற்காக இதை எடுத்துச் சொல்கிறேன்.

இப்போது 3 முறை இலவச அரிசி வழங்குவதை ஓரளவுக்கு மாற்றி அமைக்கலாம். அரசு மதிய உணவு, சத்துணவு போடுகிறது. ஆனால் இரவில் தான் உணவு இல்லாமல் இருக்கிறார்கள். இரவுப் பட்டினி இருக்கக் கூடாது என்பார்கள். குறிப்பாக குழந்தைகளுக்கு இரவில் உணவு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இரவுப் பட்டினியைத் தவிர்ப்பதற்கு, ஆண்டுக்கு 3 முறை இலவச அரிசி வழங்குவதை மாற்றி இரவு நேரங்களிலே அதை உணவாக வழங்கினால் மக்கள் நம்முடைய முதல்வர் அவர்களையும், இந்த அரசையும் நன்றாகப் பாராட்டுவார்கள் என்று சொல்லி நான் முடிக்கின்ற தருவாயில் நான் ஒரு முக்கியமான பிரச்சினைக்கு வருகின்றேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினை அது. என்னுடைய தொகுதியிலே இந்த அரசு ஏற்பட்ட பிறகு ஒரு பீங்கான் தொழிற்சாலையின் ஒரு பகுதியைத் திறந்தார்கள். பெரும் பகுதி இன்னும் திறக்கப்படாமலேயே இருக்கிறது. அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சமீபத்தில் கவர்னர் அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். கடந்த நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்பட்டு இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருவண்ணாமலை மாவட்டத்திற்கு சம்புவராயர் மாவட்டம் என்றும், வேலூர் மாவட்டத்திற்கு அம்பேத்கார் மாவட்டம் என்றும் பெயர் வைக்கப்பட்டு இருக்கின்றது. திருவண்ணாமலை வன்னியர் சம்புவராயர் மாவட்டம் என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தேவர் திருமகனார் மாவட்டம் என்றுதான் அங்கே வைத்திருக்கிறீர்கள். எனவே திருவண்ணாமலை வன்னியர் சம்புவராயர் மாவட்டம் என்று வைத்தால் எல்லோரும் புரிந்து கொள்வதற்கு நலமாக இருக்கும்.

13-05 மணி

மேலும் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரே தேதியில் இரண்டு அழைப்புகள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. (இரண்டு அழைப்பிதழ்களை அவையில் எடுத்துக் காட்டினார்) ஒரு அழைப்பு வடாற்காடு மாவட்டம் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட வேலூர் அம்பேத்கார் மாவட்டம். இது மிகவும் பள பள என்று இருக்கிறது. இதிலே முதல் பக்கத்திலே டாக்டர் அம்பேத்கார் படமும் கலைஞர் அவர்களின் படமும் போடப்

1990 சனவரி 23] [திரு. கோ. பூவராகன்]

பட்டிருக்கின்றன. அடுத்துள்ள திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தைப் பொறுத்த அழைப்பிதழைப் பார்த்தால் அந்தப் பளபளப்பைக் காணோம். சம்புவராயர் ஒரு குறுநில மன்னனானதால் அவரைப் பின் பக்கத்திலே அச்சு அடித்து விட்டார்கள். அவரை பின்னுக்குத் தள்ளிவிட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமில்லை. ஆனால் யாரோ சில அதிகாரிகள் இப்படி பின்னுக்குத் தள்ளிவிடுவது நல்லது என்று எண்ணிச் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இனி இருக்கக் கூடாது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மற்ற பல முக்கிய விஷயங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் பேச பின்னாலே சந்தர்ப்பம் இருக்கும் என்று கருதி இதோடு முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

16-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் மாலை 4-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடியது.

10. 24 ஆண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை இயக்கத்தில் வீரமரணம் எய்திய திரு. முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி அவர்களை நினைவு கூர்ந்து போற்றுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய பெருமக்களே, இந்தப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

23-1 என்ற இந்த நாள் ஒரு விடுதலை வீர வரலாற்றில் குறிப்பிடத்தக்க நாள். 23-1-1809-இல் இந்தக் கோட்டைக்குள் இருந்த சிறையிலேயே முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி என்பவர் சிறைச்சாலையில் இருந்து 24 ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை அனுபவித்து, துன்புற்று, விடுதலை இயக்க வரலாற்றுக்காக வீர மரணம் எய்தியவர். அவருடைய அந்தச் சிறப்பான நினைவைப் பாராட்டி நினைவு கூர்ந்து போற்றுகிறோம்.

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—
விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆளுநர் உரையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையைப் படித்துப் பார்க்கின்றபொழுது எதிர் காலத்திலே தமிழகத்திற்கு புதிய திட்டங்களை, புதிய பணிகளை ஏற்படுத்துகின்ற வகையில் ஆளுநர் உரை அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த உரை முழுமையும் மேதகு ஆளுநர் அவர்கள் மத்தியிலே புதிதாக ஏற்பட்டிருக்கும் தேசிய முன்னணி அரசைப் பெருமளவிலே பாராட்டுகின்ற பராட்டுரையாக அமைந்துள்ளது. மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் எந்தவிதமான எதிர் காலத் திட்டங்களும் இல்லை என்பதைத் தெளிவாக உணர முடிகின்றது.

ஆளுநர் உரையைப் படிக்கின்றபொழுது தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற முன்னேற்றத் திட்டங்கள், இனி எதிர்காலத்திலே வர இருக்கின்ற திட்டங்கள் இவற்றைப் பற்றியெல்லாம் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் அந்த அளவிலே இந்த உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை என்பது நமக்கெல்லாம் மிகவும் கவலையைத் தருகிற ஒன்றாகும்.

ஆளுநர் உரையில் தமிழ் நாட்டின் மின்சாரப் பற்றாக் குறையைப் பற்றி கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. மின்சார உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காகப் பல்வேறு வழி முறைகளை கையாண்டும் மின் வெட்டைத் தளர்த்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெல்லாம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதையும் சொல்லி யிருக்கின்றார்கள். பொதுவாகத் தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை மிகப் பெரிய அளவிலே இருந்து கொண்டு இருக் கிறது. அதனாலே மக்களுக்கு மின்சாரப் பற்றாக்குறையை எல்லாக் காலங்களிலும் சந்திக்க வேண்டிய ஒரு கட்டாய நிலை ஏற்படுகிறது. மின்சாரப் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்காக உரிய திட்டங்களை உருவாக்குவது தமிழக அரசினுடைய முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலத்திலே புதிய அனல் மின்சார நிலையம் ஒன்றை அமைப்பதற்காக இதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் கட்சியினுடைய மத்திய அரசு அதற்கான திட்டத்தை வகுத்து, தமிழக

அரசிடம் அதற்காக ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட் ஒன்றைக் கேட்டிருந்தது. ஆனால் இது வரையிலும் தமிழக அரசிட மிருந்து கிடைக்கவேண்டிய ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட் அனுப்பாத காரணத்தினாலே அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக் கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். அந்தத் திட்டம் நிறைவேற தமிழக அரசு முழு மனத்தோடு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து அனல் மின்சாரத் திட்டத்தை ராஜாக்கமங்கலத்திலேயே நிறுவுவதற்கு மத்தியில் இன்றிருக்கின்ற தேசிய முன்னணி அரசைக் கட்டாயப் படுத்த வேண்டும். அதற் கான் அனுமதியைப் பெறுவதற்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து அந்தத் திட்டத்தை உடனடியாக தொடங்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

16.05 மணி

மின் அழுத்தக் குறைவின் காரணத்தால் பல்வேறு பகுதி களில் மின்சார பல்புகள் எரிகிறதே தவிர அவைகள் ஒளி தருவ தாக இல்லை. மின் அழுத்தக் குறைவு என்ற பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. மாணவர்கள் தங்கள் பாடப் புத்தகங்களைப் படிக்க முடியாத அளவிற்கு மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டுள்ளது மின் அழுத்தக் குறைவைச் சரி கட்டுவதற்கு, தீர்த்து வைப்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலே மின்சார இலாக்காவினரை, அதி காரிகளை வற்புறுத்தி கேட்டபோதும், மெட்டீரியல்ஸ் இல்லை யென்று பதிலைச் சொல்லி அவர்கள் கடமையைத் தட்டிக்கழித் துக் கொண்டிருக்கிற நிலைமை தான் இன்றைக்கு தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட மின் அழுத்தக் குறைவைப் போக்குவதற்கு, நீண்ட காலமாக கிடப்பிலே இருக்கிற தெருவிளக்கு புதிய மின் இணைப்பு திட்டங் களை நிறைவேற்றுவதற்கு, மெட்டீரியல்ஸ் அதிக அளவில் இலாக்காகளுக்கு வழங்க உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும். அரசு அதிகாரிகள் மெட்டீரியல்ஸ் இல்லை யென்று பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதால் பாதிக்கப் படுவது பொது மக்கள்தான். பொது மக்கள் பாதிக்கப்படுகிறார் கள் என்றால் இந்த அரசுக்குத்தான் கெட்டபெயர்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, குறுக்கிட வேண்டும் என்பதற்காக அல்ல. ஒரு விளக்கம் தருவது உறுப்பினருக்கு நல்லதாக இருக்கும் என்பதால் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக நம் முடைய நாட்டில் அனல் மின் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று அரசாங்கம் எவ்வளவு முயற்சி செய்தாலும் அதற்கு தேவைப்படுகிற நிலக்கரி நமக்கு போதுமான அளவிற்கு கிடைப்பதில்லை. மத்திய அரசு ஒதுக்குகிற நிலக்கரியை சிங் கரேணியிலிருந்து கிடைக்க வேண்டிய நிலக்கரியில் 10 சதவீதம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1990 சனவரி 23

தான் கிடைக்கிறது. எனவே ஒரு டன் நிலக்கரி நமக்கு 250 ரூபாய்க்கு கிடைப்பதற்கு பதிலாக வட மாநிலங்களிலிருந்து நாம் கடல் மூலமாகவும், ரெயில் மூலமாகவும் கொண்டு வருவதற்கு 750 ரூபாய் செலவாகிறது. எனவே, எதிர் காலத்தில் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் அனல் மின் நிலையங்களைத் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளே இல்லாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு பதிலாக வேறு என்ன திட்டங்களைத் தீட்டலாம் என்று இலாக்காவுடன் நாங்கள் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். கடலோரப் பகுதிகளில் நிலக்கரியை இறக்குவதற்கு கூட கட்டணம் அதிகமாகிக் கொண்டிருக்கிற காரணத்தால் ஒரு யூனிட் மின்சாரம் ரூ. 1.17 அடக்க விலையாகிறது. ஆனால், விவசாயிகளுக்கு நாம் $10\frac{1}{2}$ காசுகளுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 450 கோடி ரூபாய் மின்சார இலாக்காவிற்கு இழப்பு ஏற்படுகிறது. இந்தச் சூழ்நிலையை எல்லாம் எண்ணிப் பார்த்து தான் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் அனல் மின்சாரத் திட்டம் தொடங்குவதற்கு அரசு கொஞ்சம் தயங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பாலையா : தலைவரவர்களே, முன்பிருந்த காங்கிரஸ் கட்சியினுடைய மத்திய அரசு அந்தத் திட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்தில் கொண்டு வருவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்டது. அதற்கு இடையூறாக தமிழக அரசு தான் காரணமாக இருந்ததாகச் சொல்லப்படுகிறதே அது எந்த நிலையில்..

மாண்புமிகு திரு. கே. என். நேரு: துணைத்தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் வருவதாக இருந்தது கன்னியாகுமரி மாவட்டத்தில் அல்ல. தூத்துக்குடியில் தான் அனல் மின் திட்டம் தொடங்குவதாயிருந்து, தமிழ் நாட்டிலிருந்து கேட்டு, அவர்களும் செய்து தருவதாக உறுதி அளித்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் அனல் மின் நிலையம் அல்ல. அணு மின் நிலையம் தான் ஆரம்பிப்பதாக மத்திய அரசின் திட்டம்.

திரு. ஆ. பாலையா : அது தவறான தகவல். Government of India, Ministry of Energy இலாக்காவிலிருந்து உள்ள நிலைமைகளை தெளிவாகச் சொல்லி கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தமிழ் நாடு சர்க்கார் feasibility report தரவில்லையென்று காரணம் காட்டி கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, feasibility report என்பது ஒரு அனல் மின் நிலையம் தொடங்க வேண்டுமென்றால் அந்த

1990 சனவரி 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நிலையம் தமிழக அரசிற்கு கட்டுப்படியான விலையில் மின் சாரத்தை உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் இருக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் அனல் மின் நிலையம் தொடங்குவது என்று சொன்னால் ஒரு டன் நிலக்கரி அங்கே போய்ச் சேருவதற்கு கிட்ட தட்ட 900 ரூபாய் செலவாகும். 900 ரூபாய் செலவு செய்து ஒருடன் நிலக்கரியைக் கொண்டு போய் அதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்றால், ஒரு யூனிட் மின்சாரத்தினுடைய விலை 1 ரூபாய் 50 காசாகும். எனவே ரூ. 1-50 காசுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து, கன்னியாகுமரி மாவட்டத்திலே அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் தொடங்க வேண்டுமா என்பது பற்றி ஆலோசிப்பது தான் ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட். எனவே தான் அரசாங்கம் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

16-10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்த அறிக்கையை நீங்கள் இந்த அவையில் வைப்பதற்கு முன்னாலே என்னிடத்திலே காட்டி, இசைவைப் பெற்றிருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்களுடைய ஆணையை உறுப்பினர்கள் வேறுவிதமாக எண்ணிக் கொள்ளக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஒரு அமைச்சர் மீதோ, அல்லது வேறு ஒரு உறுப்பினர் மீதோ குற்றச்சாட்டுக்களைச் சொல்லும் போது தான் தங்களுக்கு அதை முன் கூட்டியே தெரிவிக்க வேண்டும் என்று ஏற்கனவே ஒரு நியதி வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்ட பணிவன்போடு கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் செய்தித் தாள்களிலிருந்து அல்லது வேறு சில மேற்கோள்களைக் காட்டுகிற போது இசைவைப் பெற வேண்டும் என்ற ஒரு விதி இருப்பதை நான் இந்த நேரத்திலே அவர்களுக்குச் சேர்த்துச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலையா : ராஜக்காமங்கலம் அனல் மின்சார திட்டத்தை நான் ஏன் வற்புறுத்துகிறேன் என்று சொன்னால் தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை மிகவும் கடுமையாக இருக்கிற காரணத்தாலே இப்படிப்பட்ட திட்டங்களை அமுல்படுத்தினால் மின்சாரப் பற்றாக்குறையைஓரளவிற்குத் தீர்ப்பதற்கு வழிவகை ஏற்படும். இந்தத் திட்டத்தை தமிழக அரசு

[திரு. ஆ. பாலையா] [1990 சனவரி 23

நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்காக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் தொழில் துறையிலே பின் தங்கிய மாவட்டமாக இருக்கிறது. கடந்த வருடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்த போது, கன்னியாகுமரி மாவட்டத்திலே 300 கோடி ரூபாய்க்கான ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக மக்கள் மத்தியிலே வாக்குறுதி கொடுத்தார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அதனுடைய ஆரம்ப விழாவை நடத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் குமரி மாவட்டம் வரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை என்று இரண்டு துறைகள் இருக்கின்றன. அவைகளால் எந்த பயனும் இல்லை. மணவாளக்குறிச்சியிலே 1982 ஆம் ஆண்டிலே ஒரு பாலம் 30 இலட்சம் ரூபாயிலே ஆரம்பிக்கப் பட்டது. அந்தப் பாலம் 8 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் கட்டி முடிக்கப்படவில்லை. இதற்கு முன்னாலே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கின்ற போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த வருடம் நவம்பர் மாதத்திலே முடித்துத் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார்கள். அந்தப் பாலம் இன்னும் முடிக்கப்படாத காரணத்தால், குளச்சலில் இருந்து நாகர்கோவில் செல்கிற பஸ்கள் அத்தனையும் போக முடியாத நிலைமையில் இருந்து கொண்டு இருக்கிறது. பொது மக்கள் மத்தியிலே அது ஒரு பிரச்சினையாக கிளம்பி இருக்கிறது. இது சம்பந்தமாக பல்வேறு விதமான போராட்டங்கள் கூட நடத்தியாகி விட்டது. ஆனால் அந்தப் பாலம் இது வரையில் கட்டி முடிக்கப்படவில்லை. எனவே அந்தப் பாலத்தை துரிதமாக முடித்துத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலையா அவர்கள் சொன்ன அந்தப் பாலம் 8 ஆண்டுக் காலமாக கேட்பாரற்றுக் கிடந்தது. இந்த அரசு வந்த பிறகு, நான் பொறுப்பேற்ற பிறகு, நானே நேரிடையாக அந்தப் பாலத்தை பார்வையிட்டு, அதிகாரிகளோடு கலந்து பேசினேன். அதிலே ஒப்பந்தக்காரர்களுக்குள் ஏற்பட்ட சில தகராறு காரணமாக அந்த வேலைகள் நின்று போய் இருக்கின்றன. இருந்தாலும் அதை விரைவுபடுத்தி, எவ்வளவு விரைவாக அதை முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக அதை

முடித்து, போக்குவரத்தை அந்தப் பாதையிலே திருப்பி விடுவதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை விரைவாக எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நல்ல செய்தியோடு முடிக்க வேண்டும்.

திரு. ஆ. பாலையா : கன்னியாகுமரி மாவட்டத்திலே, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, பட்டணங்கால், சித்தாறு ஆகிய அணைகளிலே போதுமான தண்ணீர் இருந்தும், கடைவரம்பு நிலங்களுக்கு சீரான முறையில் தண்ணீர் வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூட இதைப் பற்றி நான் கடிதம் எழுதியிருந்தேன். போதுமான அளவிற்கு கடைவரம்பு நிலங்களுக்கு தண்ணீர் கொடுக்க முடியாத காரணத்தாலே மிகவும் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்காமல், பயிர்கள் பட்டுப்போய் தீய்ந்துபோய், கருகிப்போய் நிற்கின்ற காட்சியைப் பார்த்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் தேதி ஒரு மறியல் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த மறியல் போராட்டத்தை நடத்துவதற்குக் காரணமாக இருந்தவர்கள் அங்கேயிருக்கின்ற பொதுப்பணித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுதி வைத்ததை எல்லாம் பேச வேண்டும் என்று முடிவு செய்தால் இன்றைக்கு முடியாது. நேராக முன் வரிசைக்கு வந்துவிடுங்கள், எல்லோரையும் விட்டுவிடுகிறேன். பின்னாலே என் மேல் வருத்தப்படக் கூடாது.

16-15 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, பட்டணங்கால், சித்தாறு 1, சித்தாறு 2 ஆகிய எல்லாவற்றிலும் சேர்த்து இன்றைக்கு 2,036 மில்லியன் கன அடி தண்ணீர் தான் இந்த நான்கிலும் இருக்கிறது. இதிலே கீழே ஏறத்தாழ ''டெட் ஸ்டோரேஜ்'' என்பது கிட்டத்தட்ட 1,000 சொச்சம் கன அடி போனால், மீதி ஆயிரம் கன அடி தண்ணீர் தான் கைவசம் இருக்கிறது. இதை உங்களுக்கு பகிர்ந்தளிக்கும்படி அரசு ஏற்கெனவே உத்தரவு இட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இரண்டாவது நல்ல செய்தி. உறுப்பினர் உரையை முடித்து விடலாமே, முடிக்கவில்லையென்றால் நான்வேறு உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்க மாட்டேன், அவ்வளவுதான்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆ. பாலையா: போதுமான தண்ணீர் இருந்த பிறகும், அதை கடைமடைப் பகுதிகளுக்கு, அங்கேயுள்ள நிலங்களுக்கு அதிகாரிகள் தண்ணீர் கொடுக்க மறுக்கிறார்களே, அதற்காக வேண்டித் தானே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. விவசாயிகளுடைய போராட்டத்தை அடக்குவதற்கு .. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடவும்.

திரு. ஆ. பாலையா : நூற்றுக்கணக்கான விவசாயிகள் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள். இது எந்த வகையிலே நியாயம்? விவசாயிகள் தங்களுடைய உரிமைகளைக் கேட்பதற்கு, தண்ணீர் கேட்பதற்கு, பயிர்களை வாழ வைப்பதற்கு ஒரு போராட்டத்தை நடத்தினால் அவர்களை கைது செய்து சிறைச் சாலையிலே அடைப்பது தான் இந்த அரசினுடைய நோக்கமா, திட்டமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. ஜெ. அசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த நான்கு நாட்களாக நடைபெற்று வருகின்ற விவாதத்தைக் கூர்ந்து கவனிக்கிற போது என்னால் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. வகுப்பிலே படிக்கின்ற மாணவர்களிலே, மாணவன் டல்லாக இருந்தால் ஆசிரியர் அவனைப் பார்த்துச் சொல்வார், இது தேறாத கேஸ், உருப்பட மாட்டான் என்று. எனவே அந்த மாணவனைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ள மாட்டார் அந்த ஆசிரியர். ஆனால் அதே வகுப்பிலே 65 மார்க் வாங்கக் கூடிய ஒரு மாணவன் இருப்பானேயானால் அவனைப் பார்த்து, போதாது, இன்னும் மார்க் வாங்க வேண்டும், சென்ட் பர்சென்ட் வாங்க வேண்டுமென்று வகுப்பாசிரியர் நச்சரித்து பாடங்களை சொல்லித் தருவார். அதே போலத் தான் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்கள் டல்லாக இருந்ததால் யாரும் எதையும் கேட்கவில்லை. ஆனால் இப்போது இருக்கின்ற முதலமைச்சர் 65 பர்சென்ட் வாங்கக் கூடிய ஸ்டுடென்ட்டாக இருக்கின்ற காரணத்தினாலே எதிர்க் கட்சிகள் எல்லாம் அடிக்கடி நச்சரித்து, இன்னும் சென்ட் பர்சென்டிற்குக் கொண்டு போக வேண்டுமென்று நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது. இப்படி அவர்கள் நச்சரித்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே அடிக்கடி ஒன்றைச் சொல்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தல் முடிவு வந்து விட்டது. எனவே நீங்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒன்றை நான் அவர்களுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். இப்போது தமிழக முதல்வர் அவர்களால் தயாரிக்கப்பட்டு, கவர்னர் அவர்களால்

படிக்கப்பட்ட இந்த ஆளுநர் உரை வெறும் முகவுரைதான் இன்னும் 30 ஆண்டு காலத்திற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் தான் ஆளுநர் உரையை தயாரித்துத் தர வேண்டுமென்று சொல்லி தமிழகத்து மக்கள் முடிவு எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விருப்பப் படுகிறேன். அடிக்கடி சொல்கிறார்கள் மக்கள் தீர்ப்பு, உடனே ராஜிநாமா செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். இன்றைய தினம் காலையிலே பேசிய சேலத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய அர்ஜூனன் அவர்கள் கூட சொன்னார்கள். ராஜிநாமா செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மக்கள் தீர்ப்பு என்றால் என்ன? சட்டமன்ற தேர்தல் வந்தது, மக்கள் தீர்ப்பு தந்தார்கள், தமிழ கத்தினுடைய முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் தான் இருக்க வேண்டுமென்று மக்கள் தீர்ப்பு தந்தார்கள். அதே போன்று பாராளுமன்ற தேர்தல் வந்தது. பாராளுமன்றத்திலே யார் பிரதமராக வரவேண்டுமென்ற கேள்வி எழுப்பப்பட்ட போது 20-வது நூற்றாண்டிற்கு மெல்ல மெல்ல சுகமாக அழைத் துக் கொண்டு போகக் கூடிய தலைவர் வருவார் என்று சொன்னார் கள். அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டு மதிப்பிற்குரிய திரு. வி. பி. சிங் அவர்களைத்தான் பிரதமராக அறிவித்தார்கள் மக்கள். அந்த மக்கள் தீர்ப்பைத்தான் இன்றைய தினம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் பின்பற்றிக் கொண்டிருக்கி றார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. மக்கள் தீர்ப்பை மதிக்கக் கூடிய ஒரேயொரு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான். மக்கள் எந்த நிலையை அளித்தாலும் தன் நிலை தவறாமல் மக்களுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்பதற்காக உழைத்துக் கொண்டிருக்கிற ஒரே ஒப்பற்ற தலை வர் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர்தான். மக்கள் தீர்ப்பு தந்தார்கள், எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமென்று. ஆனால் எங்களுக்கு ஆளும் கட்சிதான் வேண்டுமென்று சொல்லி அங்கலாய்த்து விட்டு வராண்டா நிலைக்கு வந்து விட்ட (Frus-trated) ஃப்ரஸ்டிரேட்டட் லீடரைப்போல எங்களுடைய தலைவர் இல்லாமல், டைனமிக் லீடராக இன்றைய தினம் திகழ்ந்து கொண்டிருக்கிற தலைவர் தான் எங்கள் இனமான தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

16-20 மணி

அது மட்டுமல்ல கடந்த ஓராண்டு காலத்திலே தமிழகத்தி னுடைய சாதனைகளை ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் எத்தனையோ சொல்லலாம். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஒரு ஆண்டிலே தமிழகத் திலே மின்சாரத்தினுடைய நிலைமை எந்த அளவுக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

1988-ல், ஜனவரி மாதத்திலே 40 சதவீதம் மின் வெட்டு இருந்தது. அதே போல 1989 ஜனவரியில் 30 சதவீதம் மின் வெட்டு இருந்தது. இன்றைய தினம் 1990-ல் ஜனவரியில் மின் வெட்டே நீக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

அது மட்டுமல்ல, ரூபாய் ஆயிரம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்க வேண்டுமென்ற திட்டத்தை நீட்டித் தந்தார்கள். 300 ரூபாய் வரையில் இருந்த திட்டத்தை ஆயிரம் ரூபாய் வரை விஸ்தரிக்க வேண்டிய காரணம் என்ன? தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். 300 ரூபாய் என்று இருந்த நேரத்தில் 1988-ல் சிவில் சப்ளைஸ் ஆபிசில் பதிவு செய்யப்பட்ட ''ஏ'' ரிஜிஸ்டரில் ஒரு வருமானம் இருக்கிறது. ஆனால் அட்டையிலே வேறு வருமானம் இருக்கிறது. ரிஜிஸ்டரில் 400 ரூபாய் என்றும் பொது மக்களிடம் இருந்த அட்டையிலே 300 ரூபாய் என்றும் இருந்த நிலையால் குழப்பம் ஏற்பட்டு, இந்த அரசினுடைய திட்டத்தை மக்கள் சரியாக புரிந்துக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதை தவிர்ப்பதற்காகவே ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு இலவச அரிசி என்ற திட்டத்தை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

கடந்த கால ஆட்சியிலே தீட்டப்பட்ட திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் கவனிப்பாரற்று கிடக்கின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். உதாரணத்திற்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய ராணிப்பேட்டை தொகுதியிலே ஜப்பானிய Yen கிரடிட் கூட்டுடன் ஒரு தொழில் திட்டம் துவக்குவதாக அறிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டிலே 12 மையங்கள் உருவாக்கப்பட்டு வாலாஜாபேட்டையிலே ஒரு மையம் என்று அறிவிக்கப்பட்டு, அதற்குண்டான நிலங்கள் கூட ஆர்ஜிதம் செய்யப்பட்டு, எல்லா வேலைகளும் நடந்துக் கொண்டிருந்த நேரத்தில், கடந்த அரசு அந்த திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டு விட்டது. அதனுடைய விளைவாக அந்தப் பகுதியிலே துவக்கப்பட இருந்த எலக்டிரானிக் தொழிற்சாலையும், தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலையும் துவக்கப்படாமல் நின்றிருக்கிறது. எனவே இந்த அரசு அந்த தொழிற்சாலைகளை மீண்டும் வாலாஜாபேட்டையிலே துவக்குவதற்கு உண்டான வழி வகைகளை செய்யும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே இருக்கிற முகுந்தராயபுரம் என்ற கிராமத்தில் 'ஷீப் ப்ரீடிங் சென்டர்' என்று ஒரு அமைப்பு உலக வங்கியின் கடன் உதவியோடு துவங்குவதாக அறிவிக்கப்பட்டது. அதற்கு அரசாங்கத்தினுடைய

புறம்போக்கு நிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். நிலைமை என்ன என்று கேட்டால், அந்த அரசு நிலத்தை எல்லாம் முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்ட காரணத்தாலே அந்தத் திட்டம் அப்படியே நின்று கொண்டிருக்கிறது. எனவே அரசு இப்படிப் பட்ட ஆக்கிரமிப்பு நிலங்களை எல்லாம் மீண்டும் கையகப் படுத்தி அந்தத் திட்டத்தை மீண்டும் முகுந்தராயபுரத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ராணிப்பேட்டையிலே கத்தோலிக்க கிறித்தவர் களுடைய கல்லறை ஒன்று இருந்தது. கடந்த ஆட்சிக் காலத் திலே அந்தக் கல்லறையை ஒரு ஆளும் கட்சி பிரமுகருக்கு அரசே விற்று, அந்தக் கல்லறை இருந்த இடத்திலே இன்றைய தினம் அந்த முன்னாள் ஆளும் கட்சி பிரமுகர் ஒரு பெட்ரோல் பங்கை வைத்து நடத்திக் கொண்டிருக்கிற காட்சியை பார்க்கிறோம். எனவே இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து சிறு பான்மை சமுதாயத்தினுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று மீண்டும் அங்கே கிறித்தவர்களுடைய கல்லறையை உருவாக்கு வதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ராணிப்பேட்டையிலே குடிதண்ணீர் பிரச்சினைக் காக கடந்த காலத்திலே 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் ஒதுக் கப்பட்டது. அது குடிநீர் வடிகால் வாரியத்திடம் தரப்பட்டது. ஆனால் இதுநாள் வரையிலே குடிதண்ணீர் வடிகால் வாரியம் எந்த வேலைகளையும் பூர்த்தி செய்யவில்லை. காரணம் கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட மெத்தனத்தின் காரணமாக அதுவும் 83-லே துவக்கப்பட்ட திட்டம், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய செல்வி அம்மையார் அவர்கள் அந்தத் திட்டத்தைத் துவக்கினார்கள். ஆனால் இதுவரையில் அந்தத் திட்டம் முடிவு அடையவில்லை. எனவே, அரசு இதிலும் கவனம் செலுத்தி அந்த குடிதண்ணீர் திட்டத்தை ராணிப்பேட்டைக்கு சீக்கிரமாக கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் நான் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். வாலாஜா நகராட்சியினுடைய நகர மன்றத் தலைவனாக இருக் கிற காரணத்தாலே நகராட்சி தலைவர்கள் எந்த அளவுக்கு அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசினு டைய கவனத்திற்குக கொண்டு வருவதற்கு நான் ஆசைப்படு கிறேன். கடந்த 15 ஆண்டுக்காலமாக நகராட்சியினுடைய வருமானம் பெருக்கப்படாமல், நகராட்சி மிகவும் நலிந்த நிலை யில் இருந்தது. நகராட்சி தலைவர்களுடைய அதிகாரங்களும் பறிக்கப்பட்ட நேரத்தில் நிதி நிலைமையை பெருக்க முடியாத ஒரு நிலை இருந்தது.

16-25 மணி

இந்த ஆட்சி வந்த பிறகு அதிகாரம் வழங்கப்பட்டது. நிதி நிலையை உயர்த்துவதற்கு நாங்கள் எத்தனித்தபோது ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டது. அதன் விளைவாக வரவும் செலவும் சரிக்கட்டி போய்க்கொண்டு இருக்கின்ற நேரத்தில் நகராட்சியிலே இருக்கின்ற ரோடுகளை நாங்கள் பராமரிக்க முடியவில்லை. இந்த அரசு மின்சார இலாக்காவிற்கு ஆண்டு ஒன்றுக்கு கணிசமானத் தொகையை நஷ்ட ஈடாக கொடுத்து சரிசெய்து வருவதைப் போல நகராட்சிகளுக்கும் சாலையைப் பாதுகாப்பதற்காக ஆண்டுதோறும் ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி அந்தத் தொகையின் மூலமாக ஆண்டுக்கு 20 நகராட்சிகளுடைய சாலைகளை பராமரிப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மின் விளக்குகளை நகராட்சிகளே போட்டுக்கொள்ள வேண்டும் என்று ஒரு சட்டத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே காலதாமதத்தையும், குழப்பத்தையும் நாங்கள் பார்க்க முடிகிறது. நாங்களே விளக்குகளை போட்டுக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் மின்சார இணைப்பைத் துண்டிக்க வேண்டும் மின்சார இலாக்காவினர். அந்த நிலையை மாற்ற வேண்டும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த விளக்குகளைப் போடுகின்ற வேலையை மின்சார இலாக்காவினரிடமே ஒப்படைக்க வேண்டும். அதேபோல் பல்ப் ஒரு இடத்தில் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எங்களுடைய நகராட்சியைப் பொறுத்தமட்டில் ஹைதராபாத் லேம்ப்பிலே ட்யூப் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். வித்யாநாத் என்ஜினியரிங் கம்பெனியிலே ச்சோக் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆக இப்படி இரு வேறு இடங்களில் வாங்குவதால் தவறு ஏற்படுகின்றபோது ச்சோக் ஃபால்ட்டா, ட்யூப் ஃபால்ட்டா என்று தெரியாமல் தவறு ஏற்படுகிறது. எனவே இந்த அரசு உடனடியாக இதையெல்லாம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த ஆளுநர் உரையைப் பாராட்டி என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

திரு. எம். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரை மிகச் சிறப்பாக அழகான ஆங்கிலத்தில் ஆளுநர் அவர்களும் அழகான தமிழில் நமது சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்களும் உரையாற்றியதைப் பார்த்த போது, இந்த நாட்டிலே ஆங்கிலமும் தமிழும் இணைந்து எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை நாம் எல்லாம் பார்த்தோம். அந்த உரையிலே நாடு நலம் பெறுவதற்கு என்னென்ன சொல்ல

1990 சனவரி 23] [திரு. எம். இராமச்சந்திரன்]

வேண்டுமோ அவற்றை முன்னுரையாகத் தந்து, இந்த அரசு ஆண்டினுடைய முதல் மாதத்திலேயே என்னென்ன ஆரம்பிக்க வேண்டுமென்று நினைக்கிறதோ அவற்றை எல்லாம் மிகச் செழுமையாக சொல்லியிருக்கிறார்கள். எங்கள் தலைவர் சொன்னது போல்—மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று சொல்வார்களே அது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தபோது மாநில சுயாட்சி வேண்டும் என்கின்ற தீர்மானத்தை இந்த அவையிலே வைத்து காத்திருந்தார்கள். அதற்குப் பின்னாலே எத்தனை ஆண்டுகள் போனாலும் அந்த மாநில சுயாட்சி மத்திய அரசினால் வழங்கப்படவில்லை. அதை நமது ஆளுநர் உரையிலே இண்டர்—ஸ்டேட் கௌன்சில் என்று சொல்லி அதிலே வழிமுறைகளைத் தேடி மாநிலத்திற்கு சுயாட்சி வழங்குகின்றோம் என்ற உரிமையைத் தேசிய முன்னணி அரசு நடைமுறைப்படுத்துவதை பாராட்டுகிற வகையில் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருப்பதை உண்மையிலேயே வரவேற்கிறோம். எங்கள் தலைவர் அவர்கள் உறவுக்கு கை கொடுப்போம். உரிமைக்கு குரல் கொடுப்போம் என்று சொல்வார். அதேபோலத்தான் இன்று தமிழகத்தில் இருக்கிற நமது ஆட்சி என்றைக்கும் உரிமையை கேட்கின்றபோது கேட்கும். அதோடு உறவு கொள்கிறபோது கொள்ளும் என்கின்ற நிலை இருந்தது. அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல நாட்டிலே என்னென்ன தேவை என்ற நிலை வருகின்றபோது மக்கள் வாழ்வதற்கு அரிசி மிக முக்கியம் என்பதைத் தெரிந்து அந்த அரிசியினுடைய விலையை உயர்த்தாமல் இருந்தது. இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது அரிசியினுடைய விலையை மத்திய அரசு உயர்த்தினார்கள். ஆனால் மாநில அரசு அந்த விலையை உயர்த்தினால் ஏழை எளிய மக்கள், வாங்கி சாப்பிடுகின்றவர்கள் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை வரும் என்கிற காரணத்தினால் மத்திய அரசு உயர்த்தச் சொன்ன அரிசியின் விலையை உயர்த்தாமல் எப்போதும் இருக்கிற நிலையிலேயே அந்த அரிசியைத் தந்தார்கள். அந்த இழப்பை இந்த அரசு ஏற்றது. அதே போல நாங்கள் எல்லாம் பார்த்தோம். இதற்கு முன்னாலே இருந்த அரசு கார்டுகளை வழங்கியிருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகின்ற அந்த அட்டை சரியாக வழங்கப்படாமல் இருந்தன. எத்தனையோ குடும்பங்கள் அதிகமான வருமானங்களைப் போட்டு வாங்கின. 300 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி தருகிறோம் என்று சொன்னார்கள். இந்த அரசு 5 தடவை என்று அறிவித்தது. நான்கு தடவை கொடுத்திருக்கிறது. அதேபோல் இந்த அரசு அறிவிக்கின்றபோது கிட்டத்தட்ட ஏழை எளிய மக்கள் என்னுடைய தொகுதியில் கூட 750 ரூபாய் அன்றாடம் உழைப்பவர்கள் பெற்று வந்தார்கள். அந்தக் கார்டுகள் எல்லாம் கிட்டத்தட்ட மூன்று கிராமங்கள் பெற்றிருந்தன. ஆனால் அவைகளையெல்லாம் நான் சொல்வதற்குப் பதிலாக எப்படியோ எங்களுடைய தலைவர்

முதலமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டு ஆயிரம் ரூபாய்க்கு வருமானம் உள்ளவர்களுக்கெல்லாம் அரிசி வழங்கும் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் எங்களை விட எவ்வளவு தெளிவாக மக்களைப் புரிந்து வைத்திருக்கிறார்கள், மக்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதை நமது முதலமைச்சர் அவர்கள் தெரிந்து வைத்துக்கொண்டு பணியை ஆற்றுகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறபோது மிகச் சிறப்பாக ஒரு அரசு செயல்படுகிறது என்பதை வரவேற்கவேண்டுமே தவிர, ஏதோ காழ்ப்புணர்ச்சியில் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் எதிரிக் கட்சிகள் போல் நடந்து கொள்கிறார்கள்.

16-30 மணி

மின்சாரம், மின்சாரம் என்று சொன்னார்கள். உயர், உச்ச நீதிமன்றம் வரையிலே சென்று தடைப்பட்டிருந்த இடத்தை எண்ணூரிலே அனல் மின் நிலையம் அமைக்கவேண்டுமென்று சொல்லி எங்களுடைய தலைவர் ஆட்சி வந்த பின்னாலேதான் அந்த இடத்தைச் சரியாகப் பறிமுதல் செய்து, இப்போது மின் சாரத்திற்கு ஏற்ற வகையிலே நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் இந்த ஆட்சியில் நடைபெறுகின்றனவா, இல்லையா? இந்த நல்ல காரியங்கள் ஆட்சியிலே நடைபெறவில்லையா, நெஞ்சிலே கை வைத்துப் பார்த்துச் சொல்லுங்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் காவிரி நீர்ப் பங்கீட்டைப் பற்றி எப்படிப்பட்ட நிலையில் 1924-இல் அந்த அக்ரிமெண்ட்—ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாமல்—எங்களுடைய தலைவர் தஞ்சாவூர் ஜில்லா, எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதற்குப் பின்னாலே எத்தனை தடவைகள் எங்களுடைய தலைவர் கர்நாடகத்தோடு பேசியிருக்கிறார் என்பதையும், அதற்குப் பின்னாலே இருந்த அரசு எத்தனை தடவை அதை நடைமுறைப்படுத்தாமல், கூட்டங்களைக் கூட்டுகிறபோது போகாமல் எத்தனை தடவை கலைந்திருக்கிறது என்பது நீங்கள் எல்லாம் அறிந்த ஒன்று. அப்படிப்பட்ட காவிரிப் பிரச்சினையைச் சொல்லி இருக்கிறது இந்த ஆளுநர் உரையில். மின்சாரத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மக்களுக்கு என்னென்ன தேவை என்பதைத் தெரிந்து வைத்திருக்கிற அரசு, அரிசிப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

சம உரிமை என்று சொல்கிறார்கள். மகளிர் எல்லாம் சம பங்கு பெறவேண்டும். மகளிர் எல்லாம் எப்படியெல்லாம் உத்தியோகத்திற்கு வரவேண்டுமென்று எண்ணுகிற வகையில் 30

சதவிகிதத்தை மகளிருக்குத் தரவேண்டும் என்று சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்து சட்டம் இருக்கிறது. ஆனால், பெண்களுக்குள்ள உரிமை அதிலே தரப்பட வில்லை. தரப்படாத அந்த உரிமையை இந்த அரசு ஆட்சி ஏற்ற பின்னாலே, அவர்களுக்கும் சம பங்கு உண்டு—எத்தனையோ பெண்கள் மடிகிறார்கள். எத்தனையோ பெண்கள் தனக்கு சொத்துக்களை வாங்கி வரவில்லை என்று கணவன்மார்களால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற அப்படிப்பட்ட சூழ்நிலையை அறிந்த எங்கள் தலைவர் சமபங்கு தந்து விட்டால், உரிமையை நீ பெற்றுக்கொள், சொத்தில் பாதியைப் பெற்றுக்கொள் என்றும், உரிமை தங்களுக்கு இருக்குமானால், அந்தச் சூழ்நிலை அந்தப் பெண்ணுக்கு வராது என்ற காரணத்தால், அந்தச் சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னாலே 6 கோடி ரூபாயை ஒரு ஆண்டுக்கு ஒதுக்கியிருந்தார்கள். 8-ஆவது வரை படித்த பெண்களுக்கு அதை ஒதுக்கி, திருமணச் செலவுக்காகத் தரவேண்டுமென்ற திட்டத்தைத் தந்தார்கள். அதிலே கிட்டத்தட்ட 5 கோடி சில்லறை இப்போது தரப்பட்டிருக்கிறது. எத்தனை ஏழை எளிய குடும்பங்கள் அந்த 5,000 ரூபாயைப் பெற்று, திருமணத்தை முடித்து, மகிழ்ந்து இருக்கிறார்கள் என்பதை இந்த எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ளவில்லையா? அல்லது மக்கள்தான் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்களா?

உங்களுடைய ஆட்சிக்கு இப்போது மக்கள் பாராளுமன்றத் தேர்தலிலே புறம்பாக வாக்களித்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். 1980-லே புறம்பாக வாக்களிக்கவில்லையா? 3 ஆண்டுகள் ஆண்ட பின்னாலேதானே புறம்பாக வாக்களித்து நீங்கள் தோற்றீர்கள்? ஆனால், நாங்கள் 10 மாதங்களில் எத்தனையோ திட்டங்களை இந்த மக்களுக்காகச் சொல்லியிருக்கிறோம். எத்தனை பேர் அமைச்சர்களாக இருந்தவர்கள் இந்தச் சட்டமன்றத்திற்குத் திரும்பி வந்திருக்கிறார்கள்? எத்தனை பேர் எதிரணியில் இருப்பவர்கள் திரும்பி வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள், எத்தனை பேர் அமைச்சராக இருந்தவர்கள் எல்லாம் அதற்குப் பின்னாலே இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள்? வர முடியவில்லையே—என்ன காரணம் என்று எண்ணிப் பார்த்தீர்களா? ஆகவே, இதற்குப் பின்னாலே—அரசியல் நிர்ணயச் சட்டத்திலே சொல்லி இருக்கிறார்களே, 5 ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் வரும் என்று. அப்படி 5 ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் வரும் போது பாருங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி திரும்ப வரும். எங்கள் தலைவர் திரும்ப முதலமைச்சராக வருவார். அந்தச் சூழ்நிலை உங்களுக்கு எல்லாம் தெரியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, எங்கள் தலைவர் பொறுப்பேற்ற பின்னாலே அதிகாரிகளைக் கூப்பிட்டுச் சொன்னார், ' நான் கார் வேகத்தில் என்னுடைய பணியைத் தொடர்கிறேன். என்னுடைய வேகமான சூழ்நிலையில் வேகமாகப் பணியாற்றுகிறேன். நீங்கள் குதிரை வேகத்திலாவது என்னைப் பின் தொடருங்கள்' என்று சொன்னார். எத்தனையோ திட்டங்களை எங்கள் தலைவர் முடுக்கிவிட்டு வேலைகளைப் பார்க்கிறார். அந்த வேலைகள் சில காரணங்களினால், அதிகாரிகளுடைய சூழ்நிலை காரணமாக, சோம்பேறித்தனம் காரணமாக இன்னமும் கிடப்பில் கிடக்கிறதே தவிர, எங்கள் தலைவர்—24 மணி நேரமும் உழைக்கிற ஒரு தலைவரைப் பெற்றிருக்கிறோம். நாங்களெல்லாம் அவரை நினைத்துப் பார்க்கிறபோது அதிலே ஒரு வீசம் அளவுகூட நாங்கள் உழைக்கிறோமா ? அந்த அளவுக்கு செயல்பட முடிகிறதா என்கின்ற எண்ணத்தை நாங்கள் பார்க்கிறோம். அந்த அளவுக்குப் பணியாற்றுகின்ற ஒரு தலைவரை நீங்களெல்லாம், தாகத்துக்கு வெய்யிலிலே வருகிறபோது இளநீரைத் தர வேண்டாம்—தண்ணீரைத் தாருங்கள்—தட்டிக் கொடுங்கள். அவர் எப்படியெல்லாம் உழைக்கக் காத்திருக்கிறார் ; உரிமைகளையெல்லாம் உங்களுக்கு அவர் தரக் காத்து இருக்கிறார். எதிர் அணியில் உள்ளவர்களெல்லாம், நீங்களெல்லாம் சொல்வதைக் கேட்டு,

'' இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் ''

என்பதற்கேற்ப, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகாமல், நீங்களெல்லாம், எதிர்க் கட்சிகள் எல்லாம் அவரை எதிரியாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அப்படியெல்லாம் நினைக்காமல், நீங்களெல்லாம் எண்ணிப்பார்த்து, எங்கள் தலைவர் பணியாற்றுவதற்கு நீங்களெல்லாம் ஒத்துழையுங்கள். ஆகவே, ...

16-35 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒருநாளும் முதல்வரை எதிரியாக நினைக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இதே பீட்டர் ஆல்போன்ஸ்—தான் உரையாற்றுகின்றபோது எங்கள் தலைவர் 1954-ஆம் ஆண்டு வாக்கிலே எழுதிய வசனங்களையெல்லாம் இந்த மன்றத்திலே படித்தார். ஆகவே, அவரே சொல்கிறார் என்று சொன்னால், எங்கள் தலைவருடைய உழைப்பை நீங்களெல்லாம் மதியுங்கள்

என்றுதான் நாங்கள் சொல்கிறோம். வேறு ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், நல்ல திட்டங்களையெல்லாம் சொல்லுகிற ஆளுநர் உரை, அதைச் செயல்படுத்துகின்ற இந்த அரசு, அப்படி செயல்படுத்துகிற அரசினுடைய முன்னுரைதான் இந்த ஆளுநர் உரை. ஆகவே, இதையே ஒரு நல்ல உதாரணமாக எடுத்துக்கொண்டு இதிலே அனைத்து நல்ல காரியங்களும் அடங்கி இருக்கிறது. மின்சாரம் இருக்கிறது; தொழில் இருக்கிறது; தண்ணீர் இருக்கிறது. பெண்களுக்குத் தேவையான உரிமைகள் இருக்கிறது. அத்தனையும் இருக்கிற ஆளுநர் உரையை நீங்கள் குறை சொல்லுகிறீர்கள். ஆளுநர் உரையைப் படிக்காமல் எழுந்து போகிறவர்களெல்லாம் ஆளுநர் உரையைக் குறை சொல்கிறீர்கள். அப்படிப் படிக்காமல், படிப்பதை கேட்டாவது பின்னாலே பேசியிருந்தால்கூட ஓரளவு ஒத்துக்கொள்ளலாம். ஆனால், படிக்க ஆரம்பித்தவுடனே கவனிக்காமல் எழுந்து போகிறீர்கள். ஆகவே ஆளுநர் உரைக்கு நன்றிகூறி, பேசுவதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்திற்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆதரவைத் தெரிவித்து நான் பேசத் தொடங்குகிறேன். இந்த அறிக்கையிலே புதிய அரசு, மத்தியிலே அமைந்திருக்கிற தேசிய முன்னணி அரசின் தொடக்க நடவடிக்கைகளுக்கு வரவேற்பு அளிக்கப் பெற்றுள்ளது, உண்மையிலேயே பாராட்டுதற்குரிய ஒன்று. இது தேசிய நோக்கோடு, தேசிய கண்ணோட்டத்தோடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அருமை நண்பர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்பு தந்தார்கள்; பாராட்டுகிறேன். ஆனால், தேசிய முன்னணி அமைந்தபோதே, அவருடைய தலைவர் ராஜீவ்காந்தி அவர்கள் என்ன பிரச்சாரத்திலே ஈடுபட்டார்? இந்தி வெறியர்களோடு தி.மு.க. கூட்டு சேருவதா என்று இங்கே வந்து பேசினார்கள். அங்கே, உத்திரப்பிரதேசத்திலே போய், இந்தியை எதிர்க்கிற கருணாநிதியோடு வி. பி. சிங் கூட்டு சேருவதா என்று பேசினார்கள். அந்த இரட்டை நாக்கு சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துத்தான் இன்றைக்கு தேசிய முன்னணியினுடைய அரசு அமைந்து இருக்கிறது.

அதைப்போல கவர்னர்கள் ராஜினாமா பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். ராஜீவ் காந்தியினுடைய ஆட்சியிலே கவர்னர்கள் குடியிருக்கக்கூடிய ராஜ்பவனங்களெல்லாம் ராஜீவ் பவனங்களாக மாற்றப்பட்டிருந்ததை மாற்றி, உண்மையிலேயே அவை ராஜ் பவனங்களாக செயல்படுவதற்கான நடவடிக்கைதான் இது. 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையிலே 17 ஆம் தேதி எடிட்

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 சனவரி 23

டோரியல் (தலையங்கம்) தீட்டி இருக்கிறார்கள். டைம்ஸ் ஆப் இந்தியா காங்கிரஸை எதிர்க்கிற கட்சி பத்திரிகை அல்ல. அதிலே சொல்லியிருக்கிறார்கள் —

Some present incumbents like Mrs. Kumedbon Joshi in Andhra Pradesh where chosen mainly for their extraordinary willingness to do the will of the Congress Government at the Centre if this entailed riding rough shod over the erstwhile Telugu Desam set up. Such partnership by a Governor represents the misuse of the office and does great harm not only to it but to the Centre-State relations as well. இதுபோன்று கட்சி சார்பிலே மாநில அரசுக்கு எதிராக செயல் படக்கூடியவர்களாலே அந்த கவர்னர் பதவிக்கு மட்டுமல்ல, மத்திய மாநில உறவுகளுக்கே பெரும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே புதிய கவர்னர்கள் நியமிக்கப்படுகிறபோது, எந்த மாநிலமாக இருந்தாலும், அந்த மாநில அரசோடு ஆலோசனை கலந்துதான், நியமிக்கப்பட வேண்டுமென்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். இன்றைக்கு அமைந்திருக்கிற தேசிய முன்னணி அரசை காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கிறார்கள் பதவி பறிபோனதால், அது நமக்குப் புரிகிறது. ஆனால், இதனுடைய கொள்கைகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பது ஏன் என்பது தான் நமக்குப் புரியாத ஒன்று. பஞ்சாப் பிரச்சினையிலே ஒரு அனைத்துக் கட்சி மாநாடு கூட்டப்பட்டது. அதிலே எல்லோரும் கலந்துக் கொண்டார்கள், அதிலே கருத்தொற்றுமை ஏற்பட்ட போது, இணக்கம் ஏற்பட்டபோது காங்கிரஸ் மட்டும் அதை எதிர்த்தது.

16-40 மணி

அண்ணா தி.மு.க. வைச் சார்ந்திருக்கக்கூடிய மக்களவை, மாநிலங்களவையின் தலைவர்கள் அதற்கு ஆதரவு தெரிவித்தார்கள். அப்படி ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினைகளில் சுமுகமான முடிவு காணக்கூடிய நிலைமைகளை எதிர்க்கக் கூடிய காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்துகொண்டு, இந்த தேசிய முன்னணி அரசை எதிர்ப்பது ஏன் என்று நமக்குத் தெரியவில்லை. அதைப் போல, மாநில சுயாட்சிக்கு சில ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கிறார்கள். ஆனால் அ. தி. மு. க.வைச் சேர்ந்தவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்று புரியவில்லை. காவிரி நீர்ப் பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் கூட்டியபோது, இது காலந் தாழ்த்துகிற பிரச்சினை, உடனடியாக டிரிபியூனலுக்கு

அனுப்பவேண்டுமென்று கூறி அந்தக் கூட்டத்தில் அ. தி. மு. க. வினர் கலந்துக் கொள்ளவில்லை. ஆனால் இன்றைக்கு உடனடியாக டிரிபியூனலுக்கு விடவேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்துகிற நேரத்தில், கர்நாடகத்தில் புதிதாக அமைந்திருக்கிற காங்கிரஸ் அமைச்சரவையின் முதலமைச்சர், அதை எதிர்க்கிறார், அவரோடு சேர்ந்துக் கொண்டு தேசிய முன்னணி அரசையும், அதில் அங்கம் வகிக்கிற தமிழக அரசையும் ஏன் அ. தி. மு. க. எதிர்க்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்படிப் பிரச்சினைகள் பல இருந்தாலும் சரி, இதையெல்லாம் காங்கிரஸ்காரர்கள்—உண்மையான காங்கிரஸ்காரர்களாக இருந்தால்,—மொழிவழி மாநிலங்கள், அனைத்து தேசிய மொழி வளர்ச்சி, மாநில சுயாட்சி, தடுப்புக் காவல் சட்டம் என்று ஆள்தூக்கிச் சட்டங்களுக்கு எதிர்ப்பு, மதச் சார்பின்மை, உழுபவனுக்கு நிலம், சோஷலிசம் போன்றவைகளுக்கான நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் ஒரிஜினல் காங்கிரஸ்காரர்களின் கோஷங்களாக இருந்தன. காலையில் கூட செங்கை சிவம் பேசும்போது குறிப்பிட்டார். பக்கா காங்கிரஸ்காரர்கள், சொக்காய் காங்கிரஸ்காரர்கள் என்று, சுதந்திரம் வந்த பிறகு, காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு, கதர் சட்டையையும் குல்லாவையும் போட்டுக் கொண்டு வந்தவர்கள்தான் சொக்காய காங்கிரஸ்காரர்கள், நான் நண்பர் சொக்கரைச் சொல்லவில்லை, என் எஸ். ஆர். பி. யையும், சிங்காரம் அவர்களையும் கூடச் சொல்லவில்லை. அப்படிப்பட்டவர்கள் எதிர்க்கலாம். ஆனால் காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள், இந்தக் கொள்கைகளை வலியுறுத்த வேண்டியவர்கள் எதிர்க்கிறார்கள்.

அதைப்போலவே, தொலைக்காட்சிக்கும், வானொலிக்கும்' தன்னாட்சி தருவது. தர மறுத்தது காங்கிரஸ் ஆட்சி, தர முன்வந்திருக்கிறது தேசிய முன்னணி ஆட்சி. இதை ஏன். அ. தி. மு. க. வினர் எதிர்க்கிறார்கள் என்று நமக்குப் புரியவில்லை. ஆகவேதான் சொல்கிறோம், இந்த சந்தர்ப்பவாதக் கூட்டை நீங்கள் தொடரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உறவைப் பொறுத்து உதடுகளின் உச்சரிப்பு மாறுவது உங்களுக்குத்தானே தவிர, எங்களுக்கு அல்ல என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்போல, ராஜீவ் காந்தியோடு இன்றைக்கு உறவு இருக்கிறபோது, நீங்கள் ஒன்றைப் பேசுகிறீர்கள். உறவு இல்லையென்று சொல்கிறபோது திராவிட பாரம்பரியம் ஊழல், இருண்ட ஆட்சி என்று ராஜீவ் காந்தி பேசினார். நீங்கள், உனக்கு என்ன யோக்கியதை, போபர்ஸ் ஊழல் தெரியாதா என்று பேசினீர்கள். ஆனால் இப்போது உறவு ஏற்பட்ட பிறகு, போபர்ஸ் ஊழலாவது, வெங்காயமாவது ராஜீவ் காந்தி சுத்தம் சுத்தம் பரிசுத்தம் என்று பேசுகிறார்களே, இந்த சந்தர்ப்பவாதத்தைப் போய் நிரந்தர உறவு என்று சொல்கிறீர்களே என்பதுதான் எங்களுக்கு வருத்தம் தருகிறது.

அதைப்போல, இன்றைக்கு அரசினுடைய அறிக்கையில் சொல்கிறபோது, சிலவற்றை நான் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

கடந்த ஆண்டு ஆளுநர் உரையில், அரசாங்க இயந்திரத்தைப் பற்றி ஒரு வரி சொல்லப்பட்டிருந்தது. அரசு வகுக்கிற திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றுகிற வகையில் நிர்வாக இயந்திரம் முடுக்கப்படும் என்று. மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையில் நிர்வாக இயந்திரம் புதுக்கோலம் பூண்டு, அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு. ஏற்ற மிகு முடிவுகள் செய்யப்பட்டு, மிக விரைவில் அமுலாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. அந்த நிர்வாக அமைப்பில் எந்த மாற்றமும் இல்லை. ஏதாவது மாற்றம் நடந்திருக்கிறதா என்றால் இல்லை. தேவலோகத்தில் ஒரு வழக்கம் உண்டு என்று சொல்வார்கள். நான் நம்பவில்லை, அப்படி ஒன்று இருப்பதாகச் சொல்வார்கள். எந்த தேவன் வேண்டுமானாலும் தேவேந்திரனாக மாறி மாறி வரலாம். எப்படி வருகிறார்கள் என்று தெரியாது. ஓட்டுப் போட்டு வருகிறார்களா, பிரம்மா, விஷ்ணு, சிவன் சேர்ந்து நாமினேஷன் செய்து வருகிறார்களா என்றும் தெரியாது. ஒரு வேளை தீட்சிதர் அவர்கள் இருந்தால் சொல்லக்கூடும். ஆனால் இந்திராணி மட்டும் மாறுவதில்லையாம். அதைப்போலவே, அமைச்சர்கள் மாறலாம், எம். எல். ஏ.-க்கள் மாறலாம், முதலமைச்சர் மாறலாம், அதிகார வர்க்கம் மட்டும் மாறாமல் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அதனுடைய தொல்லைகள், அதனுடைய அலட்சியம், மெத்தனப் போக்கு, அதனால் மக்களுக்கு உருவாகிற பிரச்சினைகள் ஆகியவற்றை களைவதற்கு, அதிகார நந்தியை அகற்றுவதற்கான நடவடிக்கை இல்லை என்பதை வருத்தத்தோடு நாம் பார்க்கிறோம். அதேபோல, போலீஸ் இலாக்கா. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையே அங்கீகரிக்காத ஒரு இலாக்காவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற இலாக்கா எது என்றால், துரதிருஷ்டவசமாக, நமது முதலமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருக்கிற போலீஸ் இலாக்காதான் என்றுதான் நான் சொல்வேன். ஜனநாயக உரிமைகளுக்குத் தடைபோடுகிற நிலைமை இன்றைக்கும் நடக்கிறது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள், தர்ணாக்கள் இவற்றுக்குத் தடை சென்னையில் இப்போதும் இருக்கிறது. சென்னையில் 18 இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதில்தான் போராட்டங்கள் நடத்தலாம். பி அண்டு சி மில்லை தேசியமயமாக்க வேண்டுமென்று நான் உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்று சென்றால்,, பேசின் பிரிட்ஜ்-ல் மூடப்பட்டுக் கிடக்கிற பவர் அவுஸ் முன்னால் போய் உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்ற கொள்கையைத்தான் போலீஸ் கடைப்பிடித்துக்கொண்டு இருக்கிறது.

அந்த போலீஸ் இலாக்காவில் சென்னை மாநகர ஆணையாளருடைய துரைத்தனம் என்பது இன்றைக்குத் தமிழ்நாடு பூராவும் பரவலாகி இருக்கக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இப்படி ஜனநாயக இயக்கங்களுக்குத் தடை விதிக்கின்ற போலீஸ் துறையினை மாற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

1990 சனவரி 23] [திரு. உ. ரா. வரதராசன்]

16-45 மணி

அதேபோல கடந்த ஆண்டினுடைய ஆளுநர் அறிக்கையில் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் 6 இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகளில் விரைவான தீர்வு காண்பதற்காக மதுவிலக்குச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்த மதுவிலக்கு வழக்குகள் பெருகக்கூடிய முறையில்தான் காவல்துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. வெள்ளைச்சாராய சாம்ராஜ்யத்தைக் கலைஞர் ஆட்சியின் நடவடிக்கைகள் தகர்த்து எறிந்திருக்கின்றன. ஆனால் கள்ளச் சாராய சாம்ராஜ்யத்தைத் தகர்த்து எறிய முடியவில்லை என்று சொன்னால் அந்தக் கள்ளச் சாராய சாம்ராஜ்யத்திற்கும், காவல் துறைக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய, கடந்த கால ஆட்சியில் ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த நெருக்கம் இன்னும் முறிக்கப்படவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

அதேபோல் தொழில் கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அரசு மேற்கொண்டிருக்கிற நல்ல நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கடந்த ஆண்டு கவர்னர் அறிக்கையில் 17 மற்றும் 18-வது பாராவில் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் விரைவான தொழில் வளர்ச்சிக்காகவும் மத்திய அரசு ஏற்படுத்துகிற தொழில் முதலீடு அவசியம் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. புதிய ஆட்சி அமைந்திருக்கக்கூடிய நேரத்திலும் அதனை வலியுறுத்தி மாநில அரசினுடைய தொழில் வளர்சிக்கு மத்திய அரசினுடைய முதலீடு இல்லாமல் சாத்தியம் இல்லை என்பதை நினைவில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென்று குறிப்பிடுகிறோம்.

அதேபோல் சிறு தொழில்கள், உண்மையிலேயே வேலை வாய்ப்பைப் பெருக்கக்கூடியவை இந்தச் சிறு தொழில்கள் தான். பெரிய தொழில்களைப் பொறுத்தவரையில் எல்லாம் ஆட்களைப் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம் ஆயிரம் பேர்களைக் குறைத்தது போல, சிறு தொழில்கள் இன்றைக்கு ஒரு நெருக்கடியில் சிக்கிக்கொண்டு இருக்கின்றன. பல தொழில் பேட்டைகள் புதிதாக அமைப்பதல்ல—ஏற்கெனவே இருக்கக்கூடிய தொழில் பேட்டைகளில் பல்வேறு தொழிற்சாலைகள் மூடிக் கிடப்பதைக் காண்கிறோம். அப்படி அவை மூடிக் கிடக்கின்ற நிலைமையில் 'ரீஷெட்யூலிங் தி பேமென்ட்' என்ற அடிப்படையில் தவணை முறைகளை எல்லாம் மாற்றியமைத்து அபராத வட்டியை ரத்துச் செய்து அவை திறக்கப்படுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும்.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 சனவரி 23

இறுதியாக ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி ஸ்தூலமாக திட்டவட்டமாக இதிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு கடந்த முறை அளிக்கப்பட்ட 'பே கமிஷன்' முடிவையொட்டி மத்திய அரசின் ஊழியர்களுக்கான ஊதிய விகிதங்கள் அமலாக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இதிலே ஏராளமான முரண்பாடுகளும், குறைபாடுகளும் இருக்கின்றன. எனவே அவர்களுடைய அமைப்புக்களை அழைத்துப் பேசித் தீர்வு காணவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பேசாமலேயே தீர்வு கண்டு அறிவிப்புகள் வருகிறபோதுதான் அவர்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. அது மாற்றப்பட வேண்டும்.

குடிநீர் வடிகால் வாரியத்தில் ஒரு பிரச்சினை. அவர்களுக்கு போனஸ் அளிக்கப்படவேண்டுமென்ற பிரச்சினை உச்சநீதிமன்றம் வரையில் சென்று இருக்கிறது. உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கிறது. 24—10—1989-ல் 1983—84 லேயிருந்து அவர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதத்தில் அது வழங்கப்படவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டவுடன் அந்த வாரியம் உயர்நீதிமன்றத்திற்குத் தங்களுக்குக் கால அவகாசம் வேண்டுமென்று முதலிலே போனது. கால அவகாசம் தர முடியாது என்று நீதிமன்றம் சொன்னபோது உச்ச நீதிமன்றத்திற்கு—போனஸ் வழங்கப்பட்டுவிட்ட நிலைமையில்—உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததை எதிர்த்துச் சென்று இருக்கிறார்கள். இது தொழிலாளர் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய கொள்கை அல்ல என்கிற காரணத்தால் நீங்கள் அதை மாற்றுகின்ற வகையில் அதாவது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி அவர்களுக்கு போனஸ் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்).

*திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் துவங்குகிறேன். கழக அரசு ஏற்பட்டவுடன். தமிழ்நாட்டிற்கு எத்தனையோ நன்மைகள் செய்திருக்கிறது; சாதனைகள் செய்திருக்கிறது. எல்லோரும் அதைப்பற்றிக் கூறியிருப்பதால் நான் அதை மீண்டும் எடுத்துரைக்க விரும்பவில்லை. என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில வார்த்தைகள் மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக அரசால் அறிவிக்கப்பட்ட நிலைமையில் இன்னும் வளமாக செழிக்கவேண்டிய அளவுக்கு முன்னேற வழி எதுவும் ஏற்

1990 சனவரி 23] [திரு. எம். முத்தையா]

படவில்லை. இன்னும் முன்னேற வில்லை. 1967 ஆம் ஆண்டிலே இருந்து 1989 ஆம் ஆண்டு வரையில் அந்தத் தொகுதிக்கு ஆளும் கட்சிக்காரர்கள் யாரும் தேர்ந்தெடுக்கப்படாதது தான் அதற்குக் காரணம். எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர் எதிர்க்காட்சிக்காரர்களாகவே இருந்தார்கள். ஆகவே அந்தத் தொகுதி முன்னேறவில்லை. மற்ற தொகுதிகள் பொறுத்தவரையில் எப்படி இருந்தாலும் ஒட்டப்பிடாரம் தொகுதி முன்னேற வேண்டும். ஏனென்றால், விடுதலைக்காக முதல் வித்திட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பகுதி அது. அதற்குப் பிறகு வந்த கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் பிறந்து வாழ்ந்த பகுதியும் அதுதான், அந்தப் பகுதியில்தான் விடுதலை வீரர் வாஞ்சி நாதன் கலெக்டர் ஆஷ் துரையை மணியாச்சியில் சுட்டுக் கொன்றான். அப்படிப்பட்டவர்கள் வாழ்ந்த தொகுதி இன்றைக்குப் பின்தங்கி இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் 1967-லே இருந்து அங்கே தொடர்ந்து எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள் 1989 வரை. எனவே மிகவும் தலை வணங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அரசால் பின் தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதி, அது இன்னும் முன்னேற வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது முதல்வர் அவர்கள் 1975 ஆம் வருடம் ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த பாஞ்சாலம் குறிச்சிக்கு வந்திருந்த போது ஒரு வாக்கு அளித்தார்கள். அதாவது இந்த தொகுதியை முன்னேற்றுவதற்காக நான் இங்கே ஒரு நூற்பாலை கட்டுவேன் என்று சொன்னார்கள். அதுபோலவே அந்த இடத்தில் பாஞ்சாலம் குறிச்சிக்கு அடுத்த இடத்தில் ஒரு இடம் சர்வே செய்யப்பட்டு வரைபடம்கூட தயாராகி இருக்கிறது. 1976-ல் ஆட்சி கலைக்கப்பட்டதால் அந்த நூற்பாலை திட்டம் நின்றுவிட்டது. எனவே அதை நிறைவேற்றி தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

16-50 மணி

எனது தொகுதியில் நெடுஞ்சாலைகள் எல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. அதையெல்லாம் சரி செய்யவேண்டும். எல்லாப் பேருந்துகளும் புறப்பட்ட இடத்திலிருந்து போய் சேரவேண்டிய இடத்தில் போய் சேருமா என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே அந்த நெடுஞ்சாலைகள் அத்தனையையும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு உத்தரவைப் பிறப்பித்து அந்த நெடுஞ்சாலைகளை சரிசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கடந்த 13 ஆண்டுகளாக

அங்கே எந்த சாலையிலேயும் எந்தவிதமான பராமரிப்பும் செய்யவில்லை. இப்போது பெய்த மழையினால் அவைகள் மிகவும் பழுதடைந்துவிட்டன. ஆகவே தான் உடனடியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கி எல்லா சாலைகளையும் பழுதுபார்த்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பழுதடைந்து இருக்கின்றன. அதைப் பற்றிக் கேட்டால் ஒன்றியத்தில் நிதி இல்லை என்று சொல்கின்றார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி முன்னேற்றத்திற்கான வழிவகைகளையும், எல்லாப் பணிகளையும் எல்லா அமைச்சர்களும் செய்ய வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1990 ஆம் ஆண்டின் முழு ஆண்டிற்கும் அரசு செய்ய இருக்கிற திட்டங்களைக் கோடிட்டுக் காட்டிடவும், வரப் போகின்ற வரவு செலவு அறிக்கையில் எவை எல்லாம் அதி முக்கியமாக அரசால் கருதப்படுகின்றது என்பதனை குறிப்பாகக் காட்டவும், சொல்ல விடுபட்டவைகளில் எவையெல்லாம் எதிர்க் கட்சிகளால் முக்கியமானவைகளாக கருதப்படுகின்றன என்பதனை பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும், பட்ஜெட்டுக்கு முன்னோடி கூட்டத் தொடராக அதாவது பிரி பட்ஜெட் செஷனாக அமைந்த இந்த கூட்டத் தொடரில் என்னுடைய கருத்துக்களை கூறுவதில் மன நிறைவு கொள்கிறேன்.

ஆனால் ஆளுநர் அவர்கள் உரையில் வெறும் பத்திரிக்கை அறிவிப்புகளாக வரவேண்டிய ஒரு சில உற்பத்தி புள்ளி விவரங்களும், மத்திய அரசுக்கு தங்கள் கட்சியிலிருந்து நன்றி அறிவிப்புத் தீர்மானமாக போட்டு அனுப்ப வேண்டிய சில விஷயங்களும் ஆண்டுக் கொள்கைக்கு எப்படி சம்பந்தப்பட்டவைகள் என்று விளங்கவில்லை. மாறாக ஒரு மாநிலம் முழுவதும் பாதிக்கின்ற ஒரு சில மக்கள் பிரச்சினைகள் தொட்டுக் கூடப் பார்க்கப்படவில்லை. எனினும் வரவேற்க ஒரு சில செய்திகளாவது இருக்கின்றனவே என்று ஆறுதல் அடைகிறேன்.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் நல்லது செய்ய முயலும் போது அதனை வாழ்த்தி வரவேற்றும், தவறு என்று கருதுவதை உரிய முறையில் சுட்டிக் காட்டி திருத்தமுயலும் எதிர்க்கட்சிகளால்தான் ஒரு வளமான வலிவான ஜனநாயகம் அமையும் என்ற கருத்து கொண்டுள்ளோம்.

1990 சனவரி 23] [திரு. ரா. சொக்கர்]

பெரிய தொழில்களை ஊக்கப்படுத்த மாநில அளவில் இந்த அரசு அமைத்திருக்கும் குழுவைப் போல, மாவட்டந் தோறும் அது போன்ற குழுக்கள் அமைக்கப்பட்டால்தான் பல சிறிய தொழில்கள் உண்டாக்குவது போக, ஏற்கனவே இருக்கக்கூடிய சிறிய தொழில்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வழி காணுகின்ற ஒரு குழுவாகவும் அது இருத்தல் வேண்டும்.

அடுத்து கவர்னர் அவர்கள் உரையில் 8-வது பத்தியிலே கூறப் பட்டிருக்கின்ற ஒரு விஷயம் மிகவும் சுவையானது. நம் 234 சட்ட மன்ற உறுப்பினர்கள் மூலமாக 6 கோடி தமிழக மக்கள் காதிலேயும் அலுங்காமல், குலுங்காமல் காதிலே பூ சுற்றப்படு கின்றது. மின்வெட்டு அறவே நீக்கப்பட்டு விட்டதாம். ஒரு முழுப் பூசணிக்காயை சோற்றிலே வைத்து மூடப் பார்த் திருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் நன்றாக பேசுவதை நான் பல முறை கேட்டிருக்கிறேன். இப்போது பேசுவது கன்னிப் பேச்சு அல்ல. கன்னிப் பேச்சு என்றால் தான் எழுதிய பேச்சாக படிக்கலாம். இப்போது பேசக் கூடிய பேச்சு இந்த அவையில் முழுவதும் எழுதி யது, அப்படியே படிப்பது என்பது இயலாமை காரணமாக ஏற் றுக் கொள்ளக் கூடியது என்பதை உணர்ந்து ஏற்ற முறையைப் பின்பற்றுவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுக்கு உரிய மரியாதை யோடு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இரண்டு நாட்க ளுக்கு முன்பாக இதே கேள்வி எழுப்பப்பட்டபோதுதான், எழுதி வைத்ததைப் படிக்கலாம் என்று தலைவர் தீர்ப்புக் கூறினார். இதை நேற்றைக்கு முன்தினம் கூறினார்.

16-55 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஓர் உறுப்பினர் செய்தார் என்பதற்காக நானும் செய்தேன் என்று உரிமையோடு சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சொக்கர் அதைத் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார். திரு. சொக்கர் என்ன சொல்கிறார் என்றால், நம்முடைய பேரவைத் தலைவர் என்ன சொன்னதாக சொல்கிறார் என்றால், அவரே எழுதியதை அவரே படிக்கலாம் என்று சபாநாயகர் சொன்னதாக புரிந்து கொண்டிருக்கிறார். ஆகவே, ஆள் வைத்து எழுதாமல் அவரே

எழுதினால் அதைப் படிக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். அது அப்படி அல்ல. சில குறிப்புகளைப் படிக்கலாம். பத்திரிகையில் வருகின்ற செய்திகளைப் பார்த்துவிட்டு சொல்லலாம். ஆகவே, அவர் எழுதியதை அவர் படிப்பேன் என்று சொல்வதும், மற்றவர் எழுதுவதை நான் படிக்க மாட்டேன் என்று அவர் சொல்வதும் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. சொக்கர் தொடர்ந்து பேசலாம்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, தமிழகத்தில் மின் வெட்டு முழுவதுமாக நீக்கப்பட்டதாக தமிழ்நாட்டில் வாழ்கிற 6 கோடி மக்களுக்கும் இந்த சட்ட மன்றத்தில் இருக்கிற 234 சட்ட மன்ற உறுப்பினர்கள் மூலமாக காதிலே பூ சுற்றப்பட்டிருக்கிறது. மின் வெட்டு முழுமையாக நீக்கப்பட்டது என்பது முழுக்க முழுக்க தவறான கருத்தாகும். இப்போது நீக்கப்பட்டிருப்பது எனர்ஜி கட் மட்டும்தான். மின் வெட்டிலே இரண்டு உண்டு. ஒன்று எனர்ஜி கட், மற்றொன்று டிமான்ட் கட். அதாவது ஆயிரம் கே. டபிள்யூ.ஏ. கனெக்டட் லோட் ஆக இருந்தால் 800 கே. டபிள்யூ.ஏ. மட்டுமே இப்போது உபயோகிக்க முடியும். ஆனால் யூனிட் வேண்டுமானால், எவ்வளவு தேவையானாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், பணம் வாங்குவதற்காக ஒரு ஜி.ஓ. போட்டுவிட்டு, அந்தப் பணத்தைப் பெறுவதற்காக ஆதரைசேஷன் கொடுக்காமல் இருப்பது போல இருக்கிறது. சுருக்கமாக சொன்னால் இது சாந்தி முகூர்த்தம் இல்லாத ஒரு கல்யாணம் என்றே நான் நினைக்கிறேன். அடுத்தபடியாக, அகில இந்திய அரசில் பஞ்சாப் பிரச்சினைப் பற்றியும், ஜம்மு காஷ்மீர் பிரச்சினைப் பற்றியும்.....

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, சாந்தி முகூர்த்தம் என்பது கல்யாணத்திற்கு பின்புதான் வரமுடியும். எப்படி உறுப்பினர் இவ்வாறு பேசுகிறார் என்று விளங்கவில்லை. (சிரிப்பு).

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்யாணம் முடித்து சாந்தி முகூர்த்தம் இல்லாமல் இருக்கும் திருமண வாழ்க்கை என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். நான் சொன்னதனுடைய அர்த்தம் அதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தன் நிலையைச் சொல்லிவிட்டார். (சிரிப்பு).

1990 சனவரி 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொக்கருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு சொக்கி போய் வந்திருக்கிறேன். (சிரிப்பு) ஏனென்றால் கல்யாணம், சாந்தி முகூர்த்தம் பற்றி அவர் பேசிக்கொண்டிருந்தார். மறுபடியும் 'விருதுநகருக்கு போய்' அங்கே அவர் பேச இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். ஜி.ஓ. போட்டு விட்டு, 'authorisation' தராதது மாதிரி ஒன்றைச் சொன்னார். அதற்கு ஒரு உவமையாக சாந்தி முகூர்த்தம் இல்லாமல் கல்யாணம் செய்வது மாதிரி என்று சொன்னார். பொதுவாக கல்யாணம் செய்பவர்கள் பிறகுதான் சாந்தி முகூர்த்தம் வைத்துக் கொள்வார்கள். முதலில் சாந்தி முகூர்த்தம், பிறகு கல்யாணம் என்று எண்ணுவது தவறு. முதலில் ஜி. ஓ. போட்டாலேயே நிச்சயமாக, எப்படி கல்யாணம் என்றால் பின்பு சாந்தி முகூர்த்தமும் நிச்சயமோ அது போல, ஆதரைசேஷன் வரும் பின்னால் என்பதும் நிச்சயம். இது கூடத் தெரியாமல் இந்த வாலிபர் பேசியது எனக்குப் புதுமையாக இருக்கிறது.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, களவியலுக்குப் பிறகு கற்பியலும் இருந்ததாக கலைஞர் என்னுடைய கல்லூரியில் அந்தக் காலத்தில் பேசிய பேச்சைக் கேட்டு சொக்கிப் போனவன் நான் (சிரிப்பு). பஞ்சாப் பிரச்சினையிலும், காஷ்மீர் பிரச்சினையிலும் காட்டுத் தீயினை தீக்குச்சி வைத்து அணைக்கக்கூடிய மத்திய அரசினுடைய குழந்தைத் தனத்தைப் பாராட்டி அதற்காக ஒரு பத்தியை ஒதுக்கிய நீங்கள் இன்று மாநிலம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் உள்ளாட்சியினுடைய நிதிநிலைமை பற்றி கூறாமல் விட்டு விட்டது உண்மையிலேயே எனக்கு வேதனையாக இருக்கிறது.

வெளியிலே நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை இங்கே சபையின் மரபு காத்து அந்த நிகழ்ச்சிகளைத் தொடாமல் ஒன்றிரண்டு பிரச்சினைகளை மட்டும் இங்கே கூறி அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தோடு நான் தொடர்ந்து கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இது ஒரு பிரி-பட்ஜெட் செஷன். இதுதான் திருத்த நிதி நிலையை உள்ளடக்கிய கருத்தாகும். ஆகவே, இந்த செஷனில் அவற்றை கூறிவிட்டால்தான் வரக்கூடிய பட்ஜெட் கூட்டத் தொடரிலே தேவையான நிதியினை ஒதுக்கி வழிவகை காண்பதற்கு உங்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதால், அந்தக் கருத்திலே இதனை நான் குறிப்பிடுகின்றேன். நகராட்சிகளிலே பல காலக் கட்டங்களிலே செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல், செய்ய வேண்டாததை செய்த காரணத்தாலே நிதி நிலைமை இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

முதலாவதாக 1940-ல் வாகன வரிகளில் இருந்து வரக்கூடிய வருமானம் நகராட்சிகளிலிருந்து அரசுக்கு மாற்றப்பட்டது. 1971-ல் குன்குவியல் ரிவிசன் ஏதோ ஒரு காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டது. 1971, 1978-க்கு உட்பட்ட விற்பனை வரிச் சட்டத்தில் சர்ச்சார்ஜிலிருந்து வர வேண்டிய வருமானம் ஏனோ அமலுக்கு வரவில்லை.

17-00 மணி

புரஃபஷனல் டாக்ஸிலும் நகராட்சிகளுக்கு வரக்கூடிய வருமானம் குறைபட்டுவிட்டது. இப்படிப் பல்வேறு நகராட்சிகளுக்கு வரவேண்டிய வருமானம் குறைப்பட்டுவிட்ட நிலையில் தமிழக அரசு பொறுப்பேற்ற உடன் அரசு ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி சம்பளத்தைக் கூட்டிய காரணத்தால் அந்த சம்பள உயர்வு அறிவித்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள். மதுபானங்களிலிருந்து அதிகமாக எதிர்ப்பார்க்கக் கூடிய வருமானத்திலிருந்து அது சமாளிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நகராட்சிகளுக்கு அதுபோன்று வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்கான வழி வகைகள் எதுவும் இல்லாத காரணத்தால் அதனுடைய இழப்பு முழுவதையும் அரசே ஈடுகட்டிக் கொடுக்கக் கூடிய அளவிலே அவர்கள் செய்யவேண்டும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 70 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. அதில் கல்வி மானியத்திலிருந்து கிடைக்கக்கூடிய 15 கோடி ரூபாயைக் கழித்துவிட்டால் 55 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். இதையும் நகராட்சியினுடைய வருமானத்திலிருந்து ஓரளவு ஈடுகட்டிக்கொள்ள முடியும். 106 நகராட்சிகளிடமிருந்து சொத்துவரியாக மொத்தம் 40 கோடி ரூபாய் வருகின்றது. அதில் 75 சதவீதத்தை நகராட்சிகள் அரசுக்குக் கொடுத்து விட வேண்டுமென்று சொன்னால் 40 கோடியில் 75 சதவீதம் 30 கோடி ரூபாய் போக மொத்தம் 55கோடி உங்களுக்கு நிதிநிலையை சேகரிக்க வேண்டியது. இந்த 30 கோடியையும் கழித்து 25 கோடியாவது வரக்கூடிய பட்ஜெட்டிலே நீங்கள் ஒதுக்கவேண்டும். ஆகவே இதுபோன்ற கருத்துக்களை, நாங்கள் கூறுவதை நீங்கள் ஏற்றுக்கொண்டு நிச்சயமாகத் தேவையானதை செய்து தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. நல்ல நல்ல கருத்துக்களின் அடிப்படையில் மக்களுக்கு நன்மை பயக்கும் கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டிய இந்தச் சட்டமன்றம், நாவன்மையையும் வாதத் திறமையையும் நிரூபிக்கக் கூடிய பட்டி மன்றமாக மாற்றப்படுவதை நினைத்து வேதனையிலும் நான் வேடிக்கையாகச் சிரிக்கின்றேன்.

இறுதியாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். 28–4–1989ஆம் தேதி இந்த மன்றத்தில் உரையாற்றிய பாசமிகு உறுப்பினர் எம். கே. ஸ்டாலின், அண்ணா அவர்களின் ஒரு கருத்தினை மேற்கோள் காட்டினார். அதாவது ''நியாயங்கள் எக்காலத்திலும் எக்காரணம் கொண்டும் காயப்பட்டுவிடக் கூடாது; அதேசமயத்தில் காயங்கள் எக்காலத்திலும் எக்காரணம்

கொண்டும் நியாயப்பட்டு விடக்கூடாது'' என்று. ஆனால் இன்று நியாயங்கள் காயப்படுகின்றன; காயங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. உள்ளாட்சிகளில் நிரந்தர நிதிச் சீரமைப்பே காயத்திற்கான அருமருந்தாகும். ஆகவே அந்த நிதிநிலையை நீங்கள் தருவீர்கள் என்று எதிர்ப்பார்த்து இந்த தமிழக அரசை தாய் முகம் பார்க்கும் சேயாக இருக்கிறேன் எனக் கூறி எனது உரையை நிறைவு செய்து விடை பெறுகின்றேன். வணக்கம்.

திரு. ந. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் உரையின்போது ஆங்கிலத்திலும், தமிழிலும் இங்கே உரை நிகழ்த்தியதைப் போல, இந்த நாட்டிற்குத் தேவையான நாட்டு மக்களுடைய முன்னேற்றத்தில் அதிக அக்கரை கொண்டிருக்கின்ற இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திலும், பிற்படுத்தப்பட்ட மக்களினுடைய முன்னேற்றத்திலும் அதிக அக்கரை செலுத்துகிறது என்பதனை நிரூபிக்கும் வகையில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 10 ஆண்டுகளுக்கு சலுகைகளை நீட்டிக்க வகை செய்யும் சட்ட முன்வடிவை தேசிய முன்னணி அரசு நிறைவேற்றி உள்ளதைக் கழக அரசு ஆதரித்தது, தாழ்த்தப்பட்ட மக்களினுடைய முன்னேற்றத்திலே எந்த அளவுக்கு இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதனை தெளிவாக உணர முடிகிறது. அதுமட்டுமல்லாமல் மத்திய அரசு பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதனை மண்டல் கமிஷன் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டுமென மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தி கவர்னர் உரையில் கூறி இருப்பது பிற்படுத்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்துகிறது என்பதனைக் தெளிவாக உணர முடிகிறது. எனவே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பொற்காலமாகத்தான் டாக்டர் கலைஞருடைய அரசு திகழ்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களுடைய காலம் தான் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பொற்காலம் என்பதனை இந்த மாமன்றத்திலே நான் கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்து மக்களுக்குத் தேவையான குடிநீர்ப் பிரச்சினை, மின்சாரம் மற்றும் உணவுப் பிரச்சினைகளைப் பற்றி கவர்னர் உரையில் மிகத் தெளிவாக எடுத்து உரைத்து இருந்தாலும் இந்த அரசு கடந்த ஓராண்டுக் காலத்தில் இந்த 3 பிரச்சினைகளையும் எந்த அளவுக்கு துரிதமாகச் செயல்படுத்தி இருக்கிறது என்பதனை கவர்னர் உரையிலேயிருந்து அனைவரும் தெரிந்து இருப்பார்கள்.

சென்னை மாநகராட்சி மக்களுக்குத் தெலுங்கு கங்கைத் திட்டத்தையும், பொதுமக்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ள மதுரை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையும் தீர்க்க அரசு துரித

நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்திலுள்ள கிராம மக்களுக்கு அடி பைப்பு மூலம் தண்ணீர் கொடுக்க அரசு எடுத்த முயற்சி பாராட்டுக்கு உரியதாகும். மின்சாரத்தைப் பொறுத்த மட்டில், கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல மேட்டூரில் 3 வது மின் உற்பத்தி நிலையத்தையும், எண்ணூரில் உள்ள 110 மெ. வா. திறன் கொண்ட 3 மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதும், தமிழகத்தில் 12 ஆம் தேதிக்குப் பின்னாலே மின்வெட்டு அடியோடு நீக்கப்பட்டதும் இந்த அரசினுடைய நிர்வாகத் திறமையை எடுத்துரைக்கிறது. எனவே, கடந்த ஓராண்டுக் காலத்தில் கழக அரசு தமிழகத்தில் மின்வெட்டு அடியோடு நீக்கப்பட்டுவிட்டது என்பது கவர்னர் உரையிலே தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

17-05 மணி

அரிசியைப் பொறுத்தமட்டிலும், இலவச அரிசி வினியோகத்திற்கு சுமார் ரூ. 30 கோடி செலவாகும் என்ற நிலையிலும் இந்த அரசு இலவச அரிசி பெறும் மக்களின் வருமான வரம்பை உயர்த்தி, 1.20 கோடி மக்கள் பயன் அடையத் தக்க வகையில்

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் பேசுவது கன்னிப் பேச்சு அல்ல. மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அவர்கள் திரு. சொக்கர் அவர்களுக்குச் சொன்னது, இவருக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் சில குறிப்புகளை மட்டும்தான் வைத்திருக்கிறார்.

திரு. ந. சௌந்திரபாண்டியன்: நான் படிப்பது குறிப்பு தான்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லிய பிறகும் திரு. சொக்கர் அவர்கள் எழுதியதைக் கீழே வைத்துப் படித்துத்தான் பேச்சை முடித்தாரே தவிர, தனியாக அவரும் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ந. சௌந்திரபாண்டியன்: அரிசி பிரச்சினையைப் பொறுத்த வரையில் கழக அரசு எடுத்த அந்த நடவடிக்கை, மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைக் கொடுத்திருக்கிறது என்பதை மட்டும் நான் தெளிவாக இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். நியாய விலைக் கடைகளில்

1990 சனவரி 23] [திரு. ந. சௌந்திரபாண்டியன்]

தவறுகள் செய்கிறபோது எந்தவிதமான தயக்கமும் இன்றி, அந்த ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுத்து அவர்களை உடனுக்குடன் வேலையில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கையை கழக அரசு மிகவும் துரிதமாக மேற்கொண்டதையும் இந்த நேரத்தில் நான் தெளிவாக எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு கடந்த காலங்களில் கொடுக்கிற அரிசியின் அளவைக் குறைத்துக் கொடுத்தாலும்கூட கழக அரசு அனைத்து நியாய விலைக் கடைகளிலும் மக்களுக்குத் தேவையான அரிசியை இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கழக அரசு பதவியேற்றபோது ''களஞ்சியமும் காலி, கஜானாவும் காலி'' என்ற அளவில் ஆண்டுத் திட்டச் செலவான ரூ. 1,457 கோடி என்ற அளவு 1,202 கோடியாக குறைக்க வேண்டி நேரிட்டது. தற்போது, கழக அரசு 1989–90 ஆம் ஆண்டு திட்டச் செலவை 1,360 கோடியாக உயர்த்த வகை செய்துள்ளது என்பது டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிர்வாகத் திறனை எடுத்துரைப்பதாகும்.

தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் இது வரை 7 தொழிற்கழகங்களை உருவாக்கும் விதத்தில் செய்துள்ள முதலீடு ரூ. 500 கோடியாகும். கழக அரசு சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த மட்டில் 5 புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க இருக்கிறது. மேலும் 45 கோடி முதலீட்டில் எல்காட் நிறுவனம் 5 தொழில் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. கழக அரசு தொழிற் கூடங்களை அமைப்பதன் மூலம் வேலை வாய்ப்பினைப் பெருக்கவும், நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தவும் பெரு முயற்சி எடுத்துள்ளது என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் கடந்த ஓராண்டு காலத்தில் மூடிக்கிடந்த ஆலைகள் அனைத்தையும் திறந்து தொழிலாளர்களின் துயரைத் தீர்த்துள்ளது. மேலும் கடந்த ஓராண்டு காலத்தில் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் உடனுக்குடன் தீர்வுகண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதையும் குறைத்தது கழக அரசுதான் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாய் உள்ளம் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள் சமுதாயத்தில் மகளிரின் நிலையை உயர்த்த எண்ணியுள்ளதையடுத்து அந்தக் கருத்தில் கழக அரசு உறுதியாக உள்ளது என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

மேலும் அரசுத் துறையில், உள்ளாட்சி மன்றங்களில், பொதுப்பணி மன்றங்களிலெல்லாம் பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கீடு, 1 முதல் 2 வகுப்புகளுக்கு பெண் ஆசிரியர்கள் நியமனம், பல்வேறு அமைப்புகளுக்கும் தேர்தல் நடைபெற்றால் அதில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு, ஏழைப் பெண்களுக்கு திருமணத்திற்கு ரூ. 5,000 நிதியொதுக்கும் திட்டம், இப்படி பெண்களுடைய நல்வாழ்விற்காக கழக அரசு பல திட்டங்களை அறிவித்திருப்பதால் அந்தத் திட்டங்கள் மக்கள் மத்தியில் பெருமளவுக்குப் பயன்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

17-10 மணி

மேலும், பெண்களுக்கு சம உரிமை வேண்டுமென்பதனைப் புத்தகத்திலேதான் நாம் படித்திருக்கிறோம். ஆனால், நடைமுறையில் டாக்டர் கலைஞர் அவர்கள் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கின்ற அந்தச் சட்டத்தை இங்கு கொண்டு வந்து மக்கள் மத்தியிலே—பெண்கள் மத்தியிலே நல்லதொரு வரவேற்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலும் புதூர் பகுதியில் கடந்த பத்தாண்டுகளாகப் பஸ் நிலையம் மிகவும் மக்கள் நெருக்கடியான பகுதியில் இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் அந்தப் பஸ் நிலையத்திற்கு வந்துதான் மதுரையினுடைய மையப் பகுதிக்கு வர வேண்டிய நிலை உள்ளது. எனவே, அரசு அதற்கான இடமும் ஒதுக்கீடு செய்துவிட்டது. அங்கு பஸ் நிலையம் அமைப்பதற்கு அரசு முன் வர வேண்டுமென்பதனை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் காய்கறி மார்க்கெட் இல்லாத நிலை இருக்கிறது.

அந்தப் பகுதியில் மக்கள் அனைவரும் காவல் நிலையத்திற்குச் செல்ல வேண்டுமேயானால் நெடுந்தூரம் சென்று புகார் மனுக்களைக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதிக்கு—புதூர் பகுதிக்கு காய்கறி மார்க்கெட்டும், பஸ் நிலையமும், காவல் நிலையமும் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையினுடைய மையப் பகுதியில் வைகை ஆறு ஓடுகிறது. அந்தக் கரை ஓரப் பகுதியில்தான் அதிகமான மக்கள் குடியிருந்து கொண்டு இருக்கின்றார்கள். வைகையாற்றிலே தண்ணீர் வந்தால் கரையோரப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பாதிக்கப்படுகின்ற ஒரு நிலை இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்த நிலையினைப் போக்குவதற்கு

1990 சனவரி 23] [திரு. ந. சௌந்திரபாண்டியன்]

கரையோரங்களில் தடுப்புச் சுவர் கட்டுகின்ற ஒரு திட்டத்தையும் அரசு கொண்டு வர வேண்டுமென்று இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சமயநல்லூர் தொகுதியைப் பொறுத்தமட்டிலும், அனைத்துப் பகுதிகளிலேயும் இருக்கின்ற ரோடுகள் அனைத்தும் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருக்கின்றன. பள்ளிகளும் பழுதடைந்திருக்கின்றன. எனவே, ரோடுகள் சீரடைய, பள்ளிகளை மேலும் சீர்படுத்த அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து நல்லபடியாக ரோடுகள் உண்டாவதற்கும், பள்ளிகள் சீரமைவதற்கும் உதவி புரிய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையில் தற்போது மூன்று பெண்கள் கல்லூரிகள்தான் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, மேலும் இரண்டு பெண்கள் கல்லூரிகள் இருக்குமேயானால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் நெடுங்காலமாக அவர்கள் கோரிய அந்தக் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமேயானால் மதுரை மக்கள் பயனடைவார்கள் என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சமயநல்லூர் தொகுதியிலுள்ள வண்டியூர் கண்மாயை அரசு சுற்றுலா மையமாக்கியதைக் கடந்த இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாக அமைச்சரவர்கள் இந்த அவையிலே தெரிவித்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்து, அதற்கு ஒதுக்கிட்ட தொகை போதாது என்றும், சென்னையிலே கடற்கரை எப்படி பொழுதுபோக்கு இடமாக அமைகிறதோ அதுபோல மதுரையிலுள்ள மக்கள் பொழுதுபோக்கு இடமாக அமைவதற்கு ஒரு சரியான இடம் இல்லாத நிலை இருக்கிறது. எனவே, வண்டியூர் கண்மாயை மேலும் விரிவுபடுத்தி, கொடுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அதிகமான நிதியில் ஒதுக்கீடுகளை அளித்து, அதை நல்லதொரு சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : தலைவரவர்களே, இந்த மின்வெட்டைத் தளர்த்தியிருப்பதில் கவர்னர் உரையில் அறவே நீக்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் எங்களது உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள், 20 சதவீதம் இன்னும் டிமான்ட் கட்டிலே நீக்கவில்லை என்று சொல்கிறார். தற்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறவே நீக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். நாட்டு மக்களுக்கு இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, பொதுவாக மின்சார வெட்டு என்பது தொழிலதிபர்கள் தாங்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் இவ்வளவு யூனிட்டுகள் தான் பயன்படுத்த வேண்டுமென்ற ஒரு நிபந்தனை வைப்பதுதான் வழக்கம். அதற்குப் பெயர் மின்சார வெட்டு என்று பெயர் ; மின்வெட்டு என்று சொல்வார்கள். ஆனால் இன்றைய தினம் கூட நாம் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் மின் வெட்டைத் தளர்த்தியிருக்கிறோம். ஹை டென்ஷன்-ஐப் பொறுத்தவரையில் இருபது சதவீதம் நாம் மின் வெட்டைத் தளர்த்தவில்லை. 80 சதவீதம் மின் வெட்டு இல்லாமல் இருக்கிறது. 20 சதவீதம் மின்வெட்டு இருக்கிறது. பொதுவாக ஹைடென்ஷனுக்கு மின்வெட்டு இருப்பதை யாரும் நாட்டில் அறிவிப்பதில்லை. தமிழ் நாட்டில் இன்றைய தினம் மின்வெட்டைத் தளர்த்துகிறோம் என்றால் புதிய கனெக்ஷன்கள் கொடுப்போம் என்று பொருள். மின் வெட்டு அமலில் இருந்தால் புதிய சர்வீஸ் கனெக்ஷன்கள், இண்டஸ்டிரியல் சர்வீஸ் கொடுக்க மாட்டார்கள். எனவே, தொழிலதிபர்கள் மின்வெட்டு தளர்த்தப்பட்டது என்று அறிவித்த உடனே விண்ணப்பங்கள் போடுவதும், மின்சாரம் பெறுவதும் வாடிக்கை. இது இன்று நேற்றல்ல, நம் நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இந்த முறை தான் பின்பற்றப்படுகிறது. எனவே, இன்றைய தினம் மின்சார வெட்டை தளர்த்தி இருக்கிறோம். ஆனால், ஹைடென்ஷனைப் பொறுத்தவரையில் மின்வெட்டு இருக்கிறது. 'லோ-டென்ஷன்' மற்ற தொழிற்சாலைகளுக்கு இவ்வளவு யூனிட்டுகள் என்று குறிப்பிடுகிறோமே அது தளர்த்தப்பட்டிருக்கிறது. அவர்கள் எவ்வளவு யூனிட்டுகள் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதுதான் இன்றைய நிலை.

17-15 மணி

திரு. வே. நா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவரின் நம்பிக்கை இழந்துவிட்ட தமிழகத்தின் ஆளுநர் அவர்களால், தமிழக மக்களுடைய நம்பிக்கை இழந்துவிட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய கொள்கைக் குறிப்புகள் ஆளுநர் உரையாக இங்கே படிக்கப்பட்டு, அதற்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது நடைபெறும் விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்பபளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களை விட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு, அதிலே ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு, இந்த அரசை ராஜினாமா செய்ய சொல்கிறார்களே, இது நியாயமா என்ற அளவிலும், இந்த

1990 சனவரி 23] [திரு. வே. நா. சுப்பிரமணியன்]

அரசுதான் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்ற அளவிலும் மிகவும் ஆசையோடு, ஆணித்தரமாக பேசினார்கள். கேரளாவில் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு கேரளா மாநிலத்தினுடைய முதல்வர் மாண்புமிகு நாயனார் அவர்களை பத்திரிகையாளர்கள் சந்தித்து கேள்விகளை கேட்கிறபோது, நாயனார் அவர்கள் சொல்கிறார்கள். நடந்து முடிந்தது பாராளுமன்றத் தேர்தல் தானே தவிர, சட்டமன்றத்திற்கான தேர்தல் அல்ல. எனவே, பாராளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் அங்கே ராஜீவ் காந்தி ஆள வேண்டுமா அல்லது தேசிய முன்னணி ஆள வேண்டுமா என்ற அடிப்படையில் தான் மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். ஆகவே, கேரளாவில் தேசிய முன்னணி தோற்றாலும் கூட நான் அதற்காக இராஜினாமா செய்யத் தேவையில்லை என்று சொல்லிவிட்டு அதே நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். கேரளாவில் தாளிபிரம்பா என்ற சட்டமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடந்தது. அந்த தாளிபிரம்பா சட்டமன்றத் தொகுதி முன்பு கேரளாவில் உள்ள இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தொகுதியாக இருந்தது. அந்தத் தொகுதிக்கு நடந்த இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தோழர்தான் மீண்டும் வெற்றி அடைந்திருக்கிறார்கள். ஆகவே, கேரளா மக்களைப் பொறுத்தவரையில் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் எங்கள் அரசுதான் மீண்டும் இந்த நாட்டை ஆள வேண்டும், கேரளாவை ஆள வேண்டுமென்று தீர்ப்பளித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் இராஜினாமா செய்யத் தேவையில்லை என்ற கருத்தை வலியுறுத்தி சொல்லி இருக்கிறார்கள். அதே நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே 39 பாராளுமன்றத் தொகுதிகளில் 38 தொகுதிகளில் தேசிய முன்னணி கட்சி தோற்றிருக்கிறது. குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இடத்தில் கூட வெற்றி அடைகிற வாய்ப்பைப் பெறவில்லை. அதற்காக பாராளுமன்றத்தில் ஒரு இடத்தில் கூட நீங்கள் வெற்றி பெறவில்லையே என்று உங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று நியாயத்தின் அடிப்படையில் அல்ல, ஜனநாயகத்தின் அடிப்படையில் அல்ல, தர்மத்திற்காக நான் அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தில் நடந்த பெரணமல்லூர் சட்டமன்ற இடைத் தேர்தலில் என்ன நடந்தது? முன்பு நடந்த சட்டமன்றத் தேர்தலில் அந்த பெரணமல்லூர் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் வென்றார். அவருடைய அகால மரணத்திற்குப் பிறகு நடந்த இடைத் தேர்தலில் எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த சின்னக்குழந்தை, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரை விட 9,000 ஓட்டுகள் அதிகமாக வாங்கி மிகப் பெரிய வெற்றியை பெற்றுத் தந்திருக்கிறார்கள். தயவுசெய்து, இந்த மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுக்கும், ஆளுங்கட்சியைச் சார்ந்த அத்தனை பேருக்கும் சொல்லிக் கொள்கிறேன். நடந்து முடிந்த சட்ட மன்ற இடைத் தேர்தலில் உங்களுடைய கட்சி நீங்கள் வைத்திருந்த தொகுதியில் கூட தோற்கிற அளவிற்கு மக்கள் வாக்களித்து இருக்கிறார்களே, அது இந்த அரசின் மீது மக்கள் தெரிவித்த அதிருப்தி அல்லவா? அது, உண்மையா, இல்லையா என்பதை தயவுசெய்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அந்த சட்டமன்ற இடைத் தேர்தலிலே நாங்கள் வெற்றி பெற்ற காரணத்தாலே, உங்களை ராஜினாமா செய்ய வேண்டும் என்று நாங்கள் கோரவில்லை. காரணம் நாங்கள் எதைச் சொன்னாலும், மக்களுடைய உண்மையான எண்ணத்தைப் பிரதிபலித்தாலும் கூட நீங்கள் ஏற்கிற நிலையில் இல்லை. ஆனால் அதே நேரத்தில் பேரணமல்லூர் சட்டமன்ற இடைத் தேர்தலிலே இந்த ஆட்சிக்கு இந்த ஆட்சியைப் பற்றிய அதிருப்தியை மக்கள் அங்கே தெரிவித்திருக்கிறார்கள் என்பதை தயவு செய்து நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

17-20 மணி

நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில், மத்திய அரசு அரிசி வழங்காத காரணத்தாலே, மத்திய அரசு அரிசி வழங்க வஞ்சித்த காரணத்தாலேதான் இந்தத் தேர்தலிலே நாங்கள் படுதோல்வி அடைந்தோம் என்று குறிப்பிட்டார்கள். நான் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிற ஒன்றை மேற்கோளாகக் காட்ட விரும்புகிறேன். 1988 ஆம் ஆண்டு கவர்னருடைய ஆட்சிக் காலத்திலே, தமிழகத்தில் பொது வினியோகக் கடைகளின் மூலமாக 13 லட்சம் டன் அரிசி தான் பொது மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தி.மு.க. ஆட்சியில் 1989 ஆம் ஆண்டு, 15 லட்சம் டன் அரிசியை பொது வினியோகக் கடைகளின் மூலமாக விற்பனை செய்திருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவல் கொடுக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். கவர்னருடைய ஆட்சியிலே, மத்திய அரசாங்கம் கொடுத்த அரிசி அல்ல. கவர்னருடைய ஆட்சியிலே தமிழ்நாட்டிலே பொது வினியோகம் மூலமாக வினியோகம் செய்த அரிசியினுடைய அளவு 13 லட்சம் டன்தான். ஆனால் தமிழ்நாட்டிலே, 1989-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பொது வினியோகத்திலே கொடுக்கப்பட்ட அரிசியினுடைய அளவு 15 லட்சம் டன். அதே நேரத்தில், கவர்னருடைய ஆட்சியிலே

1990 சனவரி 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பொது விநியோகத்திற்காக மத்திய அரசாங்கம் கொடுத்தது, கிட்டத்தட்ட 9 லட்சம் டன். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பொது விநியோகத்திற்கு மத்திய அரசு கொடுத்த அரிசி 5 லட்சம் டன். இந்த பாகுபாட்டைத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து சுட்டிக் காட்டி வருகிறது.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : நான் அதையேதான் சொல்கிறேன். உங்களுடைய உறுப்பினர்கள் சொல்கிறபோது பொது விநியோகக் கடைகளிலே அரிசியை அதிகமாக விநியோகிக்காத காரணத்தாலே பொது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு, இந்த ஆட்சிக்கு, இந்தக் கட்சிக்கு வாக்களிக்கவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அதே அடிப்படையிலேதான் உங்களுடைய ஆட்சியிலே சென்ற ஆண்டு 15 லட்சம் டன் அரிசியை பொது விநியோகக் கடைகளின் மூலமாக மக்களுக்கு நீங்கள் அளித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப தவறான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுகின்றபோது தெளிவாகச் சொன்னார்கள். மத்திய அரசு ஏற்கனவே வழங்கி வந்த அரிசியினுடைய அளவைக் கணிசமாகக் குறைத்து விட்ட காரணத்தாலேதான் பொது விநியோகத்திலே சங்கடம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அதை அவர்கள் மாற்றிச் சொல்கிறார்கள். எனவே திருத்திக் கொண்டு, முறையான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : நான் அந்த உறுப்பினர்கள் கூறிய கருத்தைத் தான் சொன்னேன். இங்கே அழகாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1989 ஆம் ஆண்டிலே பொது விநியோக முறை மூலம் சுமார் 15 லட்சம் டன் அரிசியை வழங்க முடிந்தது. 1988 ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட சுமார் 13 லட்சம் டன் என்ற அளவோடு ஒப்பிடுகையில், அது அதிகமாகும் என்று. அதிகமாக நீங்கள் அரிசியை வழங்கியிருக்கிறீர்கள். ஆகவே அதற்காக மக்கள் உங்கள் மீது அதிருப்தி அடைந்து உங்களுக்கு எதிராக ஓட்டுப் போட்டிருக்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவிப்பதற்காகத் தான் நான் இதைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது, தேசிய முன்னணியினுடைய அரசைப்பற்றியும் அந்த அரசு

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

எடுத்துக் கொண்டிருக்கிற துரிதமான நடவடிக்கைகள் பற்றியும் தெரிவித்து, இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்களே, அதற்காக அவர்கள் எல்லாம் ராஜினாமா செய்ய வேண்டுமா அல்லது இந்த அரசாங்கத்தை கலைக்க வேண்டுமா என்பதைப் பற்றி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏழு நிமிடங்கள் முடிந்து விட்டன. எல்லா உறுப்பினர்களுக்கும் பதில் சொல்லி கொண்டே போய் கடைசியில் உங்களுடைய கருத்தைச் சொல்ல முடியாமல் போய்விடும். உங்களுடைய கருத்துக்கு வந்துவிடுங்கள். 3 நிமிடங்கள்தான் இருக்கின்றன.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : தேசிய முன்னணியினுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில் ஒரு சில உதாரணங்களை மட்டும் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் அவர்கள் ஒரு கருத்தை வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே இருந்து சென்று வெளிநாட்டில் வாழ்கின்ற எந்த இந்தியப் பிரஜைக்கும் எந்த ஆபத்து வந்தாலும் நாங்கள் ராணுவத்தை அனுப்ப மாட்டோம், காரணம் அது வேறு நாட்டினுடைய உள்நாட்டு விவகாரம், ஆகவே நாங்கள் ராணுவத்தை அனுப்பமாட்டோம், அந்தப் பிரச்சினையிலே தலையிட மாட்டோம் என்று உறுதியாகக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்துக்கு தெளிவான விளக்கத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அந்த தெளிவான விளக்கத்திற்குப் பின்னால் அதை மீண்டும் பேசி ஒரு விவாதப் பொருளாக ஆக்க வேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : நான் அந்த விவாதத்திற்குள் வரவில்லை. அதிலே முரண்பாடு இருக்கிறது. அதைச் சொல்லத் தான் நான் வந்திருக்கிறேன். ஆனால் அதே நேரத்திலே கடந்த 4 நாட்களுக்கு முன்பாக நேபாளத்திலே நேபாளி காங்கிரஸ் என்ற ஒரு தடை செய்யப்பட்ட இயக்கம், அவர்கள் சட்ட விரோதமாக ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்திற்கு ஜனதா தளத்திலே முக்கிய தலைவர், பிரதம அமைச்சர் பதவிக்கே போட்டியிடக் கூடிய தகுதி வாய்ந்த அருமை சகோதரர் சந்திரசேகர் அவர்கள் அங்கே சென்று அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். இது வெளி நாட்டினுடைய விவகாரத்திலே தலையிடுவது ஆகாதா என்பதை தயவு செய்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே நேரத்திலே கடந்த 3, 4 நாட்களுக்கு முன்பாக கேரளாவிலே மத்திய அமைச்சர் உன்னிகிருஷ்ணன் அவர்கள் சொல்கின்றார். ஒரே நாள் தாளில் அந்த விவகாரம் வருகிறது. உன்னிகிருஷ்ணன் அவர்கள் சொல்கிறபோது எந்த மாநிலத்திற்கும் கவர்னர்களை நியமிக்கின்றபோது அந்தந்த மாநில சர்க்கார்களை கலந்துதான் நியமிப்போம் என்று சொல்கிறார். அதே தினசரி பேப்பரில் அதே காலை பேப்பரில் இன்னொரு பக்கம் இன்னொரு செய்தி வருகிறது. காஷ்மீரில் கவர்னர் மாற்றப் படுகிறார். ஜக்மோகன் நியமிக்கப்படுகிறார் என்று சொல்கிறார்கள. அதே நேரத்தில் அங்கேயிருக்கின்ற மாநில முதல்வர் பரூக் அவர்கள் சொல்கிறார்கள், அதே பேப்பரில் வருகிறது. காஷ்மீருக்கு கவர்னரை நியமிக்கின்ற விஷயத்தில் நடுவண் அரசு என்னை கலந்து கொள்ளவில்லை. இன்னும் சொல்லப் போனால் இந்த ஜக்மோகனை நியமிக்கக் கூடாது என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். எங்களைக் கலக்காமல் அவர்களே நியமித்து இருக்கிறார்கள் என்ற அந்த செய்தியும் ஒரே நாளில் வருகிறது. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், தேசிய முன்னணியிலே எந்த அளவிற்கு முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். இன்னும் சொல்லப் போனால் துணைப் பிரதமர் தேவிலால் அவர்கள் பயங்கரமாகச் சொல்கிறார்கள். நான் ரிசர்வேஷன் பாலிசிக்கு எதிரி, அதைக் கடுமையாக எதிர்ப்பேன் என்று சொல்கிறார்கள். அப்படி எதிர்க்கின்ற அந்த துணைப் பிரதமர் அவர்களை இன்றைய தினம் காலையில் பார்த்தேன், மண்டல் கமிஷன் சிபாரிசை ஆராய்கின்ற குழுவிற்குத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள. இது எந்த அளவில் நியாயம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பேற்பட்ட முரண்பாடுகள். நான் கூட நினைத்தேன். தே.மு. என்றால் தேசிய முன்னணி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் உண்மையிலேயே தே.மு. என்றால் தேசிய முரண்பாடு என்கின்ற அளவிற்கு இன்றைய தினம் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) குறுக்கீடுகள் அதிகமாகி விட்டன. இன்னும் கொஞ்சம் அனுமதியுங்கள்.

17-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த முறை பாராளு மன்றத்திலே இதைப் பற்றிப் பேசலாம்.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : இன்னொன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இரண்டு முறை குறிப்பிட்டார்கள். இலங்கையிலிருந்து ஐ.பி.கே.எப். அவர்கள் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே தான் அவர்களுடைய கட்டளையின் பேரில்நான் அங்கேயிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள. அதிலே எனக்கு ஒரு கருத்து, ஒரு விளக்கத்தை முதல்வர் அவர்கள் தர வேண்டும். ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னதன்

பேரில் ஐ.பி.கே.எப். இலங்கையிலிருந்து திரும்ப வந்து கொண்டிருப்பது உண்மை. இந்த விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உடன்பாடு இருக்கிறதா, இல்லையா என்பதை தயவு செய்து அவர்கள் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அதே நேரத்தில் இந்தப் பிரச்சினையில் எந்த அளவிற்கு. . . . (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ராணுவம் திரும்பி வருவதில் எனக்கு முழுக்க முழுக்க உடன்பாடுதான். ஏனென்றால் அங்கே போய் தமிழர்களைக் கொல்லவும் வேண்டியதில்லை அவர்கள் சாகவும் வேண்டியதில்லை.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : முதல்வர் அவர்களுக்கு நன்றி. அப்படியென்றால் ராஜீவ் காந்தி அவர்கள் எடுத்த முடிவை முதல்வர் அவர்கள் வரவேற்கிறார்கள் என்று பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விட வேண்டும். அடுத்தவரைக் கூப்பிடப்போகிறேன்.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : நன்றி உரையை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிப்காட் வழியாக தொழில் வளர்ச்சி மையங்களை தமிழகத்திலே மூன்று இடங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதிலே என்னுடைய தொகுதியான பெருந்துறையும் அடங்கி இருக்கிறது. அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, அதே நேரத்திலே அங்கே நிலம் ஆர்ஜிதம் செய்வதிலே சில குளறுபடிகள், சில சங்கடமான சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் போது அதிகாரிகள், அந்தச் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் என்ற முறையில் என்னையும் கலந்து ஆலோசித்து செய்யுமாறு முதல்வர் அவர்கள் ஆணையிடுமாறு தொகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் கேட்டுக் கொண்டு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் இராணுவம் திரும்பி வர வேண்டியதுதான், அங்கே போய் தமிழர்களைக் கொல்ல வேண்டியதில்லை என்று சொன்னார்கள். அங்கே கத்தியை எடுத்து குத்துவது என்பதற்கும் அல்லது அறுப்பது என்பதற்கும் இரண்டு பொருள் இருக்கக்கூடும். ஒருவரை கொலை செய்கின்ற நோக்கத்தோடு கத்தியை எடுத்து குத்துவது என்பது வேறு. அல்லது அறுப்பது என்பது வேறு. ஒரு கட்டியை ஆபரேஷன் செய்து எடுப்பது என்பது வேறு. அதைப் போல இங்கே இருந்து போயிருக்கின்ற ஐ.பி.கே.எப். என்பது அங்கே இருக்கின்ற அமைதியை நிலை நாட்டுவதற்கு எது எது கட்டியாக இருந்ததோ, அவைகளை வெட்டி எடுத்தது.

1990 சனவரி 23]

17.30 மணி

*திரு. ந. **நஞ்சப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு, இந்திய ஐக்கியப் பொது உடைமைக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டப் பேரவையில் ஆளுநர் அவர்கள் அளித்த உரை நம்பிக்கை ஊட்டுவதாக அமையவில்லை. தமிழர்களின் நலனுக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் வழி வகுக்கக்கூடியதாக அது அமையவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றைய தினம் குறிப்பிட்டபோது தமிழர்களின் பல்வேறு விதமான நிலை குறித்தும், ஈழத் தமிழர்களை பாதுகாக்க வேண்டிய நிலை குறித்தெல்லாம் குறிப்பிட்டார்கள். பல வரவேற்கத்தக்க அம்சங்கள் அதிலே இருந்தன என்பதிலும் நான் ஒன்றுபடுகிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு ஈழத் தமிழர்கள் பிரச்சினை மிக மோசமான நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக தமிழக அரசினுடைய கொள்கை நிலை என்ன என்பதை வெளிப்படுத்தி ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு ஈழத் தமிழர்களின் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஈழத் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்ட அனைத்து போராளி குழுக்களை ஒருங்கிணைத்து ஒற்றுமைப் படுத்துகின்ற ஒரு கடுமையான, ஆயினும், மிக முக்கியமான பணியைத் தமிழக முதல்வர் அவர்கள் செய்ய வேண்டும். அதிலே தொடர்ந்து அவர் முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈழத்திலே தமிழர்களைப் பொறுத்தவரை இந்திய இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமல் ஆக்கப்படாமல் பாதியிலேயே இன்றைக்கு அமைதிப்படை திரும்பத் தொடங்கியிருக்கிறது. இதன் விளைவாக அங்கே பழைய பசட்டமான நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. எல்.டி.டி.யினரும் சிங்கள ராணுவத்தினரும் கூட்டாக தாக்குதலை அங்கே தொடுத்து வருகிறார்கள். தமிழகம் நோக்கி அகதிகள் வருவது அதிகரித்திருக்கிறது. ஆக அத்தகைய நேரத்தில் ஈழத்தில் இந்திய இலங்கை உடன்பாட்டை அமலாக்குவதற்கும், தமிழர்களைப் பாதுகாப்பதற்கும் வடக்கு—கிழக்கு மாகாண அரசாங்கத்திற்கு போதிய அதிகாரம் தருவதற்குமான முயற்சிகளை நாம் நிச்சயமாக எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி கோருகிறபோது ஈழத்தில் இருக்கிற தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும், ரத்தம் சிந்தக் கூடாது என்று கூறுவதில் நான் இரண்டு விதமான கருத்து உடையவனாக இருக்க மாட்டேன். ஆனால் ஒரு பக்கத்திலே தமிழர்களை கொன்று குவிப்பதற்கு ஒரு சக்தி முனைந்து இருக்கிறது. அங்கே அமைதி பூர்வமான ஜனநாயகப் பூர்வமான பாதையிலே திரும்பி வருவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் அதன் தோழமை அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது எல்.டி.டி.யினர் ஆயுதங்களை போடுவதற்கும் தயாராக இல்லை. சொல்லப் போனால் ஜனநாயகப் பூர்வமான அரசியல் தீர்வுகளுக்கு அவர்கள் வரவும் மறுக்கிறார்கள். அப்படி இருக்கிற போது இரு விதமான அமைப்புகளை ஒரே மாதிரி ஒப்பிடக் கூடாது. நாம் சரியாக செயல்பட்டு, ஒன்றுபடாமல் இருக்கிற தமிழர்களின் குழுக்களை இணைத்து அவர்களுடைய பூரணமான நலனுக்கு முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பத்திலே ஈழத்திலேயிருந்த தமிழர்களின் நலன் புறக்கணிக்கப்பட்ட காரணத்தாலே போராடத் தொடங்கினார்கள். தனி ஈழம் வேண்டுமென்று ஆரம்பக் கால கோரிக்கையாக அவர்கள் வைக்கவில்லை. ஆனால் தற்போது நிர்ப்பந்தம் காரணமாக ஆயுதம் ஏந்தி போராடத் தொடங்கினார்கள். பிறகு தேர்தலில் பங்கெடுத்து வெற்றி பெற்றார்கள். இந்திய இலங்கை உடன்பாட்டையும் முழுவதுமாக அமலாக்கா விட்டால் அல்லது அதிகாரம் தராவிட்டால் தனி ஈழம் கோரவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று மரியாதைக்குரிய வரத ராஜபெருமாள் அறிவித்திருக்கிற நிலையை நாம் பார்க்கிற போது, பிரிந்து போவதற்கு விரும்பாவிட்டாலும்கூட பல்வேறு நிர்ப்பந்தங்கள் அவர்களை ஆட்படுத்துகின்றன. அதையெல்லாம் கவனத்தில் கொண்டு தமிழக அரசு சரியான நிலையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று இந்த நேரத்திலே கூற வேண்டும். இந்தியாவிற்கு அப்பால் பல்வேறு சக்திகள் போர் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இந்தியாவிற்கு எதிராக, தேசத்தின் ஒற்றுமைக்கு எதிராக அவர்கள் பல்வேறு சதி வேலைகளில் ஈடுபடக் கூடிய அளவுக்கு நிலைமைகள் மாறலாம் என்று அஞ்சத்தக்க நிலை இருக்கிறது. பல்வேறு இந்திய நாட்டின் எதிர்ப்பு சக்திகள் பக்கத்து நாடுகளில் எல்லாம் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் இன்னொரு கவலை தரத்தக்க அம்சம். தமிழகத்திலே கூட பல்வேறு இடங்களில் ஆயுதங்கள் எடுக்கப்படுகின்றன. கள்ளத் தொழிற்சாலைகள் பிடிக்கப்படுகின்றன. கோவையிலே நவீன ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. தர்மபுரி மாவட்டத்திலே ஆயுதங்கள் பிடிபடுகின்ற செய்திகளை

1990 சனவரி 23] [திரு. ந. நஞ்சப்பன்]

பத்திரிகைகளிலே பார்க்கிறோம். தருமபுரி மாவட்டத்தில் பிடிபட்டது என்ன ரகமான ஆயுதங்கள் என்று தெரியவில்லை. அதுவும் சொல்லப் போனால் பல்வேறு இடங்களில் பல்வேறு வழிப்பறி கொள்ளை, கொலை என்று நடந்துக் கொண்டிருக்கிறது. நேற்று கடற்கரையிலே தொடங்கிய வேட்டையில் நவீன ஆயுதங்கள் அகப்பட்டுள்ளன. இவைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அண்மையில் சேலத்துப் பக்கத்திலே நடந்த கொள்ளையில் கூட ஏ.கே. 47 பயன்படுத்தப்பட்டது என்பதும், தமிழகத்தில் இத்தகைய வகையிலே பல்வேறு குழுக்கள் இத்தகைய பலாத்காரமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் தமிழக அரசு கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இத்தகைய நாட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் இந்திய நாட்டுக்கு எதிராக இத்தகைய சதி செய்கின்ற இந்தச் சக்திகளை இனம் கண்டு அவ்வப்போது அதை அப்புறப்படுத்துவதும், மக்கள் மத்தியிலே அம்பலப்படுத்துவதும் நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதும் அவசியம் என்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

17-35 மணி

இன்னொன்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையில் பல்வேறு அம்சங்கள் சுட்டிக்காட்டப்படாமல் இருக்கின்றன. தமிழக வளர்ச்சித் திட்டங்கள் குறித்தோ, வேலையில்லாத் திண்டாட்டங்கள் குறித்தோ, தமிழகத்தை தொழில் மயமாக்கும் திட்டங்கள் குறித்தோ இன்னும் சொல்லப் போனால் தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் திட்டங்கள் குறித்தோ, விவசாயத் தொழிலாளிகள், விவசாயிகள், பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்தோ ஒரு வார்த்தைகூட இந்த ஆளுநர் உரையிலே இடம் பெறவில்லை. அதுவும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு கடந்த காலங்களிலே பல்வேறு உடன்பாடுகள் ஏற்பட்டன. ஆனால் அவைகளை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்று மீண்டும் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் இந்த அறிக்கையிலே இடம் பெறவில்லை. இன்னொன்று கிராம நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்கள் நிர்வாக மாற்றத்தின் காரணமாக பணி இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும் என்று கடந்த கூட்டத்திலே அறிவிக்கப்பட்டது. ஆனால் அது குறித்துகூட என்ன நிலை எடுக்கப் போகிறார்கள் என்றும் இந்த அறிக்கையிலே இடம் பெறவில்லை. தருமபுரி மாவட்டத்தை தொழில் மயமாக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்ற அதே நேரத்தில் தர்மபுரி மிகவும் பின் தங்கிய மாவட்டம் என்பதை கவனத்தில் எடுத்துக்கொண்டு ஒசூர் பகுதியில் தொழிற்சாலைகள் இருந்

தாலும் கூட பின்தங்கிய வளர்ச்சியின்றி பின்தங்கியுள்ள நிலையில் உள்ள பெண்ணாகரம் பகுதியில் சிப்காட் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்திலே தமிழக அரசுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1970-72-ஆம் ஆண்டுகளிலே கருங்கல் ஏற்றுமதி தொடங்கப்பட்டதிலிருந்து இன்றைக்கு வரை ஊராட்சிகளுக்குச் சேர வேண்டிய பங்குத் தொகை கொடுக்கப்படுவதே இல்லை. குறிப்பாக தர்மபுரி மாவட்டத்திற்கு மட்டும் ஓர் ஆண்டுக்கு 23 கோடி ரூபாய் ஏற்றுமதி மூலமாக வருவாய் வருவதாக அறிவிக்கப் பட்டது. ஆனால் இவ்வளவு வந்தும் கூட ஊராட்சிக்குச் சேர வேண்டிய அந்தப் பங்குத் தொகை சேருவது கிடையாது. தனியார் செலுத்துகிறார்கள். டாமின் நிர்வாகம் செலுத்துவதில்லை. ஒரு அரசு துறைக்கும் இன்னொரு அரசு துறைக்கும் கூட வருவாயைச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றபோது ஊராட்சிகளுக்குச் சொந்தமான குவாரிகளிலிருந்து எடுக்கப்படுகின்ற அந்த கற்களுக்குச் சேர வேண்டிய பங்குத் தொகையை டாமின் நிர்வாகம் செலுத்தாமல் இருக்கிறார்கள். இப்படி பல கோடிக் கணக்கான ரூபாய் செலுத்தாமல் இருப்பதற்கு தீர்வு கண்டு ஊராட்சிக்கு வரவேண்டிய வருவாய்க்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, பிரதானமாக வேளாண்மைத் துறை சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கான மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தமாக இந்த அறிக்கையில் ஒன்றுமே காணோம். 10,000 ரூபாய் வரையிலான கடனை ரத்து செய்வதாக தேசிய முன்னணி அரசு அறிவித்தது. தேசிய முன்னணியின் அங்கமான தி. மு. க. அரசும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல தர்மபுரியில் வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீர்ப்பாசனத் திட்டங்கள் ஒன்றுகூட குறிப்பிடப் படவில்லை. தர்மபுரி மாவட்டத்தில் ஏற்கெனவே திட்டமிடப் பட்ட பல அணைகள் இன்று வரை முடிக்கப்படாமல் இருக்கின்றன. 18-ந் தேதியிலிருந்து இன்று வரை அரூர் வட்டத்தில் கீரப்பட்டி பஞ்சாயத்தில் இருக்கின்ற வள்ளிமதுரை ஆற்றில் ஒரு அணையைக் கட்ட வேண்டுமென்று உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதையும் தொட்டல் அணையையும், பெண்ணாகரத்தில் முனியப்பன்கோயில் பள்ளத்தையும், சாவுத் தான் பள்ளத்தையும், மத்தலப்பள்ளம் அணையையும், கோட்டப் பட்டி, கல்லாறு, கெலமங்கலம், கொரட்டகிரி அணையையும் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஏதேனும் சிறப்புத் திட்டங்கள் இருக்கிறதா என்பது அறிவிக்கப்படவில்லை. வளர்ச்சி பெற்ற மாவட்டங்களையும் ஒரே மாதிரியாக பார்க்கி

1990 சனவரி 23] [திரு. ந. நஞ்சப்பன்]

றார்கள். பின் தங்கிய மாவட்டங்களுக்கும் ஒரே மாதிரியாக நிதி ஒதுக்குகிறார்கள். அதுவும் சென்ற ஆண்டு ஜவஹர் திட்டத்தில் கொடுக்கப்பட்டபோது கூட வளர்ச்சி அடைந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு ஒதுக்கினார்களோ அதே ஒதுக்கீடுதான் பின் தங்கிய மாவட்டங்களுக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, தர்மபுரி, இராமநாதபுரம், காமராஜ், பசும்பொன், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்குச் சிறப்பு நிதியாக ஒதுக்கி அந்த மாவட்டங்களின் வளர்ச்சிக்கு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே வறட்சிப் பகுதியாக அறிவித்து நிவாரணப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்சித் தேர்தல் தொடர்ந்து ஒத்திப் போகின்ற நிலைமை இருக்கிறது. அதை மேலும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆளுநர் உரை பல்வேறு எதிர்பார்ப்புகளை எதிர்நோக்கியுள்ள தமிழக மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக இல்லை. தமிழக மக்களின் வளர்ச்சிக்கும், நலனுக்கும் உகந்த திட்டங்கள் எதுவும் இதில் அறிவிக்கப்படவில்லை. குறிப்பாக தமிழக மக்களுக்கு ஏமாற்றத்தைத் தருகின்ற ஒரு உரையாக இது அமைந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்த காலத்திலே அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களில் ஊராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் தருவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் 5 ஆண்டுகளாக பதவிக் காலம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதே தவிர, வேறு எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. ஐ. ஆர். டி. பி. கடனையும்கூட தேர்வு செய்ய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தேர்வுக் குழுவில் அமர்த்தப்பட்டார்கள். ஊராட்சி மன்ற, ஒன்றியக் குழுத் தலைவர்கள் கூட புறக்கணிக்கப்பட்டார்கள் என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

17-40 மணி

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தினைச் சொல்ல நான் முன்வருகிறேன். மத்தியிலே வந்திருக்கக்கூடிய தேசீய முன்னணி அரசு நல்ல ஒரு அரசியல் மாறுதலோடு மத்தியிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். ஒரு குடும்ப ஆட்சியாக இருந்த நிலை மாறி, ஒரு ஜனநாயக முறையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கின்ற வகையிலே மத்தியிலே ஒரு தேசிய முன்னணியினுடைய ஆட்சி இன்றைக்கு அமைந்திருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல், நாட்டிலே குழப்பத்தையும், நாட்டிலே கொந்தளிப்பையும், மதக் கலவரத்தையும் உண்டு பண்ணிக் கொண்டு இருக்கக்கூடிய

பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே தேசிய முன்னணியினுடைய அரசு தன்னுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ஒரு முன் முயற்சி எடுத்து இருப்பதை நான் வரவேற்கிறேன்.

காஷ்மீர் பிரச்சினையாக இருந்தாலும், பஞ்சாப் பிரச்சினை யாக இருந்தாலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அதிலே கவனம் செலுத்தி தீர்ப்பதிலே இன்றைக்கு மத்தியிலே இருக்கக் கூடிய ஜனதா தளத்தினுடைய அரசு மிக அக்கறையோடும், பொறுப்போடும் இருந்து இன்றைய தினம் தன்னுடைய கவனத் தைச் செலுத்திக் கொண்டு இருக்கிறது. அதற்கு மேலாக, பஞ்சாபில் எந்த நேரத்திலும் படுகொலை நடந்து கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில், அமைச்சர்கள் பாதுகாப்பு இல்லாமல் போகமுடியாத அந்த மாநிலத்தில் தேசிய முன்னணியினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் பாரதப் பிரதமர் அவர்கள் இந்த நாட்டின் மேல் நம்பிக்கை ஏற்படுத்துகின்ற வகையில், தான் எந்தப் பாதுகாப்பும் இல்லாது, திறந்த வேனிலே போய் அந்த மக்களுடைய பிரச்சினையை அக்கறையோடு பரிசீலிக்கிறார்கள் என்று சொன்னால் இந்த நாட்டிலே ஜனநாயகம் நிலைத்திருக்கக் கூடிய அரசு மத்தியிலே அமைந்து இருப்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகளை வானொலி, தொலைக்காட்சி போன்றவை குடும்பச் சொத்தாக, ஒரு நபரினுடைய ஒளிபரப்பாக இருந்த நிலைமை போய், இன் றைக்கு நாட்டிலே இந்தியா முழுமையும் இருக்கக்கூடிய பிரச்சி னைகளை ஒளிபரப்பக்கூடிய விதத்தில் ஒரு மாறுதல் வந்திருக் கிறது என்று சொன்னால், எல்லாப் பகுதி மக்களும், உலகத்தில் இருக்கக்கூடிய, நாட்டில் இருக்கக்கூடிய நிகழ்ச்சிகளை நாட்டிலே காணக்கூடிய ஒரு பரந்த அளவிற்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது மிக வரவேற்க வேண்டிய அம்சம் ஆகும்.

அதேபோன்றுதான், இன்றைக்கு பஞ்சாயத்தினுடைய நிதி ஆதாரங்களை ஒதுக்குவதற்கும், பஞ்சாயத்திற்கு அதிகாரங் களைக் கொண்டு வருவதற்கும், அதில் இருக்கக்கூடிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதாக மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சி இன்றைக்கு அறிவித்திருப்பது என்பது வரவேற்க வேண் டிய நல்ல அம்சமாகும். அதே நேரத்தில் வளர்ந்து வரக்கூடிய சமுதாய அமைப்பில் ஏழ்மை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதனுடைய நோக்கங்களை கவர்னர் உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டு இருந்தபோதிலும்கூட, நாட்டிலே இருக்கக்கூடிய ஏழ்மையைப் போக்குவதற்கு, நாட்டிலே இருக்கக்கூடிய எதிர்க் கட்சிகளைக் கூட்டி ஆலோசனை பெற்று, அதனைத் தீர்வு காண்ப தற்கான முயற்சிகளை நமது அரசு எடுக்கவேண்டும் என்று இந்தச்

சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஆயிரம்தான் இலவசமாக வழங்கியபோதிலும்கூட ஏழ்மை நீடித்துக் கொண்டு வருவது இந்த நாட்டிலே கடுமையாக இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போன்று பல்வேறு மாவட்டங்களில் வறட்சி, பல்வேறு மாவட்டங்களில் வெள்ளம் போன்ற புள்ளி விவரங்களைத் தான காண முடிகிறதே தவிர, வறட்சியையும், வெள்ளத்தையும் தீர்வு காணும் விதத்தில், அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் நம்முடைய அரசு திட்டங்களைத் தீட்டி, அதற்கான முயற்சியை எடுக்கவேண்டும்.

தஞ்சை மாவட்டம், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களை எடுத்துக் கொண்டாலும், கடுமையான வெள்ளம் வந்து பாதிக்கப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் கடுமையான வறட்சி தொடர்ந்து நீடித்துக் கொண்டு வருகிறது. அதற்கு நிரந்தரமான தீர்வு காணவேண்டும் என்று சொன்னால் ஏரிகளை ஆழப்படுத்தி, ஆழ் குழாய்க் கிணறுகள் மூலமாக, வறட்சி மானாவாரி நிலங்களை சாகுபடிக்கும், குடிநீர்ப் பிரச்சினைக்கும் கொண்டு வருவதற்கு தொடர்ந்து ஆண்டாண்டுக் காலமாகத் திட்டங்களைத் தீட்டுவதற்கு மாறாக அடிப்படையான பிரச்சினைகள் தீர்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். பல ஆண்டுகளாக, பாசனங்கள், வடிகால்கள் சீரமைக்கப்படாமல் பல ஆண்டுக் காலமாக பல்வேறு வாய்க்கால்கள் பாழ்பட்டு இருக்கக்கூடிய நிலைமைகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன. அந்த நிலைமை தொடர்ந்து இந்த ஒரு ஆண்டுக் காலத்தில், சில பணிகள் நடைபெற்றிருக்கின்ற போதிலும்கூட எதிர்காலத்தில் அந்தப் பணிகளை முழுமையாக செய்வதற்கு இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

17-45 மணி

அதேபோன்று, குடிநீர்ப் பிரச்சினை. கடலோரப் பகுதிகளை எடுத்துக் கொண்டோமேயானால், தொடர்ந்து குடிநீர் பிரச்சினை இருந்துகொண்டுதான் இருக்கிறது. என்னுடைய தொகுதி மட்டுமல்ல, வேதாரண்யம், நாகப்பட்டினம் போன்ற தொகுதிகளைப் பார்த்தோம் என்று சொன்னால் ஒரு குடம் தண்ணீர் 1 ரூபாய்/50 காசு கொடுத்து வாங்கக் கூடிய நிலைதான் இருக்கிறது. வறட்சி நிலைமைகள் தொடர்ந்து நீடித்துக்கொண்டு தான் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வாகனம் மூலமாக தண்ணீர் வழங்கிக் கொண்டு, தண்ணீர் பிரச்சினையைப் போக்குகின்ற நிலைமை தான் இன்றும் இருந்துகொண்டு இருக்கிறது. அந்தப் பிரச்சினை காலத்தோடு, பிரச்சினைகள் வருகிறபோது தீர்க்கிறோம் என்றில்லாமல், நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும். ஆழ் குழாய்க்

கிணறுகள் போடப்படுவதாக, அதிலும் 5 ஆயிரம் ஆழ் குழாய்க் கிணறுகள் போடப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டதாக இன்றைய தினத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் ஆழ் குழாய்க் கிணறுகள் போடப்படுகிறதா ? குறிப்பிட்ட ஆழம் தோண்டப்படுகிறதா என்பதை நிச்சயமாகக் கண்காணிக்க வேண்டும். மேலெழுந்த வாரியாக பல்வேறு இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டதாகச் சொல்லி, அங்கே தண்ணீர் இல்லையென்று, போட்ட குழாய்களை கழற்றிக் கொண்டு போய்விடுகிறார்கள். அதன் பிறகு அதே இடத்தில் ஒய்.எம்.சி.ஏ. மூலமாக போடப்படுகின்ற ஆழ்குழாய் கிணறு மூலம் அந்த இடத்தில் நல்ல தண்ணீர் இருப்பதாக இன்றைய தினத்திலே பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் குடிநீர்ப் பிரச்சினையைப் பிரதானமாகத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று அரசு கொள்முதல். இன்றைய தினத்திலே அரசாங்கத்திலே கொள்முதல் அத்தியாவசியமானது. தஞ்சை மாவட்டத்திலேதான், விவசாயிகளிடத்திலேயிருந்து நேரடியாக கொள்முதல் செய்கின்ற ஒரு வழக்கம் இருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் ஒரு பகுதி ; புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு பகுதி; இந்த மாவட்டங்களில்தான் நேரடியாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. பற்றாக்குறைக்காக, மத்திய அரசிடத்திலே நாம் கையேந்த வேண்டியிருக்கிறது. ஆகையால் அரிசி வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடவேண்டி இருக்கிறது. தமிழகம் முழுவதிலும் விளையக்கூடிய நெல்லை, அரசு முழுமையாக இன்றைய தினத்திலே கொள்முதல் செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தைத் தொடர்ந்து ஓரத்த நாடு மூலமாக புதுக்கோட்டைக்கு கடத்த வேண்டுமென்று சொன்னால் ஒரு மூட்டைக்கு 50 ரூபாய் வித்தியாசம் படக்கூடிய விதத்தில் மாவட்டத்திற்கு மாவட்டம் விலை வேறுபாடு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி ஆகக்கூடிய நெல் மட்டும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் விநியோகிக்கப்பட்டு, தமிழகம் முழுமையும் அந்த அரிசியும் நெல்லும் இன்றைய தினத்திலே கொண்டு செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. பாகுபாடு இல்லாமல் தமிழகம் முழுமையும் உற்பத்தி ஆகக்கூடிய நெல்லை அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

அதே போன்று அத்தியாவசியப் பொருள்கள்; புஞ்சை தானியங்கள், இவை கணக்கிட்டு சொல்லப்பட்டிருந்தாலும்கூட அதை முழுமையாக கொள்முதல் செய்வதிலே அரசே முழு கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் பற்றாக்குறையைப் போக்குவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து எடுப்பதற்கு அரசால் முடியும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1990 சனவரி 23] *[திரு ஜி. பழனிச்சாமி]*

அதே போன்று மின்சாரத் தட்டுப்பாடு. தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை இருந்தது. தமிழக அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் மின்சாரம் பற்றாக்குறை படிப்படியாகக் குறைக்கப்பட்டு இன்றைய தினத்தில் மின்சாரப் பற்றாக்குறை இல்லாத அளவிற்கு இருக்கின்ற சூழ்நிலை கிராமப் புறங்களில் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இன்றைய தினத்தில், எரிவாயுக்களைக் கொண்டு, பெட்ரோல் எடுக்கக்கூடிய அந்த இடத்தில், எரி வாயுக்கள் வீணாகி எரிந்துகொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதேபோன்று, கோவில்களப்பாலில் 5 கோடி ரூபாயிலே ஒரு மின் திட்டத்தை உருவாக்குவதற்கான திட்டம் ஏற்கெனவே இருந்த அரசால் அறிவிக்கப்பட்டு இருந்தது. அதேபோன்று கோவில்களப்பால், குளிக்கரை, நரிமணம் போன்ற இடங்களில் எரிந்து கொண்டிருக்கக்கூடிய எரிவாயுவைப் பயன் படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஏதுவான திட்டங்களை இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப் பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பொது விநியோகம். கூட்டுறவு அங்காடி களில், இன்றைக்குப் பொது விநியோகம் மூலமாக வழங்கக் கூடிய அரிசி என்பது கடைகளிலே முழுமையாக கிடைக்கவில்லை. அத்தியாவசியமான பொருள்கள் கிடைக்கவில்லை என்கின்ற ஒரு நிலைமை மாறி இருந்தது. நாடாளுமன்ற தேர்தல் சந்தர்ப் பத்தில், அரிசி, பாமாயில் இவை அனைத்தும் கிடைத்தவுடன் மக்கள் பேசிக் கொண்டது, தேர்தல் வந்துவிட்டது, ஆகையால் இந்தப் பொருள்களெல்லாம் கிடைக்கிறது. தேர்தல் போய் விட்டால் இந்தப் பொருள்கள் கிடைக்காது என்கின்ற ஒரு பிரச் சாரம் பொது மக்களிடத்திலே கிளம்பியது. ஆகையால் இந்த நிலைமைகள் இல்லாமல், எந்த நேரத்திலும் அத்தியாவசிய மானப் பொருள்கள் அமுதம் அங்காடிகளில் கிடைப்பதற்குத் தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும். அமுதம் அங்காடி களில் வழங்கக்கூடிய பொருள்கள் கூட சமீபக் காலங்களிலே சரி யான எடை வைத்து வழங்கப்படுவதில்லை. குறைகிறது என்று சொல்லி, பிரச்சினைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. இவை களைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, ஒரு முக்கியமான விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்து கொண்டு இருக் கின்றன. 300 ரூபாய் வருமானம் உள்ளவர்கள்தான் இன்றைக்கு அரசு மருத்துவமனைகளிலே வைத்தியம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு மேல் இருக்கக்கூடியவர்கள் தங்களுடைய பணத்தைச் செலுத்த வேண்டுமென்ற கட்டாய நிலைமை இருக் கிறது. 1,000 ரூபாய் வரை வருமானம் இருக்கக்கூடியவர்களுக்கு இலவச அரிசி வழங்கவேண்டுமென்று சொல்கிற இந்த அரசு,

அரசாங்க மருத்துவமனைகளில், சாதாரண மக்கள் உடல் நலம் இல்லாதவர்கள் வருமானத்தைக் கருதாமல் வைத்தியம் பெறலாம் என்ற முற்போக்கான திட்டத்தை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை எதிர் காலத்தில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

17-50 மணி

திரு. கே. ஏ. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைப் பேச விழைகிறேன். ஆளுநர் உரையில் இந்த இந்திய நாட்டின் 80 சதவீத மக்கள் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயத் தொழிலைப் பற்றி ஒரு வார்த்தை கூட கூறப்படாதது எனக்கு வேதனையை அளிப்பதாக இருக்கிறது. வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, போராடிக் கொண்டிருக்கிற விவசாயித் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் பற்றி ஆளுநர் உரையில் எதுவும் கூறப்படவில்லை. அண்மையில் தென் மாவட்டங்களில் பெய்த கடும் மழையினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்ட ஈடு அறிவிக்காமல், நிவாரணப் பணிகளுக்காக மட்டும் 50 லட்சம் ரூபாய் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியலை அரசு ஆய்வு செய்து அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மத்தியில் ஆளும் தேசிய முன்னணி அரசின் ஒரு அங்கமாக இருக்கும் தி.மு.க. அரசு, மத்திய அரசு அறிவித்த கடன் சலுகைகளைப் பற்றி தனது நிலையை அறிவிக்கவில்லை. இது விவசாயிகளுக்குப் பெருத்த ஏமாற்றமளித்திருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில், சிறு விவசாயிகளின் அனைத்துக் கடன்களும் தள்ளுபடி என்று சொல்லப்பட்டிருப்பதை இந்தச் சபையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு இயந்திரம் செம்மையாக இயங்க வேண்டுமென்ற அடிப்படையில், அரசு ஊழியர்களுக்கு விலைவாசி உயர்வுக்காக ஊதிய உயர்வு அளிப்பதைப் போலவும், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஊக்க போனஸ் அளிப்பதைப் போலவும், விவசாயிகளுடைய உற்பத்திச் செலவை ஈடுகட்டும் வகையில், உணவுப் பொருட்களின் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளின் விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் போது, அந்தக் குழுவில் விவசாயிகளின் பிரதிநிதிகள் இருக்கச்

1990 சனவரி 23] [திரு. கே. ஏ. மணி]

செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், விலை நிர்ணயம் செய்யும் குழுவில் உள்ள அதிகாரிகளுக்கு அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், அந்தத் தொழிலில் உள்ள சிரமங்கள் மற்றும் அந்தத் தொழிலின் தன்மைகள் தெரியாத காரணத்தால், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படுவதில்லை. ஒரு உதாரணம் சொல்லவேண்டுமேயானால், பால் விலை நிர்ணயம் செய்யும் குழுவில் இருந்த ஒரு அதிகாரி, பசு ஆண்டு முழுவதும் பால் கறக்காதா என்று கேள்வி கேட்டிருந்தார். அப்படிப்பட்ட அதிகாரிகள், விவசாயிகளின் விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் குழுவில் இருந்தால் விவசாயிகளின் கதி என்னவாகும்? விவசாயிகளின் உற்பத்திச் செலவின் அடிப்படையில் விலை கொடுக்கும்போது, நுகர்வோர் பாதிக்கப்படுகிறார்கள் என்று சமாதானம் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் தொழிற்சாலைகளில் தயாராகும் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும்போது, நுகர்வோரின் நலன் அடிப்படையில் நிர்ணயம் செய்வதில்லை. அப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லாத விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு பெரிய கடனாளிகளாக இருக்கிறார்கள். இந்தக் கடன் சுமையிலிருந்து அரசு அவர்களை மீட்கவேண்டும். சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல், அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தி.மு.க.—வின் தேர்தல் அறிக்கையில் புதியதாக 16 லட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் வசதி அளிக்கப்படுமென்று கூறப்பட்டிருந்தது. ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் இருந்த நேரத்தில் என்து தொகுதியான கபிலர் மலையில் காவிரிக்கரைப் பகுதியில் 5,000 முதல் 6,000 ஏக்கர் வரை புதிதாக நீரேற்றுப் பாசனம் என்ற முறையில் நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. பின்னர் அவற்றுக்கு அனுமதி வழங்கப்படாமல் இருந்து, 1982-83-ம் ஆண்டில் நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது. புதிய பாசன வசதி பெற்ற நிலங்களைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு 8 மாதம் மட்டும்தான் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்று நிபந்தனை முதலிலே விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால், வாழை, கரும்பு, வெற்றிலை, கோரை போன்ற பயிர்களுக்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் தேவைப்படுகிறது. இந்தச் சங்கங்கள் தொடங்கப்பட்ட காலத்தில் விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று ஆண்டு முழுவதும் தண்ணீர் எடுக்க ஒப்புக்கோள்ளப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இந்த நடைமுறையை மாற்றி 8 மாதங்களுக்கு மேல் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று கூறுவதால் மகசூல் அனைத்தும் அறுவடை காலத்தில் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே இதுவரையில்

நடைமுறையில் இருந்ததைப் போல் ஆண்டு முழுவதும் தண்ணீர் எடுக்க வகை செய்யும் நிலையான ஆணையைப் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

17-55 மணி

எனது கபிலர் மலைத் தொகுதியில் 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்க எஸ். வாழவந்தி, பெரமாண்டன் பாளையம், காளிபாளையம், ராசிபாளையம் போன்ற கிராமங்களில் நீரேற்றுப்பாசன விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டது. வறட்சிப் பகுதிகளில் வறுமையில் வாடிக்கொண்டிருந்த நிலைமையில் தங்களுடைய நிலங்களுக்கு காவிரி நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தாய்மார்கள் தாலி முதலானவற்றை எல்லாம் விற்றும் அடகு வைத்தும் சுமார் 50 இலட்சம் ரூபாய்க்கான பணிகளைச் செய்திருந்தார்கள். இந்த நீரேற்றுப் பாசனச் சங்கத்திற்கு அனுமதி அளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கும் தருவாயில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்போது கலைக்கப்பட்டுவிட்டது. மேலும் அதற்கு முன்னின்று பொறுப்பேற்று நடத்திய அப்போதிருந்த மோகனூர் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்கள் திடீரென மரணம் அடைந்துவிட்டார்கள். அரசு கலைக்கப்பட்டு விட்டதாலும், இந்தத் திட்டத்தை முன்னின்று நடத்தியவர் இறந்து விட்டதாலும் சுமார் 2,000 விவசாயக் குடும்பங்கள் தங்களுடைய பொருட்களை இழந்து, நீர்ப்பாசன வசதியையும் பெற இயலாத நிலைமையில் பெரும் கடனுக்கு ஆளாகி சீரழிந்து விட்டனர். இப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் பொறுப்பேற்று இருப்பதால் எனது தொகுதியில் பாதிப்புக்கு ஆளாகிய அந்த விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் இந்த நீரேற்றுப் பாசனத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி இதை நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்க முடியும் என்பதைக் கடந்த 1984 ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். நான் சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது 1984 ஆம் ஆண்டில் இருந்த நிதிநிலை இப்போது இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் இல்லை என்று சொல்லாமல், நிதிநிலையைக் காரணம் காட்டியதால், அதாவது இலவச மின்சாரம் வழங்குவதை இந்த அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டதால் தான் நான் ஒன்றைக் கோர விரும்புகிறேன். அதாவது நிதிநிலை சரியில்லை என்று கூறுகிற அதே நேரத்தில் அரசு ஊழியர்களுக்கு 400 கோடி ரூபாய்க்கு மேல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. பல இலவசத் திட்டங்கள் மூலம் பெருந்

1990 சனவரி 23] [திரு. கே. ஏ. மணி]

தொகை செலவிடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் விவசாயிகள் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை காட்டாமல் இருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 80 சதவீதமாக இருக்கின்ற, விவசாயத்தையே தொழிலாக நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிற மக்கள் மீது முதலமைச்சர் அவர்கள் அக்கறை காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாய பம்ப் செட்களுக்கும், தொழில் துறை மின்னிணைப்புகளுக்கும் தனித் தனியே முன்னுரிமை கொடுத்து அந்தப் பட்டியலின் படி மின்னிணைப்பு வழங்கவேண்டும். இதில் தொழில் துறைக்குக் கொடுக்கப்படும் மின்னிணைப்புக்கும், விவசாயத் துறைக்குக் கொடுக்கப்படும் மின்னிணைப்புக்கும் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும். தொழில் துறைக்கும் விவசாயத் துறைக்கும் குறைந்தபட்சம் 1:10 என்ற விகிதாச்சாரத்தில் மின்சாரம் வழங்கவேண்டும்.

நீராதாரம் அற்ற புஞ்சை விவசாய நிலங்களுக்கு கர்நாடக மாநில அரசைப் போல குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்து மின்னிணைப்பு வழங்கி மிக வேகமாக புஞ்சை நிலங்களைப் பாசனப் பகுதிகளாக மாற்றித் தருவதற்கு அரசு முன்வரவேண்டும் (மணியடிக்கப்பட்டது).

தற்போது தமிழக மக்களின் கேள்வி எல்லாம் சாராயக் கடைகளையும், கள்ளுக்கடைகளையும் அரசு எப்போது ஏலம் விட்டது என்பதுதான். அந்த அளவுக்குத் திரும்பிய பக்கம் எல்லாம் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது. காவல் துறையினரே முன்னின்று மேற்பார்வையிட்டு தங்களுக்கு வேண்டிய பங்கையும் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்திற்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய காவல்துறையினரும், கள்ளச்சாராயப் பேர்வழிகளும் ஏழை எளிய மக்களின் பொருளாதாரத்தை நசுக்குகிறார்கள். இந்தக் கொடுமைக்கு அரசு மாற்று வழி காணவேண்டும். சட்டத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்பவர்கள் சன்மானம் பெறும்போது சட்டத்தை மதித்து நடப்பவர்களும் இந்தச் சன்மானத்திற்கு ஆசைப்பட்டால் சட்டம் ஒழுங்கு என்னவாகும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முழுமையாக மது விலக்கை அமல்படுத்த இயலாது என்று தெரிந்து இருந்தும் மது விலக்கை தளர்த்தாமல் இருப்பது அரசுக்கு பெருமளவு பொருளாதார இழப்பையும் கள்ளச்சாராயப் பேர்வழிகளுக்கு மற்றும் போலீஸ் துறைக்கு பெருமளவுக்கு வருமானத்தையும்தான் தேடிக்கொடுத்திருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மேலும் கள்ளச்சாராயத்தினால் ஏழையெளிய மக்களின் பொருளாதாரம் சீரழிவதோடு கொடுமையான நச்சுப் பொருள்கள் கலந்து கள்ளச் சாராயம் தயாரிப்பதால் அவர்களுடைய உடல் நலனும் பாதிக்கப்படுகிறது என்பதைக் கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

18-00 மணி

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஆளுநர் அவர்களால் அளிக்கப்பட்ட உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை வரவேற்று ஒருசில கருத்துக்களை கூற முற்படுகின்றேன். இந்த உரையினுடைய முகப்பிலே மத்தியிலே அமைந்திருக்கக்கூடிய தேசிய முன்னணியினுடைய அரசை, தேசிய முன்னணியினுடைய அரசு எடுத்திருக்கக்கூடிய நல்ல கொள்கை முடிவுகளை வரவேற்று குறிப்பாக இன்டர் ஸ்டேட் கவுன்சில் அமைப்பது பற்றியும், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் போன்ற மாநிலங்களிலே அமைதி ஏற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை வரவேற்றும், வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சுயாட்சி அளிப்பதை வரவேற்றும், லோக் பால் நடவடிக்கைகளை உடனடியாக வரவேற்றும், மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை விரைவாக ஏற்று அதற்கு முழு வடிவம் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசு கேட்டு இருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு நில்லாமல் மத்தியிலே அமைந்திருக்கக்கூடிய லோக் பால் போன்ற முறையை, இதர மாநிலங்களிலே அமைந்திருப்பதைப்போன்று லோக் ஆயுக்தா-வை இந்த மாநிலத்திலும் குறிப்பாக வர இருக்கின்ற கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும் என்கின்ற ஒரு நிலைமை உறுதி அளிக்கப்படுவதையும் நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு நில்லாமல், நான் பார்க்கின்றபோது, பல நல்ல அம்சங்களை வரவேற்கின்ற அதே நேரத்தில் இந்த தமிழகத்தினுடைய நிலைமையையும் நாம் இங்கே ஆய்வு நடத்தவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நிதிநிலைமையைப் பொறுத்தவரையில் இந்த ஆளுநருடைய உரை நமக்கு தெரிவிக்கின்ற செய்தி என்னவென்று சொன்னால், இன்னும் இந்த அரசு பொறுப்பேற்று ஓராண்டு கழிந்த பின்னாலே ஒரு திருப்திகரமான முடிவு, ஒரு திருப்திகரமான நிலைமை நிதிநிலைமையிலே ஏற்படவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக ஏற்பளிக்கப்பட்ட திட்டச்செலவு 1988–89 ஆம் ஆண்டு 1,457 கோடி என்று இருக்க வேண்டுமென்று இருந்ததை 1,202 கோடி என்கின்ற அளவுக்கு குறைக்கப்படவேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கியதே இந்த மன்றத்திலே சுடந்த முறையே ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டது. அது இந்த ஆண்டு 1989-90-க்கு 1,360 கோடியாகத்தான் எட்டியிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் நிதிக் கமிஷனிலே,

1990 சனவரி 23] [திரு. பொன். விஜயராகவன்]

இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய, பிளானிங் கமிஷனிலே நான் விசாரித்தபோது, இந்த ஆண்டுகூட நாம் கேட்டிருக்கக்கூடிய அளவுக்கு 1988–89 ஆம் ஆண்டு, 1,457 கோடி என்று ஏற்பளிக்கப்பட்டிருப்பதை விடவும் குறைவாக இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டபோது உண்மையிலேயே நான் அதிர்ச்சி அடைந்தேன். நான் இதை சொல்வதற்குக் காரணம் இன்றைக்கு இந்த மாமன்றத்திலே பார்க்கின்றபோது, பேசுகின்றபோதுகூட, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற போதுகூட எல்லாவற்றுக்கும் இங்கே இருக்கக்கூடிய வேலைகள் முடங்கியிருப்பதற்குக் காரணம் நிதிநிலை பற்றாக்குறை என்பதை இங்கே கேட்க நேரிடுகிறது.

பள்ளிக் கட்டிடங்களுக்கு கட்டடம் கட்டுகின்ற காரியத்திற்காக என்று இருந்தாலும் சரி, இன்றைக்கு இங்கே குறிப்பாக, கேள்வி நேரத்திலே பதில் அளிக்கும்போது கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படவேண்டும் என்று சொன்னால்கூட ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே கால்நடை மருத்துவமனை கட்ட வேண்டுமென்றால் அதற்கு முதலில் 25 சதவிகிதம் என்றும், இரண்டாவது கட்டம் என்றால் 50 சதவிகிதம் என்றும், மூன்றாவது கட்டம் என்றால் 75 சதவிகிதம் என்றும் நான்காவது கட்டம் என்றால் முழுமையாக கொடுக்கவேண்டுமென்ற அளவுக்கு நிதிநிலைமை பற்றாக்குறை என்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது நம்முடைய ஒட்டுமொத்தமான வளர்ச்சியை பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை என்பதை நாம் உணரவேண்டும். ஒரு பிராப்பர் பைனான்சியல் டிசிப்ளின் இந்த மாநிலத்திலே கெட்டுவிட்டதோ என்ற அளவில் அஞ்சுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய செல்வங்களைப் பாதுகாப்பதற்குரிய நிதிநிலைமைகூட நமக்கு இல்லாமல் போய்விடுகிறதோ என்ற அச்சத்தை என்னைப் போன்றவர்களுக்கு ஏற்படுத்துகிறது. அதைத்தான் இங்கே சாலைகள் அமைத்திருக்கிறோம் என்று சொன்னால் ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கிற சாலைகளைப் பராமரிக்க போதுமான நிதிவசதி இல்லை. கால்வாய்களை தூர்வாரி ஒழுங்காக தண்ணீரை கடைமடையில் இருக்கிற நிலங்களுக்கு கொண்டு போக வசதியில்லை. இது நிதர்சனமான உண்மை.

18-05 மணி

ஆக, உருவாகியிருக்கும் கால்வாய்களாகட்டும், கட்டிடங்களாகட்டும், கல்விச் சாலைகளாகட்டும் எதுவாக இருந்தாலும் அவைகளைப் பராமரிப்பதற்குக் கூட நிதிவசதி இல்லாத சூழ்நிலையில் இந்த அரசு ஏற்படுத்திக்கொண்டிருக்கிற வாக்ஸ் பாப்புலிஸ்ட் ஸ்கீம்களை, மக்களைக் கவரும் திட்டங்களை நான் குறை கூறுவதாக தயவுசெய்து எண்ணிவிடக் கூடாது.

என்றாலும் கூட நாம் என்ன செய்ய போகிறோம், வாக்ஸ் பாப்புலிஸ்ட் ஸ்கீம்களுக்காக செலவழித்து கடைசியில் ஏற்கெனவே இருக்கிற திட்டங்களைக் கூட சரியாக பராமரிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இன்னும் மோசமான விளைவுகளுக்கு இது கொண்டு போகக் கூடாது என்பதால் நான் அறிந்து கொண்ட கருத்துக்களை இங்கே சொல்ல முற்படுகிறேன். ஆகவே, இந்த மாநிலத்திலுள்ள எல்லா நிலைமைகளையும் மறுபடியும் சிந்தித்து நல்ல முன்னேற்றத்திற்கான அடிப்படையை அமைக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறோம். ஆனால் அதற்கான சூழ்நிலை இப்போது இல்லை. காரணம் பல ஆண்டுகளாக பினான்சியல் டிசிபிளின் சரியில்லாத நிலையில், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்கிற அடிப்படையில், இப்படியே போய்க்கொண்டிருந்தால், ஒரு பெரிய ஐயப்பாடு பொருளாதார நிபுணர்கள் மத்தியில் மட்டுமல்ல இந்த நாட்டிலுள்ள சாதாரணமாக நாட்டு நிலைமையை புரிந்துகொண்டவர்கள் கூட தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதையும், இது குறித்து அரசு அவசியம் மறு சிந்தனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆயிரம் ரூபாய்வரை வருமானம் வருகிறவர்களுக்கு இலவச அரிசி என்று சொல்லியிருக்கிறார்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கிற மக்களுக்கு இலவசமாக அரிசி போடுவதை நான் எதிர்க்கவில்லை. ஆனால், நான் கேட்பதெல்லாம் இப்படி செய்கின்ற நீங்கள், ஏன் சட்டப்பூர்வமாக இருக்கின்ற, ரேஷன் வேண்டுமென்று கேட்பவர்களுக்கு போடவில்லை என்பதுதான். அரசு இலவசமாக அரிசியை போடும் நிலையில் சட்டப்பூர்வமாக ரேசன் மூலமாக அரிசி வேண்டுமென்று கேட்பவர்களுக்கு அரசு ஏன் கொடுக்க முன்வரவில்லை? உதாரணமாக, எல்லையோரங்களில் இருக்கிற இடங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற எல்லையோர பகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருப்பது எங்களுக்கு சட்டப்பூர்வமான ரேஷனை சரியான அளவில் வழங்குங்கள் என்பதைத்தான். அவர்கள் எங்களுக்கு இலவசமாக அரிசி கொடுங்கள் என்று கேட்கவில்லை. ரேஷன் அரிசியை சட்டப்பூர்வமாக வழங்குங்கள் என்றுதான் கேட்கிறார்கள். அரசின் முன் கோரிக்கையை வைப்பதை தங்களுடைய தலையாய கடமையாக அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய கோரிக்கையை கவனித்த பின்புதான் மற்றவைகளை கவனிப்பதாக அரசின் திட்டங்கள் இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை. ரேஷன் கார்டுகள் புதுப்பிக்கப்பட்டு, கணக்கெடுக்கும் பணி முடிந்துவிட்டது. ஆனாலும் இன்னும் ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படவில்லை. ஏன் இன்னும் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற தகவல் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

1990 சனவரி 23] [திரு. பொன். விஜயராகவன்]

அடுத்து, புழுங்கல் அரிசி போட வேண்டுமென்ற பிரச்சினை தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருக்கிறது. புழுங்கல் அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு புழுங்கல் அரிசி போடப்படவில்லை. இப்போது பாதி புழுங்கல், பாதி பச்சை என்று போடுவதை ஒப்புக்கொள்கிறேன், ஆனால், முன்பு இருந்த 50 ; 50 என்கிற அளவு கூட போடப்படவில்லை. ஆகவே, முழுமையாக புழுங் கல் அரிசி போட வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, ஏழை தொழிலாளர்களுக்கான இன்சூரன்ஸ் திட்டம் முந்தைய அரசால் அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே பதில்சொல்லும்போது ஒன்றை சொன்னார்கள். அதுபற்றி ஒரு முடிவை எடுக்க இருப்ப தாக அவர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற் கிறேன். ஆனால், வெளியிலே மக்கள் மத்தியிலே இருக்கிற அச்ச உணர்வு என்னவென்றால் 10 ரூபாய் கொடுத்தால் 6.25 ரூபாய் தான் கிடைக்கும் என்கிற நிலை இருக்கிறது. 100 ரூபாய் கட்டினால் 62.50 சதவீகிதம்தான் கிடைக்கும் என்ற அச்ச உணர்வு அவர்களிடம் இருக்கக் கூடாது. ஆகவே, வட்டி இல் லையென்றாலும் கூட அசலாவது அவர்களுக்கு கிடைக்கும் வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த ஆளுநர் உரையிலே கார்ப்பரேஷன் தேர்தல் கூட்டுறவு தேர்தல் பற்றி எல்லாம் சொல்லப்பட்டது. இன்னும் ஆரோக்கியமான நிலைமை ஏற்படவில்லை என்று சொல்லக் கட மைப்பட்டு இருக்கிறேன். ஆனால், இப்போது இன்ன மாதம், இன்ன தேதி என்று வரையறுத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குள் இந்தத் தேர்தலை நடத்தி இந்த அரசு பெருமை சேர்க்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

18-10 மணி

இந்த ஆட்சி ஏற்பட்ட நேரத்தில் இதற்கு முன்னால் இருந்த ஆட்சியில் நடைபெற்ற பல்வேறு தவறுகளை இந்த மாமன்றத் திலே நம்முடைய முதல்வர் அவர்கள் அரசினுடைய சார்பில் பல்வேறு அடுக்கடுக்கான பிரச்சினைகளைச் சொன்னார்கள். குறிப்பாக டாமின் நிறுவனத்திலே நடைபெற்ற ஊழல்கள், டாஸ்மாக் நிறுவனம் போன்றவைகள் பற்றிச் சொன்னார்கள். ஆனால், அவைகள் இன்றைக்கு என்ன நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி சரியான தகவல்களை இந்த அரசு நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டு இருக் கிறது. அதையும் தெளிவாக்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

[திரு. பொன். விஜயராகவன்] [1990 சனவரி 23

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், அரசு தேர்வுத் துறை என்ற ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறை இன்றைக்கு தமிழக அரசினுடைய கல்வி இலாகாவின் சார்பிலே இயங்கும் இயக்ககம். அதற்கு மண்டலங்களும் இருக்கின்றன. ஒரு காலத்தில் தேர்வுக்கு என்று ஒரு துறை தனியாகக் கிடையாது. அதற்குப் பின்னாலே காலப் போக்கில் தேர்வுகள் நடத்துவது, அதனுடைய முடிவுகளை வெளியிடுவது, அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவது போன்ற அவசியம் வளர, வளர அத்துறை தனித் துறையாக மாற்றப்பட்டு, அதற்கு மண்டலங்களும் இப்போது ஏற்பட்டு இருக்கின்றது. ஆனால், இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்ற சூழ்நிலை என்னவென்றால் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி அடையாளமாக ஒரு உண்ணாவிரதம் இருக்கப் போவதாகச் சொன்னார்கள்.

அடுத்து அந்த இயக்கத்தைப் பற்றி எனக்குத் தெரிந்த ஒரு செய்தி மட்டுமல்ல; இன்றைக்கு நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டு இருக்கிற பிரச்சினை என்னவென்றால் ஒரு பையன் தேர்வு எழுதிவிட்டு அதுவும் குறிப்பாக பிளஸ் 2-வில் படித்த பையனாக இருந்தாலும் சரி, 10 ஆவது படித்த பையனாக இருந்தாலும் சரி, கல்வி ஆண்டிலே அவன் தோற்று பிரைவேட் கேன்டிடேட்டாக எழுதினால், அதற்குப் பின்னாலே அவனுக்குச் சான்றிதழ் வாங்குவதிலே மிகப் பெரிய சிரமங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்குக் காரணம் கேட்கும்போது அத்துறையைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். தாங்கள் 41 தேர்வுகளை அந்த இயக்ககத்தின் சார்பில் நடத்த வேண்டி இருக்கிறது என்று. அந்த 41 தேர்வுகளை அவசர அவசரமாக நடத்துவதற்காகத் தான் ஆட்கள் பலமும், அமைப்பு ரீதியான வாய்ப்புக்களும் இருக்கின்றன. ஆகவே, இன்னும் அத்துறை விரிவுபடுத்தப்பட வேண்டும். காலப் போக்கிற்கு ஏற்ப அது மாற்றப்படவில்லை என்று அவர்கள் தங்களுடைய குறைபாடுகளைத் தெரிவிக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு, கல்வி ஆண்டிலே பரீட்சை எழுதுகிறவர்கள் அதாவது பிளஸ் 2 வகுப்பில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 18 ஆயிரத்து 64. அது இன்றைக்கு 3 இலட்சத்து 62 ஆக உயர்ந்து இருக்கிறது. அன்றைக்கு பிரைவேட் ஸ்டூடண்ட்ஸ் என்ற அளவில் தோற்று மறுபடியும் எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்திலிருந்து இன்றைக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் என்ற அளவிலே உயர்ந்து இருக்கிறது. மேலும், ஒரு செய்தியை நான் கேள்விப்படுகிறேன். பிளஸ் 2 பரீட்சை முன்னாலே வைத்துக்கொண்டு 10 ஆவது வகுப்புப் பரீட்சையை பின்னாலே தள்ளப்படும் சூழ்நிலை இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அப்படியானால் 10 ஆவது படித்துக்கொண்டிருக்கும் மாணவன் ஏறத்தாழ பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டு சுமார் 40

1990 சனவரி 23] *[திரு. பொன். விஜயராகவன்]*

அல்லது 45 நாட்கள் வரையிலும் டீன் ஏஜ் என்று சொல்கின்ற அந்தப் பிஞ்சு வயதில் வீட்டில் உட்கார்ந்து கொண்டு படிக்கவும் மாட்டான்: அந்த நிலைமை நல்ல ஒரு கல்வியை ஏற்படுத்தாது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். இவைகளையெல்லாம் கணக்கில் கொண்டு அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு புறம் சொன்னாலும், பொது மக்களுடைய பிரச்சினைகளையும் இந்த நாட்டில் உள்ள பல்வேறு பிரச்சினைகளையும் கருத்தில்கொண்டு அவைகளைத் தீர்க்க அரசு முன்வரவேண்டும். இன்னும் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு சான்றிதழ்கள் பெறமுடியாத அளவுக்கு அந்த இயக்ககத்தில் நிலைமை இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு அந்த இயக்கத்தினரின் கோரிக்கைகளை இந்த அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தலைவரவர்களே, கடந்த ஆட்சி இருந்தபோது காவலர்கள் தேர்வு நடைபெற்றது. அப்போது அதிலே தேர்வு பெற்றவர்கள் ஏராளமான பேர்கள் இன்றைக்கு காவலர்கள் பதவிபெற்று இருக்கிறார்கள். காவலர்களாகத் தேர்வு பெற்று பட்டியலில் இருப்பவர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேலை கிடைக்கும் என்று காத்துக்கொண்டு, நம்பிக்கொண்டு இன்றைக்கு இருக்கிறார்கள். தேர்வு பெற்றவர்களுக்கு உடனடியாகக் காவலர் பயிற்சி அளிப்பதற்கான உத்திரவு பிறப்பித்து இந்த அரசாங்கம் செயல் முறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் இன்னும் பல காவல் நிலையங்களிலே ஒழுங்கான அளவுக்குக் காவலர்கள் இல்லை. ஆனால், அதிகாரிகளின் வளர்ச்சி ஒரு புறம் பெருக்கிக் கொண்டு போகிறது என்று இருந்தாலும்கூட அடிமட்டத்தில் வேலை பார்ப்பதற்கான காவலர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஒரு காவல் நிலையத்தில் 8 அல்லது 9 காவலர்கள் இருந்தால் அவர்களை வைத்துக்கொண்டு அந்த நிலையம் எப்படிச் செயல்பட முடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்குப் பேசுகின்றபோது கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் எவ்வளவு கன அடித் தண்ணீர் இருக்கிறது என்பதைப்பற்றி நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

இன்றைக்கு இருக்கக்கூடிய தண்ணீர் 2,036 மில்லியன் கன அடியாகும். அதிலே டெட் ஸ்டோரேஜ் அளவு போக மீதி 1,000 மில்லியன் கன அடி தண்ணீராக இருக்கிறது. அதைத்தான் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதுமுள்ள 60,000 ஏக்கர் நிலப் பரப்புக்கும் தரமுடியும்—தர வேண்டிய நிலையில் இருக்

கிறது என்று அமைச்சர் அவர்களே இங்கே சொன்னார்கள். ஆனால், கேள்வி நேரத்தின்போது மின்துறை அமைச்சர் அவர்கள் கூடங்குளத்திற்கு ஒரு வினாடிக்கு 10 கன அடி தண்ணீர்தான் பேச்சிப்பாறை அணையிலிருந்து வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தால்—இன்றைக்கு இருக்கிற ஸ்டோரேஜ் 1,000 கன அடி. ஒரு வருஷத்திற்குக் கூடங்குளத்திற்கு வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் விடுவது என்று சொல்லுகிறபோது ஏறத்தாழ 315 மில்லியன் சி.எப்.டி.—அதாவது ஏறத்தாழ 31 சதவீதம் தண்ணீரை அந்த அணையிலிருந்து நாம் ஒரு ஆண்டுக்குக் கொடுக்க வேண்டும்.

18–15 மணி

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாகப் போய்விடக்கூடாது என்பதற்காக விளக்கம் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் வேண்டும் என்றால் ஒரு ஆண்டுக்கு 315 மில்லியன் கன அடி தண்ணீர் வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்தப் பேச்சிப்பாறை-பெருஞ்சாணி அணைக்கட்டின் கொள் அளவில் ஆண்டு முழுவதும் மின்சாரத்திற்குப் பயன்படுத்த இருக்கிற தண்ணீரின் அளவு 2.2 சதவீதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, மொத்தம் 2.2 சதவீதமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல் 30 சதவீதத்திற்கு மேல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்குப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்த கணக்கின் அடிப்படையிலே நான் சொல்லுகிறேன். அணையின் மொத்தக் கொள் அளவு என்பது வேறு. ஆனால், மழைக் காலங்களில் வருகிற தண்ணீர் என்பது வேறு. பேச்சிப்பாறை அணை என்பதன் மொத்தக் கொள் அளவு 5 டி.எம்.சி.—அது ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்னே கட்டப்பட்டது. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அதிலே சில்ட், மண் என்றெல்லாம் போக 5 டி.எம்.சி. தண்ணீர் கொள் அளவு பிடிக்கிற அளவுக்கு இப்போது தண்ணீர் நிற்குமா என்பதே சந்தேகம்.

கடந்த ஆண்டிலே பார்க்கிறபோது அங்கே மழை அளவு மிகவும் குறைந்து இருக்கிறது. அப்படித்தான் ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வருகிறது. அப்படி நான் கணக்கைப் போடுகின்றபோது 800 கன அடி தண்ணீர் திறந்துவிட்டால் எங்கள் மாவட்டத்திற்கு 5, 6 நாளைக்குப் போதும். இப்போது எங்களுக்கு ஏற்படுகிற பிரச்சினை அந்தத் தண்ணீரைக் கொண்டு 2 நாளைக்காவது பயிர்களைக் காப்பாற்ற முடியுமா என்றிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மொத்தக் கணக்கை எடுத்து வைத்துக் கொண்டு பேசுகிறபோது அங்கே மழை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இந்த நிலையில்

1990 சனவரி 23] [திரு. பொன். விஜயராகவன்]

அந்த அணையில் போடப்பட்டிருக்கிற கொள் அளவுக்குத் தண்ணீர் இருக்குமா என்பதே பெருத்த சந்தேகத்திற்குரியதாகும். எனவே, அப்படிப்பட்ட பிரச்சினை ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. ரா. சொக்கர் : தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணைக்கட்டின் மொத்தக் கொள்ளளவு 4,840 எம்.சி.எப்.டி. It has been designed for slightely less than 2 fillings அதாவது 9,000 எம்.சி.எப்.டி.—2 தடவை நிரப்பினால் கிடைக்கும் அளவுக்குச் சமம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் ஒரு நாளைக்கு 10 கியூசெக்ஸ் தண்ணீரை கூடங்குளத்திற்கு எடுத்தால் 315 எம்.சி.எப்.டி. பேச்சிப்பாறை அணையிலிருந்து செலவாகும். ஆனால், அதன் கொள் அளவு 9,000 எம்.சி.எப்.டி. ஆகவே, சில்ட் இருந்தாலும் டெட் ஸ்டோரெஜ் லெவலை விட—இன்னும் சில்ட் வராத காரணத்தால்—பேச்சிப்பாறை அணையில் மொத்தம் 4,840 எம்.சி.எப்.டி. தண்ணீரை இன்னமும்—இன்றைக்கும் சேமித்து வைக்க முடியும்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அதுமட்டுமல்ல. பேச்சிப்பாறை அணைக்கட்டில் நீர் மேலும் வருவதற்கான முறையில் அதற்கு மேல் பகுதியில் உள்ள எல்லா கால்வாய்களையும் நவீனப்படுத்த—மாண்புமிகு உறுப்பினருக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகங்கள் வராத அளவுக்கு—அதற்கும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, கூடங்குளத்தில் முதற்கட்டமாக இரண்டு 1,000 மெ.வா. மின்திறன் கொண்ட அணுமின் நிலையம் வர இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற மின்பற்றாக்குறையில் இப்படிப்பட்ட இரண்டு 1,000 மெ.வா. அளவு மின் நிலையம் வருகிறபோது ஒரு வினாடிக்கு 10 கன அடி தண்ணீர் தருவது அதிகமில்லை. உண்மையிலே அது 2.2 சதவீதத் தண்ணீரைத்தான் அணைக்கட்டிலிருந்து எடுக்கப்படும். மேலும், தண்ணீரைத் தேக்கிவைக்க ஆக்க பூர்வமான யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற..(மணியடிக்கப்பெற்றது) நிறைய குறுக்கீடுகள் இடையில் வந்துவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாருடைய கணக்கிலும் குறுக்கீடுகளும் சேர்க்கப்படுகின்றன.

திரு. பொன். விஜயராகவன் : மேலும், இங்கே உறுப்பினர் திரு. பாலையா அவர்கள் பேசுகிறபோது......

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, நான் திரு. பொன். விஜயராகவன் அவர்களிடத்திலே தெரிந்து கொள்ள விரும்புவது இதுதான். கூடங்குளத்திற்கு அந்த அணையிலிருந்து தண்ணீர் தரப்பட வேண்டுமா? வேண்டாமா?

18–20 மணி

திரு. பொன். விஜயராகவன்: என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய கருத்தை நான் தெளிவாக ஏற்கெனவே இந்த மன்றத்திலே வைத்து இருக்கிறேன். நான் அதற்கு மேலே போய் விட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டு விடும். இன்றைக்குக் கல்பாக்கத்திலே உள்ளதைப்பற்றி இந்த அறிக்கையிலேயே கூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். கல்பாக்கத்திலே எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டாலும் அவ்வளவும் இங்கே தரப்படவில்லை என்று கூறப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் இது சம்பந்தமாக ஒரு கமிட்டி போட்டு அந்தக் கமிட்டியினுடைய முடிவு கூடத் தெரியவில்லை. அதில் வேறு விதமான பதில் வருகின்ற பொழுது எங்கள் கருத்தைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கமிட்டி போடப்பட்டு அந்தக் கமிட்டி என்ன சொன்னது என்பது இன்னும் வரவில்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: கமிட்டி போடுகிறோம் என்று சொன்னால், அது வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி இரு வேறு கருத்துக்கள் உருவாகின்ற பொழுது அதுபற்றி அறிய அன்றைக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், நான் கேட்கின்ற கேள்வி, கூடங்குளத்திற்கு அங்கிருந்து தண்ணீர் தரப்பட வேண்டுமா, வேண்டாமா என்பதுதான்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சரவரர்கள் மீண்டும் மீண்டும் கூடங்குளத்திற்குத் தரப்பட வேண்டுமா வேண்டாமா என்று கேட்கிறார்கள். குமரி மாவட்டத்திலேயிருந்து தண்ணீர் தரப்படும். நெய்யாற்றிலிருந்து வெள்ளம் கடலுக்குப் போகிறது. குழித்துறை ஆறு இருக்கிறது, பழையாறு ஆறு இருக்கிறது, நெய்யாற்றுத் தண்ணீர் இருக்கிறது. நெய்யாறு, குழித்துறை ஆறு, பழையாறு ஆகிய இந்த மூன்றுக்கும் இடையிலே இருந்து தண்ணீரைக் கொண்டு போகலாம். இது ஒன்று கூட முடியவில்லை என்றால், மணக்குடியில் மெஷின் டேம் என்று சொல்லப்படுகின்ற இடத்திலிருந்து அந்த மீனவர் கிராமத்திலிருந்துத் தண்ணீரைக் கொண்டு போகலாம். எனவே, அது தவிர, அங்கிருந்து கொண்டு போவதற்குத்தான் கன்னியாகுமரி மாவட்டத்து மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

திரு. பொன். விஜயராகவன்: அவர்கள் கருத்து கூறியதற்கு நன்றி.

1990 சனவரி 23] [திரு. பொன். விஜயராகவன்]

அதற்கடுத்த செய்தியாக, மாண்புமிகு முதல்வரவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு, அவர்கள் முதல்வராக ஆகி வந்தவுடனே இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி ரூபாய்க்குத் தொழில் தருவதாக, தொழிலே இல்லாத மாவட்டத்திற்குத் தருகிறேன் என்ற உறுதிமொழியை அந்த மாவட்டத்து மக்களுக்குச் சொன்னார்கள். அது ரப்பராகக் கூட இருக்காலம், கயிறாகக் கூட இருக்கலாம் என்று அங்குள்ள மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, வெகு விரைவில், தொழிலே இல்லாத அந்த மாவட்டத்திற்கு மிகப் பெரிய தொழிலை ஏற்படுத்தி தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலூக்காக்களுக்கு சப்சிடி ஸ்கீம் இல்லை. அந்தத் தாலூக்காக்களுக்கும் அந்த சப்சிடி ஸ்கீமை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை, தென்னார்க்காடு மாவட்டங்களிலே கிடைக்கின்ற எரிவாயுவைப் பயன்படுத்திக்கொண்டு அந்தப் பகுதியிலே இரும்பு சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளை மின்சாரம் உற்பத்தி செய்கின்ற காரியங்களை இன்றைக்கு இருக்கக் கூடிய இணக்கமான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாடு பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலை திட்டத்தை வெகு விரைவாக நடைபெறுவதற்கான ஒரு முயற்சியை எடுத்துக் கொண்டிருந்தாலும் அதை விரைந்து முடிப்பதற்கான முழு நிலையையும் இன்றைக்குள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், ஒரு சஜஷனாக நான் சொல்ல விரும்புகிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலையை நடைமுறைப் படுத்துகின்ற நேரத்தில் கொஞ்சம் அதிகமாகவே நிலத்தை ஆர்ஜிதப்படுத்துவோமேயானால் மத்திய அரசை வலியுறுத்தி ஒரு கிழக்குக் கடற்கரை இரயில்வே திட்டத்தை இந்த அரசின் மூலமாக வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது சட்டக் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, வேறு எந்தவிதமான புரபஷனல் கல்லூரிகளோ இல்லாத ஒரு மாவட்டம், இந்த நிதி நிலை அறிக்கையை அரசு சமர்ப்பிக்கின்ற பொழுது அரசுக் கல்லூரி என்ற ஒன்றே இல்லாத அந்த மாவட்டத்திற்கு ஒரு நல்ல மருத்துவக் கல்லூரியைத் தருவதற்கு இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்; சட்டக் கல்லூரி போன்ற

வைகளைத தர வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகின்றேன். நன்றி வணக்கம்.

18-25 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்று வருகிற விவாதத்தில் நானும் கலந்து கொள்கிற வாய்ப்பை தந்தமைக்கு நான் முதலில் பேரவைத் தலைவராகிய உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் 18ஆம் தேதி இங்கே உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் ஆளுநராக இருக்கிறாரா, இல்லையா, அவர் எப்படி இங்கே உரை நிகழ்த்தலாம், என்று கேள்வி ஆளுநர் அவர்கள் முன்னால் எழுப்பப்பட்டு, அவர் இன்றைக்கோ, நாளைக்கோ என்ற ஐயப்பாடும் உருவாக்கப்பட்டு, சிலபேர், இந்த அவையிலேயிருந்து வெளியேறினார்கள். இன்றைக்கு 23ஆம் தேதி; தமிழகத்தினுடைய ஆளுநர் தமிழகத்திலேதான் இருந்து கொண்டிருக்கிறார். அவர் மாறவில்லை. எப்போது மாறுவார் என்பதும் நமக்கு தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் அன்றைக்கு வெளிநடப்பு செய்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் ஆளுநர் இருக்கிறார், அன்றைக்கு நாம் வெளிநடப்பு செய்தது தவறு என்று சொல்லாமல், இந்த விவாதத்தில் பங்கு கொண்டு தங்களுடைய ஜனநாயக கடமையை முறையாக நிறைவேற்றி வருவதற்கு அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி இருக்குமா, இல்லையா என்ற சந்தேகம் கூட கடந்த சில மாதங்களாக தமிழகம் முழுவதும் எழுப்பப்பட்டு வருகிறது. ஒரு பட்டியலே போட்டு காட்டினார்கள். 24 ஆம் தேதி நவம்பர் திங்கள் அன்று பாராளுமன்றத் தேர்தல். 26 ஆம் தேதி வாக்குகள் எண்ணிக்கை. 28 ஆம் தேதி தமிழகச் சட்டமன்றம் கலைப்பு, தமிழக ஆட்சி கவிழ்ப்பு, அதற்கு பிறகு 40 நாட்களுக்குள்ளாக தமிழகச் சட்டமன்றத்திற்கு தேர்தல், நீங்கள் தேறுதலாக இருங்கள், நீங்கள் தான் இன்னின்ன தொகுதிக்கு சட்டப் பேரவை வேட்பாளர்கள். நீ தான் இன்ன இலாக்காவிற்கு அமைச்சர் என்றெல்லாம் கூட தொகுதிகள் பங்கீடும் நடந்தது. அமைச்சர்கள் இலாக்காக்களும் பங்கீடு செய்து, தமிழகத்திலே வாக்காளப் பெருமக்கள் நம்பும் வகையிலே மத்தியிலே ராஜிவ் காந்தி அவர்கள் தான் வரப் போகிறார், அவர் வந்தவுடனே இந்த நல்ல ஜனநாயக காரியத்தை, நல்ல சேவையைச் செய்யப் போகிறார் என்ற ஒரு எண்ணத்தை வாக்காளப் பெருமக்களிடத்தில் மட்டுமல்லாமல், அதிகார வர்க்கத்திடமும் ஏற்படுத்தி, ஒரு மாயை உருவாக்கப்பட்டது என்பது உண்மை. எனவே, அதன் அடிப்படையில் இங்கு தேர்தல்

1990 சனவரி 23] [திரு. எம். அப்துல் லத்தீப்]

முடிவுகளும் அமைந்தன. முடிவு எந்த காரணத்தால் இருந்த தாலும் அது ஜனநாயக அடிப்படையில் என்பது ஐதிகம். எனவே, அதை நாங்கள் வரவேற்று இருக்கிறோம். வெற்றி பெற்றவர் களைப் பாராட்டி இருக்கிறோம். ஏனென்றால், பாராட்டுகின்ற மனப்பக்குவம் நமக்கு உண்டு. இந்த அணியில் இருப்பவர்களுக்கு உண்டு. இன்றைக்கு நாம் பார்க்கிறோம், இதே நிலை. இவர்கள் பட்டியல் போட்டு காட்டினார்கள். ஆனால் இராஜஸ்தானில், மத்திய பிரதேசத்தில் வடபுலங்களிலிருந்து ஆட்சிகள் காங்கிரஸ் கட்சியால் நடைபெறுகின்ற ஆட்சிகள். இராஜஸ்தானில் முழுமையாக காங்கிரஸ் கட்சி வெற்றி வாய்ப்பை இழந்தது. ஆனால் இன்றைக்கும் காங்கிரஸ் கட்சி ஆளுகிறது. தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகத்திலே என்ன அரசியல் அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டுமென்று, நாட்டிலே திட்ட மிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டதோ, அதே அணுகுமுறையை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற தேசிய முன்னணி கடை பிடித்து இருக்குமானால் இன்றைக்கு ராஜஸ்தானில் காங்கிரஸ் ஆட்சி இருந்திருக்காது. மத்தியப் பிரதேசத்திலே இருந்திருக்காது. அங்கேயிருக்கிற இமாச்சலப் பிரதேசத்திலே இருந்து இருக்காது. ஒரிசாவிலே இருந்து இருக்காது. உ.பி. யிலே ஜனநாயக முறையிலே அங்கே தேர்தல் நடந்தது. சட்ட மன்றத்திற்கும் தேர்தல் நடந்தது. எனவே அங்கே ஆட்சி மாறியது. ஆனால் இன்றைய தினம் அங்கே ஆட்சி அப்படியே இருக்கிறது. காங்கிரஸ் கட்சியும், நம்முடைய நண்பர்களும் இங்கே ஒரு மாயையை உருவாக்கினார் கள். கலைஞருடைய ஆட்சி 28 ஆம் தேதி கலைக்கப்படும். எனவே தமிழகத்திலே இந்த மாயையின் காரணமாக ஏதோ ஒரு காரணமாக வாக்களித்தார்கள்.

18–30 மணி

ஆனால் நம்முடைய நண்பர்கள் இங்கே வந்து கலைஞருடைய ஆட்சி உடனே ராஜினாமா செய்ய வேண்டும் என்று இதோப தேசம் செய்கிறார்கள். அப்படிச் செய்கின்றவர்கள் ஏன் வடக்கேயிருக்கிற ராஜஸ்தானத்து முதலமைச்சருக்கு சொல்ல வில்லை? அங்கே முதலமைச்சராக அவரே இருந்தாலும் பரவா யில்லை. தேர்தலுக்குப் பிறகு, ராஜஸ்தானத்து முதலமைச்சர் மாற்றப்பட்டார்கள். முழுமையாக தோல்வி அடைந்த பிறகு ராஜஸ்தானுக்கு முதலமைச்சர் மாற்றப்பட்டார். அது ஜன நாயக முறை, தேர்தலிலே அவர்கள் வெற்றி பெற்று விட்டார் கள் அல்லவா, அதனால் மாத்தூர் அவர்களை மறுபடியும் அங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். பாராளுமன்றத் தேர்தலிலே வெற்றி வாய்ப்பை இழந்தது உண்மை. ஆனால் ஜனநாயக அடிப்படையிலே இதற்கு முந்தி நடந்த சட்டமன்றத் தேர்தலிலே அறுதிப் பெரும்பான்மை

யோடு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்று பேசியது உண்மையா? இல்லையா? ஒரு மாநில அரசாங்கத்தைக் கலைப்பதற்குத்தான் மத்திய அரசாங்கம் வருகிறது என்று சொன்னால், அது ஜனநாயகமா? என்பதை தயவு செய்து நீங்கள் எல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மாநில அரசுக்கு மக்கள், இவர்கள்தான் ஆளவேண்டும் என்று தீர்ப்பளித்து விட்டார்கள். அவர்கள் ஆண்டுகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தீர்ப்பளிக்கும்போது, 5 ஆண்டுகளுக்கு ஆள வேண்டும் என்று அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். நான் என்னுடைய நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கட்சி பேதாபேதங்கள் இருக்கலாம். ஆனால் நம்முடைய அடிப்படைக் கொள்கை என்று ஒன்று இருக்கிறது. 1980-லே எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. மாண்புமிகு நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அருமை அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் அப்போது முதலமைச்சராக இருந்தார்கள். பாராளுமன்றத்திலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தி.மு.க. அணியினர்களும் அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்றார்கள். 1980-லே. அப்போது வெற்றி பெற்றோம் என்ற ஒரே காரணத்திற்காக நம்முடைய அன்றைய பிரதமர் மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பொறுப்பிலே இருந்த போது, மாநில அரசைக் கலைத்தார்கள். அதனை அண்ணா தி.மு.க. எதிர்த்தது. என்னைப் பொறுத்தவரையில் அதை நான் எதிர்த்தேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் செய்ததைத்தான் ராஜிவ் காந்தி அவர்கள் செய்ய வேண்டும் என்று இப்போது இருக்கும் அண்ணா தி.மு.க.-வினர் விரும்பினார்களா இல்லையா, அதற்கான ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதா இல்லையா அதற்கு முறையாக பிரச்சாரம் நாட்டிலே செய்யப்பட்டதா இல்லையா? அப்படி ஒரு பிரச்சாரம் செய்யப்படுவது ஏற்புடையதா? என்னுடைய அருமை அண்ணா தி.மு.க. நண்பர்களைக் கேட்கிறேன். இதுதான் அண்ணாவினுடைய மாநில சுயாட்சிக் கொள்கையா? இதுதான் எம். ஜி.ஆர். அவர்கள் சொன்னதா? அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். எனவே, அண்ணாவினுடைய கொள்கையை நீங்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள், திராவிட முன்னேற்றக் கழகமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சில விஷயங்களிலே வேறுபாடு இருக்கலாம். தாயாதிச் சண்டையிலே கருவுக்குக் கருவான, அருமைக் கருவாக இருக்கிற நம்முடைய கொள்கையை நீங்கள் விட்டுக்கொடுக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய உரிமையும், கடமையும் எனக்கு உண்டு. எனக்குத் தெரியும், இப்பக்கமும் என்னுடைய உடன் பிறப்புக்கள் இருக்கிறார்கள்., அப்பக்கமும் இருக்கிறார்கள்., எப்பக்கமும் இருக்கிறார்கள். (சிரிப்பு) எங்கேயும் இருக்கிறார்கள். எனவே

1990 சனவரி 23] [திரு. எம். அப்துல் லத்தீப்]

நான் உங்களைக் கேட்டுக் கொள்வது, இது நடந்தாலே, அடிப்படைக் கொள்கையிலே மாறுதல் வருவது நாட்டுக்கு நல்லதல்ல என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டினுடைய பொருளாதாரம் சீர்குலைந்ததற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று தேர்தல்கள், காலையிலே கூட இங்கே பேசும்போது, நண்பர் பூவராகன் அவர்கள் சொன்னார்கள். அமேதி தொகுதியிலே முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் போட்டியிட்டபோது 7 கோடி ரூபாய் செலவழித்தார் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு 700 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். (குறுக்கீடு). நான் கேட்டதைச் சொல்கிறேன். (குறுக்கீடு) ரூபாய் எவ்வளவோ? 7 கோடி என்று சொல்லும்போது காங்கிரஸ் தரப்பிலேயிருந்து எந்தவிதமான எதிர்ப்பும் வரவில்லை. 700 கோடி ரூபாய் என்று சொன்னபோதுதான் எதிர்ப்பு வந்தது. 7,000 என்று சொன்னார்களோ, அல்லது 700 என்று சொன்னார்களோ அது எவ்வளவாக இருக்கட்டும், நான் சொல்வது 7 கோடி என்று சொல்லும்போது எதிர்ப்பு வரவில்லை. 7 கோடி என்றே நான் ஏற்றுக்கொள்கிறேன். (சிரிப்பு) நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

18-35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நாம் அத்தனை பேரும் தேர்தலில் நின்று வெற்றிபெற்று வந்தவர்கள். நாம் சட்டமன்றத்திற்குக் கணக்கு கொடுப்பதில் இது அடங்காது. அருள்கூர்ந்து அந்தப் பகுதியை விட்டுவிட்டு அடுத்த பகுதிக்கு வரவேண்டும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: நான் சொல்வது, ஆர்கியூமெண்ட் பண்ணுவது முக்கியமான கடமை என்பதால் நான் சொல்கிறேன். ஒரு கலாச்சாரம் வளர்க்கப்பட்டு இருக்கிறது. இனிமேல் நல்லவர்கள், பணக்காரர்கள்தான் போட்டியிட வேண்டும், வசதி உள்ளவர்கள்தான் போட்டியிட வேண்டும். மணி அண்ட் மசில் என்று சொல்லக்கூடிய அளவிற்குத் தான் இந்த நாட்டிலே ஏற்றம் பெறவேண்டுமென்ற ஒரு கலாச்சாரம் இன்றைக்கு நாட்டிலே ஏற்றம் பெற்றிருக்கிறதே, அது எந்த அளவிற்கு நியாயமானது? எந்த அளவிற்கு ஜனநாயகத்திற்கு ஏற்புடையது என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல நம்முடைய நாட்டு மக்களுடைய, வாக்காளர் பெருமக்களுடைய, ஒழுக்கம் நம்முடைய நடைமுறைகளால் நமக்குள் இருக்கின்ற போட்டிகளால் நான் தான் வெற்றி பெறவேண்டுமென்று நம்முடைய உள்ளத்திலே இருக்கின்ற உளச்சலால் அதிகமான பணத்தை

செலவழிக்க வேண்டுமென்ற நம்முடைய எண்ணத்தால், இன்றைக்கு நாட்டு மக்கள், வாக்காளர் பெருமக்கள் பணம் கொடுத்தால்தான், வசதிகள் செய்து கொடுத்தால்தான் அவர்கள் கேட்கின்ற, விடுக்கின்ற வேண்டுகோள்களுக்கு செவி மடுத்தால் தான், வாக்கு போட வேண்டுமென்று எண்ணுகின்ற எண்ணம் மேலோங்கி கட்சி, கோட்பாடு, கொள்கை, நாடு என்பது எல்லாம் மறுக்கப்பட்டு விடுகிறது. எனவே இந்த ஒரு அபாய கரமான கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம். இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. நான் யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. இந்த கலாச் சாரத்தை வளர்ப்பதில் காங்கிரஸ் கட்சிக்குக் கொஞ்சம் பொறுப்பு அதிகம் என்ற குற்றச் சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். எனவே அன்றைக்குப் பணத்தை வைத்து, வேறு படாடோபங்களைக் காட்டி, அந்த நிலைமையிலேயே ஆட்சி வந்துவிட்டது, இன்றைக்கும் வரும் என்று நினைத்து பாவம் நீங்கள் ஏங்கினீர்கள். ராஜீவ் காந்தி அவர்கள் பிரதம அமைச்சராக வந்து இருந்தால், 'It is only a continuation' அது ஒரு 'continuation' என்று தான் வந்திருக்கும். அதிலே ஒன்றும் பெருமையில்லை. ஆனால் பாவம் பெருத்த ஏமாற்றம் உங்களுக்கு. எனவே தமிழ்நாட்டில் என்ன நடந்தது என்றல் 'Operation success, patient dead' இங்கேயும் போய் கலைஞர் ஆட்சி நீடிக்கிறது. அங்கேயும் போய் வி.பி. சிங் ஆட்சி வந்துவிட்டது. என்னடா செய்வது? போட்ட திட்டங்கள் எல்லாம் போச்சே என்று அப்படி எண்ணுகின்ற முறையிலே இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், அதைத்தான் நான் சொல்கிறேன், 'தர்மம் தனை சூது கவ்வும், பிறகு தர்மம் மறுபடியும் வெல்லும்' எனவே, நான் உங்களுக்குச் சொல்கிறேன். இன்றைக்கு தேசிய முன்னணி ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும்போது நல்ல ஜனநாயக மரபுகளை அவர்கள் கடைபிடிக்கிறார்களா, இல்லையா ? நான் உங்களைக் கேட்கிறேன். கலைஞர் ஆட்சி இங்கேயிருக்கிறது. அவர்கள் அணியைச் சேர்ந்தவர்கள், அவர்களைக் கலைக்க மாட்டார்கள். ஏன் ராஜஸ்தானைக் கலைக்கவில்லை ? ஏன் காங்கிரஸ் முதலமைச்சர் ஆளுகின்ற ஆட்சியை அவர்கள் கலைக்கவில்லை ? அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னபோதுகூட ஏன் கலைக்கவில்லையென்று சொன்னால், வி.பி. சிங் உள்ளத்தில் ஜனநாயக உணர்வுகள் இருக்கின்றன. நாட்டிலே ஏற்படுகின்ற பௌதீக முன்னேற்றங்கள் எல்லாம் அழிந்துவிடும். ஆனால் ஒழுக்கங்கள் காப்பற்றப் பட வேண்டுமென்று எண்ணுகின்ற எண்ணம் அந்த நல்ல மனிதரிடத்திலே, அவருடைய உள்ளத்திலே இருக்கின்ற காரணத்தினால் தான் அவர் இதையெல்லாம் விட்டுவைத்திருக்கிறார் என்று நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, நல்ல ஜனநாயக மரபுகளையெல்லாம் கடைபிடிப்பதாக வி.பி. சிங் அரசாங்கத்தைப் பற்றிச் சொன்னார்கள், இன்று இடதுசாரி

1990 சனவரி 23] [திரு. குமரி அனந்தன்]

கட்சிகள் எல்லாம்கூட ஜனநாயக முறைப்படி காஷ்மீர் கவர்னரை நியமிக்கவில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியுமா? அரசாங்கங்களை கலைப்பது என்பது பற்றிய, மொத்தமாக பல அரசாங்கங்களைக் கலைப்பது என்பது நமது தேவிலால் அவர்களுடைய குருவாக இருந்த சரண்சிங், அவர்கள் இன்று சந்திரசேகர் அவர்களுடைய தலைவராக இருக்கின்ற மொரார்ஜி தேசாய் அவர்கள் இருந்த காலத்திலேயே ஆரம்பித்தது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் நினைவில் கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, கவர்னர்கள் நியமிக்கப்படும்போது மாற்றுக் கட்சி அரசாங்கங்களை உளவு பார்ப்பதற்கு மாற்றுக் கட்சி அரசுகளைக் கவிழ்ப்பதற்கு அந்த அரசுகளுக்கு எதிரானவர்களை கவர்னர்களாக நியமிப்பது என்ற நடைமுறை இருந்த காலத்தில் அதை எதிர்த்துவந்த கட்சிகள், அந்த வாய்ப்பு நமக்கு கிடைக்கும்போது அந்த மாநிலத்திலே எந்தக் கட்சி இருந்தாலும், அந்தக் கட்சியைக் கலந்து அந்த ஆட்சியைக் கலந்து கவர்னர்கள் நியமிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நடைமுறை காஷ்மீரில் கையாளப்படவில்லை என்று தான் இடதுசாரி கட்சி எடுத்துக் காட்டியிருக்கிறது.

18–40 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது எனது நினைவில் இருக்கிறது. காஷ்மீரத்தினுடைய விசேஷ சூழ்நிலையை நாடு மிகக் கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கிறது. காஷ்மீரிலே அமைதி நிலவ வேண்டும். வெளிநாட்டு சக்திகள் காஷ்மீரத்திலே தீவிரம் அடையக் கூடாது என்பதிலே திரு. வி. பி. சிங்கிற்கு மட்டும் அல்ல திரு. குமரி அனந்தனுக்கும் அக்கறை இருக்கிறது, திரு. லத்தீபுக்கும் அக்கறை இருக்கிறது. அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இங்கே மிக முக்கியமான ஒரு விஷயத்தை நீங்கள் கவனிக்கவேண்டும்.

திரு. பரூக் அப்துல்லாவினுடைய ஆட்சி கலைக்கப்பட வேண்டுமென்று கோரியபோது மத்திய அரசாங்கம் மறுத்து விட்டது. காஷ்மீரத்தினுடைய விசேஷ சூழ்நிலையில், அதில் ஒரு அரசாங்கத்தை மட்டும் குற்றம் சாட்டுகிற சூழ்நிலை அல்ல, அங்கே நிலவுகிற விசேஷ சூழ்நிலையிலே சில பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இருக்கிற மாநில அரசை முழு பொறுப்பாக்கி நாங்கள் டிஸ்மிஸ் செய்வதற்குத் தயாராக இல்லை என்று உறுதியாகவும் அறுதியாகவும் மத்திய அரசு தெரிவித்தது. ஆனால் அங்கே இருக்கிற சூழ்நிலையை சமாளிப்பதற்காக திரு. ஜக்மோகன் அவர்கள் உரிய வகையில் பயன்படுவார் என்ற எண்ணம் மத்திய அரசுக்கு ஏற்பட்டது. உள்நாட்டு

அமைச்சகம் அதைப்பற்றி முடிவு எடுப்பதற்குத் தகுதியும், உரிமையும் கடமையையும் பெற்றது. அந்த அடிப்படையில் திரு. ஜக்மோகன் அவர்களை நியமித்தது. அதை எங்களிடத்திலே கலந்து செய்யவில்லை என்பது ஒரு புறம் இருக்கட்டும், நான் ஒன்றைக் கேட்கிறேன் திரு. பரூக் அப்துல்லாவைக் கேட்கிறேன், தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக கேட்கிறேன் நான் சொல்கிறேன் திரு. பரூக் அப்துல்லாவிற்கு நேரம் இருந்தது. எதற்கு நேரம் இருந்தது என்றால் ஜம்முவிலிருந்து விமானத்திலே பறந்து வந்து விமான தளத்திலே இருந்து நேரிடையாக மாண்புமிகு முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சந்தித்து விட்டு உடனடியாக விமான தளத்துக்குப் போய் மறுபடியும் ஜம்முவிற்குப் போக நேரம் இருந்தது. தலைவர் அவர்களே அவர் ஒரு முதலமைச்சர்—கட்சியை விட்டு விடுங்கள்—பிரதம அமைச்சரும் அங்கே தானே இருந்தார். ஏன் பிரதமரைச் சந்திக்கவில்லை. அதிலேதான் விஷயம் இருக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சி இருக்கிறது என்கிற அந்தக் குற்றச்சாட்டை நான் சொல்கிறேன், அந்த மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் திரு. பரூக் அப்துல்லா, அவர் தெளிவாக சொன்னார் The accession of Kashmir to India is final There cannot be any compromise. என்று சொன்னார், நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒரு முதலமைச்சர் டெல்லிக்கு வரும்போது பிரதம அமைச்சரை ஏன் சந்திக்கவில்லை? பிரதமரைச் சந்தித்து ஏன் விளக்கம் கொடுக்கவில்லை. இங்கே வந்து கேட்டு விட்டு, பேசிவிட்டு, அதன் உணர்வுகளைப் பெற்று விட்டு, உடனடியாகப் போய் ராஜினாமா செய்தாரே அதிலேதான் இந்த தேசத்திற்கே பெரிய ஆபத்து அடங்கியிருக்கிறது. நமக்கெல்லாம் அரசியல்தான் நோக்கமாக இருக்கிறதே தவிர தேசப்பாதுகாப்பை பற்றி அல்ல. உரிய ஆலோசனை சொல்வதற்கு மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி தவறி விட்டார். திரு. பரூக் அப்துல்லாவிற்கு திரு. ராஜீவ் காந்தி என்னமோ சொன்ன காரணத்தினால் அவர் ராஜினாமா செய்தார் என்று இன்றைக்கு ஒரு மிகப் பெரிய கேள்வி எழுந்திருக்கிறது. எங்களுக்கெல்லாம் மிகுந்த கவலையும் ஏற்பட்டிருக்கிறது. ரத்த ஆறு ஓடுகிறது அங்கே, அதைத்தான் ஏற்படுத்த வேண்டுமென்று திரு. ராஜீவ்காந்தி விரும்பினாரா? அவருக்கு உரிய ஆலோசனை சொல்லி இருக்க வேண்டாமா, திரு. பரூக் அப்துல்லாவிற்குக் கொஞ்சம் பொறுத்து இருங்கள் என்று ஆலோசனை சொல்லி இருக்கவேண்டாமா? குற்றம்சாட்டுகிறேன் நான் திரு ராஜீவ் காந்திமீது........... (கூச்சல் குழப்பம்).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அருமைக்குரிய உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் திரு. பரூக் அப்துல்லா ஜம்முவிலிருந்து விமானத்தில் வந்தார், திரு. ராஜீவ் காந்தியை சந்தித்தார் மீண்டும் திரும்பிப் போய்விட்டார், பிரதமரைச் சந்திக்கவில்லை, இன்று இரத்த ஆறு ஓடுகிறது என்று சொல்கிறார். இரத்த ஆறு ஓடக் கூடாது என்பதில் நமக்கு

1990 சனவரி 23] [திரு. குமரி அனந்தன்]

அத்தனை பேருக்கும் கவலை இருக்கிறது. ஆனால் ஒன்றை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சரியாகவோ தவறாகவோ, அவர்கள் ஏற்கனவே முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவரை டிஸ்மிஸ் செய்தவர் இதே திரு. ஜக்மோகன் அவர்கள். ஆகவே அந்த திரு. ஜக்மோகனைத் தவிர வேறு எவரை வேண்டுமானாலும் நீங்கள் கவர்னராகப் போடலாம் என்று அவர் கேட்டார். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஒரு நிமிடம் இருங்கள். முதலிலே என்னைச் சொல்ல விடுங்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மோகன் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

திரு. குமரி அனந்தன் : அதனாலேதான் முதலிலேயே அதைச் சொல்லிவிட்டேன். ஒரு உரிச்சொல் மூலம் அதனைச் சொன்னேன். இங்கே நமது சபாநாயகர் அவர்கள் அதனைப் புரிந்து கொண்டிருப்பார்கள். எனவே இந்தியாவிலே இருக்கிற எத்தனையோ நிர்வாகிகளிலே அந்த ஒருவரைத் தவிர வேறு எவரையாவது போடுங்கள், என்கிறார். தயவுசெய்து நீங்கள் நமது முதலமைச்சரை அந்த இடத்திலே வைத்துப் பாருங்கள்.

இந்த ஒருவரைத் தவிர வேறு எவரையாவது நீங்கள் கவர்னராகப் போடுங்கள் என்று சொல்கின்ற நேரத்தில் நீ யாரைப் போடக் கூடாது என்று சொல்கிறாயோ அவரைத்தான் நான் போடுவேன் என்று சொல்கிற நேரத்தில் அவர் இராஜினாமா செய்வதுதான் அவருடைய சுயமரியாதைக்குச் சரியாக இருக்கும் என்பதற்காக திரு. ராஜீவ் அந்த ஆலோசனையைச் சொல்லியிருக்கக்கூடும்.

18–45 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, நம்முடைய திரு. ஜக்மோகன் அவர்கள் மாண்புமிகு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் என்பது மட்டுமல்ல, அவருடைய முழு நம்பிக்கைக்கும் உரியவராக இருந்தார். அதனால்தான் திரு. பாரூக் அப்துல்லாவிற்கும் அவருக்கும் தகராறே ஏற்பட்டது. நான் உண்மையைச் சொல்கிறேன். இந்திரா காந்தி அம்மையாருடைய முழு நம்பிக்கைக்கு அவர் உரியவராக இருந்த காரணத்தினாலேதான் அவருக்கும் காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் திரு. பாரூக் அப்துல்லாவிற்குமே இடைவெளிகள் ஏற்பட்டன. அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. அவை பிற்காலத்திலே வளர்ந்தன. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு, ஒரு சென்சிடிவ் ஸ்டேட் ஒரு பார்டர் ஸ்டேட். அதுவும் ஊடுருவல்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்ற ஒரு ஸ்டேட்டிலே தன்னுடைன் ஒரு டிஸ்கிரிஷன், அதனுடைய தனித் தகவல்கள், ரகசியத் தகவல்கள் இந்தத் தகவல்களையெல்லாம் வைத்து, இந்தச் சூழ்நிலையிலே

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 சனவரி 23

இன்னாரைத்தான் நியமிக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கும்போது அது தவறு என்று தெரிவித்திருந்தால் திரு. பரூக் அப்துல்லாவிற்கு வாய்ப்பு இருந்தது. நேரடியாகச் சென்று இவர் வேண்டாம் வேறு யாரையாவது போட்டிருக்கலாம் என்று ஏன் சொல்லவில்லை. ஆனால் திரு. ராஜீவ் காந்தி அவரைப் பார்க்காதே, இதனாலே ஒரு குழம்பிய குட்டையிலே மீன் பிடிக்க வேண்டும், நீ போய் உடனே ராஜினாமா செய் என்று சொன்னாரா இல்லையா? அவர் சொன்னார் என்பதற்கு நான் பொறுப்பேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்கு நினைவூட்டுவது நாம் இப்போது தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசிக்கொண்டிருக்கிறோம். (கூச்சல் குழப்பம்) நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்களுடைய துணைத் தலைவர் தேவைப்படுகிறபோதெல்லாம் குறுக்கிடுவதற்கு நான் முழு அனுமதி கொடுத்திருக்கிறேன், முன் வரிசையிலே பேசுகின்றவர்கள் பேசும்போது துணைத் தலைவருக்கே முழு வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) அது அவர் பார்க்கட்டும் நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இப்போது நம்மிடத்திலே பல பிரச்சனைகள் இருக்கின்றன, இவற்றை எல்லாம் நான் அடிக்கடி அமைச்சரைச் சந்தித்து சொல்வது என்பது இயலாத காரியமாக இருந்துகொண்டிருக்கிறது, ஆகையினால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலே இருப்பதைப் போல Ministerial Consultative Committee என்று கமிட்டிகளை எல்லா அமைச்சகங்களுக்கும் நீங்கள் அட்டாச் செய்ய வேண்டும். நான் உங்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது அண்மையிலே உணவுப் பிரச்சனையைப் பற்றி உணவு அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை குறித்து போக்குவரத்துதுறை அமைச்சர் அவர்களும் கூட்டத்தைக் கூட்டினார்கள் அது எவ்வளவு பயன் உள்ளதாக இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். எனவே, எல்லா அமைச்சகங்களுக்கும் கன்சல்டேட்டிவ் கமிட்டிகளை—உறுப்பினர்களைக் கொண்ட கன்சல்டேட்டிவ் கமிட்டிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சென்னையைப் பொறுத்தவரையில் மற்றும் மதுரை, கோவை ஆகிய நகரங்களைப் பொறுத்தவரையிலும் கவுன்சிலர்கள் இல்லை, எங்களுடைய பரிதாப நிலையை நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். ஒரு முதலமைச்சரே தொகுதிக்குப் போய் தொகுதி மக்களுடைய குறையைக் கேட்கின்ற அளவிற்கு சென்னையினுடைய நிலைமை இருக்கிறது. தாங்களே சென்று கேட்கக் கூடிய நிலைமை சென்னையிலே நிலவிக்கொண்டிருக்கிறது. எங்களுக்கு வேலை வேறு எதுவும் இல்லை. இங்கே பேசியவர்கள் எல்லாம் எங்களுக்கு அணை வேண்டும், ஆஸ்

1990 சனவரி 23] [திரு. எம். அப்துல் லத்தீப்]

பிட்டல் வேண்டும் என்று என்னென்னவோ கேட்டார்கள். எங்களுக்கு ஒன்றும் இல்லை. குப்பையை எடுங்கள், சாக்கடையைச் சீர்திருத்துங்கள், தெருவிளக்குகளை எரியவிடுங்கள். சுகாதாரத்தை பாதுகாத்திடுங்கள். தெருவிலே ஒவ்வொரு நாளும் ஒரு எம். எல். ஏ. சுற்றி சுற்றி விளக்கு எரிகிறதா என்றெல்லாம் பார்க்க வேண்டிய நிலைமை, சாதாரணமாக பேட்டையிலே வாழ்கின்றவர்கள் எல்லாம் அந்த சக்கலுக்குள்ளே வரமுடியவில்லை. கூட வருகிற அதிகாரிகள் கூட அங்கேயே தேங்கி நின்றுவிடுகிறார்கள். பாவம் பரிதாபத்திற்குரிய எம்.எல்.ஏக்கள் போய் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எருமை மாடுகள் மாதிரி புழுக்கள் அங்கே மேய்ந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் தேர்தலை நடத்துங்கள். செப்டம்பர் மாதத்திலேயே நடத்துங்கள். அது வரையிலே சென்னை நகரத்திற்கு சென்னை நகரத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அட்வைசரி கமிட்டியாவது போடுங்கள். அது அடிக்கடி கூடி நம்முடைய சிவிக் அமெனிட்டீஸ் பற்றி பேசிக் கொள்ளும். எனவே அதைச் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

18-50 மணி

குடிசை மாற்று வாரியங்கள் மூலமாக நாம் வீடுகளைக் கட்டியிருக்கிறோம். இப்பொழுது அவையெல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. உதாரணமாக, என்னுடைய தொகுதியிலே கூட லாக்நகர், பானூர் தோட்டம், பாக்ஸ் நகர், நெடுஞ்செழியன் நகர், ஜோதியம்மாள் நகர், சத்தியவாணிமுத்து நகர் இவற்றையெல்லாம் நீங்கள் வந்து பார்த்தால், மனிதர்கள் வாழக்கூடிய இடமாக இல்லை. அங்கே எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் தயவுசெய்து கொஞ்சம் விசிட் செய்து—அந்த இடங்களுக்கு எல்லாம் வந்து பார்த்தால் தெரியும். (குறுக்கீடு) வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரும் தாங்களும் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவற்றையெல்லாம் பார்த்து உடனடியாக என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமோ அதை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இலவச அரிசியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையிலே, மன்னிக்க வேண்டும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை நல்ல நோக்கத்தோடு, தாயுள்ளத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் Government is not a Charitable institution. நான் வாக்குகளைப் பற்றிக் கவலைப்படாதவன். நான் உங்களுக்குச் சொல்

கிறேன், பணம் கை மாற வேண்டும் என்றால், ஒன்று உற்பத்திக்கு மாறவேண்டும். இல்லாவிட்டால் உழைப்புக்கு மாறவேண்டும். நான் அதை முன்னால் முதல் அமைச்சர் அண்ணன் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே கூடச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் கூட விளக்கம் கொடுத் திருக்கிறார்கள். சத்துணவு திட்டம் என்பது சரி, அது தேவை யான ஒன்று. இப்பொழுது நீங்கள் 1,000 ரூபாய் என்று வருமான வரம்பை உயர்த்தியிருக்கிறீர்கள், இலவச அரிசி வழங்க. ரூ. 1,000 என்றால், ரூ. 1,100 கேட்பான், ரூ. 1,200 கேட்பான். அதற்கு ஒன்றும் எல்லை இல்லாமல் போய்விடும். அதற்குப் பதிலாக, இந்த அரசு இலவச அரிசி கொடுப்பதற்குப் பதிலாக ரேஷன் ஷாப்பில் முறையாக, இப்பொழுது கொடுக்கிற 12 கிலோ அல்லது 15 கிலோ அரிசியை முறையாக எல்லோருக்கும் கிடைக் கிற மாதிரி இந்தப் பணத்தை எல்லாம் அதற்குச் செலவழித்து, சப்சிடைஸ்ட் ரைஸ் என்ற முறையிலே, எல்லோருக்கும் கொடுத் தீர்களானால் மக்கள் திருப்தி அடைவார்கள். நான் நல்ல எண்ணத்தில் சொல்கிறேன். மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அதைத் தடுக்கிறான் என்று யாராவது நினைத்தார்கள் என்றால் என்னுடைய உள்ளத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை யென்று அர்த்தம். எனவே, முதல் அமைச்சர் அவர்கள் அப்படித் தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், ஒரே ஒரு நாள் கொடுங்கள்: தமிழ்ப்புத்தாண்டுக்குக் கொடுத்து விடுங்கள், எல்லா வற்றுக்கும் பொது. மற்ற நாட்களில் எல்லாம் ஒன்றும் தேவை இல்லை. அந்தப் பணத்தைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒவ்வொரு இண்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்தினால் எவ்வளவு நன்மை கிடைக்கும், உற்பத்தி பெருக வேண்டும்; வேலை வாய்ப்புகள் அதிகமாக வேண்டும்; விலைவாசி குறையவேண்டும்; பண வீக்கம் குறைய வேண்டும். இவைதான் ஒரு அரசாங்கத்தி னுடைய தலையாய கடமையே தவிர, நம் அரசு ஷேம நல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்றால், கல்வியைக் கொடுப்பது ஒரு ஷேமநலத் திட்டம். மருத்துவ மனைகளை நடத்துவது ஒரு ஷேமநல திட்டம், அங்கஹீனர்களுக்கு உதவுவது ஒரு ஷேம நல திட்டம். இவை எல்லாம் ஷேமநல திட்டங்கள் தான். எனவே, வேஷ்டி, சேலை, செருப்பு, பற்பொடி, மாத்திரை என்றெல்லாம் நாம் கொடுத்துக் கொண்டிருந்தால் அதற்கு எல்லையே இல்லாமல் போய்விடும். அது அரசாங்கத்தினுடைய கொள்கை. அந்தக் கொள்கையிலே நான் குறை கூற விரும்ப வில்லை. என்னுடைய உள்ளத்திலே இருப்பதை நான் ஒரு அரசியல்வாதி என்ற அடிப்படையில் இல்லாமல், பொருளாதார மாணவன் என்ற முறையிலே இங்கே தெரிவித்துள்ளேன். பொரு ளாதாரத்தைச் செம்மைப் படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங் கத்தினுடைய தலையாய பொறுப்பு.

அவர்கள் சொன்னார்கள். 5 கிலோ தங்கம் கொடுத்தாலும் உங்களுக்கு ஓட்டுப் போட மாட்டார்கள் என்று. அது பணம் பேசுகிற பேச்சு. நான் பணத்திலே நம்பிக்கை வைக்கவில்லை.

குணத்திலே தான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். எனவே, குணம் வெற்றி பெறும். அதிலே சந்தேகமே தேவை இல்லை.

அவர்கள் சொன்னார்கள், காங்கிரஸ் கட்சி மறுபடியும் ஆட்சிக்கு வரும் என்று. காங்கிரஸ் கட்சி எப்பேர்ப்பட்ட கட்சி. ஆனால், இன்றைக்கு என்ன ஆயிற்று. நான் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி பெரிய கட்சிதான். இன்றைக்கு என்ன ஆயிற்று? (குறுக்கீடுகள்) எ.பி.சி.டி. என்று இன்றைக்கு அது சிதறிப் போயிற்று. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்ல வந்தது வேறொன்றும் இல்லை: இன்றைக்கு அதை விடப் பெரிய கட்சி யாகி விட்டது என்று சொல்கிறார். நீங்கள் ஏன் தப்பாக எடுத்துக் கொள்கிறீர்கள் ?

திரு. எம். அப்துல் லத்தீப் : காங்கிரஸ் கட்சி மகாத்மா காந்தி அவர்களுடைய கட்சி; மோதிலால் நேரு அவர்களுடைய கட்சி; ஜவகர்லால் நேரு அவர்களுடைய கட்சி; ஆனால், இப்பொழுது அந்தக் கட்சியில் அவர்கள் எல்லாம் இல்லை. (சிரிப்பு) அதுதான் என்னுடைய குறை.

மறுபடியும் ஒரு காமராஜர் வந்தால்தான் தமிழகத்திலே, காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வர முடியும். பெருந்தலைவர் காமராசர் ஒரு தடவைதான் பிறப்பார். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை பிறக்கக் கூடியவர் அவர். எனவே, அவரைப்போல் ஒரு தலைவர் வந்தால்தான் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரமுடியும். இனிமேல் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வராது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக, நேரம் இல்லை. சபாநாயகர் மணி அடித்துக் கொண்டிருக்கிறார். நான் எப்பொழுதுமே கெட்ட பெயர் வாங்கிக் கொண்டிருக்கிறேன். உட்காரச் சொன்னால் உட்கார மாட்டான் அவன் என்று சபாநாயகர் சொல்வார். அவரும் நானும் கூடப் படித்தவர்கள். அதனால் அந்த மாதிரி பேசிக் கொள்வோம். வேறு தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.

18–55 மணி

கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். முன்பெல்லாம் பம்பாயிலிருந்து ஹஜ்ஜுக்குப் போவார்கள். அதாவது மெக்காவுக்குப் போவார்கள். இப்போது எல்லோரும் சென்னையிலிருந்தே நேரடியாக செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. காரணம் சென்னையிலிருந்தே விமானம் நேரடி யாகச் செல்கிறது. ஆனால் எல்லோரும் இங்கே வந்து

தங்குவதற்கு இடம் இல்லை. எல்லா மாநிலங்களிலும் ஹஜ் ஹவுஸ் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் அந்த வசதி இல்லை. அந்தக் குறையை நம்முடைய அரசு நீக்க வேண்டும்.

வக்ஃப் போர்டுக்கு வருமானம் இல்லை. ஒவ்வொரு வருஷமும் பற்றாக்குறை பட்ஜெட் தான் இருக்கிறது. நம்முடைய ஆட்சியிலே கோவில் நிலங்களிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதைப்போல அறக்கட்டளைக்கு சொந்தமான நிலங்களின் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களையும் அகற்றிக் கொடுத்தீர்களானால் சிறப்பாக இருக்கும். இந்த அரசாங்கத்திற்கே நாங்கள் பணம் கொடுத்து நடத்தக் கூடிய அளவுக்கு வக்ஃபுக்கு சொத்து இருக்கிறது. ஆனால் இப்போது எங்களிடம் ஒன்றுமே இல்லை. ஆகவே அதை நீங்கள் செம்மைப்படுத்தித் தரவேண்டுமென்று சில கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வக்ஃப்புக்கு குறைந்தபட்சம் ஒரு ஆபீஸ் பில்டிங் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறுபான்மை கமிஷன் நியமிக்க வேண்டுமென்ற முடிவை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்று, பாராட்டி, உடனடியாக அதை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மை சமுதாயம் என்பதில், இஸ்லாமிய சமுதாயமும் இருக்கிறது. எனவே, சிறுபான்மை இஸ்லாமிய சமுதாயத்திலிருந்து அதனுடைய முதல் தலைவரை எடுத்து, அந்த முறையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைதி நிலவ—இன்று காலையில் கூட இங்கே பேசப்பட்டது—நச்சு எண்ணங்களை நாட்டிலே பரப்புகின்ற கட்சிகளையும் இயக்கங்களையும் கட்டுப்படுத்தி வைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். எண்ணிக்கைகள் ஏற்றம் பெற்றதாகவோ, எண்ணிக்கைகள் வெற்றி பெற்றதாகவோ உலக வரலாற்றிலே எங்கும், எந்தச் சரித்திரப் புத்தகத்திலும் இடம்பெறவில்லை. எண்ணம் தான் இடம் பெற்றிருக்கிறது, அந்த எண்ணம் அடக்கப்படுமேயானால், அதுதான் புரட்சிக்கு வித்து என்பதை மட்டும் சொல்லி, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்ட நம்முடைய அண்ணா தி.மு.க. உடன்பிறப்புகளையும் காங்கிரஸ் நண்பர்களையும் பாராட்டி அமர்கிறேன்.

பட்டிருக்கின்றன. அடுத்துள்ள திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தைப் பொறுத்த அழைப்பிதழைப் பார்த்தால் அந்தப் பளபளப்பைக் காணோம். சம்புவராயர் ஒரு குறுநில மன்னனானதால் அவரைப் பின் பக்கத்திலே அச்சு அடித்து விட்டார்கள். அவரை பின்னுக்குத் தள்ளிவிட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமில்லை. ஆனால் யாரோ சில அதிகாரிகள் இப்படி பின்னுக்குத் தள்ளிவிடுவது நல்லது என்று எண்ணிச் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இனி இருக்கக் கூடாது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மற்ற பல முக்கிய விஷயங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் பேச பின்னாலே சந்தர்ப்பம் இருக்கும் என்று கருதி இதோடு முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

16-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் மாலை 4-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடியது.

10. 24 ஆண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை இயக்கத்தில் வீரமரணம் எய்திய திரு. முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி அவர்களை நினைவு கூர்ந்து போற்றுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய பெருமக்களே, இந்தப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

23-1 என்ற இந்த நாள் ஒரு விடுதலை வீர வரலாற்றில் குறிப்பிடத்தக்க நாள். 23-1-1809-இல் இந்தக் கோட்டைக்குள் இருந்த சிறையிலேயே முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி என்பவர் சிறைச்சாலையில் இருந்து 24 ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை அனுபவித்து, துன்புற்று, விடுதலை இயக்க வரலாற்றுக்காக வீர மரணம் எய்தியவர். அவருடைய அந்தச் சிறப்பான நினைவைப் பாராட்டி நினைவு கூர்ந்து போற்றுகிறோம்.

11. அரசினர் தீர்மானம்.

விதி 33-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" சட்டமன்றத்தில் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை 24–1–1990 அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசின் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24–1–1990) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 18.58 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. தமிழ்நாட்டின் தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகங்களுக்காக ஒதுக்கப்பட்ட மரக்கட்டைகள் குறித்த கணக்குகளை பராமரிப்பது பற்றிய விதிகளை வகுப்பது குறித்து சுற்றுப்புறச் சூழல்-வனங்கள் துறையின் 4–10–1988 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

54. தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு மரக்கட்டைகள் இடைமாறுபட்டு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து சுற்றுப்புறச் சூழல்-வனங்கள் துறையின் 18–11–1988 ஆம் நாளிட்ட 296 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. தமிழ்நாடு 1944ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 8–1–1988 ஆம் நாளிட்ட 7ஆம் எண்

11. அரசினர் தீர்மானம்.

விதி 33-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' சட்டமன்றத்தில் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள் — விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை 24-1-1990 அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசின் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை (24-1-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 18.58 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. தமிழ்நாட்டின் தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகங்களுக்காக ஒதுக்கப்பட்ட மரக்கட்டைகள் குறித்த கணக்குகளை பராமரிப்பது பற்றிய விதிகளை வகுப்பது குறித்து சுற்றுப்புறச் சூழல்-வனங்கள் துறையின் 4-10-1988 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

54. தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு மரக்கட்டைகள் இடைமாறுபட்டு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து சுற்றுப்புறச் சூழல்-வனங்கள் துறையின் 18-11-1988 ஆம் நாளிட்ட 296 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. தமிழ்நாடு 1944ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 8-1-1988 ஆம் நாளிட்ட 7ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1943) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

56. தமிழ்நாடு 1988ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 30–11–1988 ஆம் நாளிட்ட 319 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

57. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

58. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1986–87ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை, [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

59. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

60. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1985–86ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

61. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1986–87ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

1990 சனவரி 23]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

20. பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்றாவது (ஒன்பதாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

21. பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

22. பொதுக் கணக்குக் குழுவின் பதிமூன்றாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

23. பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது (ஒன்பதாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

24. பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

25. பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

26. பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

27. பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

28. பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை. 1989–90.

29. பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

30. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.